# சுவர்ணமுகி



ஸ்ரீ வேணுகோபாலன்

# சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

பூம்புகார் பதிப்பகம்
63, (பிராட்வே) பிரகாசம் சாலை
சென்னை 600 108

விலை ரூ. 65/-

பூம்புகார் வெளியீட்டு எண் : 379
முதற் பதிப்பு : ஆகஸ்டு 1997
உரிமை : ஆசிரியருக்கு
அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013

## முன்னுரை

கல்கியில் எழுதிய தொடர்கதை. இதற்காக நான் கல்கி ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னை எழுதக் கூறிவிட்டு, உடனே படம் போடுவதற்காக திரு. கோபுலுவிடம் அழைத்துச் சென்றார்.

திரு. கோபுலு ஒரு ஜீனியஸ்! தமிழ் உலகம் அவரை மறக்க முடியாது. 'தில்லானா மோகனாம்பாள்' போன்ற பல அற்புத நாவல்களுக்குப் படம் வரைந்தவர். தீபாவளி மலர்களில் அவர் தெய்வங்களை நம் முன்னால் வந்து தரிசனம் தரும்படி செய்வார். அவரது சரித்திர கால ஓவியங்களில் நாம் ராஜராஜ சோழன் அருகில் நிற்போம். ராமானுஜரோடு கோபுரத்தில் ஏறி நிற்போம். பாண்டிய அரசரோடு சேர்ந்து கோவில் கூரைகளில் பொன் தகடு வேய்வோம்.

திரு. கோபுலுவுக்கு சரித்திரம் அத்துப்படி. எனவே என் கதையின் காலம் விஜய நகர ராஜ்யத்தின் கடைசி ஆண்டுகள் என்று சொன்ன போது அந்த 'நாளைய' கதாபாத்திரங்களை கற்பனை செய்து படம் போடத் தொடங்கி விட்டார்.

நானே என் கதாநாயகி சுவர்ணமுகியை அவர் ஓவியங்களைக் கொண்டே புதுப் புது விதங்களில் வர்ணித்துக் கொண்டேன்.

வெள்ளையர்கள் வியாபாரிகளாக வந்த நாட்கள்!

விஜய நகரம் பலவீனமாகி எங்கும் பஞ்சம் ஏற்பட்டு குழந்தைகள் விற்கப்படும் கொடூர நிலைமை.

இந்த நிலையில் அரசகுமாரி சுவர்ணமுகி படும் துன்பங்களை இந்த நாவலில் விவரித்திருக்கிறேன்.

அந்த நாளில் நாடு இருந்த அவல நிலையும், சமூகம் பட்ட துன்பங்களையும் சுவர்ணமுகியின் வாழ்க்கையோடு பிரதிபலிக்கிறது.

இப்படி எல்லாம் நாடு இருந்ததா என்று பலர் ஆச்சரியப்படலாம்.

ஆதாரங்களான செய்தியின் அடிப்படையில்தான் எழுதி இருக்கிறேன்.

இந்த ஆதாரங்கள் அபூர்வமாகச் சில பழைய காலக் கடிதங்களில் இருக்கின்றன.

இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்கள் தங்கள் நாட்டுக்கு எழுதிய கடிதங்கள் அவை!

நாட்டு மக்கள் படும் துன்பங்களை அவர்கள் பொது நோக்கில் அழகாக எழுதி உள்ளார்கள்.

நிறைய அதிர்ச்சி தரும் செய்திகள் உள்ளன! நாடு எப்படி மௌனமாகத் துன்பப்பட்டது! வாழ்வு எவ்வாறு ஸ்திரமற்று, அலை பாயும் நிலைமையில் இருந்தது எல்லாம் அவற்றுள் தெரிய வருகின்றன.

அந்த நிலைமைகள் சுவர்ணமுகியின் வாழ்க்கையை எப்படி பாதித்தது, அதில் அவள் நடந்து கொண்ட விதம் எப்படி என்பதுதான் கதை.

**– ஸ்ரீ வேணுகோபாலன்**

# பதிப்புரை

தமிழ் இலக்கிய உலகில் நாவல் இலக்கியத்திற்கென்று ஒரு தனி இடம் என்றுமே உண்டு. நாவல்கள் படிப்பது மிக எளிது. ஆனால் நாவல்கள் படைப்பது எளிதான ஒன்றல்ல. கதையின் நடையில் தொய்வு ஏற்படாமல், தெளிவோடு இருக்க வேண்டும். கதாபாத்திரங்களின் குணங்கள் முன்னுக்குப் பின் முரண்படாமலும், கதையின் கருத்தில் முரண்பாடும், குழப்பமும் இல்லாமல் இருக்க வேண்டும். இதையெல்லாம் கருத்திற்கொண்டு எழுதினால்தான் ஒரு நல்ல நாவலைப் படைக்க முடியும்.

நாவல்களின் சமீப காலங்களில் வாசகர்கள் விரும்பி படிப்பது இரண்டு வகையான நாவல்கள். ஒன்று சமூக நாவல் மற்றொன்று சரித்திர நாவல்கள். சமூக நாவல்களில், நாம் வாழுகின்ற சமுதாயத்தின் அன்றாடம் எழுகின்ற பிரச்சினைகள், சம்பவங்கள் ஆசிரியரின் கற்பனைத்தேன் கலந்து தரப்படுகிறது. தினம் தினம் கண்முன்னே பார்ப்பவைகளையும், காதால் கேட்பவை களையும் கதைகளில் படித்துப் படித்து அலுத்துப்போன வாசகர்கள் வேறு விதமான நாவல்களைத் தேடுகின்றனர்.

அதுதான் சரித்திர நாவல்கள். இவை பழைய சரித்திர சான்றுகளைப் பின்னணியாகக் கொண்டு சித்தரிக்கப்படுகின்றன. நமக்குத் தெரியாத பல சரித்திர நிகழ்ச்சிகளை, ஆசிரியர்கள் தங்களின் கற்பனை திறத்தால் நம் கண்முன்னே திரைப்படம் போல் தெளிவாக காட்சி யளிக்கும்படி தீட்டுகிறார்கள்.

சரித்திர நாவல்களுக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்படக் காரணமாக இருந்தவர் அமரர் கல்கி அவர்களே. அமரர் கல்கியின் சரித்திர நாவல்கள் இன்றும்

திரும்பத் திரும்ப படிக்கும் தன்மையுடையதாய் இருக்கின்றது. இப்படிச் சிறந்த சரித்திர நாவல்கள் படைப்பவர்கள் தமிழில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளனர்.

வரலாற்று கதைகளில் ஸ்ரீவேணுகோபாலன் முன்னனியில் இருக்கிறார். அவர் இந்த 'சுவர்ணமுகி' நாவலை கல்கியில் வாரத் தொடராக எழுதி உள்ளார். அந்நாளில் இந்தத் தொடர் வந்தபோது பரபரப்புடன் வாசகர்கள் இந்த நாவலை வாசித்தார்கள்.

விஜயநகர சாம்ராஜ்யம் அழிந்து பலவீனப்பட்ட ஒரு நேரத்தில் இந்தக் கதை நடக்கிறது. அவர்கள் விஜயநகரத்தை விட்டு தெற்கே குடி புகுந்து விட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் சிற்றரசர்கள் மிகவும் நலிந்து விட்டார்கள். இந்த நிலையில் அந்த நாளில் வெள்ளைக்காரர்கள் வியாபாரத்திற்கு வந்து இறங்கினார்கள். எங்கும் பஞ்சம் ஏற்பட்டதால் மக்கள் மிகவும் தத்தளித்து கொந்தளிக்க ஆரம்பித்த மிகச் சோகமான சூழ்நிலை அது.

இத்தகைய சூழ்நிலையில் தமக்கே உண்டான அரிய தமிழ் நடையால் ஒரு நல்ல சரித்திர நாவலை படைத்திருக்கிறார் ஸ்ரீவேணுகோபாலன். இதில் சுவர்ணமுகியை நாம் மறக்கவே முடியாது. கல்கி வாசகர்களது பெரும் மதிப்பு பெற்றது இந்தத் தொடர் நாவல்.

'புஷ்பா தங்கதுரை' என்ற புனைப் பெயரில் அவரது நூல்கள் பலவற்றை நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். வாசகர்கள் பூம்புகாரின் எல்லா வெளியீடுகளுக்கும் கொடுக்கும் நல்லாதரவை இந்த 'சுவர்ணமுகி' என்னும் சரித்திர நவீனத்துக்கும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் படைக்கின்றோம்.

**— பூம்புகார் பதிப்பகத்தார்**

**There was no head - on collision between British imperialism and Indian Society, and in consequence there was no resistance to the death. The Indian religio - social systems showed little trace of Political nationalism in its modern sense.**

**— PERCIVAL SPEAR**

## முன்னால். . .

திருவேங்கட மலையின் வட்டாரங்களில் கதை ஆரம்பம். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி. வெள்ளைக்காரர்கள் வியாபாரிகளாகவும் யாத்திரிகர்களாகவும் நாட்டில் ஊடுருவி விட்டார்கள். அந்நாளைய வாழ்க்கைமுறை எப்படி இருந்தது? நிறைய மாறுபட்டிருந்தது. நம்மைச் சில சமயம் அது அதிசயப்படவும் வைக்கிறது. சந்தேகம் கொள்ளவும் வைக்கிறது. (இப்படியா வாழ்ந்தார்கள்!)

இந்தக் கதையில் சில சம்பவங்கள் அத்தகைய அதிசயமோ, சந்தேகமோ கொடுத்தால், அதற்குப் பின் ஏதோ ஒரு சரித்திர ஆதாரம் உண்டு என்று தெரிந்தால் போதுமானது.

இந்த ஆதாரங்களைத் தேடி நான் படித்த, படிக்கிற புத்தகங்கள் சற்று அதிகமானவைதான். ஏனெனில் சமீப நூற்றாண்டுகள் எனும்போது ஏகமாக Reference புத்தகங்கள் கிடைத்து விடுகின்றன.

நான் எடுத்துள்ள ஆதாரங்கள் சில அறிஞர்கள் கருத்துக்கு மாறுபட்டதாக இருந்தால் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

ஏனெனில் நான் எழுதுவது சரித்திரமல்ல; கதை, கதை, கதை!

ஸ்ரீ.வே.

# 1

திருவேங்கட மலையிலிருந்து சுவர்ணமுகி இறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளிடம் ஒரு அவசரம் இருந்தது. கால்களைத் தூக்கி வைத்து ஒரே பரபரப்பில் இறங்கினாள்.

இளம் காலை நேரம் அது.

அன்றைக்குக் காற்றில் சலனம் இல்லை.

நெற்றியில் குறுவியர்வைகள் அரும்புகட்ட, அடிக்கடி நீண்ட மூச்சுடன் இறங்கிக் கொண்டிருந்தாள்.

காலி கோபுரம் வந்தபின் திரும்பிப் பார்த்தாள். பூங்கரு பின்னால் வந்து கொண்டிருந்தாள். அவளையும் தாண்டி அவள் புருஷன் உய்யன் வந்து கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரும்தான் சுவர்ணமுகிக்குத் துணைகள்.

ஆச்சரியமாக இருந்தது! காலி கோபுரம் கட்டப் பட்ட பிறகு இப்போதுதான் பார்க்கிறாள்.

சமீபத்தில் முடிக்கப்பட்டது அது.

இன்னும் அதன் செங்கல்களும், காரைகளும் சுற்றி வர புதுமை குன்றாமல் கிடந்தன.

கோபுரத்து நிழலில் சற்றே நின்றாள்.

வேங்கட மலையை நோக்கிக் கைகூப்பி, "அப்பா, வேங்கடவா! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். இந்த நாட்டுக்கும் எனக்கும் நல்ல கதியைக் கொடுத்து அருளுவாய்!" என்றாள்.



"சீக்கிரம் சீக்கிரம்" என்றாள் அவள்.

உய்யன் கோலை ஊன்றிப் பல இடங்களில் தாவி ஓடி வந்தான்.

"அம்மா! இந்த விருசல் உனக்கு ஆகுமோ?" என்று அவளை நோக்கிக் கேட்டான்.

"கீழே பெரிய விஷயம் நடக்கிறது. நாம் உடனே போக வேண்டும்" என்றாள் சுவர்ணமுகி.

ஐம்பது வயதான உய்யனை நோக்கிப் பூங்கரு ஜாடை காண்பித்தாள். கீழே யுத்தம் நடக்கிறது என்பது அதன் பொருள்.

"சண்டையா?" என்றான் அவன். வாயைப் பிளந்து.

"ஆமெ" என்றாள் அவள்.

பூங்கருவும் உய்யனும் மலை இனத்தைச் சேர்ந்தவர்கள். திடமான மேனி படைத்தவர்கள். வீதியான மார்பு. கைகளும் கால்களும் கல்லைப் போல வலுவானவை. அவர்கள் கண்களில் காட்டுத் தன்மை தெளிவாகத் தெரிந்தது.

ஒரு நிமிடம்கூட அங்கு இளைப்பாறவில்லை.

கோபுர வாயிலிலிருந்து இறங்க ஆரம்பித்தார்கள்.

"இப்போதெல்லாம் யாத்திரிகர்கள் குறைந்து விட் டார்களா?" என்றாள் சுவர்ணமுகி.

"மூணு வருஷமாச்சு!" என்றாள் பூங்கரு.

"மழையே இல்லையே!" என்றான் உய்யன்.

எப்போதும் திருவேங்கடமலை வழியில் யாத்திரிகர்கள் கும்பல் எதிர்ப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இன்று பாதை நிர்மானுஷ்யமாய் இருந்தது.

இருபுறங்களிலும் மரங்களும் செடிகளும் பட்டுப் போயிருந்தன.

கம்பும் குச்சியுமாக எங்கும் காட்சி. இலையில்லாத மரங்களின் எலும்புக் கூடுகள் பயங்கரமாக இருந்தன.

ஒரு நாழிகையில் மலையின் அடிவாரத்தை அடைந்தாள் சுவர்ணமுகி.

கீழே அனல் வீசியது. எங்கும் எஃகுத் தகடு போல் வெய்யில் ஜொலித்தது. ஒரு பூண்டுப் பச்சை இல்லை. எல்லாம் தரிசையான வெட்டைகள். வானம் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் தீயாக வழிந்தது.

அடிவாரத்தில் பல்லக்குக் காத்திருந்தது. போகிகள் முக்கால் களைப்பில் இருந்தார்கள். அவள் ஏறியதும் அவர்கள் தெலுங்கில் ரீங்கரித்துக் கிழக்கு நோக்கிப் பறந்தார்கள்.

சுவர்ணமுகியின் வலது கண் துடித்தது. அடிக்கடி திரையை விலக்கி வெளியே பார்த்தாள். கோவிந்த ராசனின் கோபுரம் அவளை நோக்கி நெருங்கிக் கொண் டிருந்தது.

கண்களில் ஈரம் மல்க, கோபுர திசையை அடிக்கடி வணங்கினாள்.

திருப்பதி எல்லை வந்தது. பல்லக்கு மாட வீதியில் புகுந்தது.

வெளியே எட்டிப் பார்த்த சுவர்ணமுகி ''நிறுத்துங்கள்!'' என்று கட்டளை இட்டாள்.

பல்லக்கு நின்றது.

சரிவாக இறங்கி, ஒரு பிராணியைப் போல் தரையில் உட்கார்ந்தது.



''இதென்ன யாரையுமே காணவில்லையே!'' என்றாள் அவள்.

பின்னால் பூங்கருவும் உய்யனும் ஓடி வந்தார்கள்.

சுவர்ணமுகி அந்த ராஜ வீதியில் நின்று மேற்கும் கிழக்குமாகப் பார்த்தாள்.

''என்ன இது! ஒருத்தரையும் காணவில்லையே!'' என்றாள் ஆதங்கத்துடன்.

உய்யன் அவள் அருகில் வந்தான். அவன் கண்கள் சோகத்தில் சுருங்கின. எதையோ சொல்ல விரும்பாதவன் போல் சிறிதே தயங்கினான்.

பிறகு ஒரே ஒரு வார்த்தையை மட்டும் பயத்துடன் கூறினான்.

''பஞ்சம்.''

சுவர்ணமுகியின் கண்கள் தூக்கின.

''பஞ்சம்?'' என்றாள் அவள் கலக்கத்துடன், வெறுமையாக வீதியைப் பார்த்தாள்.

வீதி ஒரு வேதாள உலகக் காட்சி தந்தது.

வறண்ட புழுதி எங்கும் குவிந்திருந்தது. செத்தைகளும் குப்பைகளும் சிதறிக் கிடந்தன.

வீட்டு வாயில்கள் பெருக்கப்படவே இல்லை.

கோலங்கள் அலங்கரிக்கும் பூமியில் இப்போது வெடிப்பின் ரேகைகள் படர்ந்தன.

தென்னை மட்டை உதிர்ந்து நின்றன.

ஒரு வண்டி குடை சாய்ந்து கிடந்தது.

தூரத்தில் ஒரு மாடு இறந்து கிடக்க, அதைச் சுற்றி இரண்டு நோஞ்சல் காக்கைகள் வட்டமிட்டன.

வீடுகள் பூட்டியவாறு இறந்து கிடந்தன.

ஒரு ஜந்துவைக் காணோம்.

பல வருடங்களின் வறட்சியால் ஓடுகளும் சுவர்களும் வெளிறி நூற்றாண்டு கால முதுமையைக் காட்டின.

ஊரே ஒரு பாலைவன நடுவில் மாட்டிக் கொண்டது போல்,

மத்தியான வெய்யிலில் பொறிபட்டுக் கொண்டிருந்தது.

மலைமீது சில ஆட்களையாவது பார்க்க முடிந்தது. இங்கு அதையும் காணோம்.

சுவர்ணமுகி வீதியோடு நடந்தாள்.

முனை திரும்பிக் கோவிந்தராஜர் கோவில் முன்னாள் வந்தாள். அதன் ஆசார வாசல் மூடப்பட்டு இருந்தது.

கதவுப் பூண்கள் மேல் பெரிய சிலந்திகள் தொங்கின.

கல் திண்ணை மீது அநேக குருவிகளின் சடலங்கள் சறுகுகளாகத் தெரிந்தன.

''சுவாமி! இதென்ன அநியாயம்!'' என்று பொருமினாள் சுவர்ணமுகி. கண்கள் கலகலத்தன. நீர் கன்னங்களில் துள்ளியது. சொல்லப்போனால் அந்த ஊர் நான்கு ஆண்டுகளில் பார்க்கும் தண்ணீர் மழை அது.

"இதென்ன சாபமா? கடவுளின் கோபமா? நாட்டில் நடப்பதை யெல்லாம் பார்த்து அவர் கண் மூடிவிட்டாரா? ஊருக்குப் பதில் பாழ் இருக்கிறதே! சுவாமி! சுவாமி!" என்று புலம்பினாள் அவள்.

மாட வீதியில் திரும்பினாள்.

ராமானுஜர் ஜோடித்த ஊர் இது.

அவரே திட்டம் செய்து,

நாலு ராஜ வீதியும்,



ஒரு மாட வீதியும்

ஒரு சன்னதி வீதியுமாக உண்டு பண்ணிய ஊர் இது.

அந்த மகானின் பாதங்கள் பட்டுப் புனிதம் அடைந்த ஊர் இது.

அவர் செய்து கொடுத்ததைப் பாதுகாப்பதற்கு அறியாமல் மக்களும் மன்னர்களும் பாழ்படுத்தி விட்டார்களே! இந்த அநியாயம் எங்கேயாவது நடக்குமா?

மாட வீதியில் நுழைந்தாள்.

ராஜ வீதியின் பிரதிபிம்பம் போல் இந்த வீதியும் இருக்க,

தூரத்தில் சின்னக் குச்சி நிழல்களின் நடமாட்டம் தெரிந்தது.

அருகில் போகப் போக அவை நிழல்கள் அல்ல, மிக எளிய ஜனங்களின் மெலிந்த உடல் கூடுகள் என்று தெரிந்தது.

மூன்று பரங்கியரைச் சுற்றி அவர்கள் நடைப் பிணங்களாக வியாபித்திருந்தார்கள்.

அருகில் போனதும் அங்கே நடக்கும் காரியம் அவளுக்குப் புரிய வந்தது. அங்கே அடிமை வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

ஏழை மக்கள் தங்கள் பிள்ளைகளை அந்தப் பரங்கியரிடம் பணத்துக்கு அடிமைகளாக விற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே வாங்கப்பட்ட ஏழு பிள்ளைகள் அழுதுகொண்டே பெற்றோர்களைப் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

இரு பரங்கியர் அவர்களைப் பிடித்து அடிக்கடி அதட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பிள்ளைகளைத் தங்கள் கப்பல்களில் வேலை செய்வதற்காக அவர்கள் அழைத்துப் போனார்கள்.

அல்லது ஜாவாவிலும் மேற்கு நாடுகளிலும் அடிமைகளாக விற்பனை செய்து வந்தார்கள்.

இந்த வியாபாரத்தைப் பற்றி சுவர்ணமுகி கேள்விப் பட்டிருக்கிறாள்.

ஆனால் இப்போதுதான் நேரிடையாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அருவருப்புடன் மேலே செல்ல, பரங்கியர் தங்கள் வியாபாரத்தை முடித்து பிள்ளைகளுடனும் தங்களது வாட்ட சாட்டமான குதிரைகளுடனும் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்களால் நிராகரிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் அந்த வெள்ளையரைக் கெஞ்சிக் கொண்டே குதிரைகளுடன் நடந்தார்கள்.

சுவர்ணமுகியைப் பார்த்த சிலர் அவளை அதிசயப் பொருள் போல் சில நேரம் பார்த்து, பிறகு மெதுவாக நிச்சயமில்லாமல் நெருங்கினார்கள்.

உய்யன் எச்சரிக்கு முன் அவர்கள் சுவர்ணமுகியின் மீது பாய்ந்து அவளது இரண்டு முத்து வடங்களை இழுத்தார்கள்.

முத்துக்கள் மண்ணில் சிதறி ஓட, அந்த ஜனங்கள் ஒரு மிருகத்தன சண்டை போட்டுக் கொண்டு அவை களைப் பொறுக்குவதில் ஈடுபட்டார்கள்.

விலைகள் ஏக உயரங்களில் விற்றதால் மக்கள் வாங்கும் வகையில்லாமல் ஒரு மிருகமான மட்டத்துக்கு இறங்கி இருந்தார்கள்.



உய்யன் ஓடி வந்து சுவர்ணமுகியை விடுவித்து, பல்லக்கில் திணித்து, போகிகளை வேகமாக விரட்டினான்.

ஊரைக் கடந்து பல்லக்கு வெளிச் சாலைக்கு வந்து விட்டது.

மத்தியான வெய்யில் எங்கும் தீ பொழிந்தது.

நிழலில்லாத சாலையில் பல்லக்கு போகிகளின் ரீங்காரத்துடன் போக,

உள்ளே சுவர்ணமுகி தன் கண்ணால் கண்ட காட்சி களை எண்ணி வெதும்பிக் கொண்டிருந்தாள்.

உய்யன் அப்போது ஓடி வந்து, "அம்மா! தூரத்தில் ஒரு குதிரை வருகிறதே!" என்றான்.

சுவர்ணமுகி சட்டென்று கீழே குதித்து, ஒதுங்குவதற்கு இடம் இல்லாததால் பாதையிலிருந்து விலகி, பக்கத்து வயல் தரிசை மேல் பல்லக்கை நிறுத்தச் சொன்னாள்.

அவள் மனத்தில் அப்போது திகில் ஏற்பட்டது.

இதுவரை அவள் ஒதுக்கி வைத்திருந்த அந்தப் போர் நினைவுகள் மீண்டும் அவள் மனத்தில் தோன்றிவிட்டன.

அவளது விதியை நிர்ணயம் செய்யக்கூடிய சண்டை எட்டு நாழிகை தூரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அதன் விளைவுகள் என்ன ஆகுமோ என்ற அச்சம்!

அடிக்கடி அதை மறக்க முயன்றாலும், அது பிரமாத வேகத்தோடு அவளைத் தேடி ஓடிவந்தது.

சண்டை!

அதன் முடிவு என்ன?

நல்ல முடிவு ஏற்பட வேண்டும் என்று திருமலையில் பிரார்த்தனை செய்து விட்டு வந்திருக்கிறாள். கடவுள் கிருபை பண்ண வேண்டும்.

சாலையில் வருபவன் வேகமாக வந்தான்.

அவன் குதிரை குலுங்கும் விதம் அதன் உடல் சரியில்லை என்று காட்டியது.

நெருங்க, நெருங்க குதிரை மீது ஆத்திரமான வீரன் ஒருவன் உட்கார்ந்து விரைந்து வருவது தெரிந்தது.

அவன் ஆடைகளும் குல்லாயும் புழுதியில் பூத்திருந்தது.

முகம் வியர்வையால் நனைந்து மட்கிய இரும்பு போல் இருந்தது.

வேகமாக வந்தான் அவன்.

ஒரு விநாடி அவர்களைத் தாண்டிப் போய் விட்டான்.

பிறகு பல்லக்கைப் பார்த்துக் குதிரை லகானை வேகமாக இழுத்து நிறுத்த முயன்றான்.

அதுவரை தரித்து வந்த குதிரை அதற்கு மேல் எதுவும் பொறுக்காமல் சடீரென்று பூமியில் விழுந்து இரண்டு முறை புரண்டு பிறகு நிரந்தரமாகக் கண்ணை மூடியது.

அதன் விலாவிலிருந்தும் கழுத்திலிருந்தும் ரத்தம் ஏராளமாக வழிந்திருந்தது.

வீரனும் கீழே விழுந்து ஒரு முறை புரண்டு பிறகு வேதனை தாங்காத முகத்துடன் மேலே நிமிர்ந்தான்.

இதற்குள் சுவர்ணமுகி அவனை நெருங்கியிருந்தாள்.



வீரன் அவளைப் பார்த்ததும் எழுந்திருக்கப் பார்த்தான். முடியவில்லை. அப்போதுதான் அவன் மேலெல்லாம் காயங்கள் என்று தெரிந்தது. வலது கால் முட்டியிலிருந்து ரத்தம் வெள்ளமாக ஓடியது.

அந்தக் கால் ஜீவனற்றுத் தரையில் புரண்டது.

வீரன் அவளைப் பார்த்து – ''தாங்கள் யார்? அது சுவர்ணமுகியின் பல்லக்கா?'' என்றான் வேகமாக.

''ஐயா! இது சுவர்ணமுகியின் பல்லக்குதான்! நான் அவள் சேடி!'' என்றாள் சுவர்ணமுகி.

''நல்லது. சுவர்ணமுகியிடம் சொல்லுங்கள் சண்டையில் அவள் தந்தை வீர மரணம் அடைந்தார்'' என்றான்.

பிறகு நெஞ்சைப் பிடித்து அவன் கீழே சுருண்டான்.

* * * * *

**The Civil was brought about a great famine and the people were reduced to such pitiable condition that parents sold their children for keeping their body and soul together. Children were sold at the rate of five fanams worth of rice. European merchants bought these human merchandise and exported them to Foreign Countries.**

**— MORELAND**

# 2

சுவர்ணமுகி திகைத்தாள்.

விருட்டென்று ஓடி வீரன் பக்கம் வந்தாள். அவன் முகம் அதற்குள் கூம்பியிருந்தது. கண்கள் மூடிவிட்டன. தரையோடு தரையாக அவன் பரவிக் கொண்டிருந்தான்.

''ஐயா!'' என்றாள் ஒரு முறை. ''ஐயா!'' என்றாள் இரண்டாம் முறை. பிறகு தோளைப் பற்றி உலுக்கினாள்.

திடீரென்று உயிர் பற்றியது போல் அவன் விழித்தான். அவளைப் பிரமிப்புடன் பார்த்தான். கோபம் வந்தது. ''இன்னும் போகவில்லையா?'' என்று அதட்டினான்.

''எங்கே?'' என்றாள் அவள்.

''எங்கேயாவது. இல்லாவிட்டால் சுவர்ணமுகிக்கு ஆபத்து.''

''இதோ போகிறோம். அதற்குள் ஒரே ஒரு கேள்வி. சண்டையில் யார் ஜெயித்தார்கள்?''

''திம்மராஜா!''



சுவர்ணமுகி முகத்தைத் திருப்பினாள். அதிர்ஷ்டம் அவள் பங்கில் இல்லை. எங்கேயோ பறந்து விட்டது.

கண்களில் நீர் துளிர்த்தது. சுருக்காகத் துடைத்தாள்.

பிறகு, ''ஐயா! உடம்பெல்லாம் ரணம் உங்களுக்கு உதவி வேண்டாமா?'' என்றாள்.

''உதவி?'' என்றான் அவன். ''யார் என்ன செய்ய முடியும்? நான் இறந்து கொண்டிருக்கிறேன். என் கல்யாணி உயிருடன் இருக்கிறாளா?''

கல்யாணி அவன் குதிரை.

''இறந்து விட்டாள்.''

''நல்லது. என் முடிவு இனி இங்கேதான். கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீர்களா?''

பல்லக்கிலிருந்து கொணர்ந்து கொடுத்தாள்.

பருகியதும் சிறிது தெம்பு கண்ணில் வந்தது.

''உங்கள் பெயர்?''

''கங்கணா!''

''சுவர்ணமுகியின் சேடியா?''

''ஆமாம்.''

''நல்லது. இன்னும் ஒரு உதவி செய்வீர்களா?''

''செய்கிறேன்.''

''என்னை இழுத்து அந்த நிழலில் விடுங்கள்! சாகும்போது இதமாகச் சாக விரும்புகிறேன்.''

எழுந்தாள். அவன் கைகளைப் பற்றி மெதுவாக இழுத்தாள். அருகில் உடை மரம். கீழே அதன் தரித்திர நிழல். அதுகூட கானலில் வெளிறியிருந்தது.

''இனிமேல் சந்தோஷமாக இறப்பேன். நீங்கள் போகலாம்.''

அவள் தயங்கி நிற்க அவனுக்குக் கோபம் வந்தது. ''நீங்கள் போகலாம் என்று சொன்னேன். ஏன் நிற்கிறீர்கள்? ஆபத்து எந்தக் கணமும் இங்கே வரும். போங்கள். . . போங்கள்.''

அவள் தயக்கமுடன் புறப்பட்டாள்.

நான்கு அடிகள் போயிருக்க மாட்டாள். ''கங்கணா!'' என்று அழைத்தான். திரும்பினாள்.

''போகும் வழியில் கிடைக்கும் தண்ணீரை அருந்தாதீர்கள்.''

''ஏன்?''

''எல்லாக் கிணறுகளிலும் விஷம் கலந்திருக்கிறார்கள் எதிரிகள்.''

''நல்லது'' என்று சொல்லி அவள் நாலு அடி எடுத்து வைத்தாள். அவன்,

''கங்கணா!'' என்றான்.

திரும்பினாள்.

''எப்போதாவது வேட்டுப்பள்ளி போனால் கங்கம்மா என்று விசாரியுங்கள்!''

''சரி.''

''அவள் என் தாயார்! கடைசிவரை அவளை நினைத்தேன் என்று சொல்லுங்கள்.''

''சரி.''

''பாலாற்றங்கரையில் எனக்குக் கிரியை பண்ணச் சொல்லுங்கள்.''

''ம்.''

''போங்கள், போங்கள் சீக்கிரம்.''



தயக்கத்துடன் திரும்பினாள். பல்லக்குவரை நடையிட்டாள். சிறிது நேரம் நின்றாள். பிறகு ஒரு வேதனையில் அவன் பக்கம் திரும்ப ஓடிவந்தாள்.

அதற்குள் அவன் அமிழ்ந்திருந்தான். கண்கள் மூடிவிட்டன. வாயிலிருந்து ரத்தம் சிந்தியது. தரையில் புழுதியோடு அழுந்தினான். உலகத்தை அநேகமாக மறந்து விட்டான்.

பல்லக்கு பகல் முழுதும் பயணித்தது. எங்கும் தீ மெழுகியிருந்தது. சுவர்ணமுகி வழக்கமாகப் பார்க்கும் காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. அந்தப் பச்சைப் பசேல் சோலைகளும், புகை மூடிய மலைகளும் எங்கே?

மனசில் வேதனைப்பட்டாள்.

வெளிப்புறத்தைப் பார்க்க இயலவில்லை.

அப்படி ஒரு தீ ஜொலிப்பு. பூமியின் மேற்புறங்கள் ஆவியாக நெளிந்தன. மலைகள் வெறும் மொட்டைத் தரைகளாகத் தெரிந்தன. ஓடைகளில் வெளீர் என்று மணல் தெரிந்தது. வயல், வரப்புக்களில் ஒரு துண்டுப் புல் இல்லை. எல்லாம் தரிசை, தரிசை!

ஒரு ஜீவராசியையாவது எங்கேயாவது பார்க்க வேண்டுமே!

இல்லை.

இத்தனை நாள் வீட்டுக்குள் இருந்தாள். வெளிப்புற உலகம் தெரியவில்லை. வளர்ப்புத் தந்தை ரங்கப்பா பலமுறை சொல்லியிருக்கிறார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாட்டில் நடப்பது சண்டைதான். அதுவும் கிரீடத்துக்காகச் சண்டை. சொந்த மனிதர்களுக்குள் சண்டை.

இதில் கையில் பலம் உள்ளவர்கள் எல்லாம் ஊரில் புகுந்து சூறையாடுகிறார்கள். அநியாய வரி விதிக்கிறார்கள். வீட்டுக்குள் புகுந்து நகைகளைக் கேட்கிறார்கள். இந்த லட்சணத்தில் ஜனங்கள் எப்படித் தங்கள் கடமைகளைச் செய்வார்கள்? விவசாயத்தை யார் கவனிப்பார்கள்? வியாபாரத்தை யார் பெருக்குவார்கள்?

அந்தி நெருங்கும்போது நாராயணவனத்தை அடைந்தார்கள்.

ஊரின் விளிம்புக்கு வந்ததும் போகிகள் நின்றார்கள். "அம்மா!" என்றான் உய்யன். "கொஞ்சம் இறங்கிப் பார்க்கிறீர்களா?"

பல்லக்கு இறங்கியது.

சுவர்ணமுகி வெளியே வந்தாள்.

என்றுமே அந்த மலைச் சூழல் அவளுக்குப் பெரும் உற்சாகம் தருவதுண்டு.

இறங்கிச் சுற்றிலும் பார்த்தாள்.

நகரி மூக்குத் தெரிந்தது.

அதைப் பார்த்ததும் திரும்பினாள். "உய்யா தீபம் ஏற்றவில்லையா?" என்றாள்.

தினமும் அந்த மலை முகட்டில் தீபம் ஏற்றுவார்கள். அது தீபஸ்தம்பமாக எரியும். கிழக்குக் கடற்கரையில் செல்லும் கப்பல்களுக்குத் திசை காட்டும்.

அந்தத் தீபம் இன்று எரியவில்லை.

"என்ன விஷயம்?" என்றாள் சுவர்ணமுகி.

"அதைத்தான் நானும் கேட்கிறேன்" என்றான் உய்யன்.



"ஊரில்கூட விளக்குகள் இல்லை. அம்மா!" என்றாள் பூங்கரு.

ஊர்ப் பக்கம் பார்த்தாள்.

அதற்குள் அந்தத் திசை கருகியிருந்தது. ஒரு மூடி போல இருட்டு எல்லாவற்றையும் மூடியிருந்தது.

"நம்ப ஊரா?" என்றாள் சுவர்ணமுகி.

"ஆமாம், தெரியலையா?" என்றாள் பூங்கரு.

"ஏன் இப்படி இருக்கிறது? ஜனங்கள் இல்லையா?"

"தெரியவில்லை அம்மா. எனக்கே பயமாக இருக்கிறது."

சுவர்ணமுகி யோசித்தாள்.

"ஒருவேளை ரங்கப்பா இறந்தது ஊருக்குத் தெரிந்து விட்டதோ? அவர்கள் துக்கம் கொண்டாடுகிறார்களோ?"

வியப்புடன் ஊர்ப் பக்கம் பார்த்தாள்.

ரங்கப்பாவின் மாளிகைதான் அவளது வாசஸ்தலம். அதற்கு ஊருக்குள் புகுந்தும் போகலாம். வெளிப்புறம் வழியாகவும் போகலாம்.

"வீதி வழியாகப் போகலாம்" என்றாள் அவள்.

பல்லக்குப் புறப்பட்டது.

ஊரைச் சீக்கிரம் அணுகியது. வீதிக்குள் போனதும் "உய்யா!" என்றாள் சுவர்ணமுகி.

"அம்மா!"

"வீடுகளில் ஒரு பொட்டு வெளிச்சம் இல்லையே!"

ஊரில் ஏற்கனவே சுபிட்சம் குறைந்து அதன் லட்சுமீகரம் மறைந்து விட்டது.

ஜனங்கள் சீக்கிரமாக உண்டார்கள். சீக்கிரமாக உறங்கினார்கள். நீண்ட நேரம் விளக்கு வைக்கும் வீடுகள் மிக சொல்பமாகவே இருந்தன.

இப்போது அந்தச் சொல்பங்களிலும் விளக்குகளைக் காணோம்.

''பேச்சுக்குரல் கூட இல்லையே!'' என்றாள் சுவர்ணமுகி. உய்யன்கூட அதைக் கண்டு அதிசயப்பட்டான்.

வீதி நிசப்தமாக இருந்தது. ஒரு துளி சலனம் இல்லை. கனவு உலகத்தில் போவது போல் பிரயாணித்தார்கள்.

ஊர் வீதியைத் தாண்டியதும் அதற்கு அப்பால் சிறிது தூரம் சென்றால் அருணா ஆறு.

அந்த ஆற்றின் ஓரமாக அமைந்திருந்தது வேங்கடகிருஷ்ண விலாச மாளிகை.

ரங்கப்பரின் மாளிகை அது.

சுற்றிவர மண் அரணோடு நிற்பது விஸ்தாரமான தோட்டம். சின்னக் குளம். நடுவில் மாளிகை.

பல்லக்கு அரணுக்குள் நுழைந்தது. சுவர்ணமுகிக்கு வேதனை எழுந்தது. ரங்கப்பாவின் மரணத்தை எப்படி வேங்கடம்மாவிடம் சொல்லப் போகிறோம். வளர்ப்பு அம்மாவாக இருந்து அவள் மீது அன்பைப் பொழிபவள் வேங்கடம்மா. தவிர, ரங்கப்பாவுக்கு இணைபிரியாத மனைவி. அவளிடம் போய் எப்படிச் செய்தியைத் தெரிவிப்பது?

அவளைத் தவிர, அவர்கள் மகன் சந்திர கிருஷ்ணனிடமும், மகள் திவ்வியப் பிரபாவிடமும் எப்படித் தெரிவிப்பது?



ஆச்சரியமாக மாளிகைக்குள் விளக்குகள் அதிகம் தெரியவில்லை.

எப்போதும் ஐம்பதுக்கு மேல் விளக்கு ஏற்றி லட்ச தீபம் போல் ஜொலிக்கும் மாளிகை.

இப்போது மங்கலான உட்புறமுடன் தெரிந்தது.

வாசலில் போய் இறங்கினாள்.

''அம்மா, அம்மா!'' என்று சொல்லி, உள்ளே போனாள்.

போகிகள் விடைபெற்றுப் போனார்கள்.

உய்யனும் பூங்கருவும் வாசலிலேயே நின்றார்கள்.

தாழ்வாரத்தைக் கடந்து நடைக்குப் போனாள். வீடு நிசப்தமாக இருந்தது. எல்லோரும் எங்கே?

இதற்குள்ளாக விஷயம் தெரிந்து வீட்டை விட்டுப் போய்விட்டார்களா?

நடையில் எரிந்த தீவர்த்தி ஒன்றுதான் வீடு முழுதும் சிறிது பிரகாசத்தைக் கொடுத்தது.

தீவர்த்தியை எடுத்தாள். ''அம்மா!'' என்று அழைத்து வேங்கடம்மாவின் அறைக்குள் சென்றாள்.

கதவு திறந்திருந்தது.

உள்ளே படுக்கை அறையில் வேங்கடம்மா படுத்திருந்தாள். அவள் மீது போர்வை போர்த்தியிருந்தது. சந்தேகத்தோடு அதை விலக்கியபோது கண்கள் மிரண்டு நின்றன.

அவள் மார்பில் கத்தி ஒன்று செருகப் பட்டிருந்தது. ரத்தம் இருபுறமும் புதிதாக வழிந்திருந்தது.

''அம்மா!'' என்றாள். கிட்டத்தட்ட புலம்பல் போல் வார்த்தை வந்தது.

நடுக்கத்துடன் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு அடுத்து சந்திரகிருஷ்ணன் அறைக்குப் போனாள்.

அவன் கீழே படுத்திருந்தான்.

அவனது போர்வையை நீக்க வேண்டியதில்லை. வெளியில் பார்க்கும்போதே ரத்தக் கறைகள் பளீரென்று மின்னின.

திவ்வியப் பிரபா அறை வாசற்படியிலேயே கிடந்தாள்.

* * * * *

சுவர்ணமுகியின் கண்கள் வெளிறின.

நடுக்கூடத்துக்கு வந்தாள்.

கைகளில் தீவர்த்தியைப் பிடிக்க முடியவில்லை. உடல் அவ்வளவு பதறியது.

வீட்டில் எதிரிகள் வந்து விட்டார்களா?

இந்தச் சண்டையில் முக்கிய அங்கம் வகிப்பவர் ரங்கப்பா என்று அவர்களுக்குத் தெரியுமா?

தெரிந்துதான் அவர் குடும்பத்தையே நாசம் செய்ய வந்து விட்டார்களா?

அந்த வீட்டில் அவளும் தங்கியிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பாள்.

திருப்பதிக்குப் போய்விட்டதால் தப்பினாள்.

தப்பினாளா? அல்லது. . .

தீவர்த்தியைக் கீழே போட்டாள். ''உய்யா! உய்யா!'' என்று சொல்லி வெளியில் வந்தாள்.

* * * * *



வெளியே இருட்டு மயம்.

உய்யனிடமிருந்து மறுகுரல் வரவில்லை.

ஆனால் வாயில் நடுவே நிற்கும் உருவம் என்ன?

''உய்யா! பூங்கரு!''

வெளிப்புறம் வர ஒரு வஜ்ஜிரப் பலக் கை அவள் கையைப் பற்றியது.

''ஆ'' என்று அவள் அலறல் அந்த நிர்மானுஷ்ய வீட்டில் எதிரொலித்தது.

''போ உள்ளே!'' என்று ஒரு கட்டையான குரல்.

தாழ்வாரத்தைத் தாண்டி நடைக்குள் அவளை நெட்டிக் கொண்டு போக,

கூடத்தில் கீழே விழுந்த பின்னும் எரிந்து கொண்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில்,

அந்த உருவம் தெரிந்தது.

எப்போதோ ஒரு முறை பார்த்த உருவம்.

* * * * *

**It is said that chastity is a virtue much more admired than practised by the Indians.**

**— (VICO'S LETTER IN 1628)**

# 3

கூடத்தில் அவளை அந்தப் புதியவன் நெட்டித் தள்ளினான். பிறகு வாளைச் சுருக்காகத் தூக்கி வீச்சென்று கீழே இறக்க,

சுவர்ணமுகி ஒரு துள்ளலில் அதன் பாதையிலிருந்து விலகினாள்.

கூடம் தீவர்த்தியில் ஆடியது. பெரிய பெரிய நிழல்கள் சுவரில் மோதின. திகில் கண்ணுடன் அவள் அவனைப் பார்த்தாள். இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே!

ஓகோ!

தளவாய் நரசய்யனா?

சந்திரகிரி வட்டாரப் புள்ளிகளில் ஒருவன், சொந்த சைன்யம் வைத்திருப்பவன்.

ஒழுக்கத்துக்கும், நேர்மைக்கும் அதிகம் கவலைப் படாதவன். இப்போது திம்மராஜா பக்கம் சாய்ந்திருப்பவன்.

இவனிடமா அகப்பட்டோம்?

இப்போது என்ன செய்வது என்று அவள் யோசிக்க,

''ஓடாதே நில்!'' என்றான் அவன், சுவர்ணமுகி நடுங்கினாள். நரசய்யன் போர்க்களச் சூட்டிலிருந்து நேராக வந்திருந்தான். முகம் கறுத்திருந்தது. கண்கள் ரத்தப் பிழம்பாக இருந்தன. ஆடைகள் பிசிறு விட்டுத் தொங்கின.



அவன் கையில் வாள் சிந்தூரச் சிவப்பில் இருந்தது. சற்று முன் நடந்த கொலைகளுக்கு அந்த வாள்தான் உபகரணமாக இருந்திருக்க வேண்டும்.

''சொல்லு! நீ யார்?'' என்றான் சீறிக் கொண்டு.

''ரங்கப்பாவின் மகள்!'' என்றாள் அவள். சொல்லும்போது சிறிது படபடப்பு ஏற்பட்டது.

அவள் பதில் சொன்னதும் அவன் ஏற இறங்க அவளைப் பார்த்தான். இவனுக்கு ரகசியம் தெரிந்திருக்குமோ என்று அவள் குமைந்தாள்.

''இவ்வளவு நேரம் எங்கிருந்தாய்?''

நல்லவேளை, அடுத்த கேள்விக்குப் போனது அவளுக்குப் பெரிய நிம்மதியாக இருந்தது.

''வெளியே போயிருந்தேன்.''

''வெளியே என்றால்?''

''திருப்பதிக்கு. .''

''பொக்கிஷத்தை ஒளித்து வைப்பதற்கா?''

ஏளனமாகக் கேட்டு நெருங்கினான் அவன். சுவர்ணமுகி பின்வாங்கினாள்.

''என்ன பொக்கிஷம்?''

''தெரியாதா உனக்கு?''

வாளை ஓங்க, ''தெரியாது'' என்று படபடத்தாள் அவள்.

''விஜயநகரப் பொக்கிஷம்.''

''விஜயநகரப் பொக்கிஷமா?'' – ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஆமாம். அதுவேதான்.''

''ஐயா! அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். வேறு ஒன்றும் தெரியாது.''

''தெரியாமலா போர் நடக்கும்போது இப்படி வெளியே போய் விட்டு வந்தாய்?''

''பிரார்த்தனைக்காகப் போனேன் ஐயா, சத்தியமாக.''

''பொய்!'' என்று அந்தச் சொல்லைக் கீழே ஒங்கி அடித்தான் அவன்.

சுவர்ணமுகியின் வாய் அச்சத்தில் திறந்தது. விஜயநகரப் பொக்கிஷம் என்ன என்று அவளுக்குத் தெரியும். தலைக்கோட்டைப் போரில் விஜயநகர மன்னர் தோல்வி அடைந்தபோது, அவரது ஏராளமான பொக்கிஷம் தெற்கே ஒரு ரகசிய இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த விஷயம் மிகச் சிலருக்குத்தான் தெரியும். அந்தச் சிலரில் அநேகர் அதைத் தேடி வெவ்வேறு இடமாக அலைகிறார்கள். விலை மதிக்க முடியாத திரவியம் அது. கிடைத்தால் ஒரு சாம்ராஜ்யத்தையே விலைக்கு வாங்கலாம்! அவ்வளவு பெரிய சம்பத்து! இவனும் அதைத் தேடித்தான் வந்திருக்கிறான்.

''ஐயா நிச்சயம் தெரியாது'' என்றாள் அவள்.

''இந்த ரங்கப்பன் குடும்பத்தில்தான் அது இருக்கிறது. நிச்சயம் எனக்குத் தெரியும்.'' என்றான் அவன்.

''நிச்சயம் கிடையாது!''

''பொக்கிஷம் எங்கே இருக்கிறது என்பதற்கு ரகசியக் குறிப்பாவது இங்கே இருக்க வேண்டும்.''

''அதுவும் கிடையாது.''

''இந்தா பெண்ணே! நீ உயிர் வாழணுமா வேண்டாமா?''

கையில் வாளைத் தூக்கினான். சுவர்ணமுகி விழித்தாள். விடை ஏதும் சொல்லத் தெரியவில்லை.



இன்றைய ஒரே தினத்தில் இவ்வளவு துயரம் சேர்ந்து வரும் என்று அவள் நினைக்கவில்லை.

''உன் குடும்பத்தாருக்கு நேர்ந்த கதி உனக்கும் நேர வேண்டுமா? சொல்!'' என்றான் கர்ஜனையில்.

''ஐயா, எனக்கு எதுவும் தெரியாது. என்னை விடுங்கள்!'' என்றாள் புலம்பலோடு.

நரசய்யன் கண் துடித்தது.

''வா! என்னுடன்! எல்லா இடமும் காட்டு. ஒன்று பொக்கிஷம் இருக்க வேண்டும். இல்லாவிடில் அது பற்றிய ஏட்டுக் குறிப்பாவது இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னைத் தீர்த்துக் கட்டி விடுவேன்'' என்றான்.

அவனே கையில் தீவர்த்தியை எடுத்துக் கொண்டான். பின் கூடத்தில் நுழைந்தான்.

அவளை முன்னே போகவிட்டு, ஒவ்வொரு இடமாகத் தட்டிக் கொண்டு போனான்.

பின்கட்டுக்கு அடுத்தது சமையற்கட்டு. அடுத்தது முற்றத் தாழ்வாரம். அதை அடுத்துப் பெரிய உக்கிரான அறைகள்.

ஒவ்வொன்றாகக் காண்பித்துக் கொண்டே போக அவள் அதற்குள் யுக்தி தயார் பண்ணியிருந்தாள்.

இரண்டாவது தாழ்வாரத்தில் படிகள் சரியாயில்லை. திரும்பக் கட்டுவதற்காக இடித்திருந்தார்கள். அங்கே வந்ததும் அவள் முன் ஜாக்கிரதையாகப் படக்கென்று குதிக்க,

அவன் ஏமாந்து காலை வைத்துக் கீழே தடுமாறித் தீவர்த்திக் கையோடு சேர்ந்து விழுந்தான். ''ஏய்!'' என்று அவன் இரைய,

அந்தத் தீவர்த்தி கீழே விழுந்த அவசரத்தில் வெளிச்சத்தைக் குறைத்து அடிக்க,

விருட்டென்று அவள் ஒரு முயல் போல், துள்ளிப் பின்கட்டு வழியே மறைந்தாள்.

படிகள் படபடவென்று இறங்கியதும் விஸ்தாரப் பழத் தோட்டம் எலுமிச்சைகளோடு மணத்தது. தூரத்தில் இருந்த தோட்ட வாயிலுக்கு வந்தாள். அங்கிருந்து கதவைப் பிரித்து வெளியேற,

அருணா ஆற்றின பரந்த படுகை. இரவுக் குளிர்ச்சியுடன் வரவேற்றது.

ஆற்றில் நீரில்லை. எங்கும் மணல்வெளி.

பாலைவனம் போன்ற காட்சி.

இரவில் மணலுக்கு ஒரு மினுமினுப்புத் தோன்ற, அதில் அவளது உருவம் செல்வது நன்றாக அடையாளம் தெரியும்.

இதையெல்லாம் யோசித்து, சீக்கிரம் ஆற்று வெளியைக் கடக்க எண்ணினாள்.

மூச்சைப் பலமாக இழுத்து, சேலையை முட்டுக்கு மேல் தூக்கி தறிகெட்டு ஒடினாள்.

ஆற்றைக் கடந்து தரிசை வெளியில் ஏறியதும் ஆசுவாசமுடன் திரும்பிப் பார்க்க,

தூரத்தில் அந்த வேங்கடகிருஷ்ண விலாசத்தின் புழக்கடையில் தீவர்த்தியுடன் அந்த ஏமாளி உலாவுவது தெரிந்தது.

என்ன தைரியம் இவனுக்கு?

வழக்கங்களையும் நியாயங்களையும் புறக்கணித்து இப்படி வீடு புகுந்து பெண்டிர்களைக் கொலை செய்து விட்டானே!



விஜயநகரப் பொக்கிஷம் என்றான்.

இந்த ரங்கப்பா குடும்பத்தாரிடம் இருக்கிறது என்பதை அவன் எப்படி அறிந்து கொண்டான்? போர்க் களத்தில் ரங்கப்பா கூறியிருப்பாரோ? அல்லது அவரைச் சித்ரவதை செய்து அவரிடமிருந்து ரகசியங்களை வாங்கி இருப்பார்களோ?

நல்ல வேளை!

பொக்கிஷத்தைத்தானே தேடி வந்தான்.

நான் யார் என்று தெரிந்து கொள்ளவில்லையே! அதுவரை க்ஷேமம்.

சட்டென்று ஒரு குறுக்கு யோசனை ஊடுருவிச் சென்றது.

அந்த வீரன், அந்த இளைஞன்,

அவன் சுவர்ணமுகி என்று சொல்லி அவளுக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன் என்று மரணச் செய்தியைச் சொன்னானே!

அவனுக்கு எப்படித் தெரியும்?

இன்ன இடத்தில் என்னைக் கண்டுபிடிக்கலாம் என்று எப்படித் தெரியும்?

ஒருவேளை இறப்பதற்கு முன் ரங்கப்பாவே சொல்லி அனுப்பியிருப்பார் என்று வைத்துக் கொள்ளலாம். அந்த விஷயம் மட்டும் அவனுக்குத் தெரியுமா, என்னைப் பற்றி வேறு விஷயங்களும் தெரியுமா?

மனம் மெல்லக் குழம்பியது. சிறிது நேரம் நின்றதில் சுவாசம் மெதுவாக இறங்கி நிதானமாயிற்று. வியர்வைகள் ஆவியாகி உடலைக் குளிர வைத்தன.

இனி என்ன செய்ய?

ஒரு கல்லின் மீது அமர்ந்து யோசித்தாள். மனம் சிறிது தெளிந்தது. எண்ணற்ற நட்சத்திரங்கள் அவளைக் கவிழ்ந்து பார்க்க, ஒருவித பேரமைதி அவளது உள்ள வெளிகளில் இறங்கியது.

சாந்தம் அடைந்த முகத்தை நிமிர்த்தி எங்கும் பார்க்க,

அந்தக் காட்சி, குதிரையில் கடக் கடக் என்று ஓடிவந்தது அந்த இளைஞன் நின்ற காட்சி,

அவள் மனத்தில் ஒரு வர்ணச் சித்திரம் போல் வந்தது.

பரந்த நெற்றி, நீண்ட, எடுப்பான நாசி, இருபெரும் உணர்ச்சி கடல்களாகக் கண்கள்.

போர்க்களத்திலிருந்து அலங்கோலமாகி வந்தாலும் என்ன கம்பீரமாகக் கீழே கிடந்தான்!

என்ன நிதானமாயும், அழுத்தமாயும் பேசினான்? இதற்குள் இறந்திருப்பானோ?

ஒருவேளை, இறக்காமல் இருந்து, குதிரை மீது டக்டக்கென்று பிரயாணித்து இங்கே வந்தால். . . என்ன ஆசைகள்!

மனம் அங்குமிங்குமாய்த் தாலாட, பொழுது விடிவதற்குள் அவள் அந்த இடத்தை விட்டு வெகுதூரம் போய்விட வேண்டும். எங்கே போவது? யாரிடம் சரண் புகுவது? யார்தான் அடைக்கலம் தருவார்கள்?

எல்லாவற்றையும் ஒரே நாளில் இழந்த ஒரு திடீர் அபலைக்கு யார்தான் உதவி செய்வார்கள்?

அவள் உயிர்த்தோழி திருமலாம்பா நினைவுக்கு வந்தாள்.

நாகலாபுரத்தில்தானே இருக்கிறாள்?



இரவுக்குள் நடந்து போய்விடலாம். வழியில் சிறுத்தை பயம் உண்டு. திருடர் பயமும் உண்டு. ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நடந்தால் என்ன? வேறு வழிதான் என்ன இருக்கிறது?

உடம்பை இழுத்துப் போர்த்தி நடக்க ஆரம்பித்தாள்.

நேராகக் கிழக்காகப் போகும் சாலையில் அந்த நள்ளிரவில் நடப்பது என்பது எவ்வளவு கஷ்டமான வேலை?

அங்கங்கே தங்கி, அங்கங்கே பதுங்கி, மரங்களைக் கண்டு பயந்து, நிழல்களைக் கண்டு பயந்து, நாய்களின் ஊளைகளுக்கு அஞ்சி; திடீரென்று எழுந்த ஒரு டேகையின் வீறலை பிசாசின் கூவலாக எண்ணி நடுநடுங்கி, வழியெல்லாம் கடவுள் நாமத்தை நினைத்தவாறே அந்த ஊர் போய்ச் சேருமுன். . .

காலை புலபுலவென விடிந்து கொண்டிருந்தது. ''அக்கா இல்லா?'' என்று கேட்டுக் கொண்டு புன்முறுவலுடன் சுவர்ணமுகி அந்த விஸ்தார வீட்டுக்குள் நுழைந்தாள்.

முன்பு இருமுறை வந்திருக்கிறாள்.

வேதநாராயணர் கோயிலில் சூரிய பூஜை பிரசித்தம். கோடையில் நடக்கும். கோவில் மூர்த்தியின் மீது குறிப்பிட்ட மூன்று நாட்களில் சூரிய ஒளி பாதம், நாபி, நெற்றி இவைகளில் ஒரு அழகான பொட்டாகத் திகழும்.

திருமலாம்பாவின் கணவர் நாராயணராஜு துணி வியாபாரம் செய்பவர். அருமையான சேலைகளை வேங்கிடகிருஷ்ண விலாசத்தில் கொணர்ந்து விற்றிருக்கிறார்.

இன்று அவர் வீட்டில் நுழைந்து வினவிய போது முதல் பையன் ஓடிவந்தான். சுவர்ணமுகியைக் கண்டதும்

தேம்பினான். அவன் உடம்பைப் பார்த்ததும் அவள் கண்கள் விருட்டென்று துள்ளின. எலும்பெல்லாம் தெரிகிறதே! நோயா அல்லது. . .

கூடத்தைச் சுற்றிப் பார்த்தாள். தஞ்சாவூர்ப் படங்களும், மரப் பொம்மைகளும் கட்டில்களுமாக, கூடம் ஒரு சித்திரசாலை போல இருக்கும். அடுக்கடுக்காகச் சேலைகள் வியாபாரத்துக்குக் காத்திருக்கும்.

இப்போது எதுவுமில்லை.

ஒரு விதவை உடம்பைப் போல் மூளியாக இருந்தது. நிசப்தம்.

திகிலுடன் நிற்க, நாராயணராஜு வந்தார். இளைஞன்தான். ஆனால் அவனுக்கும் நோயா?. . .

கலக்கத்துடன் ''அக்கா எங்கே?'' என்று கேட்டாள்.

நாராயணன் மேலும் கீழும் பார்த்தான். அவன் கண்கள் மந்தமாக இருந்தன. பாதி இறந்ததுபோல் முகக் களை.

'போயிட்டா!'' என்றான்.

''போய்ட்டாளா?''

''ஆமாம். பத்து நாளாச்சு!''

சுவர்ணமுகியின் கால் தரையில் நிற்கவில்லை. இருதயம் பக்கென்று அடைத்தது.

''என்ன காரணம்?''

நாராயணம் பேசவில்லை.

இனிப்பாகவும், சிரிப்பாகவும் வியாபாரம் பேசும் நாராயணனா இப்படி இருக்கிறான்?

சுருக்கென்று அப்போதுதான் நினைவு தைத்தது. முந்திய நாள் உய்யன் சொன்னானே ஒரு வார்த்தை – பஞ்சம்!



அதுதான் நாட்டை ஒரு கொடு நோய் போலப் பற்றியிருக்கிறது.

இந்தக் குடும்பத்தையும் அது பற்றியிருக்கிறது. திருமலாம்பாவைப் பலி கொண்டிருக்கிறது.

நாராயணன் எட்டிப் போக, ''வரேன்'' என்று பலவீனமாக அவள் சொன்னாள்.

சடக்கென்று திரும்பினான்.

யோசனையோடு நிமிர்ந்தான்.

''சாயங்காலம் போகலாம்.''

''இல்லை; இப்பவே புறப்படறேன்.''

''ஒரு நாழி இருங்க!'' அவள் பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்.

அரை நாழிகையில் அவன் திரும்பி வந்த பிறகு, அவனது நீண்ட மௌனத்துக்கும், அரை வார்த்தை, ஒரு வார்த்தை பேச்சுக்கும் காரணம் புரிந்தது.

இரண்டு வெள்ளை ஒலாந்தியர்கள் (Dutch) உள்ளே வந்து சுவர்ணமுகியையும் அந்தச் சிறுவனையும் கைப்பற்றினார்கள்.

சுவர்ணமுகி திடுக்கிட்டு, ''இது என்ன அநியாயம்?'' என்று சொல்ல ஒலாந்தியர்கள் பெரிதாகச் சிரித்தார்கள்.

நாராயணராஜு அவர்களை அடிமைகளாக விற்றுவிட்டு தலைமறைவாகப் போய்விட்டான்.

''என்னை விடுங்கள்! விடுங்கள்!'' என்று சுவர்ணமுகி கதற, வெள்ளையர்கள் அவளை இழுத்து வெளியே போனார்கள்.

* * * * *

"கோரமண்டல் பிரதேசத்தில் தனவந்தர்கள் தங்கள் மனைவிகளைத் தவிர ஒவ்வொருவரும் இரண்டு மூன்று ஆசைக் கிழத்திகளை வைத்திருக்கிறார்கள்"

– ஜான் நியோஃப் (1664 AD)

# 4

ஒலாந்தியர் வான் கோயன்ஸும், பெட்ரியும் வியாபாரிகள். அவர்கள் சுவர்ணமுகியையும், பத்து வயதுச் சிறுவன் வேத நாராயணாவையும் இழுத்துக் கொணர்ந்தனர்.

வெளியே பெரிய கோஷ்டி காத்துக் கிடந்தது. வான் கோயன்ஸின் வர்த்தகக் கோஷ்டி. அதில் பளிச்சென்று எண்ணெய்ச் சிலைபோல் கப்ரே என்ற ஆப்பிரிக்க நீக்ரோ சிப்பாய்கள் ஐவர் இருந்தார்கள்.

நுகும்பா என்ற முப்பத்தைந்து வயது சிப்பாய் அந்தப் புது அடிமைகளைக் கைப்பற்றி மாடுகளைப் போல் ஒட்டி ஏற்கனவே காத்திருந்த அடிமைக் கும்பலோடு சேர்த்து வைத்தான்.

மொத்தம் முப்பது அடிமைகள். அவர்களில் ஆறு பேர் இளம் பெண்கள். மீதியெல்லாம் ஆண்கள். எட்டு வயதிலிருந்து இருபது வயது வரை இருப்பார்கள்.

"ம். புறப்படலாம்" என்று டச்சு மொழியில் பெட்ரி கூற, கும்பல் புறப்பட்டது.

பதினெட்டுப் பொதி மாடுகளின் மீது சாமான்கள், மாட்டுச் சொந்தக்காரர்கள், ஊழியர்கள், அடிமைகள் ஆக பெரிய வால் போல நீண்ட கோஷ்டி புறப்பட,

முன்னால் இரு அரபிக் குதிரைகளில் ஒலாந்தியர்கள் மெது நடையில் போனார்கள்.



பெரிய பூவரசஞ் சோலை அது. வறண்டு போன குளத்தின் ஓரத்தில் நெருக்கத்தோடு அண்டி இருந்தது.

சுவர்ணமுகி – வெய்யிலிலும் நடையிலும் துவண்டு போய்ப் பெரிய அழற்சியுடன் கீழே அமர்ந்தாள்.

ஒரே தினத்துக்குள் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளும் அவளுக்குக் கனவு போலத் தோன்றின.

திடீரென விழித்துக் கொள்வோம். வேங்கடகிருஷ்ண விலாசத்தின் படுக்கை அறையில் இருப்போம் என்று பல முறை ஆசையோடு நினைத்தாள்.

இந்த ஒரு நாளில் அவள் பார்த்தது எல்லாம் அவளது அஸ்திவார எண்ணங்களை வெகுவாகக் கலைத்தன.

முதலில் அந்தப் பஞ்சம்!

நாட்டில் எவ்வளவு பெரிய பஞ்சம் தலை விரித்தாடுகிறது!

வரும் வழியில் ஒரு பச்சைப் புல்லைப் பார்க்கவில்லையே! ஒரு வயலிலும் பயிரைப் பார்க்க முடியவில்லையே! சொல்லப்போனால் ஜனங்களையே அதிகம் பார்க்க முடியவில்லையே! எல்லாரும் எங்கே போனார்கள்? வானம் ஏன் இவ்வளவு கொடூரமாக வறண்டு விட்டது?

ஒருவேளை,

அவளது துர்ப்பாக்கியம்தான் உலகின் துர்ப்பாக்கியமாக மாறி இருக்கிறதோ!

அரச குடும்பத்தில் பிறந்தவள் அவள், வாரிசு முறைகள் பலாத்கார முறையில் பறிக்கப்படாமலிருந்தால் இன்று இந்தப் பிய்ந்து போன விஜயநகர ராஜ்யத்துக்கு இளவரசியாக இருக்க வேண்டியவள்!

இப்போது கல்லிலும், முள்ளிலும் நடந்து வெய்யிலைத் தலையில் தாங்கி, ஆடு மாடு போல் ஒரு அடிமைக் கூட்டத்தில் சேர்ந்து இந்தக் கடும் கோடையில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது!

கிளுக்கென்று கண்ணீர் வர, ''அழாதேம்மா!'' என்றாள் மற்றொரு அடிமைப் பெண். அவளது கையைப் பிடித்து, ''என் பெயர் அபரஞ்சி! நான் கன்னடப் பெண்! தேவதாசி! என்னை என் அக்கா அடிமையாக விற்று விட்டாள்! வாழ்க்கையிலே பெண்ணாய்ப் பிறந்தால் எங்கே போய் முடிவோம்னு தெரியாது. அழாதே. சகோதரி! இங்கே எல்லோருக்குமே சோகக் கதை இருக்கு!'' என்றாள்.

சுவர்ணமுகிக்கு நிறையக் கண்ணீர் வந்தது. கண்களை மூடித் தேம்பினாள்.

''உன் பெயர் என்ன?'' என்று தூண்டிக் கேட்டாள் அபரஞ்சி.

''கங்கணா!''

''உன்னை யார் வித்தாங்க? உன்னுடைய சொந்தக்காரங்களா?''

''இல்லை''

''புருஷனா?''

''எனக்குக் கல்யாணம் ஆகலே.''

''பின்னே யார் விற்றது?''

''அடைக்கலம் தேடி சிநேகிதி வீட்டுக்குப் போனேன். அவள் புருஷன் வித்துட்டாரு.''

அபரஞ்சியின் கண்கள் விரிந்தன. ''இந்த அநியாயம் உண்டா? நாட்டிலே இப்படி ஒரு பஞ்சம் ஏற்படுமா? சொந்தப் பிள்ளைகளைப் பெற்றோருங்க விக்கறாங்களே!''

''கொடுமை! மழை பெய்யாத கொடுமை!'' என்றாள் சுவர்ணமுகி.



''அது மட்டுமில்லை. ஆள்றவன் எல்லாம் வரியைப் பிடுங்கறான். சண்டைக்குப் போறேன், நகையைக் கொடுன்னு நிர்ப்பந்திக்கிறான். விவசாயம் பண்ணினா கதிரை அறுத்துட்டு ஓடறான். ஜனங்கள் அல்லாடிப் போச்சுது. நீ பாத்தியோ என்னவோ தெரியாது. நான் கேள்விப்பட்டேன்.''

''என்னது?'' என்றாள் சுவர்ணமுகி.

''மனுஷன் மனுஷனை அடிச்சுத் திங்கறானாம் வடக்கே.''

''கேவலமா இருக்கு!''

''படு கேவலம்.''

இருவரும் சிறிது மௌனமானார்கள்.

''இப்போ நாம்ப எங்கே போறோம்?'' என்று கவலையுடன் ஆரம்பித்தாள் சுவர்ணமுகி.

''கவலைப்படாம இரு! அன்னிய தேசம் போறோம்!''

''அன்னிய தேசமா?''

''ஆமா! நம்மைக் கொண்டு போய் வெள்ளைக்கார தேசத்திலே வித்தாலும் வித்துடுவான். இல்லாட்டி ஜாவகத்துக்குப் போய் கங்காணி கிட்டே தள்ளினாலும் தள்ளிடுவான்.''

சுவர்ணமுகி பதறினாள்.

''தப்பிக்க முடியாது?''

சிரித்தாள் அபரஞ்சி.

''தப்பிச்சு எங்கே போய்த் தங்கப் போறே? யார் உனக்குச் சோறு போடுவான்? அப்படிச் செய்ய முடியுமின்னா யாராவது நம்மை வித்துருப்பாங்களா?''

அவர்கள் பேச்சுத் திடீரென நின்றது.

கப்ரேக்களில் ஒருவன் விசித்திரமான பாஷையில் எதையோ சொல்ல, ஊழியர்கள் பெரிய பிரம்புக்

கூடையிலிருந்து ரொட்டித் துண்டுகளை எடுத்து விநியோகிக்கத் தொடங்கினார்கள். ஒரு மூக்கறுந்தவன் புளப்பும் இனிப்புமாக ஒரு கூழை ஒவ்வொருவருக்கும் சிறு இலைக் கரண்டியால் வழங்கிக் கொண்டிருந்தான். தொடர்ந்து சுட்ட மண் பாத்திரத்தில் அளவாகத் தண்ணீர் வழங்கினார்கள்.

அடிமைகளில் சிறுவர்கள் ஆரவாரமாக உண்டு விட்டு மேலும் நாக்கை நீட்டிக் கொண்டே ரொட்டிகளைக் கேட்டார்கள். ஆனால் கிடைக்கவில்லை.

அங்கே அந்த உணவு வேளையில் எழுந்த சத்தங்களும், கூச்சல்களும் பிடிக்காமல் சுவர்ணமுகி கண்களை மூடித் தனியாக இருந்தாள்.

மதியம் தாண்டி வெய்யில் சரியும்போது மீண்டும் கப்ரேக்கள் சத்தம் போட எல்லோரும் தூக்கங்களிலிருந்து கலைந்து புழுதியான சாலையில் வடக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

இரவில் முதல் ஜாமம் வரை நடந்து, ஒரு நிர்மானுஷ்ய சத்திரத்தில் தங்கி, மறுநாள் காலையில் மீண்டும் புறப்பட்டு மாலை நெருங்கினவாறே மயிலாப்பூரை நெருங்கினார்கள்.

அதற்குள் சுவர்ணமுகிக்கு எல்லா நம்பிக்கையும் போய் விட்டது. இனி யாரிடமிருந்தும் உதவி கிடைக்க வழியில்லை என்று நம்பினாள்.

மறுநாள் ஸாந்தோமேக்கு (ஸாந்தோம்) சென்று அவர்களைப் படகில் ஏற்றி கப்பலில் கொண்டு விடுவார்கள் என்றும், கப்பல் மேற்கு நாடுகளுக்கு அவர்களை அழைத்துப் போகும் என்றும் அவர்களுக்குத் தெரிய வந்தது.



"கடவுளே! எனக்குத் தப்பிக்க வழி கிடைக்குமா?" என்று மனம் வெதும்பி முறையிட்டாள் சுவர்ணமுகி.

இரு தினங்களுக்கு முன்பு. . .

திருப்பதி ஊருக்கு அருகில் தீ பொழியும் சாலையில் அந்த இளைஞன் பாதி உலகைத் துறந்தவனாகக் கிடந்தான்.

சீக்கிரத்தில் இறந்து விடுவோம் என்று அவனுக்குத் தெரியும்.

சாலையின் அசாத்திய வெட்கை அவன் உடம்பை வறுத்துக் கொண்டிருந்தது.

அதைவிடப் போரில் அவனது ஆட்கள் பட்ட அவமானம் அவன் மனத்தை வறுத்துக் கொண்டிருந்தது.

உடலில் விழுந்த காயங்கள் வேறு அங்கங்கே வெவ்வேறு சுவரங்களில் காந்திக் கொண்டிருந்தன.

தாயார் கங்கம்மாவை நினைத்தான்.

ஒரு தண்டல் நாயகனாகவோ, மண்டலாதி பதியாகவோ ஆகி அவளைக் குளிர வைக்க வேண்டும் என்று எவ்வளவு கனவு கண்டிருக்கிறான்!

ஆனால் அதை நிறைவேற்றுமுன் இன்று அவன் இந்த உலகத்தை விட்டே போக வேண்டியிருக்கிறது.

குழப்பம், கோபம், விரக்தி, வேதனை எல்லாம் மாறி மாறி வரும்போது,

ஒரு துளை தேன் போல இனிமையாய் ஒரு எண்ணம் அவனை அடிக்கடி பற்றியது.

கங்கணா அவனைப் பார்த்தது, பேசியது அவனுக்குப் பணிவிடை செய்ய முன்வந்தது, அவனை மெல்ல இழுத்து நிழலில் கொண்டு விட்டது எல்லாமே அவனது வேதனை மிகுந்த கடைசி நேரத்திலும் துளிர்த்த தேன் சொட்டுக்கள்.

வாழ்க்கையில் அவன் பெண்களை ஸ்பரி சித்ததில்லை.

இப்போது இந்தப் பெண்ணின் ஸ்பரிசம் ஒரு அமிர்தம் போல் அவனை ஊடுருவியது.

அவளது கருணை விழிகள் ஒரு மழைக்காலக் குளிரை அவன் மீது விசின.

வேதனைகளுக்கு நடுவே இந்தத் துளித்துளி இனிமைகள் அவ்வப்போது அவன் உள்ளத்தில் கசிய,

மெல்ல ஆழ் நித்திரையை நோக்கி அவன் இறங்கிக் கொண்டிருந்தான்.

'ஒருவேளை!' என்று கடைசியாக நினைத்தான் அவன். ''யாராவது என்னை இந்த நிலையில் எடுத்துப் போய் ஆதுர சாலையில் சேர்த்தால் பிழைத்தாலும் பிழைப்போம், யார் சேர்ப்பார்கள்? ஊரில் மனிதர்கள் ஏது?' என்று நினைத்தான் அவன்.

அந்தகாரத்தில் எங்கேயோ முடங்கிக் கொண்டிருக்கும்போது யாரோ அவனை பலவந்தமாக உலுக்கும் முயற்சி தெரிந்தது.

அவனது நினைவு அவன் உணர்வோடு சரியாக ஒட்டிக் கொள்ளாததால் அந்த முயற்சி முக்காலும் ஒரு பிரமை போல் தோன்றியது.

ஆனால் யாரோ அவன் உடலை அங்குமிங்கும் புரட்டி எழுப்புவதைப் பார்த்ததும்

அவன் உணர்ச்சி மெல்லச் சிலும்பி மேலே வந்தது.

''அர்ச்சுனா! அர்ச்சுனா!''

குரல்கூட செவியில் விழும் உணர்வு ஏற்பட்டது. கண்களை விழிக்க முயன்றான். நங்கூர கனம் இருந்தது.

''அர்ச்சுனா! அர்ச்சுனா!''

மிகவும் பிரயாசை எடுத்துக் கண்களை விழிக்க, அங்கே நின்று கொண்டிருந்தது அவனது நண்பன் தோதா!



போர் ஆரம்பமான சிறிது நேரத்தில் இருவரும் பிரிந்தார்கள். இப்போது சந்திக்கிறார்கள்.

''அர்ச்சுனா! சொல்லு! சுவர்ணமுகியை பார்த்தாயா?''

அர்ச்சுனன் தன் பலத்தைத் திரட்டினான். வெகு பிரயாசையுடன் வாயைத் திறந்து, ''சுவர்ணமுகியின் பல்லக்கையும், அவளது சேடியையும் பார்த்தேன்'' என்றான்.

''எப்படிப் போனார்கள்?'' என்றான்.

''இப்படி!'' என்று திசையைக் காட்டினான்.

''பல்லக்கில் தானே?''

''ஆமாம்.''

அடுத்த கணம் அங்கே நில்லாமல் தோதா குதிரையை நோக்கி ஓடினான்.

அவன் போனது அர்ச்சுனனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தன்னை எடுத்து ஆதுர சாலையில் சேர்க்க யாராலாவது முடியுமானால் அது அவனாகத்தான் இருக்க வேண்டும்.

அவன் போவது எவ்வளவு பெரிய ஏமாற்றமாக இருந்தது.

''தோதா!''

அர்ச்சுனன் பலமோடு கத்தினான். அவனது மரண நிலைக்கு அது பெரும் பிரயாசை.

தோதா குதிரை ஏறி அவனைத் திரும்பிப் பார்த்தான்.

''ஹும், முட்டாள்!'' என்று சொல்லி ஏளனமாகப் புன்னகை காட்டி, குதிரையை தட்டி விட்டான் அவன்.

அர்ச்சுனன் முகம் திடீரென்று இருண்டது.

* * * * *

But eternal shame to be Dutch who cruelly speculated on the miseries of the Indians. They piled the Indians up in their ships and transported them to other countries to be sold as slaves

Proenza (1662 AD)

## 5

தோதா குதிரையைத் தட்டிச் சென்றது.

போகும்போது 'முட்டாள்' என்று வார்த்தையைச் சொடுக்கியது.

இரண்டும் அர்ச்சுனன் மனத்தில் இரண்டு சுள் அம்புகளாகப் புதைந்தன.

அந்த வெய்யில் தகிப்பை மீறி ஒரு அந்தகாரம் 'பொல்'லென்று மூடியது.

சிறிது நேரம் கழித்துத்தான் பிரக்ஞை திரும்பியது.

"நண்பன்! என் நண்பன்!" என்று முனகினான். 'என் நண்பனா அவன்? என்ன துரோகம்! பச்சைத் துரோகம்! நான் இறக்கப் போகிறேன் என்று தெரிந்தும் என்னைப் புறக்கணித்துப் போகிறானே!'

வயிற்றிலிருந்து அக்கினியாக மூச்சு எழுந்து அவன் நாசியை அனலாக்கி வெளியேறியது.

கண்களில் ரத்த பாஷ்பமாக ஒரு சிவப்பு ஊறியது.

அவன் கண் முன்னால் யுத்த களத்தில் கடைசிக் காட்சி நினைவுக்கு வந்தது.

ரங்கப்பா கடைசி மூச்சுக்களுடன் படுத்திருந்தார். அவர் வாயருகில் சென்று அவர் சொன்ன



விஷயங்களைக் கிரகித்து உடனே போர்க்களத்தை விட்டு வெளியேறும் போது யாரோ பின்னால் அம்பு எய்து அவனைக் காயப்படுத்தினார்களே, அது இந்தத் தோதாதானோ?

தோதா! நயவஞ்சகமாக நீ நடித்திருக்கிறாய்! நான் போகும் விஷயத்தை அறிந்து கொண்டு என் பின்னால் மறைந்து என் மீது அம்பு எய்திருக்கிறாய்! தோழன் போல் நடித்து எதிரிக்கு உடந்தையாக இருந்திருக்கிறாய். இதோ இறக்கப் போகிறேனே! இதற்கான முழுக் காரணமும் நீயேதான்!

வஞ்சகா! எவ்வளவு கேவலமான காரியத்தைச் செய்து அபகீர்த்தியைச் சம்பாதிக்கிறாய்!

அர்ச்சுனன் பல்லை இறுக்கினான்.

அவன் முன்னால் தோதாவின் உருவமும் அடிக்கடி தோன்ற, அவன் மூச்சு கொதி உலைபோல் பயங்கர நெருப்பைக் கக்க ஆரம்பித்தது.

ஆத்திர எண்ணங்கள் வேகமாக வர, திடீரென்று, 'நான் ஏன் சாக வேண்டும்?' என்ற உத்வேகம் எழ ஆரம்பித்தது.

'நான் ஏன் சாக வேண்டும்? நான் செத்தால் என் உடம்பு வேகாது. என் ஆத்மா நற்கதி அடையாது. தோதாவைப் பழிக்குப் பழி வாங்கினால்தான் என் மனம் சமாதானம் அடையும். கடவுளே! எனக்கு உயிரைத் திருப்பிக் கொடு!'

இறுக்கிய பற்களிடையே பிரார்த்தனை செய்தவாறே,

மெல்லக் கை ஊன்றினான். என்ன வலி! முதுகில் தோதா கொடுத்த காயம்! காலை மெல்ல மடிக்க

முனைந்தான். முட்டில் ஒரு காயம்! அது போரிடும்போது ஏற்பட்டது.

'உடலே! சொன்னபடி கேள்! எனக்கு இப்போது புது லட்சியம் வந்திருக்கிறது. அது முடியும்வரை தயவுசெய்து கேள், உடலே!'

ஏனெனில் எழுந்திருக்க முயலும் ஒவ்வொரு முறையும் உடல் வலுவில்லாமல் கீழே உதிர்ந்தது. 'சுவாமி! ஏழுமலையானே! நான் இறக்க விரும்பவில்லை. நான் இறக்க விரும்பவில்லை!' என்று கத்தினான் அவன்.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் சென்னை நகர் எப்படி இருந்தது பார்க்கிறீர்களா?

மன்னிக்கவும்.

சென்னை நகரம் என்ற பெயர்கூட அப்போது உற்பத்தியாகவில்லை.

எங்கும் கன்னித்தனம் அழியாத காடுகள் மூடியிருந்தன.

சிலுசிலுவென்று ஓடைகள், வாய்க்கால்களின் ஓட்டங்கள் எங்கும் ஊடுருவி இருந்தன.

கூவம், அடையாறு நதிகள் மின்னல் கீற்றுகள் போல் கிளை விட்டு ஓடின.

கிழக்கே அழகான நீல அலைகள் கரைகளை அலம்பிக் கொண்டிருந்தன.

சிற்றூர்கள் இங்கும் அங்கும் புள்ளிகளாகக் கிடந்தன.

ஊர்க் கோபுரங்கள் பசும் கொழிப்புக்களிடையே இலை மறைவு காய் மறைவாக ஊசலாடின.

பெரிய பெரிய மயில்கள் ஒய்யாரப் பெண்கள் போல் எங்கும் உலாவின.



மான்கள் கூட்டம் கூட்டமாக மௌனச் சித்திரம் போல் பசுமைகளை ஊடுருவின. எப்போதாவது குதிரை ஓடும் குளம்பொலி கேட்டால் உண்டு.

வாழ்க்கை மிக நிதானமாக அங்குல வேகங்களில் நகர்ந்து கொண்டிருந்தது.

போக்குவரத்துக்கு ஒரே வழி நடைதான். ஆறுகளும் நீர்நிலைகளும் குறுக்கிட்டதால் மாட்டு வண்டிகள் மிக அதிகமாக உதவவில்லை.

வசதி படைத்தவர்கள் குதிரைகளிலும், பல்லக்குகளிலும் சென்றார்கள். சாதாரண டோலிகளும் புழக்கத்தில் இருந்தன.

இதனால் பிரயாணமே மிக மெதுவாக ஊர்ந்தது அந்நாளில்.

மயிலாப்பூர் கிராமத்திலிருந்து மாம்பலம் கிராமத்துக்குச் செல்லக் கிட்டத்தட்ட ஒரு காலைப் பொழுது ஆகிவிடும்.

மயிலாப்பூர் கிராமத்தில் வான் கோயன்ஸ் வந்து இறங்கியபோது அந்தி நேரம்.

கபாலீச்வரத்திலிருந்து சந்தியா மணிகள் கணார் கணார் என்று ஒலித்தன.

எப்போதும் நிசப்தமே உறையும் அந்தப் பிரதேசத்தில் மணிகளின் நாதங்கள் இனிய சங்கீதமாகவே கேட்டன.

சுவர்ணமுகி பிரார்த்தனை செய்தாள். செங்கழுநீர்ப்பட்டு (செங்கல்பட்டு) சீர்மைத் தலைவர் சென்னப்ப நாய்க்கருடன் மயிலைக் கோயிலுக்கு வந்திருக்கிறாள்.

அந்த நாளைக் கண்ணீருடன் நினைவு கூர்ந்து, 'கபாலீச்வரா! என்னைக் காப்பாத்து!' என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

இரவு மனமில்லாமல் உண்ட பிறகு, தூக்கம் சரியாக வரவில்லை.

கோவிலுக்கு வடபுறம் சாந்தோமேக்கு போகும் சாலை ஓரமாக அவர்கள் தண்டு இறங்கியிருந்தார்கள்.

மெல்லிய நிலா அரைத் தூக்கமாக எங்கும் விழுந்திருந்தது.

கப்ரேக்களில் ஒருவன் அடிக்கடி தீவர்த்தியில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தான்.

அதன் வெளிச்சங்கள் இங்குமங்கும் ஆடி திடீர் நிழல்களை அடிக்கடி ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

சுவர்ணமுகி மெல்ல எழுந்தாள். நடுநிசி இருக்கும்.

மெல்ல அபரஞ்சியை எழுப்பினாள். பெரிதாகக் கொட்டாவி விட்டுக் கொண்டே அவள் எழுந்தாள்.

"அபரஞ்சி! நாம் தப்பிக்க வேண்டும்!" என்றாள்.

"முடியாது. நம்ப ஆறு பேர் கையையும் கட்டி யிருக்காங்க!"

"அது தெரியும். ஆறு பேரும் சேர்ந்து போக வேண்டும்."

அபரஞ்சிக்கு மூளை பற்றியது.

மெல்ல ஒவ்வொருத்தரையும் எழுப்பினாள். ஒவ்வொருவரிடமும் விஷயத்தைச் சொல்லி இணங்க வைப்பதற்கு ஒரு நாழிகை ஓடியது.

பிறகு எல்லோரும் சம நேரத்தில் தரையோடு மண்டியிட்டு ஊர்ந்து வேலி ஓரம் வந்தார்கள்.



அது வெறும் முள் வேலி. இரவு பாதுகாப்புக்காகக் கப்ரேக்கள் வெட்டிப் போட்டிருந்தார்கள்.

கைகளை உபயோகிக்க முடியாத நிலையில் யோசனை செய்து ஆறு பேரும் சேர்ந்து தாவ வேண்டும் என்று திட்டமிட்டு அதன்படியே தாண்டினார்கள்.

விடுதலை கிடைத்த சந்தோஷத்தில் முள்ளும் புதரும் கவனியாமல் ஓடினார்கள். மாட வீதிகளில் புகுந்து நிழல்களில் மறைந்தார்கள்.

இளம் காலையில் எல்லோரும் சேர்ந்து திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தபோது முதலில் அந்தச் சத்தத்தைக் கேட்டு எழுந்தவள் சுவர்ணமுகி.

வான் கோயன்ஸும் ஒரு கப்ரேயும் பலமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"அட தந்திரம் தெரியாத பெண்களா! இங்கேயா இருக்கீங்க? எழுந்திருங்க எழுந்திருங்க!" என்றார் கோயன்ஸ்.

அவர் நின்ற நிலை, அனாயாசமாகப் பார்த்த பார்வை, சிரித்த சிரிப்பு எல்லாமே சுவர்ணமுகியைக் கலவரப்படுத்தின.

அவளைத் தொடர்ந்து ஒவ்வொரு பெண்ணாக எழுந்திருக்க, எல்லோரும் கோயன்ஸைப் பார்த்து விக்கித்து நின்றார்கள். முந்திய இரவில் யாருடைய உதவியையாவது பெற்றுத் தங்கள் கைப் பிணைப்புக்களை அகற்றாதது தங்கள் பிழை என்று இப்போது நினைத்தார்கள்.

எல்லோரும் கைப்பிணைப்புக் கயிற்றோடு சேர்ந்து அகப்பட்டது அவர்களுக்கு அவமானத்தைக் கொடுத்தது.

கப்ரே அவர்களுக்கு இரண்டு கசையடி, கொடுத்து, – மாட வீதி வழியே அழும் கண்களோடு அழைத்துச் செல்ல,

அந்தக் காலைக் காட்சியைப் பார்த்த வீதி ஜனங்கள் உடனே வீட்டுக்குள் ஓடிக் கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டனரே அன்றி, உதவி ஏதும் செய்ய வரவில்லை.

''பயந்தாங்கொள்ளி இந்தியர்கள்! இவர்களுக்கு ஒரு ராஜா!'' என்று பலமாகச் சிரித்த வான் கோயன்ஸ் ''நுகும்பா! நேரே இவங்களை ஸாந்தோமேக்கு ஓட்டு! முதல்லே கப்பல் ஏத்திட்டு வேறே வேலை பார்க்கணும்'' என்று சொன்னான்,

கப்ரே அவர்களைச் சிறு ஓட்டமாகத் துரத்திக் கொண்டு வெய்யில் கனக்கும் வேளையில் ஸாந்தோமேயின் மண் சுவர்க் கோட்டையை அடைந்தான்.

கோட்டை வாசலைக் கடந்து உள்ளே நுழைய, முற்றிலும் புதிய காட்சி ஒன்று உதயமாகியது.

அந்தப் பகுதி ஒரு போர்ச்சுக்கீசிய நகரம் போல் ஐரோப்பியக் களையோடு தெரிந்தது.

உயரமான கவுன்கள் அணிந்த வெள்ளைக்காரப் பெண்களும்,

உயரத் தொப்பி, கனத்த கோட்டுகள் தரித்த வெள்ளைக்கார ஆண்களும் தெருக்களில் விசித்திர பாஷை பேசிக் கொண்டு உலாவினார்கள்.

முதல் தெருவைத் தாண்டி, இரண்டாவது தெருவில் நுழையும்போது,

எதிரே ஒரு வெள்ளைக் குதிரை மீது அமர்ந்து அமர்க்களமாகச் சிரித்துக் கொண்டு ஒரு வெள்ளைக்காரர், தமது வேலைக்காரர்கள் சூழ வந்து கொண்டிருந்தார்.

கோயன்ஸைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டு குதிரையை நிறுத்தி, ''மிஸ்டர் கோயன்ஸ் ஏது இங்கே?



உங்கள் வியாபாரப் பொருட்கள் எங்கே? வேலையாட்கள் எங்கே?'' என்று சரமாரியாகக் கேட்டான்.

கோயன்ஸ் உடனே – ''என் குடும்பம் மயிலாப்பூரில் இருக்கு, மிஸ்டர் டே! இவங்க ஓடப் பார்த்தாங்க! இவங்களை முதல்லே கொண்டு போய்க் கப்பல்லே வித்துடப் போறேன்'' என்றான்.

''அப்படியா! எல்லாரும் பெண் அடிமைகளா?'' என்று சொல்லி முதல் முறையாக அவர்களை நோக்கித் திரும்பினார்.

திரும்பினவர் சடக்கென்று பார்வையை நிறுத்தினார்.

அவர் வாய் சிறிது விரிந்தது.

அவர் பார்வைக்கு நேர் இலக்கில் சுவர்ணமுகி நின்று கொண்டிருந்தாள்.

மிகவும் களைப்பான நேரத்திலும் அவளது அழகு மெலிதாக விகசித்து வெளியே வந்துகொண்டுதான் இருந்தது.

அவள் சோக விழிகளில் கூட மெல்லிய நீல வெளிச்சம் ஓடியது.

வியர்வை நிரம்பிய வதனம் ஒரு கடல் சங்கு போல ஊமை வெளுப்பாக மின்னியது.

''அடே!'' என்று சொல்லிக் குதிரையை விட்டுக் கீழே இறங்கினார்.

சுவர்ணமுகியின் அருகில் போய் நின்று, ''இவளை எனக்குக் கொடு'' என்றான்.

டேயின் கண்கள் அபரிமித வேட்கையுடன் அவள் உருவத்தில் மொய்த்தன.

* * * * *

**The body of St. Thomas lies in the province of Maabar in a little town (Santhome - Madras)**

**—Marco Polo (1298 AD)**

# 6

**ஃபி**ரான்ஸிஸ் டே தமது குதிரையிலிருந்து கீழே இறங்கி அந்தக் கீழை நாட்டு அழகியை உற்றுப் பார்த்தார்.

என்ன அழகான பெண் இவள்!

கண்கள் இரண்டும் பர்கண்டி திராட்சைகள்!

தீர்க்கமான மூக்கு ரோம் தேவதை ஸிந்தியாவுடையது!

டூலிப் போன்ற செண்டு உடல்!

தனியாக ஒரு ஸானெட் நிற்பது போல் நின்றாள்.

டே மகா ரசிகன். மதுரா மதுவானாலும் சரி, மில்டன் கவிதையானாலும் சரி. (அப்போது மில்டன் உயிரோடு இருந்தார்.) இரண்டையும் இனிமையாக நுகர்பவன் அவன்.

வலது கோட் பாக்கெட்டில்

Poems of Mr John Milton Both English and Latin Compos'd at several times (f = s)

என்ற தலைப்புடன் லண்டனில் 1629ல் அச்சிட்ட ஆக்டேவோ அளவு புத்தகம் பத்திரமாக உறங்கிக் கொண்டிருந்தது.

டே மனசைப் பறிகொடுத்து நிற்பதை ஒவ்வொரு கணமும் ரசித்த வான் கோயன்ஸ் மெல்ல முன் வந்தான்.



"மிஸ்டர் டே! தங்கள் கண்கள் என்ன, பஞ்சத்தில் அடிபட்டிருக்கிறதா?" என்று கேட்டான்.

"இவள் ஓர் அற்புத அழகு. இவளைப் பார்த்தால் கவிதை தானாக வருகிறது. இவளை எனக்குக் கொடு!" என்றான் டே.

"ஹூம்! நீங்கள் வெறும் வியாபாரி! உமக்கு எதுக்கு இவள்! இவளை ஹாலண்ட் அனுப்பப் போகிறேன். அங்கே ஏதாவது செல்வச் சீமானுக்கு ஆசை நாயகியாக இருப்பாள்."

டேக்குக் கோபம் வந்தது.

தனது அந்தஸ்தை கோயன் குறைவாக மதிப்புப் போடுகிறானே!

"வீண் கதை பேசாதே! இவளை என்ன விலைக்குத் தருவாய், சொல்லு!" என்றான், அழுத்தமாக.

"உம்மால் கொடுக்க முடியுமா?" என்றான் கோயன்ஸ்.

"நிச்சயம்."

"டியானா சும்மா விடுவாளா?"

"அதைப்பற்றி உனக்கென்ன கவலை?"

"சரி. நூறு பவுன் கொடும்!"

"நூறு பவுனா? இவளுக்கா? நீர் இவளை ஐந்து ஷில்லிங்குக்கு மேல் வாங்கியிருக்கமாட்டீர்" என்றான் டே.

கோயன்ஸ் சிரித்தான்.

"இது போன்ற வியாபாரத்தில் யாராவது உண்மை அடக்க விலையைச் சொல்வார்களா?" என்று கேட்டான்.

''கடைசியாக எவ்வளவுக்குத் தருவாய்?'' என்றான் டே.

''இவள் ஒரு பேரழகி! அரச குமாரி போன்ற தோற்றம். இவளைப் பத்திரமாக ஹாலந்தில் கொண்டு எவ்வளவு விலைக்கு விற்பேன் தெரியுமா?''

டே பேசவில்லை.

மீண்டும் ஒரு முறை சுவர்ணமுகியைப் பார்த்தான். இப்போது கிரிஸ்தபர் மார்லோவின் கவிதை நினைவுக்கு வந்தது.

Come live with me and be my love
And we will all the pleasures prove!

ஒவ்வொரு வரியும் அவர் மனத்தில் உருள,

அவற்றில் சுவர்ணமுகியின் வெவ்வேறு போர்ட் ரெய்ட் தோற்றங்கள் மெல்லப் பனி போல் தெரிந்தன.

இரவில் ஓர் அருமையான இந்திய அணங்குடன் கேளிக்கையான நேரத்தைப் போக்க வேண்டும் என்று பல முறை நினைத்திருக்கிறான் அவன். இதுவரை எத்தனையோ பெண்களை ருசித்து விட்டாலும் அவன் விரும்பிய அந்த 'அருமையன' பெண் கிடைக்கவில்லை.

சுவர்ணமுகியைப் பார்த்ததும் அவனது நினைவில் எண்ணற்ற அறைகள் புதிது புதிதாகத் திறந்து கொண்டதை அவன் உணர்ந்தான். அது இயற்கையாக அவன் மனத்தில் நிகழ்ந்த மாறுதல்!

இந்தப் பெண்தான் அவன் இத்தனை நாளும் தேடியவள் என்று ஓர் உணர்ச்சியும் தோன்றியது.



எத்தனையோ பேரிடத்தில் காணக் கிடைக்காத அரிய இன்பங்கள் இவள் மூலம் நிச்சயம் கிடைக்கும் என்று அவன் நம்பினான்.

ஆனால் இங்கே கோயன்ஸ் சொல்லும் விலை ஏகமாக இருக்கிறது. அந்த விலைக்குத் திருநெல்வேலிச் சீமை முழுவதையும் வாங்கி விடலாம்.

இந்த நாட்டில் இப்பொழுது நூறு பவுனுக்கு மக்கள் எல்லாரையுமே விலைக்கு வாங்கி விடலாம்!

அவ்வளவுக்குப் பஞ்சம் மலிந்திருக்கிறது.

ஜனங்கள் உணவில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

இந்தச் சமயத்தில் கோயன்ஸ் அந்தப் பெண்ணின் விலையைத் தூக்குவது வேண்டுமென்றே செய்யும் செய்கை என்று நம்பினான்.

''வெல், மிஸ்டர் டே! நான் புறப்படறேன்!'' என்று கிளம்பினான் கோயன்ஸ்.

''அப்போ தீர்மானமா என்ன சொல்றே?'' என்றான் டே.

''ஒரே பேச்சுத்தான். நான் வரேன்'' என்று புறப்பட்டான் கோயன்ஸ்.

ஸாந்தோமே கடற்கரையில் கட்டு மரங்களும், மசூலா படகுகளும் சுறுசுறுத்துக் கொண்டிருக்க,

கடலுக்குள் வெகு தூரத்தில் எண்டவர் என்ற பாய்மரக் கப்பல் நங்கூரம் பாய்ச்சி இருந்தது.

கடல் மணலில் நிறைய இந்திய – ஐரோப்பிய வியாபாரிகள் குழுமி இருந்தார்கள்.

சீமாட்டிகளும் சீமான்களும் பல்லக்குகளில் உட்கார்ந்து கொண்டே பேரம் பேசினார்கள்.

சீமாட்டிகளைச் சிலர் தங்கள் தோள்களில் தூக்கித் தண்ணீரில் நடந்து படகில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

சீமாட்டிகளின் கால்கள் கடல் நீரில் நனையக் கூடாதாம்! சுமந்தவரின் கழுத்தைச் சுற்றிக் கால்களை இருபுறமும் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுவர்ணமுகி மற்றப் பெண் அடிமைகளோடு அந்தச் சுடு மணலில் நின்று வானத்தையும் கடலையும் மாறி மாறிப் பார்த்தாள்.

படகுகளில் அழும் அடிமைச் சிறுவர்களும் பெண்களும் ஆண்களுமாக ஏற்றப்பட்டிருந்தார்கள்.

இந்த மனித வியாபாரப் பொருட்கள் பொங்கி வழிவது போல் படகுகளில் புடைத்துக் கொண்டு வெளியே தெரிந்தன.

அநேகரது கேவலமான அழுகை மனதைக் கரைக்க வல்லதாயிருந்தது.

எல்லாரும் பட்டினியால் ஏற்கனவே பாதி உயிரை விட்டிருந்தார்கள்.

கரையை விட்டு விலகிச் செல்லும் பட்சத்தில் மீதிப் பாதி உயிரையும் விட்டுவிடுவார்கள் போல் அடிவயிற்றி லிருந்து அழுது கொண்டிருந்தார்கள்.

சுவர்ணமுகி எல்லாவற்றையும் சோகத்தோடு பார்த்தாள்.

நாடு எப்படி க்ஷீணித்து விட்டது! அதன் வளம் எப்படி மறைந்து விட்டது! மழையில்லாத பஞ்சம் ஒருபுறம் இருக்கட்டும். மனிதன் ஏற்படுத்திய பஞ்சம் அதைவிடக் கொடுமையாக இருக்கிறதே!



மூன்று நாட்கள் நடந்த நிகழ்ச்சிகளில் அவள் மனம் வெகு தூரம் பாதிக்கப்பட்டிருந்தது.

அவளது நினைக்கும் சக்தி கூடச் சிறிது குறைந்து இருப்பதை அவள் உணர்ந்தாள்.

எவ்வளவு உன்னதமான இடங்களில் இருக்க வேண்டியவள்,

இப்படி ஒரு அடிமைப் பெண்ணாக நாட்டை விட்டுக் கடத்தப்படுகிறாளே! அந்த அக்கிரமம் வேறு எங்காவது நடக்குமா?

ஆமாம், இந்த ஏற்றுமதி விவகாரங்களை யாராவது கவனிக்க வேண்டாமா? இன்னும் விஜயநகரக்காரர்கள் தானே இந்தச் சீமைக்கெல்லாம் அதிபதி!

திரும்பியபோது தென்னஞ் சோலையின் நடுவில் திருவல்லிக்கேணியின் கோபுரம் தெரிந்தது.

'கடவுளே! இவைகளை நீ கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறாயா?' என்று கேட்டாள் அவள். மனம் எந்தவித இயக்கமும் இல்லாமல் சோர்ந்து விழ,

காதுகளில் கடக் கடக் கடக் கடக் என்று குதிரை ஓசை மட்டும் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது.

இப்போது ஆபத்தில் சிக்கிய காரணத்தால் அந்த நினைவு அடிக்கடி வருகிறது.

அந்த வீரனாவது அவளைக் காப்பாற்ற வருவதாவது!

இதற்குள் அவன் இறந்திருக்க வேண்டும்.

அவன் பெயரைக் கேட்டுக் கொள்ள மறந்து விட்டோமே! எவ்வளவு பெரிய தவறு!

அதுகூடப் பெரிதில்லை.

தனது பெயரை ஏன் கங்கணா என்று சொன்னோம்? இறந்து கொண்டிருக்கும் ஒருவனிடம் அப்படிச் சொல்லலாமா?

என் உண்மைப் பெயர் தெரிந்தால் அவன் சந்தோஷமாக இருக்க மாட்டானா?

அவள் யோசனை செய்து கொண்டிருக்க,

திடீரென்று அரவங்கள் கேட்டு மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

ஆங்கிலேயர்கள் பலர் அவசரம் அவசரமாகக் கடற்கரைக்கு மூட்டை முடிச்சுகளுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

கப்பலில் ஏறித் தங்கள் தாய் நாட்டுக்குச் செல்லவே அவர்கள் வந்திருக்கிறார்கள்!

வாலிபர்களும் நடுத்தர வயதுக்காரர்களும் நிறைந்த அந்தக் கூட்டத்தில் ஒருத்தனது பேச்சு மட்டும் சிறிது வெண்கல இழையுடன் எடுப்பாக இருந்தது.

அவளுக்கு ஆச்சரியம் ஏற்பட்டுத் திரும்பிப் பார்க்க,

கும்பலில் அந்தக் குறிப்பிட்ட ஆளை அவள் கண்டுகொள்ள முடியாதபடி மற்றவர்கள் குறுக்கே வந்து கொண்டிருந்தார்கள்.

சுவர்ணமுகி அது யார் என்று குழம்பிக் கொண்டிருக்கும் போது,

அந்தக் கும்பல்காரர்கள் தங்களுக்குச் சற்று எட்டத்தில் அந்த அடிமை கோஷ்டி இருப்பதைப் பார்த்து வேடிக்கைப் பார்க்க அவர்களை நோக்கி வந்தார்கள்.



கும்பலில் சற்று உச்சமான குரலில் பேசியவன் ட்ரேக் ராஜர்.

இருபத்தெட்டு வயது இளைஞன்.

வடித்த முகவாயும், கூர்மையான மூக்கும் உள்ளவன்.

கண்களில் நீலத்தை ஒட்டிச் செவ்வரி.

அதிகப் படிப்பு இல்லாமல் லண்டனிலிருந்து ஸ்டுவர்டாகக் கப்பல் ஏறியவன் அவன்.

நாகப்பட்டினம் அருகில் அடித்த புயலில் தப்பித்துக் கரை ஏறியவன்.

பிறகு ஐரோப்பிய வியாபாரிகளிடம் ஏவல் வேலை செய்து,

மெல்ல மெல்லத்தானே தனக்கு ஒரு வர்த்தக வழியை ஏற்படுத்திக் கொண்டவன்.

இப்போது கையில் சேர்த்த பத்தாயிரம் பவுனுடன் தனது தாய் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

அங்கே அவனது ஏழ்மையான பெற்றோர்களும் சகோதரிகளும் அவன் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

ஒவ்வொரு வியாபாரியும் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லும் கனத்த தொகைகளை ஒப்பிட்டால், இவன் எடுத்துச் செல்வது பெரிய தொகையே அல்ல.

"டேய், டேய்! இந்தப் பக்கம் பெண்கள்" என்றான் காலின்ஸ் என்ற இளைஞன்.

ராஜர் திரும்பினான்.

அதுவரை எலும்பும் தோலுமாகச் சிறுவர்களையும், ஆடவர்களையும் பார்த்த பிறகு இந்தப் பெண்கள் பகுதி சற்று வளமையுடன் தெரிந்தது.

"பெண்களுக்கு மட்டும் இந்தத் தோல் வியாபாரிகள் நல்ல உணவு கொடுக்கிறார்கள்" என்றான் காலின்ஸ்.

தோல் வியாபாரம் என்று குறித்தது அடிமை வியாபாரம்.

"ஏனெனில் அவங்களை ஆசைநாயகியாக விற்க வேண்டியிருக்கே! அதனால் அவங்க தோற்றத்தைச் சரியாகப் பாதுகாக்க வேண்டாமா?" என்றான் ஹம்மாண்ட்.

"நாமும் ஆளுக்கு ஒரு பெண் வாங்கிக் கொண்டு போகலாமா?" என்றான் காலின்ஸ்.

"வீட்டை விட்டுத் துரத்துவார்கள்!" என்றான் ஹம்மாண்ட்.

"பெற்றோர்கள்தானே! இதே அடிமைகளை நாலு மடங்கு விலைக்கு விற்றுப் பணத்தைக் காட்டினால் ஆவென்று வாயைப் பிளப்பார்கள்" என்றான் ஜேம்ஸ் மில்.

ராஜர் இதற்குள் பெண்கள் கூட்டம் ஒவ்வொன்றாகப் பார்த்து, கோயன்ஸின் கூட்டத்துக்கு வந்திருந்தான்.

காந்தம் போல் விண் என்று பார்வை இழுபட, "மை காட்" என்று கத்தினான்.

மற்றவர்கள் ஆச்சரியமாகப் பார்க்க, ராஜர் இரண்டே தாவலில் அந்தக் கூட்டத்தின் பக்கம் நின்றான். "ஹேய்!"

ஆறு அடிமைப் பெண்களும் திரும்பிப் பார்த்தார்கள்.



சுவர்ணமுகி அரைக் கணம் அவனைப் பார்த்துப் பார்வையைக் கீழே இறக்கினாள்.

"ஹேய்" என்றான் பரிச்சயம் ஆனவன் போல். திரும்பிய அவன் விசேஷமாக ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும் திரும்பினாள்.

ராஜர் என்னென்னவோ சொல்ல விரும்பினான். முன்யோசனை தடுத்தது.

பிறகு இந்தக் கூட்டத்தின் வியாபாரி கோயன்ஸ் என்று அறிந்து அவனைத் தேடிக் கண்டுபிடித்தான். "மிஸ்டர்! அதோ அந்தப் பெண் இருக்கிறாளே, அவளை எனக்கு விலைக்குத் தர முடியுமா?"

கோயன்ஸ் அவனை ஏற இறங்கப் பார்த்தான். "தரேன்"

"எத்தனை பணம்?"

"பணம் வேண்டாம். பவுன் கொடு."

"எவ்வளவு?"

"ஐநூறு!"

"ஐநூறு!" திறந்தவாய் திறந்தபடி கிடந்தது. கண்கள் மறுகி நின்றன.

கோயன்ஸ் முகத்தைத் திருப்ப, "இதோ, தருகிறேன்" என்றான் ராஜர், பரபரத்த தீர்மானமுடன்,

"நான் அறுநூறு தரேன்" என்று ஒரு காத்திரமான குரல் அவனை உலுக்கியது. திரும்பினான்.

ஃபிரான்ஸிஸ் டே உறுதியான முகத்துடன் நின்று கொண்டிருந்தான்.

கோயன்ஸ் டேயை நோக்கித் திரும்பினான்.

"நான் எழுநூறு" என்றார் ராஜர்.

கோயன்ஸ் ராஜரை நோக்கித் திரும்பினான்.

"எண்ணூறு."

"தொள்ளாயிரம்."

"ஆயிரம்."

"இரண்டாயிரம்."

டேக்குக் கோபம் வந்தது.

"மூவாயிரம்."

"நான் நாலாயிரம்." ராஜர் முகத்தில் ஒரு கண்டிப்பு ஒடியது.

"ராஜர் இது வேண்டாம். ஏலம் சூதாட்டம் மாதிரி!" என்று காலின்ஸும் நண்பர்களும் நெரித்தார்கள்.

"ஐயாயிரம்!" என்றான் டே. அவன் முகத்தில் கடுகடுப்பு. கண்ணில் ஒரு வெறி.

"ஆறாயிரம்."

"ஏழாயிரம்."

"எட்டாயிரம்."

"ஒன்பதாயிரம்."

"பத்தாயிரம்."

டேக்குக் கோபம் கூடிக் கொண்டே வந்தது. ராஜர் பத்தாயிரம் என்றதும் ஆத்திரம் அள்ளி வரக் கண்கள் ரத்தமாக எரிய,

"போதும். இனிமே ட்யூயல்! வா, ட்யூயலுக்கு" என்று கத்தினான்.

**"The Practice of duelling has become almost a profession"**
**'The English Spy' magazine (1825)**

## 7

**ஸா**ந்தோமே பல நூற்றாண்டுகளாக வெவ்வேறு வாழ்க்கைத் தசைகளில் இருந்து வந்தது.

புனித தாமஸின் பெயரோடு அந்த ஊர் பிணைப்பு அடைந்த காரணத்தால் ஒரு கொத்து கிறிஸ்தவர்கள் எப்போதும் அந்த ஊரைச் சுற்றி வாழ்ந்து வந்தார்கள்.

நீண்ட காலமாகச் சிற்றூர் ஸ்தானத்தில் இருந்த ஊர், பின்னர் வியாபார நோக்குடன் சில போர்த்துக்கீசியக் குடும்பங்கள் குடியேறியவுடன் தனது தோற்றத்தை மாற்ற ஆரம்பித்தது.

கதை நிகழும் காலத்துக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே அந்த ஐரோப்பிய குடும்பங்கள் அங்கே குடியேறி வாழத் தொடங்கி விட்டன.

இப்போது போர்த்துக்கீசியரும், ஏனைய ஐரோப்பிய ஆசிய வியாபாரிகளும் அந்த ஊரை ஒரு குட்டி நகரமாக மாற்றியிருந்தார்கள்.

கோவாவைப் பார்த்தவர்கள் லிஸ்பனைப் பார்க்க வேண்டாம் என்று அந்த நாளைய போர்த்துக்கீசியப் பழமொழி. இந்த கோவாவுக்கு அடுத்தபடியாக, செல்வப் பெருக்கிலும், வியாபாரப் பெருக்கிலும் இருந்தது ஸாந்தோமே. இரவில் அந்த குட்டி நகரம் ஒரே பரபரப்பு அடைந்திருந்தது.

எல்லோரும் மறுநாள் காலையில் நடக்கவிருக்கும் ட்யூயலைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஃபிரான்ஸிஸ் டே, டிரேக் ராஜருக்கு விட்ட சவாலைப் பற்றி விரிவாக விமரிசித்துக் கொண்டிருந்தார்கள். 'இதெல்லாம் பணத்திமிரிலே விளைகிற சவால்கள். இந்தக் கால ஐரோப்பியருக்கே இது ஒரு சாபக்கேடு.' என்று பலர் கூறினார்கள். 'ஹும். இந்த ட்யூயல் இல்லாவிட்டால் எப்படி அவமானத்தை ஒருவன் துடைத்துக் கொள்ள முடியும்? நிச்சயம் இது ஒரே வழி' என்றார்கள் சிலர்.

எல்லோரும் மறுநாள் காலையில் கடற்கரையில் நடக்கும் அந்த நிகழ்ச்சிக்குப் பெரிய ஆவலோடு காத்திருந்தார்கள்.

காலையில் கடற்கரையில் ஊர் ஏகோபித்துக் கூடியிருந்தது.

அலைகள் நீலக் குழல்களாக நெளிய, கரை வெள்ளியாகச் சிலும்பியது.

மணலைத் தாண்டி, அப்பால், ஜனங்கள் ஒரே பரபரப்பில் நின்றார்கள்.

வெப்பம் தாங்காமல் சீமாட்டிகள் நாசூக்கான விசிறி மூலம் தங்களை விசிறிக் கொண்டிருந்தார்கள்.

பல்லக்குகள் மர நிழல்களில் குட்டி குட்டி சமாதிகள் போல் கிடக்க,

போகிகள் திறந்த உடம்புகளுடன் மரங்களின் மீது லாத்தி நின்றார்கள்.

தாமஸ் ஹாரிஸ் மத்தியஸ்தராக விளங்கினார்.

மணலில் அளந்து கோடுகள் போட்டுத் தமது ஆல்டர்மேன் கோட்டை இழுத்து விட்டார்.



எட்டு மணிக்கு ஃபிரான்ஸிஸ் டே பதற்றமுடன் பல்லக்கில் வந்து இறங்கினார்.

கூட்டம் அவரை உற்சாகப்படுத்தியது.

அதை அடுத்து ட்ரேக் ராஜர் வந்து இறங்க, கூட்டம் அவனையும் உற்சாகப்படுத்தியது.

மணலில் அவர்களைக் குறித்த இடங்களில் நிற்க வைத்து விட்டு, முக்கிய நிபந்தனைகளை மத்தியஸ்தர் அவர்களிடம் ஒன்றுக்கு இரண்டு தடவை அழுத்தமாகக் கூறினார்.

'ஒன், டூ, என்று சொல்வேன். அதுவரை கை கீழேதான் இருக்க வேண்டும். த்ரீ என்று சொன்னதும்தான் மேலே தூக்க வேண்டும். உடனே சுடவும் வேண்டும்.'

டே இன்னமும் பதற்றத்தில் இருந்தார்.

முந்திய இரவு அவர் ஏகமாகக் குடித்திருந்தார்.

தம்மால் சரியாகக் குறி பார்த்துச் சுட முடியும் என்ற நம்பிக்கை இல்லை.

இருந்தும் இப்போது அது ஒரு பெருமை விஷயமாக மாறிவிட்டது. இனி பின்வாங்கிப் பிரயோசனமில்லை. அந்த 'நாய்க்குப் பிறந்தவன்' அவர் சவாலைக் கேட்டு ஓடிவிடுவான் என்று நினைத்தார்.

இன்று காலைவரை அதுதான் நம்பிக்கை.

ஆனால் காலையில் அவன் இன்னும் அப்படியே தீவிரமாக இருக்கிறான் என்று தெரிந்ததும் அவருக்கு சுவரம் குறைந்து விட்டது.

கடவுளைத் தொழுதுவிட்டுப் பெரிய நடுக்கமுடன் அங்கே வந்திருந்தார்.

மத்தியஸ்தர் எல்லா விஷயங்களையும் தயார்ப்படுத்தி விட்டு இரு எதிராளிகளையும் உஷார்ப்படுத்தினார்.

ராஜர் நெற்றியில் வியர்வை மினுக்கியது. கண்களில் தைரியம் இருந்தாலும், ஒரு மூலையில் கலக்கம் சின்னதாகத் தோன்றியிருந்தது.

இளம் வயது ஆதலால் கால்களை வலுவாக ஊன்றியிருந்தான் அவன்.

எட்டே காலுக்கு முதல் விசில் அடித்தார் தாமஸ் ஹாரிஸ்.

டே தமது கையில் உள்ள வியர்வையைக் கர்ச்சீப்பில் துடைத்தார்.

ராஜர் துப்பாக்கிப் பிடியில் மணல் போட்டுத் தேய்த்தான்.

'ஒன்'

கூட்டத்தின் சலசலப்புக் குறைந்தது.

'டு'

இப்போது நிசப்தம்.

இருவரும் ஒரு நேர் கோட்டில் நின்றாலும் அவர்களது வலது கைகள்தான் எதிருக்கு எதிராக நீட்டி இருந்தன. முகங்கள் வெவ்வேறு திசையைப் பார்த்தன.

ராஜரின் முகம் கிழக்கு நோக்கி, கடலைப் பார்த்திருக்க, டேயின் முகம் மேற்கு நோக்கி கரையைப் பார்த்திருந்தது.

'த்ரீ' என்று குரல்.

அதைத் தொடர்ந்து ஒரு அசாதாரண சின்ன இடைவெளி.

அதைத் தொடர்ந்து இருவரும் சட்டென்று திரும்பித் தங்கள் கையில் பிடித்திருந்த ஃப்ளின்ட்லாக் பிஸ்டலை ஒரு முறை சுட்டார்கள்.



வெடிச் சத்தம் எழுந்ததும் நிசப்தம். அந்தப் பிரதேசம் முழுவதும் ஒரு படம்போல் அசைவற்றுக் கிடந்தது.

பிறகு ராஜர் தடுமாறி விழும்போதுதான் ஜனங்கள் கைதட்டி ஆரவாரித்தார்கள்.

ராஜரின் உதவியாளன் ஹம்மாண்ட் உடனே ராஜரைப் போய்த் தூக்க,

டேயின் உதவியாளன் நிக்கோலஸ் ஓடி வந்து டேக்கு மசரா புட்டியைக் கொடுத்தான்.

வான் கோயன்ஸ் சிரித்தவாறு கால்களை அகலமாக வைத்து முன்னால் வந்தான். டேயின் கைகளைக் குலுக்கி, ''மிஸ்டர் டே! நீங்கள் அந்தப் பெண்ணை எடுத்துக் கொள்ளலாம்!'' என்றான்.

டே உடனே நிக்கோலஸை நோக்கி திரும்ப, ''டே! இதென்ன பைத்தியக்காரத்தனம்?'' என்று ஒரு ஊசியான குரலைக் கேட்டு விலவிலத்தான்.

பெரிய பாப்பி நிற கவுனில் டியானா வந்து இறங்கினாள். இனிதான பதினெட்டாண்டு உடல். இரு கண்களிலும் மேற்கத்திய நீலம். பல்லக்கிலிருந்து நீண்ட, மெல்லிய, வெண்மையானக் கால்களைக் கீழே வைத்து,

''டே, இதெல்லாம் என்ன விளையாட்டு?'' என்று கோபித்தாள். கண்கள் ஸ்கார்லட் பொறிகளாயின.

டே சீக்கிரம் யோசித்தார்.

''ஏன் இங்கே வந்தாய் ஹனி! உனக்கு ஒரு அடிமை வாங்கி வைத்திருக்கிறேன். நீ பெருமை அதிகம் படுவாய்!'' என்றான்.

டியானா முகத்தில் ஆச்சரியம் ஓயவில்லை. ''டே! நீங்கள் என்ன செய்கிறீர்கள்! ஒரு அடிமைப்

பெண்ணுக்காக டியூயல் நடத்துவீர்களா? வெட்கமில்லை?''

''என்னைச் சீண்டினான் அந்த மடையன்!''

''அதற்காக டியூயல் வரை போவீர்களா? நிச்சயம் நான் இதை எதிர்பார்க்கவில்லை. நீங்கள் நிதானம் நிறைய உள்ளவர் என்று நம்பியிருக்கிறேன்'' என்றாள் தன் வெறுப்பு தொனிக்க.

அப்போது கோயன்ஸ், ''மிஸ்டர் டே!'' என்று இடையில் செருகினான்.

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றாள் டியானா.

''அந்த அடிமையை விற்பவன் நான்தான். பத்தாயிரம் பவுனில் போட்டி! டே வெற்றி பெற்று விட்டார்.''

''நோ! நோ!'' என்று ஒரு டெய்ஸி மலர் போல் முகத்தை ஆட்டினாள் அவள். ''அந்தச் சனியனை டே எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அந்தச் சண்டைக்காரர்களுக்கே கொடுங்கள்!'' என்று சொல்லிப் படக்கென்று டே பக்கம் திரும்பி,

''டே! நீங்கள் உடனே என்னோடு வாருங்கள்!'' என்று கனமாகக் கூறினாள்.

மிகுந்த வேதனையுடன் கண்களை விழித்துப் பார்த்தபோது, ட்ரேக் ராஜர் தான் இன்னும் உயிரோடு இருப்பதை உணர்ந்தான்.

முதலில் அந்த வலி எங்கேயிருந்து வருவது என்று நிர்ணயிக்க முடியவில்லை.



அமிலம் ஊற்றியது போல் விண்விண் என்று தெறித்தது.

இருதயம் அடிபட்டது என்று நினைத்தான். பிறகு வயிறு அடிபட்டது என்று எண்ணினான். அல்லது இடுப்பில் குண்டு ஏறி விட்டதோ!

கடைசியில் இடது தோள்பட்டையிலிருந்துதான் எல்லா வலிகளும் புறப்படுகின்றன என்று தெரிந்தபோது, அதன் மேலே கையை வைத்தான்.

தோள் இருந்த இடத்தில் நிணம் குதறி இருந்தது. கையை வைத்தது சுள்ளென்று காந்தியது.

''எவ்வளவு முட்டாள்தனக் காரியத்தைச் செய்தாய்!'' என்று கேட்டு ஹம்மாண்ட் அவனைத் தூக்கினான். மற்ற இரு நண்பர்கள் கை கொடுத்தார்கள்.

''உன் பெற்றோர்கள் கேட்டால் என்ன சொல்லுவோம்?'' என்றான் ஒருவன்.

அப்போது ''விலகுங்கள்! விலகுங்கள்!'' என்று ஒரு குரல் கேட்டது.

கோயன்ஸ் பரபரப்புடன் அவர்களை விலக்கினான். ''ராஜர்! எடு பணத்தை!'' என்றான்.

''எதற்கு?'' என்று கோபத்துடன் கேட்டான் ஒருவன்.

''டே அந்தப் பெண்ணை வாங்கிக் கொள்ளவில்லை. இப்போது முறைப்படி இவன்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்.''

''மிஸ்டர் கோயன்ஸ்! அவளை வேறு யாரிடமாவது விற்றுக் கொள்ளுங்கள். என் நண்பனை நாங்கள் இங்கிலாந்து அழைத்துச் செல்கிறோம்'' என்றான் ஹம்மாண்ட்.

"நோ, நோ! அதை ஒத்துக் கொள்ள முடியாது" என்றான் கோயன்ஸ்.

அதைத் தொடர்ந்து அங்கே ஒரு விவாதமும் தொடர்ந்து சின்னக் கலகலப்பும் வர,

ராஜர் தனது திறனை யெல்லாம் கூட்டி "சிநேகிதர்களே!" என்று கத்தினான்.

எல்லோரும் கப்சிப் என்று அடங்கினார்கள்.

ராஜர் இரண்டு நீண்ட சுவாசத்தை வாங்கிக் கொண்டு, "நான் என் சொல்லைக் காப்பாற்றுவேன். நான் அந்த அடிமையை எடுத்துக் கொள்கிறேன். இந்தா கோயன்ஸ், இந்தப் பையில் பத்தாயிரம் இருக்கிறது, எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"ராஜர்! வேண்டாம்; இது தற்கொலை" என்றான் மார்கன்.

"அடி முட்டாள்தனம்"

"உன் பெற்றோர்கள் என்ன நினைப்பார்கள்?"

"வெறும் கையோடவா ஊர் திரும்புவே?"

வரிசையாகக் கேள்விகளைத் தொடுத்தார்கள்.

கண்ணை மூடியிருந்த ராஜர் கையைத் தூக்கினான். பிறகு மெல்லிய குரலில், "நண்பர்களே! என் மீது இவ்வளவு அக்கறை வைத்ததற்கு நன்றி! நான் தாயகம் இப்போ திரும்பவில்லை. அது ஆண்டவன் சித்தம். இங்கே என் உயிர் திரும்புகிறதா பார்ப்பேன். இல்லாவிட்டால் இந்த இந்திய மண்ணிலேயே இறப்பேன். என் பெற்றோர்களிடம் என் அன்பைத் தெரிவியுங்கள்! ஆண்டவன் அருள் இருந்தால் அவர்களை மீண்டும் சந்திப்பேன்" என்றான்.



நண்பர்கள் முறை வைத்துப் பேசியும் ராஜர் அசையவில்லை.

எல்லோரும் தொங்கிய தலையுடன் விரக்தி ஆனார்கள்.

கோயன்ஸ் ராஜர் காட்டிய பையை எடுத்து நாணயங்களை எண்ணத் தொடங்கினான்.

இதற்குள் நண்பர்கள் தங்களுக்குள் வசூல் செய்து நூற்றிரண்டு பவுனை கோயன்ஸ் கையில் கொடுத்தார்கள்.

"மிஸ்டர் கோயன்ஸ்! ராஜரிடம் இருப்பது பத்தாயிரம்தான். இதை அவன் மருத்துவச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள். எங்கேயாவது நல்ல வைத்தியரிடம் அவனை அழைத்துப் போங்கள். விபரீதம் நேர்ந்தால் அவனை நல்ல முறையில் அடக்கம் செய்யுங்கள். நாங்கள் வருகிறோம்" என்றார்கள்.

ராஜரால் கண்களைத் திறக்க முடியவில்லை.

ஒவ்வொரு நண்பனும் அவனுடைய கையை எடுத்து முத்தமிட்டு விடை பெற்றார்கள்.

சீக்கிரத்தில் மணற் கரையில் ஜனங்கள் முழுவதும் கரைந்து விட்டார்கள்.

கோயன்ஸ் அவசரமாக ஒரு பல்லக்கைக் கொணரச் செய்து அதில் ராஜரைத் தூக்கிப் படுக்க வைத்துப் புறப்பட்டான்.

காலை வெய்யில் ஏறி இருந்தது.

ஒரு மணி நேரம் நிழலான சாலையில் பிரயாணம் செய்து, "ரோஸ் வில்லா" தோட்டத்தில் ராஜரை இறக்கினான்.

வைத்தியர் ஹோம்ஸ் அங்கேதான் குடியிருந்தார்.

ராஜரைக் கீழே வராந்தாவில் இறக்கியதும் ஹோம்ஸ் அவசரமாக அவனைப் பார்க்க வந்தார்.

கோயன்ஸ் அவரிடம் விவரம் தெரிவிக்கு முன் ராஜர் மெல்ல முனகுவது கேட்டது.

''ராஜர், ராஜர்! உனக்கு என்ன வேண்டும்?'' என்றான் கோயன்ஸ்.

''கோயன்ஸ்! நான் இறந்து கொண்டிருக்கிறேன். அந்த அடிமைப் பெண்ணைச் சற்று என் முன்னால் கொண்டு வருவீர்களா?'' என்றான்.

கோயன்ஸ் வெளியே ஓடி அந்தப் பெண்ணை அழைத்து வந்தான்.

''ராஜர்! இதோ அந்த அடிமை! இதோ! இதோ!'' என்று கத்தினான்.

ராஜர் சிரமப்பட்டு ஒரு பெரிய இரும்புக் கதவைத் திறப்பது போல் தன் இமையினைத் திறந்தான்.

அவன் முன்னால் சுவர்ணமுகி சோகமாக நிற்பதைப் பார்த்தான்.

திகிலும், பயமும் நிறைந்த அவளது கண் விழிகளைப் பார்த்தான்.

சுண்டிய இரு அந்தகாரங்களாக விளங்கும் இரு கண்களைப் பார்த்தான்.

பருவ மேகம் போல் வழியும் கூந்தலைப் பார்த்தான்.

கோயில் விக்கிரகம் போல் ஜொலிக்கும் பொன் வதனத்தைப் பார்த்தான்.

மெல்லப் புன்னகைப் புரிந்தான்.

* * * * *

**At every hour's distance one sees, a choultry erected by private persons. They are all the accomodation to be met on the roads. Building a choultry is looked upon as a great act of charity.**

**Major John Corneille - 1754**

# 8

டிரேக் ராஜர் என்ற அந்த இளைஞன் பரிதாபமாகப் படுத்திருந்தான்.

அவன் மூக்கிலிருந்து சிவந்த ரத்தம் ஒழுகியது. முகத்தில் பொட்டு வியர்வைகள் வழிந்தன. கண்களை அரை விநாடி திறந்திருக்க முடியவில்லை. ஆஆ என்று முனகியவாறு படுக்கையில் துவைத்தான்.

சுவர்ணமுகி அவனை ஆழ்ந்து பார்த்தாள். அவளுக்கு வருத்தம் மேலிட்டது.

யார் இந்த இளைஞன்? என்னை ஏன் விலைக்கு வாங்கினான்? இவனுக்கும் எனக்கும் சம்பந்தம் என்ன? அதிசயமாக இருக்கிறதே! என்று நினைத்தாள்.

ராஜர் மேலும் பலமுறை புரண்டுவிட்டு ஒரு சந்தேக அமைதிக்கு வந்தான். தன் அருகில் இருப்பவளைப் புதுமையாகப் பார்த்தான்.

ஒரு சின்ன நடுக்கம் உடல் மீது ஓடியது.

அக்கம் பக்கம் பார்த்து மிகவும் மெதுவாக அவளை நோக்கித் தணிந்த குரலில் ''நீங்க ராஜகுமாரிதானே?'' என்றான்.

சுவர்ணமுகி திகைத்தாள்.

இவனுக்கு என்னைத் தெரியுமா?

எங்கே பார்த்திருக்கிறான்?

குரல் பரிச்சயமாகத் தெரிகிறதே!

அவள் பேசாததைக் கண்டு அவன் மேலும் தொடர்ந்தான், ''உங்களுக்கு நாராயண வனம்தானே?''

சுவர்ணமுகிக்கு அதற்கு மேல் அடக்க முடியவில்லை. ஆமாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

''உங்கள் அப்பா பெயர் ரங்கப்பா தானே?''

''ஆமாம்.''

''என்னைத் தெரிகிறதா?''

''இல்லையே!'' என்றாள் சுவர்ணமுகி.

''நான் உங்கள் வேங்கட கிருஷ்ண விலாசத்துக்கு வந்திருக்கிறேன். உங்கள் தந்தையாருக்கு ரகசியமாக டெலிஸ்கோப் வாங்கிக் கொடுத்தேன். அவர் என்னிடம் பல ரகசியங்களைப் பற்றிப் பேசினார்'' என்றான்.

சுவர்ணமுகிக்கு சட்டென்று நினைவு வந்தது. வேங்கடகிருஷ்ணன் விலாசத்திற்கு எத்தனையோ வியாபாரிகள் வந்து போவார்கள். அவர்களில் ராஜர் ஒருவன் என்று இப்போது பளிச்சிட்டது.

ராஜர் சொன்ன கருவியையும் அவள் ரங்கப்பாவிடம் பார்த்திருக்கிறாள்.

அதிசயமான கண்ணாடிக் கருவி அது. குழாய் போல் இருந்தது. கண்ணில் வைத்துப் பார்த்தால் தூரத்து உருவங்கள் மிக நெருக்கத்தில் தெரிந்தன. நகரி மலையின் மூக்கு அவள் கை எட்டலுக்கு அகப்பட்டது. சந்திரிகிரி



அரண்மனை இதோ நாலு எட்டு நெருக்கத்தில் இருந்தது. என்ன அதிசயமான கருவி!

ரங்கப்பா அதை 10,000 பணம் கொடுத்து வாங்கியிருந்தார்.

''இப்போது ஞாபகம் வருகிறது. அந்த டெலஸ்கோப் ஒரு நூதனமான கருவி'' என்று பிரமிப்புடன் சொன்னாள்.

''சத்தம் போட்டுச் சொல்லாதீர்கள். டச்சுக்காரன் காதில் பட்டால் என்னைத் தூக்கில் போட்டு விடுவான்!'' என்றான் அவன், அக்கம் பக்கம் பார்த்து.

''ஏன் அப்படி?''

''அந்தக் கருவியை யுத்த களத்தில் பயன்படுத்து வார்கள். அதனால் கிழக்கு நாடுகளில் அதை விற்கத் தடை உண்டு. நான் உங்கள் தந்தைக்கு அதை ரகசியமாக விற்றேன். துப்பாக்கிகளும் விற்றிருக்கிறேன். உங்கள் தந்தை என்னை ஒரு கூட்டாளியாக நினைத்தார். என்னிடம் இன்னும் நிறைய உதவிகள் எதிர்பார்த்தார். திம்மராஜாவை எப்படியும் ஒடுக்கிவிட வேண்டும் என்று அவர் ஆசை!''

சுவர்ணமுகியின் கண்கள் நீரிட்டன.

''என் தந்தை இறந்து விட்டார் தெரியுமா?''

''தெரியும். அதனால்தான் நான் வெறுப்பில் ஊருக்குக் கிளம்பி விட்டேன்.'' என்று சொன்ன ராஜர், ''அவர் என்னிடம் என்னவெல்லாம் ரகசியம் பேசினார். விஜயநகரப் பொக்கிஷத்தைப் பற்றிக்கூட என்னிடம் பேசினார்'' என்றான்.

சுவர்ணமுகிக்கு உறைத்தது.

''அதையெல்லாம் பேசினாரா?''

''ஆமாம், இளவரசி! நான் அவருக்கு அந்தரங்க ஆளாக மாறிவிட்டேன்.''

சுவர்ணமுகிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த இளைஞனிடம் ரங்கப்பா அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாரா?

உள்ளே சலசலப்புக் கேட்டது.

அறுபது வயதான வைத்தியர் ஹோம்ஸ் கையில் ஒரு பேப்பர் குழாயுடன் வெளியே வந்தார்.

ராஜரைப் பார்த்து முணுமுணுத்து, அவன் மார்பில் குழாயை வைத்து, மறு ஓரத்தில் தமது காதை வைத்து இதயத் துடிப்பினைக் கேட்டார்.

''டோன்ட் வொர்ரி!'' என்று சொல்லி அவனை உள்ளே அழைத்துப் போகச் சொன்னார்.

இருவர் அவனை உள்ளே தூக்கிப் போக சுவர்ணமுகிக்குக் கையை ஆட்டியவாறே அவன் உள்ளே போனான்.

அர்ச்சுனனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தப் பைராகிகள் யார்?

இந்தச் சத்திரத்துக்கு எப்படி வந்தோம்?

எப்படி இன்னும் உயிருடன் இருக்கிறோம்?

அவனுக்கு நம்பிக்கை இல்லை. அவர்களைக் கொட்டக் கொட்டப் பார்த்தான்.

நிச்சயம் இது பகல் வேளைதான்!



இவன் இருப்பது ஒரு சத்திரம்தான்.

இந்தச் சாளரத்தின் வழியே வருவது காலையின் வெள்ளி ஒளிகள்தான்!

பிழைத்தோமா?

திரும்பிப் பார்த்தான்.

முதுகில் ஈட்டி குத்தியது. ஓகோ! ரணம் இன்னும் இருக்கிறதா! காயம் ஆறவில்லை. தோதா கொடுத்த ஞாபகச் சின்னம். துரோகி!

மேலே உத்தரங்களையும் விட்டங்களையும் பார்த்தபோது பழக்கப்பட்டவையாகத் தோன்றின. இது எந்தச் சத்திரம்?

நிழல் ஒன்று அவனைப் பார்த்து நீண்டு வர, தலையை மட்டும் திருப்பினான்.

கருணையை விழியாகக் கொண்ட ஒரு காவி வஸ்திரதாரி அவன் முன்னால் வந்து உட்கார்ந்தார். நெற்றியில் கோபியால் நாமம் போட்டிருந்தார். அன்பு மயமான புன்னகையுடன் அவன் பக்கத்தில் உட்கார்ந்தார்.

''சுவாமி!'' என்றான் அவன்.

''விழித்து விட்டீர்களா? விட்டலன் அருள்'' என்றார் அவர்.

''நாம் எங்கிருக்கிறோம் சுவாமி?'' என்றான் அவன்.

அவர் விருத்தாந்தங்களைச் சொன்னார். திருப்பதிக்கு அவரும் அவரது சாது கோஷ்டியும் யாத்திரை வந்தது, வரும் வழியில் அவன் குற்றுயிராகக் கிடப்பதை அவர்கள் பார்த்தது, டோலியில் ஏற்றிச் சத்திரத்திற்குக் கொணர்ந்தது, அவன் காயத்துக்குச் சிகிச்சை செய்தது, அவனுக்காகவே இரண்டு வாரம் அங்கேயே தங்கி விட்டது. .

எல்லாவற்றையும் விவரத்தோடு சொல்லி முடித்தார்.

அர்ச்சுனன் தனது விருத்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொல்ல,

"அப்பா அர்ச்சுனா! நல்ல வேளையாக அன்று உனக்கு நினைவு திரும்பியது. நாங்கள் இந்த இடத்தை விட்டுப் போவதாக இருக்கிறோம். இங்கே கொடிய பஞ்சம் தாண்டவமாடுகிறது. அரிசியோ வேறு தானியமோ கிடைக்கவில்லை. அபூர்வமாகக் கிடைத்தாலும் கொள்ளை விலைக்கு விற்கிறது. இனி நாங்கள் இங்கே இருக்கக் கூடாது. உன்னை என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறோம்" என்றார் அந்த விட்டல சந்நியாசி.

"சுவாமி!" என்று சொல்லி அவரை நன்றியுடன் பார்த்தான் அவன். "நான் இனிப் பிழைப்பேனா? என் காயங்கள் குணமாகுமா? அதைச் சொல்லுங்கள்!" என்றான் கெஞ்சிக் கொண்டு.

"அப்பா அர்ச்சுனா! உன்னைக் கண்டெடுத்த முதல் மூணு நாள் வரை எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அதன் மேல்தான் நம்பிக்கை துளிர்த்தது. உன்னைக் குற்றுயிராக விட்டுப் போக மனமில்லாமல் எங்கள் வழக்கத்தையும் மீறி இங்கே இரண்டு வாரம் தங்கி விட்டோம். உன் காயம் குணமாகி வருகிறது. நிச்சயம் நீ பிழைத்து விட்டாய்" என்றார் விட்டல சந்நியாசி.

"பிழைத்தேனா சுவாமி!" என்று அவர் கையைப் பிடித்தான் அர்ச்சுனன். "அது போதும் சுவாமி! என் ஒரே ஆசை அதுதான். உதவிகளுக்கு மிக்க நன்றி உடையேன், சுவாமி! எனக்கு ஒரே ஒரு உதவி செய்யுங்கள். ஒரு பல்லக்கு எங்கேயாவது கிடைக்குமா பாருங்கள். அது



போதும். நான் எப்படியாவது பிழைத்துக் கொள்வேன்!" என்றான் அவன்.

விட்டல சந்நியாசி வெளியே போனார். பல நாழிகை தேடிய பின்னர்தான் பல்லக்கு கிடைத்தது.

சத்திரத்து வாசலில் கொண்டு இறக்கியது. சந்நியாசி உள்ளே போய் அவனிடம் தெரிவித்து, அவனை மெல்ல அணைவாக இருவர் உதவியுடன் தூக்கி, பல்லக்கில் கொண்டு விட்டார்.

வெளியில் வந்து முகப்பைப் பார்த்ததும் அது கசங்குளச் சத்திரம் என்று தெரிந்தது. அங்கிருந்து நாராயண வனம் நாலு நாழிகையில் இருந்தது.

நான்கு பங்கு அதிகமான ஊதியத்துக்கு இணங்கிய பிறகே பல்லக்குப் புறப்பட்டது. தீப்பிழம்பாக தரிசு நிலங்கள் தெரிய, போகிகள் வழக்கத்துக்கு மாறாக மெதுவாக நடந்தார்கள்.

அர்ச்சுனன் யோசித்தவாறே சென்றான்.

தோதாவின் நினைவு அடிக்கடி வந்தது. அவனது முதுகுக் காயத்தைவிட வலித்தது.

அடிக்கடி பல்லைக் கோபத்தோடு அரைத்தான்.

நாட்டை இவனைப் போன்ற துரோகிகள் எவ்வளவு சீர்குலைத்து விட்டார்கள்!

சுபிட்சம் நிறைந்த பூமியைக் கைம்பெண்ணாக ஆக்கி விட்டார்களே!

தோதா உன்னை. . .

அந்தப் பெண் தப்பினாளா? சுவர்ணமுகி!

அவள் யார் என்று கூடப் பார்க்கவில்லை.

அவளுக்காகத்தான் இந்த யுத்தமே நடந்தது!

அவள் இப்போது தப்பியிருப்பாளா?

அவன் உடல் நடுங்கியது.

தோதா நயவஞ்சகமாக அவள் போன திசையைக் கேட்டுவிட்டுப் போனானே! அவளைக் கண்டுபிடித்துக் கொலை செய்திருப்பானோ?

என்ன இருந்தாலும் அவளை நேரில் பார்க்காதது எவ்வளவு தவறு?

அந்தச் சேடி காஞ்சனாதான் பேசினாள்.

அவளுக்கு என்மீது என்ன கரிசனம்?

என்னை அன்பாக விசாரித்து, நிழலில் கொண்டு போய்ச் சேர்த்து. . .

மதியமாவதற்குள் நாராயணவனத்தை அடைந்தான் அவன்.

வேங்கடகிருஷ்ண விலாசத்தை அடைந்தபோது, அவன் இதயம் படக்கென்று நின்றது.

இதென்ன அநியாயம்?

வீடா அல்லது பாழா?

யார் இதைச் சூறையிட்டார்கள்? ரங்கப்பாவின் குடும்பம் எங்கே? சுவர்ணமுகி எங்கே?

பல்லக்கை உள்ளே கொண்டு போகச் சொன்னான். தோட்டத்தின் வழியாக வீடு முழுவதையும் பிரதட்சிணம் வந்தான். மனத்தின் ஒரு கடினப் பகுதி விரைவாகக் கரைந்தது. பளிங்கு நீர்கள் கண் விளிம்பில் துளிர்த்து நின்றன.

பூவும் பிஞ்சுமாக இருந்த வீடு!

என்ன கோரமாக மாற்றி விட்டார்கள்?



தோதா வேலையா இது?

''ஐயா!'' என்று குரல் கேட்கத் திரும்பினான். நொண்டிக் கொண்டே அந்த மலைப்பெண் பூங்கரு அவன் முன்னால் வந்தாள்.

''எல்லோரையும் கொன்னுட்டாங்க!'' என்றாள் துக்கமான குரலில்.

''யாரு?''

''தளவாய் நரசய்யன்''

''நரசய்யனா?''

''ஆமாங்க.''

அர்ச்சுனன் கண் வழியே கொதி நீர் வழிந்தது.

கைவிரல்கள் திகைப்பில் தாமாக நடுக்கமிட்டன.

அவன் பதற்றத்தில் பல்லக்கு ஆடியது.

மனம் இப்போது நெகிழ, ''எல்லோரும் இறந்தார்களா?'' என்று குரல் தழையக் கேட்டான் அவன்.

''ஆமாங்க!''

முகத்தை மூடிச் சிறிது விசித்தான். பிறகு விம்மிக் கொண்டே, ''யாரும் இந்த அநியாயத்தைத் தடுக்கவில்லையா?'' என்று கேட்டான்.

பூங்கரு மௌனம் சாதித்தாள்.

''பூங்கரு! அவர்கள் உடல்களை என்ன செய்தார்கள்?''

''நாங்கதான் புதைச்சோமுங்க!''

''எங்கே?''

அர்ச்சுனனின் பல்லக்கை அழைத்துக் கொண்டு அருணா ஆற்றுப் படுகைக்குப் போனாள்.

வரிசையாக மேடுகளைக் காண்பித்து, ''இதுதாங்க!'' என்றாள்.

அர்ச்சுனன் சோகத்தோடு அந்த மண் மேடுகளைப் பார்த்தான்.

"இது வேங்கடம்மா, இது சந்திர கிருஷ்ணன், இது திவ்வியப் பிரபா, இது. . ." என்று சொல்லி நிறுத்தினாள் பூங்கரு.

"யாரு?"

"என் வீட்டுக்காரரு!" என்று முகத்தை மூடினாள் அவள்.

அவள் மார்புகள் மெல்லத் துக்கத்தில் குலுங்கின. துயரத்தைக் கூட தனது அந்தஸ்துக்குத் தக்கபடி மிகக் குறைவாக விளம்பரப்படுத்த விரும்பினாள் அவள்.

அர்ச்சுனன் சில விநாடிகள் அவளது துயரத்தோடு லயித்தான்.

பிறகு, பளிச்சென்று, "சுவர்ணமுகி?" என்றான்.

"அவங்க தப்பிச்சுட்டாங்க!"

"தப்பிச்சுட்டாங்களா?" மகிழ்ச்சி பீறிட வினவினான்.

"ஆமாங்க!"

"எங்கே போனாங்க?"

"பின்னாடி வழியே ஆத்தைக் கடந்து ஓடியிருக்கணும். நரசய்யன் தேடு தேடுன்னு தேடினான்."

அர்ச்சுனனுக்குப் புது உற்சாகம் வந்தது. பூங்கருவுக்குப் பத்துப் பணத்தைக் கொடுத்தான். பிறகு 'நிச்சயம் சுவர்ணமுகி நாகலாபுரம் போயிருப்பாள். அங்கேதான் அவள் சிநேகிதி திருமலாம்பா இருக்கிறாள்' என்று நினைத்து, போகிகளை நோக்கி, "நாகலாபுரம் போங்கள்!" என்றான்.

* * * * *

**The Portugese of Parangis were regarded (by the Indians) as vile and despicable, the basest in the world.**

**- BETRAND II**

# 9

**ப**தினேழாம் நூற்றாண்டின் மருத்துவம் வெகுவாகப் பின்தங்கி இருந்தது.

நோய்நொடிகளின் தெளிவான காரணங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை.

விசித்திரமான ரசாயனக் கலவைகளான வைத்தியம் பாதியும் மீதி பாதி மந்திர தந்திரங்களாகவும் இருந்தது. ஹோம்ஸ் தமக்குத் தெரிந்த எல்லா மருந்துகளையும் மாயங்களையும் பிரயோகம் செய்தார். ராஜருக்கு ஆயுசு கெட்டி. சீழ் வைத்த தோள்பட்டை பழுத்துச் சீக்கிரம் உடைந்தது.

சீழோடு குண்டின் இரும்புத் துகள்களும் வெளி வந்தன.

ஒரு வாரம் அவஸ்தையான இரவுகளைக் கழித்த பிறகு, ராஜர் குணமாகத் தொடங்கினான்.

அவன் தங்கியிருந்தது ஒரு காரைக் கட்டிடத்தில்! ஹோம்ஸின் தோட்டம் விஸ்தாரமானது. ஒரு மணி நேரம் சுற்றினாலும் முடிவு பெறாது. அதில் காவலுக்காகப் பல காரைக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஒன்றில்தான் ராஜர் தங்கியிருந்தான்.

ஒவ்வொரு காலையிலும் அவன் புதுமனிதனாக எழுந்திருக்கும்போது,

முந்திய தினத்தின் அசௌகரியங்கள் குறைந்திருப்பதைக் கவனித்தான். வலிகளும் நெக்கு விட்டிருந்தன.

வெளியே மெல்லக் காலடி வைத்துத் தென்னம் பிள்ளைகளின் நிழல் சல்லடைகள் வழியே சலனமிடத் தொடங்கினான்.

தனது வாழ்க்கையை மற்றுமொரு தவணை நீடித்து வைத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினான்.

சில சமயம் குளிர்ச்சியான காலைக் காற்றில் நின்று, தூரத்தில் தெரிந்த சுவர்ணமுகியின் இருப்பிடத்தை ஆர்வத்தோடு நோக்கினான்.

அதைப் பார்க்கும்போதெல்லாம் உடனே போய் அவளைக் காண விருப்பம் தோன்றியது.

சுவர்ணமுகியின் கவிதை நீத்தும் விழி அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

ஆறாயிரம் மைல் தள்ளிக் கிடக்கும் தன் தாயகத்தில் எஸ்மெரல்டா அதே போல் தான் உருக்கமான கண்ணோடு தோற்றமளித்தாள்.

எஸ்மெரல்டா அவன் காதலி!

கப்பலில் அவன் ஏறி விடை பெற்றபோது இரு ஏக்கக் கண்களையும் எவ்வளவு பெரிய மகா சமுத்திரங்களாக்கிக் காட்டினாள் அவள்!

அவைகளை நினைத்துப் பல தூங்காத இரவுகளைக் கழித்திருக்கிறான்.

இன்று இந்த இந்திய மண்ணில் சுவர்ணமுகியைப் பார்த்தபோது அந்த விழிகள்தான் அடிக்கடி நினைவுக்கு வந்தன. அவை சந்தோஷத்தையும் கொடுத்தன, துயரத்தையும் கொடுத்தன.



ஒருவிதமாக உடம்பு தேறி, நடக்கக்கூடிய நிலை வந்தபோது அவன் மூன்று முறை சுவர்ணமுகியைப் பார்த்திருக்கிறான்.

அவளுக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா என்று விசாரித்திருக்கிறான். சுவர்ணமுகி அதிகம் பேசியதே இல்லை.

அவள் பதில்கள் எப்போதும் அவள் கண்களில் மிதந்தன.

கூடுதல் பட்சம் அவனுக்கு ஒரு திருப்தி அளிக்க வேண்டுமானால், மூன்றாவது பிறை போல் சிறு புன்னகை கீற விட்டிருக்கிறாள்.

அவள் புலம்புவது போல் கேட்பது ஒரே கேள்வி.

"என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? உங்களுக்குச் சிரமம்."

ஒரு முறை அனுதாபப்பட்டுச் சொன்னாள்.

"உங்கள் உடல் இன்னும் தேறவில்லை. "அதற்குள் நடந்து வருகிறீர்களே, ஓய்வு வேண்டாமா?"

அவளிடம் இரண்டே நிமிடங்கள் பேசி வந்த பிறகு மளமளவென்று கண்ணில் நீர் துளிக்கும்.

இந்திய மக்களை மட்டுமல்ல; உலகில் துன்பப்படும் எல்லா மக்களையும் நினைத்துக் கண்ணீர் உகுப்பான்.

அதுவும் வாயில்லாப் பூச்சிகளாக இருப்பது அவனுக்கு மிகவும் துயரத்தை உண்டாக்கும்.

கூட்டம் கூட்டமாய் இந்திய ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும் ஒலாந்தியர்கள் அடிமைகளாக நடத்திச் செல்வதை எத்தனை முறை பார்த்திருக்கிறான்!

சோக ஓவியங்கள் அவை.

அவர்களை நினைத்து இரக்கம் சுரப்பதில் மில்டனாக இருந்தால் விரிகல் அழகில் சோகங்களை உதிர்த்திருக்கலாம்.

அவன் வெறும் ராஜர்! ட்ரேக் ராஜர்! அவ்வளவுதான்! அந்தஸ்தான ஒரு வாழ்வை விரும்பும் பாமரன். வெறும் உள்ள உணர்ச்சிகளை மட்டும் பொக்கிஷமாகக் கொண்டவன்.

காலையில் எழுந்ததும் அன்று அருமையாக வாய்க்கால் நீரில் குளித்து – ஹோம்ஸ் தோட்டத்தில் இரண்டு வாய்க்கால்கள் நிரந்தரமாக ஓடின – இந்திய வெய்யிலில் சிறிது உலாவிவிட்டு நேராக சுவர்ணமுகியின் இருப்பிடத்துக்குச் சென்றான்.

வாசலில் ரத்தினம்மா என்ற வேலைக்காரியைப் பார்த்து, ''இளவரசி இருக்கிறாரா?'' என்று கேட்டான்.

ரத்னம்மா உள்ளே போக, சுவர்ணமுகி சில விநாடிகளில் வெளியே வந்தாள்.

''நாம் நாளைக்குப் புறப்படுகிறோம்'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகியின் விழிகள் பெரிதாகின.

''எங்கே?''

''நீங்கள்தான் சொல்ல வேண்டும்.''

ராஜர் மயிற்கொன்றை மரத்தைப் பிடித்து நின்றான்.

அதன் க்ரிம்ஸன் நிறப் பூக்கள் கீழே நேர்த்தியான படுக்கை விரித்திருந்தன.

சுவர்ணமுகி சோகமான பிரமையில் நின்றாள். ''ராஜர்!'' என்றாள். அவள் குரல் கலங்கியிருந்தது. ராஜர் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.



''நீங்கள் ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்?'' என்றாள் நொந்தவாறு.

''அது என் கடமை இளவரசி! உங்கள் தந்தை எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறார். நான் இதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்வேன்?''

''ராஜர்! நான் எங்கே போகப் போகிறேன் என்பதுதான் என் யோசனை! அதனால்தான் விழிக்கிறேன்.'' என்றாள் சுவர்ணமுகி.

''ஏன்! உங்கள் குடும்பத்துக்கு உறவினர்கள் யாராவது இருக்க வேண்டுமே. உங்கள் தந்தைக்கு நண்பர்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும்?'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி துயரமாக முறுவலித்தாள்.

''ராஜர்! இப்போது நாட்டின் நிலைமை உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் அவள். ''இன்றைக்கு எங்களுடன் இருப்பவர்கள் நாளை எதிரிகளுடன் சேர்ந்து விடுகிறார்கள். தொடர்ச்சியான உறவோடு ஒருவரில்லை, ராஜர்!''

ராஜரும் யோசித்தான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தக் கொரமாண்டல் பிரதேசத்தில் அரச குடும்பங்கள் ஒன்றுக்கொன்று மோதியவாறு இருக்கின்றன. சண்டை ஓயாது நடந்து கொண்டிருக்கிறது. ஜனங்களை யாரும் கவனிக்கவில்லை.

ஜனங்களை மட்டுமின்றி அவனைப் போன்ற ஐரோப்பிய வியாபாரிகளையும் யாரும் பொருட்படுத்தவில்லை.

அவர்களது சுயநலமான நடவடிக்கைகளை யாரும் கட்டுப்படுத்தவும் இல்லை.

"யோசியுங்கள் இளவரசி! நீங்கள் எப்படியும் இங்கே விட்டுப் புறப்பட வேண்டும். எனக்கு பிரான்ஸிஸ் டேயிடம் பயம் இன்னுமிருக்கிறது" என்றான் ராஜா.

சுவர்ணமுகி திகைத்தாள்.

"ஏதாவது ஒரு சீமையின் நாயகரிடம் உங்களைக் கொண்டு சேர்ப்பித்து விடுகிறேன். நீங்கள் யார் என்று தெரிந்தால் நிச்சயம் பாதுகாப்புக் கொடுப்பார்கள்."

இளவரசி முகத்தை மறுப்புக்காக அசைத்தாள். "ராஜா நீங்கள் நினைப்பது போல் நான் இளவரசி என்று எங்கும் பறைசாற்றி விட முடியாது. அதில் நிறைய ஆபத்து. நீங்கள் கூட என்னை இளவரசி என்று வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது. அழைக்கவும் கூடாது."

"அதைப் பூரணமாக உணர்கிறேன்" என்றான் ராஜா.

"இப்போது இருக்கும் நிலையில் எந்தச் சீமை நாயக்கர் எனக்கு உதவுவார் என்று தெரியவில்லை."

"செங்கழுநீர்ப்பட்டு நாயகர்?"

"சந்தேகம்தான்."

"கருங்குழிப்பாலம்?"

"அதையும் சொல்வதற்கில்லை."

"இன்னும் எத்தனையோ நாயகர்கள் இருக்கிறார்களே. காட்டூர், கோலூர், காஞ்சி, வேலூர்!"

"யார் பேரிலும் எனக்கு நம்பிக்கை விழவில்லை."



"வேறு எந்த இடம் வேண்டுமானாலும் சொல்லுங்கள். உங்களைக் கொண்டு விடுகிறேன். உங்கள் பாதுகாப்புத்தான் முக்கியம்."

சுவர்ணமுகி யோசித்தாள்.

"எனக்கு ஒரு வழிதான் தோன்றுகிறது, ராஜா! வேங்கடகிரிக்குப் போய்விடுகிறேன்." என்றாள்.

ராஜா யோசித்துவிட்டு "சரி" என்றான்.

அர்ச்சுன தேவன் மனோவேகத்தில் பறக்க, அவனது பல்லக்குப் படு மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

அருணா ஆற்றின் வடகரை வழியாகக் கடும் வெயிலில் நடக்க, எங்கும் பூமி ஒரு வெய்யில் தகடாக மாறியிருப்பதை உணர்ந்தான்.

கிராமங்களில் மிக சொல்பமானவர்களே தங்கியிருந்தார்கள்.

தங்களது தானியங்கள் எங்கே பறிக்கப்படுமோ என்ற பயத்தில் அவர்கள் வெளியில் தலைகாட்டாமல் இருந்தார்கள்.

அர்ச்சுன தேவனிடம் போதுமான பொன் நாணயங்கள் இருந்தன.

அதனால் மிகையான விலை கொடுத்து எதையும் அவனால் வாங்க முடிந்தது.

வழியில் சில நாழிகைகள் இளைப்பாறிய பிறகு மாலை நெருங்கும்போது அவர்கள் நாகலாபுரம் சேர்ந்தார்கள். ஊர் நிசப்தமாக இருந்தது.

அந்தி ஆகியும் கோவிலில் விளக்கு வைக்கவில்லை.

திருமலாம்பா வீட்டை விசாரித்துப் போகிகள் பல்லக்கை அங்கே கொண்டு போய் இறக்கினார்கள்.

விசாலமான வீடு அது.

மாடங்களும், மரவேலைப்பாடான கதவுகளும் நிறைந்தது.

இரு போகிகள் அவனைத் தூக்கி உள்ளே நடையில் இறக்கினார்கள்.

''உள்ளே யாரு?'' என்று பலமுறை வினவியவாறு அர்ச்சுனன் கைகள் உதவியால் நகர்ந்து நகர்ந்து உள்ளே போனான்.

கூடம் வந்தது.

நட்ட நடுவில் சச்சவுக்க வெளிச்சம். மேலே கூரையிலிருந்து விழுவது.

அந்த மந்தார வெளிச்சத்தில் கண்களால் உற்றுப் பார்க்க அங்கே ஓரத்தில் ஓர் உருவம் இருப்பது தெரிந்தது.

திருமலாம்பாவின் கணவர் ராஜுவா?

''ஐயா!'' என்று அன்ழக்க உருவம் எழுந்தது.

மெலிந்த உருவம்.

நெருங்க நெருங்க அது சிநேக பாவத்தில் வரவில்லை என்று தெரிந்தது.

ஒரு கணம் அந்த பளிச் வெளிச்சத்தைக் கண்டு அர்ச்சுனன் திடுக்கிட்டான்.

பளபளத்த கத்தியோடு ராஜுதான் வந்தான். ''எடு! எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டு அர்ச்சுனனை நோக்கி ஓங்கிக் கத்தியைத் தூக்கினான்.

* * * * *

**The Country is wholly dismantled by draughts. The weavers, washers and dyers etc. abandon their habitations and perish in the fields for want of food.**

**- Rastell**

## 10

திருமலாம்பா வீட்டில் கத்தியை மிரட்டலாகக் காண்பித்து எதிரே வந்தவன் நாராயண ராஜு.

திருமலாம்பாவின் கணவன். துணி வியாபாரம் செய்தவன்.

அர்ச்சுனன் அதை அறிவான். தனது கால்கள் இரண்டும் உபயோகம் இழந்திருக்க,

ஒரு நெருக்கடியான இக்கட்டு அவனை நெருங்கி வருவதாக உணர்ந்தான்.

''எடு பணத்தை'' என்று சீறினான் ராஜு.

அந்தக் குரல் அவன் மாதிரியே ஒலிக்கவில்லை. ஏதோ பைசாசம் அவனுள் புகுந்து ஆட்டுவது போலிருந்தது.

அர்ச்சுனன் வலது இடுப்பில் கை வைத்தான். ஒரு நீள உலோக வாள் சீறி வெளி வந்தது.

ராஜு கத்தியை அச்சுறுத்தலாக ஓச்சி வர, அர்ச்சுனன் தருணம் பார்த்துத் தனது நீண்ட வாளை ஒரே ஒரு முறை வீச்சென்று காற்றில் சிதறி விட,

ராஜுவின் கத்தி கரணம் அடித்து முற்றத்தில் போய் உதிர்ந்தது.

ராஜு அதை எடுக்க ஓடினான்.

"நில்லு! நகர்ந்தால் வாளை எறிந்து உன்னைக் கொல்லுவேன். என் குறி தப்பாது!" என்று அர்ச்சுனன் எச்சரித்தான்.

ராஜு காலைப் பின்னிக் கொண்டு நின்றான்.

முற்றத்தின் நலிந்த வெளிச்சம் அவன் மீது விழ,

ராஜுவுக்குக் கிட்டத்தட்ட ஒரு வேதாள உருவம் வந்திருந்தது. மார்புக் கூடு தெரிய, முகவாய் எலும்பு பிரதானமாய் முன்நோக்கி முந்தியிருக்க, கண்கள் இரண்டும் பாதாள ஆழங்களில் இருந்தன.

நாராயண ராஜுவா இவன்?

"ராஜு! வெட்கமில்லை? வழிப்பறியா செய்யறே?" என்று அர்ச்சுனன் குமுற,

ஏறிட்டுப் பார்த்த ராஜு, "எங்களுக்கு வேறு வழி என்ன வச்சீங்க?" என்று சீறினான்.

"ஏன்; உன் துணி வியாபாரம் என்ன ஆயிற்று?"

"என் வியாபாரமா?" என்று ஏளனமாகக் கேட்டான் ராஜு. "எங்கே அதை நடக்க விட்டீங்க?"

"நாங்கள் என்ன தடுக்கவா செய்தோம்?"

"நெசவாளிகிட்ட கொள்ளை விலைக்கு வெள்ளைக்காரங்க துணி வாங்கிக்கிட்டுப் போனாங்க அதைத் தடுத்தீங்களா? நெசவுக் குடும்பத்தையெல்லாம் அவங்க கோட்டைக்குக் கொண்டு போனாங்க. அதைத் தடுத்தீங்களா? வரி வரின்னு இருக்கிறதையெல்லாம் ராஜாங்கக்காரங்க புடுங்கிட்டுப் போனாங்க. அதைத் தடுத்தீங்களா? நீங்க ஒருத்தனுக்கு ஒருத்தன் சண்டை போட்டுக்கிறதிலே சண்டைப் பணம் கொடுன்னு தலைக்குத் தலை பணம் பறிச்சாங்க. அதைத் தடுத்தீங்களா?"



"பலே ராஜு!" என்றான் அர்ச்சுனன்.

"இவ்வளவு காரியங்களும் நடக்கவில்லை என்பதற்காகத்தான் வழிப்பறி செய்யறியா?"

"வேறு வழி என்ன இருக்கு?"

"ஏன் இல்லை?"

"என்ன இருக்கு சொல்லுங்க! இன்னிக்கு அரிசி விக்கிற விலை தெரியுமா?"

"சொல்லு!"

"அரிசி பணத்துக்கு எட்டு நாழி வித்தது. (1 ரூபாய்க்கு சுமார் 34 நாழி அரிசி.) இப்போ ஒரு பணத்துக்கு அஞ்சு நாழி கிடைக்கறதில்லே! (இப்போ 1 பணத்துக்கு 5 நாழி கூடக் கிடைக்கவில்லை!)"

"அரிசி விலை எட்டு நாழி விற்றது வரை தெரியும். இப்போது இன்னும் குறைந்து விட்டது. பஞ்சம் முதல் காரணம். மூன்று வருஷங்களாக மழை இல்லை. இதைத் தவிர ஒருத்தருக்கொருத்தர் பட்டத்திற்காகப் போடும் பூசல் வேறு. எல்லாம் போட்டு விவசாயியைப் பிடுங்க, வேளாண்மை செத்து விட்டது. விவசாயிகள் ஊரை விட்டு ஓடிவிட்டார்கள்."

ராஜு மேலும் நிற்க முடியாமல் இளைப்புடன் கீழே உட்கார்ந்தான்.

அர்ச்சுனன் அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

மேலே கேட்க முடியவில்லை.

கேட்க நா எழவில்லை.

இது வெறும் பஞ்சம் இல்லை, மகா பஞ்சம்.

"சரி; உன் குடும்பம் என்ன ஆயிற்று?"

''என் குடும்பமா?'' முகத்தை வேதனை கோணலாக்க, ''என் குடும்பம் ஒழிஞ்சு போச்சு. என் பொருள் எல்லாம் வரிக்காரங்க எடுத்துட்டுப் போனாங்க. திருமலாம்பா கர்ப்பிணி. சோறு இல்லாமச் செத்தா. என் மூத்த பையனும் போனான். என் இளைய பையனாவது உயிரோடிருக்கட்டும்னு வித்துட்டேன்.''

''வித்துட்டியா?''

''ஆமாம்; அவன் பசியிலே கத்தற கத்து என்னால பொறுக்க முடியல்லை. என்னோட இருந்தா செத்துத்தான் போவான். எங்கேயாவது இரண்டுவேளை சோறோடு வாழட்டும்னு அடிமையாய் வித்துட்டேன்.''

அர்ச்சுனனுக்கு அடிவயிற்றில் பற்றியது.

''நீ அப்படிச் செய்யலாமா?''

''ஏன் செய்யக் கூடாது? ஊரே செய்யுது. கூட்டம் கூட்டமா அடிமைங்களை ஒலாந்தியங்க கொண்டு போறாங்களே! நீங்களெல்லாம் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கீங்க?''

''சரி! இங்கே சுவர்ணமுகி வந்தாளா சொல்லு!''

ஹஹ்ஹா என்று சிரிப்பு என்கிற பேரில் விக்கினான் அவன். வயிறு என்னமாக எக்கியது. சிரித்தபோது நெஞ்சு வலித்தது போலிருந்தது. மார்பை இறுக அமுக்கிக் கொண்டான்.

''சொல்லு! சுவர்ணமுகி வந்தாளா?''

''வந்தா!''

''எங்கே அவள்?''

''வித்தாச்சு!''



''வித்தியா?'' என்று கூச்சலிட்டுக் கேட்டான் அர்ச்சுனன்.

''ஆமாம். மூணு வராகனுக்கு விற்றேன்.''

''பாபி!''

''பாபியா? நீயா எனக்குச் சோறு போடப் போறே! வித்தேன். இப்ப அரை வயித்துச் சோறு சாப்பிடறேன்.''

''யாருக்கு வித்தே?''

''ஒலாந்தியனுக்கு.''

''அவன் எங்கே போனான்?''

''எனக்கு என்ன தெரியும்?''

அர்ச்சுனனுக்குக் கோபமும் வந்தது இரக்கமும் வந்தது. ராஜு அந்த அரை எலும்புக் கூண்டாக உட்கார்ந்திருப்பது கோரமாக இருந்தது. அவன் பேசிய பேச்சோ அதைவிடக் கோரம்.

தனது பைக்குள் தோண்டி நான்கு தங்கப் பணங்களை எடுத்தான். அவன் முன் கடாசிவிட்டு வெளிப்புறத்தைப் பார்த்து நகர்ந்தான்.

போகிகள் அவனைத் தூக்கி பல்லக்கில் வைத்தார்கள்.

''முதலில் ஊரை விட்டு வெளிப்புறம் போங்கள். ஊரே நாறுகிறது'' என்றான் அவன்.

காலையில் புறப்பட ஒரு பட்டாளமே ஆயத்தமாக இருந்தது.

ட்ரேக் ராஜர் எல்லாவற்றையும் பார்வையிட்டான்.

அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இத்தனை பேரும் அவன் பணம் கொடுத்து வேலை செய்கிறார்களா?

ஐந்து பொதி மாடுகள், இரண்டு குதிரைகள், இரண்டு பல்லக்குகள்!

ஐந்து மாடுகளை நடத்த ஐந்து பேர்,

மாடுகளைக் கவனிக்க இரண்டு வேலையாட்கள்,

குதிரை பராமரிப்பார் இரண்டு பேர்,

இரண்டு பல்லக்குகளைத் தூக்க எட்டுப் பேர், அவர்களுக்கு ஒய்வு கொடுக்க நாலுபேர்.

இந்தியக் காவலாளிகள் நாலு பேர்.

வேலையாட்கள் நாலு பேர்,

சுவர்ணமுகிக்கு பணிப்பெண்கள் இரண்டு பேர்,

ஆக மொத்தம் 31 வேலையாட்கள்!

இந்திய மண்ணில்தான் இவ்வளவு பேர்களும் இவ்வளவு குறைந்த ஊதியத்தில் வேலைக்குக் கிடைப்பார்கள்.

ராஜர் ஒரு விஷயத்தைக் கவனித்திருக்கிறான்.

ஒரு சின்ன இந்தியக் குடும்பம் உண்பதற்கும் உடுத்துவதற்கும் மாதம் எட்டுப் பணம் (சுமார் 2 ரூபாய்) போதுமானதாக இருந்தது.

இரு இந்தியனின் உணவு வகைகளும் உடை வழக்கங்களும் மிக எளிமையாகவே இருந்தன.

ஒரு பணத்தில் (சுமார் கால் ரூபாய்) ஒரு இந்தியனுக்கு 16 லிருந்து 20 வேளை உணவு கிடைத்து விடுகிறது.

இதனால் இவ்வளவு பெரிய படையை அவன் அமர்த்திக் கொண்டு பிரயாணம் செய்ய முடிகிறது.



நான் ஒரு இந்திய ராஜா போல் போவதை என் பெற்றோர்கள் பார்க்க வேண்டும். அல்லது எஸ்மரல்டாவாவது பார்க்க வேண்டும்' என்று எண்ணினான் ராஜர்.

சுவர்ணமுகி பல்லக்கில் ஏறிக் கொண்டதும் பிரயாணம் தொடங்கியது.

ஸாந்தோமே வழியாக அந்தக் கோஷ்டி போகும்போது அந்தக் கூரை வேய்ந்த சர்ச்சையும், அதன் மணிக்கூண்டையும் சுவர்ணமுகிக்குக் காண்பித்தான் ராஜர்.

ஏசுபிரானின் நேரடிச் சீடர் புனித தாமஸின் கல்லறை அங்குதான் இருக்கிறது என்று அவன் கூறியபோது சுவர்ணமுகி அதை அதிகம் புரிந்து கொள்ளவில்லை.

கிழக்கே கொள்ளை மல்லிக் கூடைகளை வரிசையாகக் கவிழ்த்துவது போல அலைவரிசை சிரிப்பதை அவள் பெருமூச்சோடு பார்த்தாள்.

ஊரில் பணக்காரர்களின் வீடுகள் ஐரோப்பியக் கட்டடக் கலையின் சின்னமாகத் தோற்றம் தந்தன.

வீடுகளின் சாளரங்களும் முகப்புகளும் வெகு கம்பீரமாக நின்று ஒரு வியப்பான காட்சியை அவள் பார்வையில் வரைந்தன.

வீதிகள் வெகு சுத்தமாகவும் சப்தமில்லாமலும் இருந்தன.

சில வீடுகளிலிருந்து வரும் ஐரோப்பிய கீதம் விசித்திர ஒலியாக அவள் காதில் விழுந்தது.

ஊரின் மண்கோட்டை எல்லையைக் கடந்த பிறகு, ராஜர் அவள் அருகே வந்தான்.

"இந்த நகரின் வழியாக உங்களை நான் அழைத்துச் சென்றதற்குக் காரணம் உண்டு. இந்த நகரின் செழிப்பை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பூவிருந்தவல்லி தாண்டிய பிறகு உங்கள் நாட்டுப் பஞ்சத்தை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்" என்றான்.

பிரயாணக் கோஷ்டி மதிய நேரத்தை அணுகும்போது பூவிருந்தவல்லியைக் கடந்தது.

ஆவலுடன் சுவர்ணமுகி பல்லக்குச் சீலையைத் திறந்து பார்க்க. . .

ஊரின் வீதிகள் அநேகமாக சூன்யமாக இருந்தன.

ஜனங்களைப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது.

பாதிப்பேர் ஊரை விட்டுப் போய்விட்டதாகவும், பாதிப் பேர் மறைந்து வாழுவதாகவும் ராஜர் தெரிவித்தான்.

"நான் வெள்ளைக்காரன் போகிறேன், பக்கத்தில் வந்தால் சுட்டுவிடுவேன் என்று பயத்தில்தான் உங்கள் ஜனங்கள் நம்மை நெருங்காமல் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்தப் பொதி மாடுகளைச் சூறையாடி விடுவார்கள்" என்றான் ராஜர்.

ஊரைத்தாண்டி பத்திரமாகப் போய்விட்டு, அந்தக் கல்மண்டபத்தை நெருங்கும்போது ராஜர், சுவர்ண முகியிடம் "வாருங்கள்" என்றான்.

மண்டப முகப்பில் பாதி எலும்புக் கூடாக யாரோ படுத்திருந்தார்கள்.



அந்த எலும்புக் கூட்டின் கை மெல்லியதாக அவர்களை நோக்கி ஆடுவதைப் பார்த்த ராஜர் தனது கோஷ்டியை நிற்கச் சொன்னான்.

சுவர்ணமுகி இறங்கி ராஜருடன் மண்டபப் படிகளில் ஏறிப் பார்க்க,

அங்கே சற்றே உள்ளே தள்ளி ஓர் இளம் பெண்மணி ஒரே ஒரு கந்தல் புடவையுடன் படுத்திருந்தாள்.

அவள் முகம் கோரமாகச் சுருங்கியிருந்தது.

சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகியிருக்கும். தன் அருகில் வரும் காக்கைகளையும், சற்று எட்டத்தில் கூரிய அலகுகளுடன் தருணம் பார்த்து உட்கார்ந்திருக்கும் கழுகுகளையும் அவள் விரட்ட முடியாமல் படுத்திருந்தாள்.

அவளுக்குச் சோறு கொடுக்க முயன்றபோது, அவள் தன் நலிந்த கையை எடுத்து வேறுபுறம் காட்டினாள்.

அங்கே போய்ப் பார்க்க, ஒரு ஓலையினால் மூடிய மறைப்புக்குள் இரண்டு சிறுமிகள் குற்றுயிராக இருந்த நிலையில் பார்த்தார்கள்.

"கழுகுக்குப் பயந்து மூடி வச்சிருக்கா!" என்று ராஜர் சொல்ல,

சுவர்ணமுகியின் கண்களிலிருந்து புலபுலவெனக் கண்ணீர் உதிர்ந்தது.

"ராஜர், ராஜர்! நான் பிரயாணம் செய்யவில்லை. இவர்களுக்கெல்லாம் உதவி செய்ய விரும்புகிறேன். நீங்கள் போகலாம்" என்று கூறிச் சிறுமிகளை எடுக்கப் போனாள் அவள்.

* * * * *

The method of Travelling in this country is in a kind of portable bed called palanquin that is suspended on a bamboo and carried on men's shoulders.

- Major John Corneille

# 11

மண்டபத்தில் பசியால் சுருங்கிக் கிடக்கும் இரு சிறுமிகளைப் பார்த்ததும் சுவர்ணமுகியின் மனம் வெதும்பியது. இரக்கமுடன் அவள் கீழே தழைய,

''தொடாதீர்கள்'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி ஏன் என்பது போல் திரும்பினாள்.

''அவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி திடுக்கிட்டுக் கீழே நோக்கினாள்.

ராஜர் சொன்னது தவறு அல்ல. சிறுமியின் நெஞ்சுக் குழியில் தக் தக் என்று அடித்துக் கொண்டிருந்த நாடி மெல்ல மெல்ல நொண்டி கடைசியில் அவர்கள் கண் முன்னாலேயே பக்கென்று அணைந்தது.

சீக்கிரத்தில் இரண்டாவது சிறுமியும் முன்னவளைப் பின்பற்றினாள்.

சுவர்ணமுகி முகத்தை மூடி மேலே நிமிர்ந்தாள். கை இடுக்குகள் வழியே கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

''இளவரசி'' என்றான் ராஜர் தழுதழுப்பான குரலில்.

சுவர்ணமுகி விம்மலுடன் முகத்தைத் திறந்தாள். முகம் முழுவதும் நீரால் பூசியிருந்தது.



''என்னால் தாங்க முடியவில்லா ராஜர்!'' என்று கூறிய அவள் பரபரப்பாக அந்தத் தாய்ப்பெண்மணியின் முன் மண்டியிட்டாள்.

அந்த எலும்புக்கூடான உடம்புக்கு முகத்தைச் சுளிக்காது பணிவிடை செய்து, உடம்பைச் சுத்தப்படுத்தி, புதித் துணி கொணரச் செய்து அதை அவள் மீது போர்த்திப் பழையவைகளைக் களைந்து, கடைசியில் எலுமிச்சையும், சர்க்கரையும் கலந்த சாறை அவள் வாயில் ஊட்டி மெல்லத் திருப்தி காண முயன்றாள் சுவர்ணமுகி.

ராஜர் கருணையுடனும் அவநம்பிக்கையுடனும் அந்தக் காட்சியைப் பார்த்தான்.

வெறும் மண்டை ஓடாகத் தெரிந்த அந்தப் பெண்மணியின் முகத்தில் கூட ஒரு நன்றித்தனமுள்ள புன்னகையை அவன் பார்க்க நேர்ந்தது.

''போதும், இளவரசி! இனிமேல் உங்கள் வழக்கப்படி பிரார்த்தனை செய்ய முடியுமானால் செய்யுங்கள்!'' என்றான்.

''ஏன்?'' என்று கேட்டாள் சுவர்ணமுகி.

''இவளும் அதிக நேரம் வாழமாட்டாள். கண் விரிகிறது பாருங்கள்!'' என்றான்.

சுவர்ணமுகியும் கைகூப்பிக் கண் மூடி இதய சுத்தியாய் வேங்கட மலையானை தோத்திரம் செய்ய,

அவர்கள் முன்னால் இருந்த கூண்டு வெறும் கட்டையாகிக் கொண்டிருந்தது.

சுவர்ணமுகி பின்னர் கண்களைத் திறந்து சிறிது நேரம் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்க,

அவள் கண்களையும், வாயையும் அகலமாக விரித்து மரணத்தின் கோரத்தை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அவள் விஷயம் முடிந்ததும், சுவர்ணமுகி முன்னிலும் அதிகமாகச் சோகித்து, கீழே நைந்து போய் அமர்ந்தாள். புடவைத் தலைப்பால் முகத்தை மூட, சீக்கிரம் துணி முழுதும் ஈரமாகி விட்டது.

வெகுநேரம் பாதிப் புலம்பலாக அவள் தேம்பினாள். ராஜர் அவளை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு அவள் தெளிந்து மேலே நிமிர்ந்தபோது, ''இளவரசி'' என்றான். ''இந்தியர்களின் துயரங்களுக்கு மட்டும் கண்ணீர் வடிப்பதென்றால் உலகத்தின் கண்ணீர் எல்லாம் பற்றாது.''

சுவர்ணமுகி திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். கண்களில் ஈரம் மின்ன, ''ராஜர், இந்தத் துயரங்களுக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

''பஞ்சம்!''

''அதை நீக்க முடியாதா?'' என்றாள் தாபத்துடன்.

''வானம் பொழிய வேண்டும். அது கடவுளின் செய்கை என்று வைத்துவிடுவோம். இங்கே மனிதர்கள் கருணை பொழிய வேண்டும்.''

சுவர்ணமுகி மெல்ல எழுந்தாள்.

''ராஜர்! எங்களிடம் கருணை இல்லாயா?'' என்று கேட்டாள்.

''நிறைய இருக்கிறது இளவரசு! தனித்தனி ஆட்களிடம் தனித் தனியாகத் தேங்கி இருக்கிறது. எல்லாமாகச் சேர்ந்து பிரவாகமாகப் பாய்ந்து செல்ல வழியில்லை.''

''ஏன் இல்லை?''



''உங்கள் ராஜாங்க முறை.''

''அதில் என்ன குறை?''

''உங்கள் மனிதர்கள் மிகவும் சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள். பட்டம் பதவிக்கு ரொம்பப் போட்டி போடுகிறார்கள். வீணாக ரத்தத்தை எங்கும் வழிய விடுகிறார்கள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக நாட்டில் அமைதியே இல்லை தெரியுமா?''

சுவர்ணமுகி தலை குனிந்தாள்.

ராஜர் சொன்னது அநேகமாகச் சரியாக இருந்தது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவள் தந்தை ஸ்ரீரங்கன் கொல்லப்பட்டதிலிருந்து ஓயாத சண்டை, தீராத பகை.

அவளால் மேலே பேச முடியவில்லை.

''புறப்படுங்கள் இளவரசி!'' என்றான் ராஜர்.

''இவர்களை அடக்கம் செய்ய வேண்டாமா?'' என்றாள் சுவர்ணமுகி.

''நாம் பார்க்கும் உடல்களை எல்லாம் அடக்கம் செய்ய வேண்டுமானால் வேங்கிடகிரிக்கு இந்த யுகத்தில் போய்ச் சேர மாட்டோம்.'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி திடுக்கிட்டாள்.

''ஆமாம் இளவரசி! வழியெல்லாம் உடல்களைப் பார்க்கப் போகிறீர்கள்! வயலிலும் சாலையிலும்! நூற்றுக் கணக்கானவர்! எண்ண முடியாது!'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி பல்லக்குப் பக்கம் வந்தாள். ஏறச் சென்றவள் சிறிது தயங்கினாள். தூரத்தில் மேகம் போல் ஒரு கறுப்பு மச்சம் தெரிந்தது. சிறிது நேரத்தில் அது

இறக்கை முளைத்த கழுகுகளாக மாறுவது தெரிந்தது. கூட்டம் கூட்டமாக அவை வெவ்வேறு பிரதேசங்களில் நிழல் துண்டுகளாக இறங்கின.

ராஜுரும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு அவள் பக்கத்தில் வந்து நின்றான்.

''எனக்கு ஒர் ஆசை இளவரசி!'' என்றான் உற்சாகத் தொனியில்.

''என்ன?'' என்றாள் சுவர்ணமுகி.

''நீங்கள் இந்த நாட்டுக்கு ராணி ஆக வேண்டும். நான் உங்களுக்குத் தளபதி ஆக வேண்டும். இந்த நாட்டைத் திருத்திப் பெரிய சுபிட்ச நாடாக்க வேண்டும்'' என்றான் மகிழ்ச்சி பீறிட.

சுவர்ணமுகி முகத்தில் மெல்லிய முறுவல் ஒடியது.

கண்களுக்குள் சின்னக் கனவு தோன்ற உடனே அழிந்தது.

அவனுக்குப் பதில் சொல்லாமல் பல்லக்கில் ஏறினாள். திரைகளை இறுக்க மூடினாள்.

யாத்திரை மீண்டும் புறப்பட்டது.

நகரி செல்லும் மார்க்கத்தில் உள்ள தரங்கிணிக் கோட்டைக்குள் அந்த லட்சுமி பூபாலன் மாளிகையில் நரசய்ய நாயகர் கொலுவீற்றிருந்தார்.

இரண்டு தேவதாசிகள் ஒரு அழகான தெலுங்குப் பாடலுக்கு அபிநயம் ஆடி, அவரைத் தாழ்வாக வணங்கிச் சென்றார்கள்.

ஒரு ஜரிகைத் தலைப்பாகைப் புலவர் விசேஷமாகக் கைகளையும் தலையையும் ஆட்டி, ஒரு தெலுங்குப் பத்தியம் பாடிவிட்டுச் சென்றார்.



அப்பால் ராயசமும் கணக்குப் பிள்ளையும் நிலவரங்களைக் கூறிவிட்டுப் போக, நரசய்யன் தமது மாளிகைக்குள் போவதற்கு எழுந்தான்.

''மகாராஜா சமூகத்தில் விண்ணப்பம்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினார்.

ரத்னாவளி நிறைய வெற்றிலை போட்ட வாயுடன் உடம்பில் ஜொலிப்பான பட்டுப்புடவை மின்ன, தூலமான சரீரத்துடன் நின்றாள். விரல்களில் கணையாழி வைரங்கள் மின்னின. கழுத்தில் வடம் வடங்களாகத் தங்கச் சங்கிலிகளின் நெளிவுகள், கை முழுவதும் கல் வைத்த பொன் வளையல்கள், இரண்டு புஜங்களிலும் நாகொத்து, இடுப்பில் பூமியைப் பிரதட்சிணம் பண்ணுவது போல் நீலங்கள் பதித்த ஒட்டியாணம். நெற்றியில் சுட்டி, மூக்கில் நத்து, காலில் தண்டை கழுத்தில் அட்டிகை.

எல்லாமாகச் சேர்ந்து ஒரு ஆபரணக் குவியலுக்குள் அவள் இருந்தாள். அந்தப் பொன் அடர்த்திகளுக்குள் அவள் தேகத்தைத் தேடி எடுப்பதே கடினமாக இருந்தது.

நரசய்யன் மெல்ல நகைத்தார். நரை மீசை அவருக்கு அழகு.

''என்ன ரத்தினாவளி! எங்கே போயிருந்தாய்? உன்னைப் பார்த்து என் சந்தோஷத்தைத் தெரிவிக்க நினைத்தேனே!'' என்றான் நரசய்யன்.

அவர் முன்னால் நடந்து பெரிய தாமரை வடிவான சாளரத்தை நோக்கிச் செல்ல பின்னால் ரத்னாவளி நர்த்தன நடையில் சென்றாள்.

ஊரில் உள்ள பிரதான தேவதாசி அவள். அவளைப் பார்க்கும்போது ஒரு நட்சத்திரக் கூட்டம் நகர்ந்து போவது போல் இருந்தது.

நரசய்யன் அங்கே சாளரப் பக்கத்து திண்டு ஒன்றில் அமர,

ரத்தினாவளி கைகளைக் கோத்து, அவர் முன்னால் விநயத்தின் பிரதிபிம்பமாக நின்றாள்.

''ஜெயித்து விட்டோம் ரத்தினா! உன் போன்றோர் உதவியாலே!'' என்றான் நரசய்யன்.

''சுவாமி! இந்த அடிமை உதவி செய்தாள் என்று சொல்ல அடுக்குமோ? தாங்கள் தந்த பிச்சையில் பிழைப்பவள் அடியாள் ஆயிற்றே! ஆக, தாங்கள் கொடுத்த சொத்தைத்தானே தாங்களே செலவழிக்கிறீர்கள்!'' என்று சாதுரியமாகப் பேசினாள் ரத்தினாவளி.

''அதில்லை ரத்தினா! நீ கொடுத்த மூவாயிரம் படை மிகவும் உதவிற்று. ஒரு நேரத்தில் அது இல்லாவிட்டால் நிச்சயம் நாங்கள் தோத்திருப்போம். மொத்தம் 198 பேர் அதில் உயிரை இழந்தார்கள். தெரியுமோ?'' என்றார் நரசய்யா.

''இந்த அடிமை அறிவேன். தாங்கள் சொன்னது தவிர இருபத்தோரு குதிரைகளும் போய்விட்டன. எல்லாவற்றையும் சீக்கிரம் சரிக்கட்டி விடுவேன்'' என்றாள் ரத்னாவளி.

தேவதாசிகள் அந்த நாளில் செல்வாக்கு வாய்ந்தவர்கள். அவர்கள் வருமானங்களுக்கு எந்த விதத் தடைகளும் இல்லை. வரி போன்ற சுமைகளும் இல்லை.

அவர்களை அரசர்கள் ஒரு முக்கியஸ்தர் போலவே நடத்தினார்கள். தேவதாசிகள் பலருக்கு ஏராளமாகச் சொத்துக்கள் உரிமையாக இருந்தன. மான்யங்களும் ஏராளமாக இருந்தன. ஒரு சீமைக்கு அதிபதி போல்



வாழ்ந்த அவர்கள் தங்களிடம் சொந்தப் படை ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்று ராஜாங்கம் எதிர்பார்த்தது. இந்தப் படைகளுக்கான செலவு முழுவதையும் குறிப்பிட்ட தேவதாசிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அரசர் யுத்தத்துக்குப் போகும்போதெல்லாம் இந்தப் படைகளை அவர்கள் அரசருக்குக் கொடுத்து உதவ வேண்டும்.

இங்கே ரத்தினாவளி தனது மூவாயிரம் படையை நரசய்யாவுக்குக் கொடுத்து உதவி இருந்தாள்.

''நல்லது ரத்தினாவளி! உனக்குத் தக்க சமயத்தில் நான் கைம்மாறு செய்வேன். இப்போது ஏதாவது விஷயம் உண்டா?'' என்றார் நரசய்யா.

''இருக்கட்டும் இருக்கட்டும். சுவாமியோட தயவு இருந்தால் போதும். இப்போ அடியாள் சுவாமிக்கு இன்னொரு மகா அதிர்ஷ்டத்தை அழைத்து வந்திருக்கிறாள்'' என்று கூறினாள்.

''என்னது?'' என்றார் நரசய்யா.

''பெரிய அதிர்ஷ்டம். இதோ வரவழைக்கிறேன்'' என்று கூறி, கூடத்தை நோக்கிக் கைதட்டினாள் அவள்.

உள்ளே மிடுக்காக நுழைந்து வந்தது யார்?

நரசய்யா ஒன்றும் புரியாமல் இருக்க,

ரத்தினாவளி முறுவல் பிரகாரங்களை நாலா திசைகளிலும் ஓடவிட்டுக் கொண்டிருந்தாள்.

* * * * *

**The Minds of Devadasis are developed by the best education and showed a marvellous aptitude for understanding the truths of religion.**

**- VICO (1632 A D)**

# 12

உள்ளே வந்தவன் ஒரு மிடுக்கான இளைஞன். கண்களில் சோர்வு தேங்க, எங்கிருந்தோ வந்திருந்தான் அவசரமாக.

''இவர்தான் தோதாத்ரி நாதன். தோதான்னு சொல்லுவாங்க!'' என்று அறிமுகம் செய்தாள் ரத்தினாவளி.

அந்த அறிமுகம் ஒரு மாய வேலை செய்தது. நரசய்யா தமது இருக்கையை விட்டுப் படக்கென்று எழுந்தார், இளைஞனின் கையை இறுகப் பற்றி அவனை மகிழ்ச்சியுடன் ஓர் ஆசனத்தில் உட்கார வைத்தார்.

''தோதா! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்ததில்லை. நீ எங்களுக்குச் செய்த உதவி மகத்தானது. அதற்காக நாங்கள் நிச்சயம் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

தோதா உச்சி குளிர்ந்திருந்தான். ரத்னாவளியை நன்றியோடு பார்த்தான்.

''பிரதானி! ஒரு முக்கியமான செய்தி.''

''சொல்லு!''



''ராஜா ஸ்ரீரங்கரைச் சிறையில் அடைத்து அவரையும் அவர் குடும்பத்தையும் கொன்றது நினைவிருக்கிறதா?''

''ஆமாம்.''

''அப்போது அவரது ஒரு மகன் தப்பித்து விட்டது நினைவிருக்கிறதா?''

''இருக்கிறது.''

''அவரது ஒரு மகளும் தப்பித்துவிட்டாள் என்று இப்போது தெரிய வந்திருக்கிறது.''

''மகள்?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் நரசய்யா. ''ஸ்ரீரங்கனின் மகளைத்தான் கொன்று விட்டார்களே!''

''கொல்லவில்லை. சிறைக் காவலாளி அவளைக் காப்பாற்றியிருக்கிறான். அவளுக்காகத் தன் சொந்த மகளையே காவு கொடுத்தானாம்!''

''பலே!'' என்று பல்லைக் கடித்தார்.

சிறிது நேரம் உள்ளே கொதித்து விட்டு, ''உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்றார் அவர்.

''நான் உளவாளியாகப் போனேன்.''

''யார் அனுப்பியது உன்னை?''

''திம்மராஜா!''

''ஓ!'' என்று சொல்லி மனத்துக்குள் எத்தனையோ எண்ணங்களை அசைபோட்டார்.

''சரி. விஷயத்தைச் சொல், அந்தப் பெண் யார், எங்கே இருக்கிறாள்?''

''அவள் பெயர் சுவர்ணமுகி. அவளை ரங்கப்பாதான் தன் மகள் போல் வளர்த்து வந்தார்.''

''ரங்கப்பரா!'' என்று ஒரு ஏளன நகைப்புக் கொடுத்தார் நரசய்யா. ''அவரது குடும்பத்தைத்தான் நான் நிர்மூலமாக்கி விட்டேனே!''

''எல்லோரையுமா?'' என்று ஆர்வமுடன் தோதா கேட்டான்.

நரசய்யா சிரிப்பைப் பக்கென்று நிறுத்தினார். ''ரங்கப்பனுக்கு எத்தனை மகள்கள்?''

''இரண்டு மகள்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் ஒருத்தி உண்மையில் ஸ்ரீரங்கரின் மகள்! சுவர்ணமுகி! அவளது வரலாற்றை வெளியே தெரியாமல் வளர்க்கிறார்கள்.''

''தோதா! ஒரு விஷயம்! ரங்கப்பர் வீட்டில் நான் அவர் மனைவி, ஒரு மகள், ஒரு மகன் மூவரையும் கொலை செய்தேன். இரண்டாவது மகள் உண்டு என்று கேள்விப்பட்டேன். அவள் அப்போது வீட்டில் இல்லை. அவள் வரும்வரை காத்திருந்தேன். இருட்டும் நேரத்தில் வந்தாள். . .''

''அவளைக் கொன்று விட்டீர்களா?''

''என் துரதிர்ஷ்டம் அதைத்தான் செய்யவில்லை. உள்ளே அந்த விஜயநகர பொக்கிஷத்தை அவளோடு தேடினேன். ஒரு இடத்தில் நான் இடறி விழப் பார்த்து அவள் தப்பி ஓடிவிட்டாள்.''

''எங்கே ஓடினாள்?''

''பின்புறத்தில், அருணா ஆற்றுப் பக்கம்! நான் தேடு தேடு என்று தேடினேன். கிடைக்கவில்லை.''

தோதா சோர்ந்து போனான். அவன் கண்களில் அதுவரை இருந்த பொறிகள் எல்லாம் அவிந்து விட்டன.



திடீரென்று ஒரு விளக்கு கூம்பியது போலிருந்தது.

''பெரிய துரதிர்ஷ்டம்!'' என்று சுருதி இறங்கிச் சொன்னான் தோதா! ''பிரதானி அவர்களே! உடனே இப்போது அவளைத் தேட வேண்டும். அவளை விட்டு வைத்தால் திம்மராஜாவுக்கு ஆபத்து. நம் எல்லோருக்கும் ஆபத்து. தவிர இன்னொரு முக்கிய விஷயம்.''

''சொல்லு!''

''அந்தப் பொண்ணுக்கு விஜயநகரப் பொக்கிஷம் இருக்கும் இடம் தெரியும்.''

''அப்படியா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டார் நரசய்யா.

''ஆமாம்! அதனால்தான் அவளை அவசரமுடன் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன். திம்மராஜாவைக் கூடப் பார்க்க எனக்கு நேரமில்லை. தங்களிடம் சொல்லிவிட்டு உடனே ஸாந்தோமே போகப் போகிறேன்.''

''அங்கே ஏன் போகிறாய்?''

''சுவர்ணமுகியை ஒரு போர்த்துக்கீசிய வியாபாரியுடன் பார்த்ததாக நாகலாபுரத்தில் ஒரு தறிக்காரர் கூறினார்.''

''அவருக்குச் சுவர்ணமுகியைத் தெரியுமா?''

''சுவர்ணமுகி என்று தெரியாது. ரங்கப்பரின் மகள் என்று தெரியும். அவள் நாகலாபுரத்தில் நாராயண ராஜு என்பவர் வீட்டுக்கு அடிக்கடி வருவது வழக்கமாம். அந்தத் தறிக்காரர் பார்த்திருக்கிறார். அவர் கொடுத்த சேதி பேரில் தெற்கே போகிறேன்!''

''நல்லது! உடனே அவளைக் கண்டுபிடி. கொன்றுவிடாதே! பின்னால் நம் காரியங்களுக்கு அவள் நிறையத் தேவைப்படுவாள்.''

''உத்தரவு பிரபு!''

''உனக்கு ஏதாவது உதவி வேண்டுமா?''

''குதிரைகளும், சில வீரர்களும் தேவை.''

''நல்லது நான் அனுப்பி வைக்கிறேன். எப்படியாவது அவளை மீட்டு வந்துவிடு. அவளை வைத்துப் பெரிய வேலைகளில் இறங்குவோம்'' என்று சொல்லி, தமது பொக்கிஷக்காரரை அழைக்க ஆள் அனுப்பினார்.

சுவர்ணமுகி வழியில் எத்தனை காட்சிகளைப் பார்த்து விட்டாள்?

எத்தனை கோரங்களை மனத்தினுள் சகித்து விட்டாள்?

வெளியே உலகைப் பார்த்தால் மக்கள் படும் அவஸ்தை எவ்வளவு தெரிகிறது!

அம்மம்மா! என்ன கொடுமை! என்ன பஞ்சம்!

வயல்களிலும், வெளிகளிலும் தோப்புக்களிலும் வீடுகளிலும் மனித உடல்கள்.

இளைத்துத் துரும்பாகப் போன உடல்கள்! சதை எதுவும் தெரியாமல் எலும்புப் பின்னலாக இருந்த உடல்கள். வயிறு எக்கிப் பின்புறத்துடன் ஒட்டிய உடல்கள்! நா வெளி நீட்டிய உடல்கள்! கழுகுகள் கொத்திய உடல்கள்! பாதி இறந்து கொண்டிருக்கும் உடல்கள். பாதியும் பிணமாக நடக்கும் உடல்கள்.



கிராமங்கள் நிர்மூலமாகக் கிடந்தன. ஜனங்கள் மறைந்து போன இடம் தெரியவில்லை. வீடுகள் ஜீவனற்ற கூடுகளாக இருந்தன. பசுக்களோ, மாடுகளோ வேறு பிராணிகளோ தென்படவில்லை. வயல்களில் தீ பாய்ந்தது. பூமி கிளை கிளைகளாக வெடித்து நெடுகிலும் பின்னமிட்டிருந்தது.

ஆகாயத்தைப் பார்த்தால் வெறும் ஈயம் உருக்காக ஜொலித்தது.

காற்றில் பிண வாடை வீசியது. பூமி எங்கும் ஆவிகள் பறக்க, அசப்பில் அவை வேதாள ஆவிகளாகத் தோன்றின.

சுவர்ணமுகியின் கோஷ்டி மிக மெதுவாகவே செல்ல வேண்டி வந்தது.

போதுமான தண்ணீர் எங்கும் கிடைக்கவில்லை. ராஜர் இதற்காகத் தண்ணீர் துருத்திகளுக்கு ஏற்பாடு செய்திருந்தான். எங்கேயாவது துர்லபமாகத் தண்ணீர் கிடைத்தால் ராஜர் அதை உடனே உபயோகப்படுத்தவில்லை. தான் கொண்டு போயிருந்த கோழிக்கு சிறிது கொடுத்து அதில் விஷம் ஏதும் இல்லை என்று தெரிந்த பிறகே அதை உபயோகத்துக்கு எடுத்துக் கொண்டான்.

போகிகள் மிகவும் தள்ளாடி நடந்தார்கள்.

பூமியில் பசுமை இல்லாவிட்டால் அது அவர்கள் கண்களையும் சுவாசத்தையும் பாதித்தது. ராஜர் இதை அறிந்து கொண்டு காலையும் மாலையும் மட்டுமே பிரயாணத்தை நடத்துவதில் ஈடுபட்டான். மற்ற நேரங்களில் தனது கோஷ்டியை நிழல்களில் இளைப்பாற வைத்தான்.

இரண்டாம் நாள் இரவு.

பூமி திடீரென மௌனமாகி விட்டது போல் அந்தி சூழ்ந்து விட்டது.

அவர்கள் ஒரு பெரிய காரைச் சத்திரத்தில் தங்கியிருந்தார்கள்.

ராஜர் ஒரு விளக்குடன் உள்ளே ஒவ்வொரு பகுதியையும் சுற்றி வந்தான்.

விஷ ஜந்துக்கள் ஏதாவது இருக்குமா என்று பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கப் பார்க்கச் சுவர்ணமுகிக்கு ஆச்சரியமாக இருந்தது.

இவ்வளவு பொறுப்பாக ஒரு யாத்திரையை நடத்தி, இவ்வளவு கவனமாக அவளை வெங்கடகிரிக்கு அழைத்துச் செல்கிறானே!

இந்த வெள்ளைக்காரர்களை வெறும் கேவலமாக நினைத்தோமே. இவர்கள் என்ன உன்னதமாக நடந்து கொள்கிறார்கள்!

ராஜர் அதோடு நிற்கவில்லை. சுற்று வட்டாரங்களையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே வந்தான்.

சத்திரத்தில் யாராவது சமையல் பண்ணியே ஆண்டுகள் ஆகியிருக்கும் போல இருந்தது. மெல்ல இப்போது இரவுச் சமையலில் சோற்று நெடி ஆரோக்கியமாக உள்ளே பரவியது.

ராஜர் உள்ளே வந்ததும், "நாளைக் காலையில் கிழக்குத் தொடர் மலையை நெருங்கி விடுவோம். உஷ்ணம் தணிந்து விடும். விறகுக்குப் பஞ்சம் இருக்காது" என்றான்.



கிழக்குத் தொடர் என்ற வார்த்தை அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "அது என்ன கிழக்குத் தொடர்?" என்றாள்.

ராஜர் தனது கித்தான் பையிலிருந்து இரண்டு வரை படச்சுருளை உருவினான். கீழே இந்தியத் துணைக் கண்டத்தைப் பரப்பினான். விளக்கைக் கையில் ஏந்த, அந்த குறுக்கு நெடுக்குக் கோடுகள் உள்ள வரைபடம் அவளுக்கு விநோதமாகத் தோன்றியது.

"இதைப் பார்த்தீங்களா? இதுதான் கிழக்குத் தொடர் மலை. நாங்கள் கொடுத்த பெயர். இதோ இது வங்காள விரிகுடாக் கடல். இது வேங்கடகிரி. இது திருப்பதி. இது இப்போ நாம் இருக்கும் இடம்" என்று சொல்லிக் கொண்டே போக சுவர்ணமுகியின் கண்கள் விரிந்து கொண்டே போயின.

இடை இடையே சந்தேகத்துக்குச் சில கேள்விகள் கேட்டாள். ராஜர் விவரங்களை அழகாகக் கூறினான்.

பிறகு ராஜர் உலகப் படத்தை எடுத்து விரித்தான்.

தான் இருக்கும் இங்கிலாந்தைக் காட்டினான். "இங்கே கப்பல் ஏறி இப்படிச் சுற்றி இங்கே வந்தேன்" என்று ஆப்பிரிக்கா முழுவதையும் சுற்றிக் காண்பித்தான் அவன்.

"அம்மா! அவ்வளவு தூரமா? எத்தனை நாள் பிரயாணம்?"

"ஏழு மாதம்! கப்பல்லே!"

"பயமா இல்லையா?"

"பயந்தான். நிரந்தரப் பயம். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ தெரியாது. புயல் சூறாவளி, மழை எதுவும் வந்து தாக்கும். கப்பல் சின்னாபின்னமாயிடும்."

''ஓ! அப்போ என்ன செய்வீங்க?''

''இறக்க வேண்டியதுதான். நானே நாகப்பட்டினம் புயல்லே தப்பிச்சவன். அதுமட்டுமில்லை. நோய் நொடியிலே நூத்துக்கு இருபது பேர் கப்பல்லே செத்துடுவாங்க.''

''என்ன நோய்?''

''பயங்கரம். 'ஸ்கர்வி'னு நோய். பல் தானாக உதிரும். உடம்பு இற்றுப் போயிடும்.''

சொல்லச் சொல்ல சுவர்ணமுகிக்குப் பலவிதத் தோற்றங்கள் மனத்தில் வந்தன. உடம்பில் சிலிர்ப்பு ஏற் பட்டது.

''ஆமா, இப்படிக் கஷ்டப்பட்டு ஏன் வருகிறீர்கள்?''

''வியாபாரம்''

''என்ன வியாபாரம்?''

''முதல்லே உங்க தேசத்துக்கு நாங்கள் வந்ததற்குக் காரணம். மிளகு, கிராம்பு, ஏலக்காய் வாங்கிக்கிட்டுப் போகத்தான்.''

''அதுக்காகவா வந்தீங்க! உங்க ஊரிலேயே அது கிடையாதா?''

''கிடையாது. குளிர் காலத்திலே எதுவும் கிடைக்காததனால மாமிசத்தைப் பாடம் பண்ணி வச்சிருப்போம். அவை வாயிலே வைக்கச் சகிக்காது. நாற்றம் வேறே! இப்போத்தான் உங்கள் மிளகு, ஏலக்காய்னோட அருமை எங்களுக்குத் தெரிந்தது. மிளகைப் பொடி பண்ணித் தூவி ஏலக்காய் மாதிரி வாசனைக் காய்களைத் தூவி விட்டுட்டா மாமிசத்தை எங்களாலே ஓரளவு புசிக்க முடிஞ்சுது. அதனாலே இந்த வாசனைச் சாமான்களுக்கு ரொம்பக் கிராக்கி.

முதல்லே பணக்காரங்கதான் இதை உபயோகிச்சாங்க!

ஆனால் ஏழைகளுக்கும் வேணும் என்கிற எண்ணத்திலே வியாபாரிங்க முனைஞ்சு பெருவாரியா உங்க நாட்டிலேர்ந்து இதைக் கொண்டு வர விரும்பினாங்க.

''அதனாலே ஏற்பட்ட போட்டாபோட்டியிலேதான் நானும் உங்க ஊர் வந்திருக்கேன்'' என்றான்.

''இங்கிருந்து இதுங்களை வாங்கிப்போய் உங்க ஊர்ல கொள்ளை விலைக்கு விற்கிறீங்களா?''

''ஆமா!''

''அப்புறம் துணி வேறே இங்கேயிருந்து வாங்கிக்கிட் டுப் போறீங்களே?'' என்றாள் சுவர்ணமுகி.

''அது முதல்லே! எங்ககிட்டே உரோம ஆடைகள் உண்டு. பருத்தி ஆடைகள் கிடையாது. உரோம ஆடைகளை நாங்கள் தண்ணியிலே நனைச்சுத் துவைத்துப் போட்டுக்க முடியாது. பருத்தி ஆடைகளை முடியும். அதனால உங்க ஊர்த் துணிகளையும் தேடி வந்தோம். இதுக்கும் எங்க ஊரிலே கிராக்கி. . .''

என்று சொன்ன ராஜர், திறந்திருந்த சன்னல் கதவின் வழியே தூரத்தில் சில தீவர்த்திகளைப் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டு எழுந்தான்.

''ராபர்ட்!'' என்றான். ஒரு இந்திய வீரன் ஓடி வந்தான்.

''யார் வருகிறார்கள் கவனி! எல்லோரையும் தயார் செய்!'' என்றான்.

ராஜர் உடனே வெளியே சென்றான்.

சென்ற அரை மணிக்குள் திரும்பி வந்தபோது அவன் தோதாவுடன் மீண்டும் அந்தச் சத்திரத்தினுள் நுழைந்தான்.

''தோதா! நல்லவேளை உங்களைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம்! உங்கள் இளவரசி எங்கள் வசமே இருந்து வருகிறாள். அவளை நீங்கள் அழைத்துப் போகலாம்'' என்று சொல்லி,

சத்திரத்தின் உள் இருட்டைப் பார்த்து ''சுவர்ணமுகி'' என்று அழைத்தான்.

* * * * *

**The kings of these countries have weakened themselves by their mutual treasons and drained the source of their wealth by a tyranny, of which nothing can give you an idea.**

**- ANDRE FREIRE**

## 13

**தோ**தாவும் ட்ரேக் ராஜரும் பழக்கமானவர்கள். அடிக்கடி ரங்கப்பா மாளிகையில் சந்தித்திருக்கிறார்கள். அவனும் ராஜரும், அர்ச்சுனனும் நாராயணவனம் அருகில் இருக்கும் கைலாச கோனா நீர்வீழ்ச்சிக்குப் பலமுறை போயிருக்கிறார்கள். அருவியில் குளித்து விளையாடி யிருக்கிறார்கள்.

அன்று இரவு தீவர்த்திகளோடு வரும் யாத்திரைக் கும்பல் யாருடையதாக இருக்கும் என்று பார்க்கப் போக,

ராஜருக்கு அந்தப் பேராச்சரியம் காத்துக் கிடந்தது.

பல்லக்கில் தோதாவைப் பார்த்ததும் ''தோதா!'' என்று கூப்பிட்டு எங்கே போகிறாய் என்று கேட்காமல் ''தூரமா?'' என்று கேட்டான்,

தோதா உடனே தனது சகல பரிவாரங்களையும் நிறுத்தி விட்டான்.

இருவரும் தங்கள் தங்கள் பயணங்களின் நோக்கங்களை விவரிக்க, ஒருவர் சுவர்ணமுகியைத் தேடிப் போவதையும், ஒருவர் சுவர்ணமுகியை அழைத்து வருவதையும் மிகக் குதூகலத்தோடு பரிமாறிக் கொண்டார்கள்.

நல்லவேளை! எனக்குப் பெரிய பாரத்தை நீக்கினாய். உங்கள் நாட்டு இளவரசியை உன்னிடமே ஒப்படைத்து விடுகிறேன். என் கவலை நீங்கிற்று'' என்றான் ராஜர்.

தோதாவுக்கு ஒரு மடங்கு சந்தோஷம் அல்ல. உலகம் முழுவதுமாகச் சேர்ந்து மகிழ்ச்சி பொங்கியிருந்தது.

''இதுபோன்ற தெய்வ அனுகூலம் கிடைக்குமா ராஜர்! தேடிப் போனது நம் எதிரிலேயே வருகிறது'' என்று தெய்வத்தைச் சிலாகித்துப் பேசினான் தோதா.

இருவரும் சத்திரத்துக்குள் செல்ல, ''சுவர்ணமுகி'' என்று அழைத்தான் ராஜர்.

சுவர்ணமுகி இருட்டிலிருந்து தங்க தீபம் போல் வெளிவர, அவளைக் கண்டு தோதா ஒரு புன்னகையைச் சீற விட்டான்.

''சுவர்ணமுகி! எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது, சோகமாகவும் இருக்கிறது. இறைவன் நமக்கு இவ்வளவு சோதனை செய்து விட்டாரே! இது அடுக்குமா? ரங்கப்பா கடைசிவரை தங்களைத்தான் நினைவு வைத்துக் கொண்டிருந்தார்'' என்று உருகினாற் போலக் கூறினான்.

சுவர்ணமுகி சோகத்தோடு பெருமூச்சு விட்டு, ''தந்தை இறந்தபோது பக்கத்தில் இருந்தீர்களா?'' என்றாள்.

''ஆமாம்! கடைசி நேர தாகத்துக்குக் கூட இந்தப் பாபிதான் தண்ணீர் வார்த்தான்!'' என்றான்.

''அவர் என்ன சொன்னார்?''

''தாம் இறக்கப் போகிறோம் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகுதான் தாங்கள் இன்னார் என்று எங்களிடம் சொன்னார்.''



''எங்களிடம் என்றால் யார் யார்?''

''என்னிடமும் அர்ச்சுனனிடமும்.''

''அர்ச்சுனன் என்ன ஆனார்?'' என்று வேண்டுமென்றே கேள்வியைக் கேட்டாள் அவள். அவளுக்கு ஓர் ஆவல்!

''வழியில் இறந்து விட்டான்!''

''இறந்து விட்டாரா?'' விழிகளைப் பெரிதாக்கி சுவர்ணமுகி கேட்டாள். குரலில் ஒரு தவிப்பு புலப்பட்டது.

''ஆமாம். என் கண்ணால் பார்த்தேன். தங்களை வழியில் பார்த்து அனுப்பியதாகவும் சொன்னான்!''

''ஆமாம், பார்த்தார். அவருக்கு நீங்கள் உதவி செய்யவில்லையா?''

''என்ன செய்ய முடியும்? முதுகில் காயம், முட்டில் காயம்! வயிற்றில் காயம்! எப்படிப் பிழைப்பான்? என் கண் முன்னாலேயே இறந்தான் என் ஆருயிர் நண்பன்.''

''அடக்கம் செய்தீர்களா?''

''இந்தப் பாபக் கையால் செய்து விட்டுத்தான் வருகிறேன் இளவரசி! தங்கள் பூர்வகதை எல்லாம் எங்களுக்குத் தெரிந்து விட்டது. இனி தங்களை இந்த நாட்டுக்கு ராணியாக ஆக்குவது எங்கள் கடமை. அதற்கான தருணம் வரும்வரை நான் உங்களைக் காப்பாற்றுவேன். வாருங்கள். நானே உங்களை வெங்கடகிரிக்குக் கொண்டு விடுகிறேன்'' என்றான்.

சுவர்ணமுகி அவன் சொன்னதை அதிகம் கேட்க வில்லை. அவள் கண் முன்னால் அர்ச்சுனன் அந்த முள் மரங்களின் பின்னணியில் சூடு தெறிக்கும் வெட்ட

வெளியில், புழுதியும், ரத்தமும் மெழுகிய மேல் சட்டையுடன் கிடந்தது நினைவுக்கு வந்தது.

என்ன கம்பீரமான முகம்!

என்ன விசால விழிகள்!

மரணத்தை ஏற்றுக் கொள்வதில் எவ்வளவு அனாயாசம்!

வந்து, நின்று, பேசிய சில விநாடிகளில் ஒரு மாபெரும் வீரனின் இலக்கணத்தை முழுவதும் விண்டு காண்பித்து விட்டானே!

அவன் பிழைத்திருக்கக் கூடாதா?

''தோதா! இளவரசியை நாட்டின் ராணியாக்கும் எண்ணம் உண்டா?'' என்று இடையில் பரவிக் கேட்டான் ராஜர்.

''ஏன் இல்லாமல்? ரங்கப்பாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோமே!'' என்ற தோதா, ''அது ஒரு நாள் நிறைவேறியே தீரும். பதினைந்து வருஷமாகப் பதவிப் போர் நடக்கிறதே! இனியாவது அது முடிய வேண்டாமா?'' என்றான் ஆதங்கத்துடன்.

''உங்கள் குடும்பப் போர் முடிந்து இந்த இளவரசி இந்நாட்டு ராணி ஆனால் நான் என் நாடு செல்லும் ஆசையை விட்டு விடுவேன். இங்கேயே ஒரு போர்த் தளபதியாக வாழ்வேன்'' என்றான் ராஜர்.

சுவர்ணமுகி அவ்வப்போது ஆழமான கனவிலிருந்து கழன்று வந்து அவர்கள் சம்பாஷணையில் கலந்து கொண்டாள்.



பழசையும் புதிசையும் நிறையப் பேசி நிம்மதியாக உணவு உண்டு இரவில் எந்தக் கவலையும் இல்லாமல் உறங்கினார்கள் அவர்கள்.

காலையில் தோதா கோஷ்டியுடன் சுவர்ணமுகி புறப்பட, வாசலில் ட்ரேக் ராஜர் கலக்கமுடன் நின்றான்.

சில நாட்களில் பழகியதில் அவன் மனத்தில் இளவரசி மீது ஒரு விசித்திரமான பிணைப்பு விழுந்து விட்டது.

அதை அன்பா, சிநேகமா, நட்பா என்று வகைப்படுத்திக் கூற முடியவில்லை.

அவளைப் பார்க்கும்போதெல்லாம் எஸ்மரல்டா நினைவு வந்தது.

இந்த இளவரசியின் புன்னகைக்காகப் பாடுபட வேண்டும். இவளுக்கு எந்தவிதத் தீங்கும் வராமல் பாதுகாக்க வேண்டும்! அவள் மகிழ்ச்சியையே எப்போதும் விரும்ப வேண்டும்! இப்படித்தான் நினைவுகள் தொடர்ச்சியாக வந்தன.

இப்போது இளவரசி பிரியும்போது, எஸ்மரல்டா கப்பலின் ஏணிப் படியில் நின்று அவன் கையை ஒரே அழுத்தமாக அழுத்தினது நினைவு வந்தது.

''இளவரசி! உன்னை நான் மறக்க மாட்டேன். சந்தர்ப்பம் ஏற்பட்டால் பின்னால் சந்திக்கவும் செய்வேன்!'' என்றான்.

சுவர்ணமுகியின் கண்கள் கலங்கின. ''நீங்கள் இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாள்.

''மீண்டும் என் வியாபாரத்தைத் துவக்குவேன். இழந்த பொருள்களை நான் மீண்டும் பெற வேண்டாமா?'' என்றான் அவன்.

'ராஜர்! என்னால்தான் எல்லாவற்றையும் இழந்தீர்கள். ஊருக்குப் போக வேண்டியவர் கப்பல் ஏறாமல் திரும்பினீர்கள்! பத்தாயிரம் பொன்னையும் இழந்தீர்கள். இவைகளுக்கு எல்லாம் நான் கைம்மாறு எப்படிச் செய்வேன்? சந்தர்ப்பம் வந்தால் நிச்சயம் செய்வேன்!'' என்று சொன்ன சுவர்ணமுகி, ''இனி எங்கே போவீர்கள்? என்ன செய்வீர்கள்?'' என்றாள்.

ராஜர் எங்கேயோ பார்த்தான். அவன் கண்களில் அந்த நிச்சயமில்லாத நோக்கம் தத்தளித்தது. எஸ்மரல்டா, அவன் பெற்றோர், பத்தாயிரம் பவுன், நண்பர்கள், இளவரசி, பஞ்சம், நலிந்துபோகும் ஒரு நாடு எல்லாம் கனவுக் காட்சிகளாக வந்து ஓடின.

''ஸாந்தோமே போவேன்!'' என்றான் ராஜர் கரகரப்பான குரலில்.

''அங்கே என்ன செய்வீர்கள்?''

''யாரிடமாவது கடன் வாங்குவேன். வியாபாரத்தைத் துவங்குவேன்! புறப்படுங்கள் இளவரசி! ராகுகாலம் வந்துவிடப் போகிறது'' என்று கூறினான்.

பல்லக்குகளும், பொதி காளைகளும் குதிரைகளும், பரிவாரங்களும் புறப்பட,

ராஜர் அந்தச் சத்திரத்து வாயிலில் இளம் காலையில் கால்களை ஊன்றி நின்றான்.

அவனது ஆங்கில நிழல் கீழே சற்று நீட்டமாக விழுந்திருந்தது.

கூட்டத்தின் கலகலப்பு திடீரென்று வடிந்து போனதில் அவன் திடீரென்று தனித்து அனாதை ஆகிவிட்டது போல் தோன்றியது.



திடீரென்று பூமியிலிருந்தே யாவும் மறைந்து விட்டது போலிருந்தது.

எஸ்மரல்டாவின் குரல் ஆறாயிரம் மைல்களிலிருந்து மெல்லிய அழைப்பாகக் கேட்டது.

''எஸ்மரல்! எஸ்மரல்!'' என்றான் திடீரென்று விரகதாபத்தில்.

அவன் ஒவ்வொரு முறையும் 'எஸ்மரல்' என்று அழைக்கும்போது,

விசித்திரமாக அவன் கண் முன்னால் எஸ்மரல்டாவின் சித்திரம் வரவில்லை. அதற்குப் பதிலாக சுவர்ணமுகியின் பிம்பமே வந்தது.

ஸாந்தோமே நகரில் ஒருவித கலப்பான ஐரோப்பிய பண்பாடு உருவாகியிருந்தது. நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு.

சில பணக்கார போர்த்துக்கீசிய குடும்பங்கள் குடியேறி மேற்கத்திய உல்லாசங்களுக்கு அங்கே புகலிடம் தந்திருந்தன.

கோவாவிலிருந்து வந்த பல குடும்பங்களும், புது இன்பங்களைத் தேடித் தனியான போர்த்துக்கீசியப் பெண்களும் இங்கே குடியேறி இருந்தார்கள்.

இந்திய ராஜா யாரையாவது தங்கள் வலையில் சிக்க வைத்து, அவனிடமிருந்து ஏராள சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்று அவர்கள் விருப்பம் கொண்டிருந்தார்கள்.

அன்று மாலையில் ஒரு பல்லக்கில் அர்ச்சுனன் வந்தபோது, இந்திய ராஜா, இந்திய ராஜா என்று செய்தி எங்கும் பறந்தது.

பல போர்த்துக்கீசியப் பெண்கள் வெளியே மினுக்கிக் கொண்டு நின்றார்கள்.

மேற்கத்திய வெளுப்பு முகங்கள் இப்படி வரிசையாக அவன் கண் முன் தோன்றியதில்லை.

மழமழப்பான மா பொம்மைகள் போல வாட்டம் சிறிதுமில்லாமல் வளையாத உடம்புகளுடன் அவர்கள் நிற்பதே பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

உத்தேசமான ஒரு பெரிய மாளிகையின் முகப்பில் நின்றதும், ஒரு பதினாலு வயதிய போர்த்துக்கீசிய சிறுமி விரால் துள்ளலில் அவன் முன்னால் வந்து, தனது வீட்டுக்குள் வரவேற்புக் கொடுத்தாள்.

''இந்திய அடிமைகள் இங்கே இருக்கிறார்களா? அடிமை வியாபாரிகள் இருக்கிறார்களா?'' என்று அர்ச்சுனன் வினவ,

''வாங்க, வாங்க'' என்று கொச்சைத் தமிழில் அந்தப் பெண் மகிழ்ச்சியோடு பேசினாள்.

அவன் இறங்கி வருவதற்கு இன்னும் கால் சரியில்லை என்று தெரிவித்ததும்,

''நீங்கள் பல்லக்கையே உள்ளே எடுத்துப் போகலாம் மகாராஜா!'' என்றாள் சிறுமி.

பல்லக்கு திரும்பியது.

மாளிகையில் அகலமான வாயில் கதவுகள் பிரிந்தன.

உள்ளே அர்ச்சுனன் பல்லக்கில் போக, ரோஜா வாசனை மிருதுவாக மிதந்து வந்து அவனை வசீகரப்படுத்தியது.

பல்லக்கு பெரிய முற்றத்தைக் கடந்து அதை அடுத்துள்ள தாழ்வார மேடையில் வைக்கப்பட்டபோது,



வினோத ஐரோப்பிய கீதம் மெல்லிய திரைச் சீலைகளுக்குள்ளிருந்து வர, ஒரு நேர்த்தியான பதினெட்டு வயதுப் பெண் மேலே மேகக் கூட்டமான வெண் துணிகளின் ஃப்ரில்கள் நடுவே சந்திரன் போன்ற வெள்ளி முகத்துடன், அழகிய சிறு முறுவலை யத்தனமில்லாமல் நிறையச் சிந்திவிட்டு,

''வாருங்கள்! இந்திய ராஜா! வாருங்கள்! இந்திய அடிமை எதற்கு? தங்களுக்கு ஐரோப்பியப் பெண்கள் எப்போதுமே அடிமைகளாக இருக்க விரும்புகிறோம்'' என்று கூறி,

அவன் முன்னால் ஒரு கிரேக்க புராணத்து அன்னம் போல நடந்து வந்தாள்.

அர்ச்சுனனின் மூக்கு அருகே ஒரு சிவப்பு ரோஜாவை நீட்ட, அதை முகர்ந்த அவன் சிறிது சிறிதாக நினைவை இழக்க ஆரம்பித்தான்.

* * * * *

# 14

''ஏன் எங்கள் மீது குறை காண்கிறீர்கள்? அவர்களும் எங்களைப் போல் பெண்கள்தானே? தங்கள் கணவன்களைத் தங்கள் மீது காதலோடு இருக்க வைப்பதற்கு இவர்களிடம் சாமர்த்தியம் இல்லையா? நாங்களா இவர்கள் கணவர்களை இவர்கள் வீட்டிலிருந்து தூக்கி வந்தோம்? இவர்களுக்குத் தங்கள் கணவர்களை வசியப்படுத்தத் தெரியவில்லை.''

ஒரு ராஜாவைக் கவர்ந்ததற்காக ராணி குறை கூற அதற்கு பசுபுலேட்டி ரங்காஜம்மா கூறிய பதில்.

(தெலுங்குக் கவிதையின் மொழிப் பெயர்ப்பு)

* * * * *

அர்ச்சுனன் விழித்தபோது, பரந்த மணல் வெளியில் கிடந்தான்.

மேலே இரக்கமில்லா வானம்.

கீழே வாணலியாக மணல்.

திடுக்கிட்டு எழுந்து பார்க்க கிழக்கே கடல் தீவெள்ளியாகத் திகழ்ந்தது.

மேற்கே, ஒரு சின்னக் குன்று போன்ற மேட்டின் மேல் ஸாந்தோமேயின் மண்கோட்டை, மூலைக் கொத்தளங்களுடன், சிலமாடிக் கட்டிடங்கள் மேலே தலை நீட்டின.

போர்த்துக்கீசியக் கொடி மதிய வெய்யிலில் வெறும் சுருணையாகச் சோர்ந்திருந்தது.

என்ன கோபம் வந்தது அர்ச்சுனனுக்கு!



மீசை பொத்துக் கொண்டு துடித்தது.

எங்கே அவனது ஆட்கள்? எங்கே பல்லக்கு? எங்கே பணப்பை? எங்கே மோதிரம்?

ஆ! அந்தப் போர்த்துக்கீசிய வஞ்சமிகள்! அவர்கள்தானே இப்படிச் செய்தது!

மயக்க மருந்து கொடுத்து எல்லாவற்றையும் பிடுங்கி, இந்த மணல் மீது கடாசி விட்டது அவர்கள்தானே?

அவர்கள் மட்டும் கிடைத்தால். . . கடைவாய் நறநறத்தது.

எழுந்தான்.

காலில் இன்னும் பூரண குணம் ஏற்படவில்லை. நொண்டித்தான் நடக்க முடிந்தது. மணல் ஒரு பாலை வெள்ளையாகத் தெரிய மெல்ல மெல்ல அடிவைத்து, ஸாந்தோமே குன்றின் அடிவாரத்தை அடைந்தான்.

அந்த நாளில் கடல் வெகு தூரம், கீழே இருந்தது. ஸாந்தோமே ஒரு மேட்டின் மேல் தொத்தியிருந்தது.

வெறுப்புடன் கோட்டையைப் பார்த்தான்.

ஆகா! விஜயநகரம் மட்டும் இப்போது மகோன்னத தசையில் இருந்தால். . .

இந்தப் போர்த்துக்கீசியர்கள் இங்கே அட்டகாசமாய் இருப்பார்களா? என்ன அநியாயங்களை வேண்டு மானாலும் செய்வார்களா?

கோட்டைக்கு இடது பாரிசம் வழியாகச் சின்னப் பாதை. அதில் தாங்கலாக அடிவைத்து நடந்து, மாலையில் மயிலாப்பூர் மாட வீதியை அடைந்தான். தெருவில் வரும்போது திடீரென்று விருது வாத்தியங்கள் முழங்கியது

கேட்டு, நாலைந்து வீடு தள்ளி வாசலில் பரிவாரம் கூடியிருப்பதை அறிந்தான்.

பக்கத்தில் போய்ப் பார்த்ததும் மனம் பந்து போல் துள்ளி எகிறியது.

பிரசித்தி பெற்ற நாட்டியக்காரி சந்திரரேகா அவள்! நாட்டிலே அவள்தான் பேரழகி. அவள் நாட்டியம் மிகவும் கீர்த்தி பெற்றது. அந்த யௌவன அழகி அங்கே தென்பட அவள் அருகில்,

சிந்தாமணி நாட்டியத்தில் தேர்ந்த சம்பகவல்லி, ஜக்கினி நாட்டியத்தில் தேர்ந்த மூர்த்தியம்மா, குரவையில் தேர்ந்த கோமளவல்லி, தேசியில் தேர்ந்த சசிரேகா.

ஆகிய நால்வரும் நான்கு தேவதைகள் போல் நின்றார்கள்.

பரிவாரத்தை விலக்கி உள்ளே போய்,

''சந்திரரேகா! இது என்ன? இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று ஆச்சரியமுடன் கேட்க

''ஆ, நம்ப சுவாமி!'' என்று தெலுங்கு தொனி சிந்தக் கூறிய சந்திரரேகா, அருகில் வந்து,

''சுவாமி! சண்டை நடந்ததே! நம்ப ராஜா பக்கம் உள்ள எல்லோரும் இறந்தார்கள் என்றார்களே! தாங்கள் எப்படித் தப்பினீர்கள்? வேங்கட மகாராஜா எங்கே? அவருடைய பிரதானிகள் எங்கே? எல்லோரும் எங்கே போய் மறைந்து விட்டார்கள்?''

என்று நிருத்திய நாடகத்தில் ஒரு பாத்திரம் வினவுவது போல் சுவரம் போட்டுக் கேட்டாள்.

இதற்குள் சம்பகவல்லி முன்னால் குதித்து, ''பிரதானி ரங்கப்பா குடும்பம் அழிந்து விட்டதாமே! அந்தப் பெண்



சுவர்ணமுகி எங்கே?. . . எங்கே? நாடு இவ்வளவு மோசமாகப் போய்விட்டதே, சுவாமி!'' என்றாள்.

உடனே அர்ச்சுனன், ''நீங்களெல்லாம் சந்திரகிரியை விட்டு ஏன் புறப்பட்டீர்கள்? எவ்வளவு தூரம் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நன்றாகக் கேட்டீர்கள்! சுவாமி! சந்திரகிரியை விட்டு ராஜ்ய லஷ்மியே போன பிறகு நாட்டிய லஷ்மிகள் ஏன் இருக்கப் போகிறோம்?'' என்றாள் சந்திரரேகா.

''ராஜாதான் பாதி நாளும் சண்டையிலே இருக்கிறார். எங்கள் நாட்டியத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்?'' என்றாள் சம்பகவல்லி.

''சுவாமி! நாட்டில் பஞ்சம் தூறையாடுகிறதே! உணவு இருந்தால் அல்லவா ஜனங்கள் நாட்டியத்தை ரசிப்பார்கள்?'' என்றாள் கோமளவல்லி.

''வழியில் ஜனங்கள் எங்களைக் கொல்லாத குறை. சிறிது ஏமாந்திருந்தால் எங்களையே அடித்துச் சாப்பிட்டு இருப்பார்கள். என்றைக்கும் இல்லாத கொடூரம் நாட்டில் வந்து விட்டதே!'' என்று அங்கலாய்த்தாள் மூர்த்தியம்மா.

''இனியும் இந்த ராஜ்யம் பிழைக்குமா?'' என்று ஆருடம் கேட்டாள் சசிரேகா.

அர்ச்சுனனுக்குத் தாபம் கிளர்ந்தது. எவ்வளவு மகோன்னத ராஜ்யம் அந்த விஜயநகர ராஜ்யம்! இப்போது அது எப்படிக் கிடக்கிறது! பிறந்த ஊரிலே வாழ முடியாமல் சந்திரகிரியில் புகுந்து இருக்கிறதே! இங்கேயாவது ஒழுங்காக வாழ்ந்து பழைய மகோன்னதங்களை எட்டிப் பிடிக்கும் என்று நினைத்தால் அதன் அன்றாட வாழ்க்கைக்கே இப்படி தகிடுதத்தோம் போடுகிறதே! அவனைப் போன்றவர்களால் அதை மீண்டும் தூக்கி நிலை நிறுத்த முடியுமா?

சிறிது நேரம் கலக்கமாக இருந்து, பிறகு திரும்பி, ''சரி! எவ்வளவு தூரம் போகிறீர்களோ?'' என்று கேட்டான்.

''ஏன் சுவாமி! எங்களுக்குப் புகலிடம் இப்போது தஞ்சாவூர் தவிர வேறு ஏது? நாட்டில் வேறு எங்கும் போக எங்களுக்கு வகை இல்லையே!'' என்றாள் சந்திரரேகா.

அர்ச்சுனன் எல்லோரையும் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தான். ''நாட்டிய ராணிகளே இது உங்களுக்கு அடுக்குமா? பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மாமன்னர்களை விட்டு விட்டு இப்படிச் சிற்றரசர்களைத் தேடிப் போகலாமா? இருந்தால் மாமன்னரோடு வாழ்வோம் இல்லாவிட்டால் அவரோடேயே சாவோம் என்று நினைக்க வேண்டாமா? அவ்வளவு உன்னதமாக நினைப்பவர்கள் நீங்கள் ஆயிற்றே'' என்று வெதும்பிச் சொன்னான்.

அப்போது, ''ஏமி அக்கட?'' என்று வெளியே வந்த ஒரு மத்திய வயதுப் பெண்மணி அர்ச்சுனனைப் பார்த்த பிறகு, ''ஒஹ்ஹோ ஹோ! நம்ம சுவாமுலவாரு'' என்று பாதி ஆச்சரியத்துடன் கூறினாள்.

அர்ச்சுனன் திரும்பிப் பார்க்க, அங்கே நின்றது பசுபுலேட்டி ரங்காஜம்மா! பிரசித்தமான தேவதாசி! மகா பண்டிதை அவள். மாபெரும் கவி. வடமொழி, தெலுங்கு தவிர எட்டு பிராகிருத மொழிகளிலும் பாண்டித்தியமும், கவி எழுதும் திறனும் பெற்றவள். நாடகம், பிரபந்தம் தவிர, வசன நடைக் காவியங்களும் சிருங்கார கீதங்களும் எழுதக் கூடியவள். பிரேம லீலைகளை மறைவு ஏதுமின்றித் தத்ரூபமாக வர்ணிக்கும் சிருங்கார பதங்களுக்கு அவளே அபிநயிப்பதை ராஜ சபையில் பார்க்க வேண்டும்! ஆயுசு



முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நாட்டைப் பற்றியோ, அதை ஆள்வதைப் பற்றியோ கவலைப்பட வேண்டாம்!

ரங்காஜம்மா முன்னால் வர அவள் பின்னால் மற்றொரு மகாகவி கிருஷ்ணாம்பா தலைப்பைப் போர்த்திக் கொண்டு வந்தாள்.

''நல்லா சொன்னேப்பா, அர்ச்சுனா! நகரத்திலே ராஜா இருந்தாத்தானே நாங்கள் இருப்பதற்கு? ராஜாவே காட்டிலே வாழும்போது அவரை அண்டியிருக்கும் நாங்கள் எங்கே வாழ்வது?'' என்றாள் ரங்காஜம்மா.

''எத்தனை வருஷமாய்ச் சண்டைகளைப் பார்த்து விட்டோம்? இன்னும் அவை முடிவதாய்க் காணவில்லையே! அதாவது போகட்டும். இந்தப் பஞ்சம் வந்து நாட்டை வாட்டி எடுக்கிறதே! ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சாகிறார்களே! இந்த நிலையில் சந்திரகிரியே எத்தனை நாள் பிழைக்கும்? அதுவும் சுடுகாடாகி விட்டால் நாங்கள் எப்படி வாழ முடியும்?'' என்று கேட்டாள் கிருஷ்ணமாம்பா.

தொடர்ந்த ரங்காஜம்மா, ''இங்கே இந்த மயிலாப்பூரிலாவது வாழலாம் என்று பார்த்தால் இந்தப் பரங்கிகள் ஆண்களையும் பெண்களையும் பிடித்து அடிமைகளாக்கி கப்பலில் ஏற்றுகிறார்களாமே! அதைத் தடுத்து நிறுத்தக் கூட அதிகாரிகள் இல்லையே!'' என்று ஆவலாதியாகக் கூறினாள்.

''பிடிச்சுட்டுப் போறது இருக்கட்டும்டி! பெத்த தாய்களே சோறு போட முடியாம குழந்தைகளை விக்கிறாங்களாமே! அதுக்கு என்ன செய்ய முடியும்?'' என்று வினவினாள் கோமளவல்லி.

அர்ச்சுனன் கலங்கி நின்றான்.

அந்தப் பெண்களின் உருவத்தில் கலையும், படிப்பும் அறிவுமே நாடு கடந்து போவதாக நினைத்தான். எல்லா லஷ்மிகளும் நாட்டை விட்டுப் போகிறார்கள். இதை இனி தடுத்து நிறுத்த முடியுமா?

மேலே பேச முடியாமல் அர்ச்சுனன் மௌனமிடுவதைப் பார்த்து,

''சுவாமி, எங்கே இப்படி?'' என்று கேட்டாள் ரங்காஜம்மா.

''சுவர்ணமுகியைத் தேடி வந்திருக்கிறேன்'' என்றான் அர்ச்சுனன்.

''சுவர்ணமுகியா? அவள் இறந்து விட்டாள் என்று அல்லவா கேள்விப்பட்டோம்?'' என்றாள் சம்பகவல்லி.

''இல்லை. தப்பித்து விட்டாள். ஒரு ஒலாந்தியனிடம் அடிமையாக அகப்பட்டு இங்கே வந்தாள் என்று கேள்விப்பட்டேன். அவளைத் தேடித்தான் இங்கே வந்தேன்.''

என்று சொல்லி அவன் வந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாகக் கூறி முடித்தான்.

''ஏன் சுவாமி! எல்லாவற்றையுமா இழந்தீர்?'' என்று கேட்டாள் ரங்காஜம்மா.

''ஆமாம். அதுதான் எனக்கு ஆத்திரம்'' என்றான் அர்ச்சுனன்.

''பணமில்லாமல் எப்படித் தேடுவீர்கள்?'' என்றாள் அவள்.

அர்ச்சுனன் விழிக்க, ரங்காஜம்மா உள்ளே போய், ஒரு துணிப்பையில் பொன்னையும், பணங்களையும் போட்டுக் கொண்டு வந்து கொடுக்க,



இதர பெண்மணிகளும் ஆளுக்கொரு பொன் நகை கொடுத்து ''சீக்கிரம் சுவர்ணமுகியைத் தேடுங்கள்!'' என்றார்கள்.

''உங்கள் உதவிக்கு நன்றி! நான் சீக்கிரம் உங்களைக் காண்பேன்'' என்று கூறி விடை பெற்றான் அவன். பணம் கிடைத்தது பெரிய பலம் கிடைத்தது போல் ஆக,

ஒரு பல்லக்கையும் பரிவாரத்தையும் வேலைக்கு அமர்த்தி, ஸாந்தோமே நகரத்துக்குள் கோபத்துடன் நுழைந்தான் அவன்.

சுவர்ணமுகி விழித்தபோது புதிய சூழ்நிலையில் இருந்தாள். காலை நேரம் போல் தோன்றியது. இது அரண்மனையா? எந்த ஊர் அரண்மனை?

கட்டிலை விட்டுக் கீழே இறங்கிச் சாளரம் பக்கம் போக, ''இளவரசி!'' என்று குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஒரு நடு வயதுச் சேடி உணர்ச்சி இல்லாத முகத்துடன் நடந்து வந்தாள். சுவர்ணமுகி அவளை உற்றுப் பார்த்து ''யார் நீ?'' என்று கேட்டாள்.

அந்தப் பெண்மணி புருவத்தை மட்டும் உயர்த்தினாள். பதில் இல்லை.

பிறகு ''தங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறேன்'' என்றாள் விநயமுடன்.

''தோதா எங்கே?''

''வருவார்.''

''இது என்ன இடம்?''

''காளிங்கராயரின் மாளிகை.''

''எந்த ஊர்?''

''சொந்தம்பள்ளி.''

''அப்படி ஒரு ஊர் இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''எங்கே இருக்கிறது?''

''காளஹஸ்தி பக்கம்.''

''ஓ! அங்கே அப்படி ஒரு ஊர் இருக்கிறதா?'' என்று யோசித்தாள் அவள்.

''இங்கே எப்படி வந்தேன்?''

''தோதா உங்களை அழைத்து வந்தார்.''

''எப்படி அழைத்து வந்தார்?''

''பல்லக்கில்.''

சுவர்ணமுகி தனது மூளையைக் குடைந்து பார்த்தாள்.

தோதாவின் பரிவாரங்களுடன் தனிப் பல்லக்கில் பல நாழிகைப் பிரயாணம் செய்தது நினைவு இருக்கிறது.

ஒரு சின்ன ஊரை நெருங்கினதும் நினைவு இருந்தது.

பிறகு நடந்தது எல்லாம் மறந்து விட்டது. அவ்வளவு மறதியா என்ன?

மறதி இருக்காது.

அசதியில் தூங்கியிருப்போம். எழுப்ப வேண்டாம் என்ற நினைப்பில் தோதா இங்கே கொண்டு வந்து படுக்க வைத்து இருப்பான்.

இருந்தாலும் அவ்வளவு நினைவு இல்லாமலா உறங்கினோம்? கேவலமாக இருக்கிறதே!

''வேறு யாராவது இருக்கிறார்களா இங்கே?''

''யாருமில்லை.''



''நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்களா?''

''ஆமாம்.''

சுவர்ணமுகி சற்றுத் திகைக்க,

''நீங்கள் குளிக்கலாம், சாப்பிடலாம்!'' என்றாள் சேடி.

''ஆகட்டும்'' என்று மெல்லிய குரலில் சொன்ன சுவர்ணமுகியின் கண்கள் மீண்டும் சாளரம் பக்கம் ஓட,

சில அவசர அடிகள் வைத்து அதன் அருகே நின்றாள்.

வெளியே பார்த்ததும் திகில் வந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை காடு. அதற்கு அப்பால் நீல சியாமளமாய் மலை.

பரபரப்பு அடைந்து எதிர்ப்புற சாளரத்துக்கு ஓடினாள். அங்கேயும் காடுதான் நெடுந்தூரம் விரவி இருந்தது.

தோதா ஏன் இங்கே நம்மைக் கொண்டு வந்தான்?

இப்போது எங்கே போனான்?

இருப்புக் கொள்ளாமல் தவித்து, மற்றொரு முனையில் உள்ள சாளரத்துக்கு ஓடிப் போய்ப் பார்க்க,

கண்கள் அப்படியே நிலையாக நின்றன.

விளிம்பைப் பிடித்துக் கொண்டு பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

* * * * *

**In this Country the Kings or Governor Generals not content with sucking the blood of their subjects leave to their subordinate officers full liberty to enrich themselves by all possible means.**

**- John de Brito**

## 15

கீழே சொர்ண மந்தார மரத்தடியில் பட்டுக் கறுப்பு நிறத்தில் ஒரு குதிரை! அதன் விலாவில் ஒரு 'பூ'க் குறி! அதைப் பார்த்துத்தான் சுவர்ணமுகி திடுக்கிட்டு நின்றாள்.

அந்நாளில் போர்க்குதிரைகளுக்குச் சூடு போடுவதுண்டு. பூ, இலை, ஈட்டி, முக்கோணம் என்று வெவ்வேறு விதச் சின்னங்களைச் சூட்டில் பொறிப்பார்கள்.

குதிரைகளைப் பராமரிப்பவர்கள் குதிரைக் கணக்கில் ஏதாவது பொய் பித்தலாட்டம் செய்து விடக் கூடாது என்பதற்காக இந்தப் பொறிகள்.

இந்தப் 'பூ'க்குறி தேவதாசி ரத்னாவளியின் குதிரைகளுக்குப் போடுவது.

இங்கே ரத்னாவளியின் குதிரை எப்படி வந்தது?

நினைவுகள் பறந்தன.

தளவாய் நரசய்யா திடீரென்று நினைவுக்கு வந்தார்.

அந்தப் பயங்கர இரவில் ராத்திரியில் அவர் கையில் வாளோடு அவளை மிரட்டியதை நினைத்தால். . .

இந்த ரத்னாவளி தளவாய் நரசய்யாவின் சீமையைச் சேர்ந்தவள்தானே!



இந்தக் குதிரைகள் கூட நரசய்யா உபயோகப் படுத்துவதுதானே!

திரும்பினாள்.

அவள் பார்வையைப் பிடித்து நிறுத்துவது போல் அந்தச் சேடி பெரிய முழியோடு நின்றாள்.

அவள் பார்வையும் தோற்றமும் இப்போது வித்தியாசமான அர்த்தத்தில் தெரிந்தன.

''இது யார் மாளிகை?'' என்றாள் சுவர்ணமுகி கலவரமுடன்.

''நான்தான் சொன்னேனே?''

''தோதா எங்கே?''

''வருவார்.''

அவள் சொன்ன ஒரு வார்த்தைப் பதில்கள் கூடப் பிடிக்கவில்லை.

ஒரு பரபரப்பு சுறுசுறு என்று ஏற, சேடியை விலக்கு ஒரு தாவுத் தாவி, கண்ணை இமைக்கு முன் கதவின் பக்கம் நின்றாள். வந்த வேகத்தில் அதை வலுவோடு தள்ள, 'ணங்' என்று கை முஷ்டிதான் மோதியது.

கதவு மறுபக்கம் தாளிடப்பட்டிருந்தது.

ஆத்திரத்துடன் திரும்பி, ''இதை ஏன் பூட்டி யிருக்கிறார்கள்?'' என்று சாடினாள் சுவர்ணமுகி.

சேடி பேசவில்லை. உதட்டை மட்டும் கடித்து விழியால் ஒரு உருட்டு உருட்டிப் பார்த்தாள்.

சுவர்ணமுகி தாவி அவள் கைகளைத் தூக்கினாள். ''சொல்லு! இது என்ன ஊர்? என்ன இடம்?'' என்று சீறினாள்.

சேடி இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு அடி பின்வாங்கி, சுவர்ணமுகியைக் கலவரத்துடன் பார்த்தாள்.

சுவர்ணமுகி மேலும் அவளைப் பிடிக்கப் போக, ஒரு வேகத்துடன் எதிர்க்க ஆரம்பித்தாள்.

சுவர்ணமுகிக்கு ஆத்திரம் ஒரு பொறியாக எழுந்தது.

சேடியை விரட்டிச் சென்று அவளைக் கீழே தள்ளினாள். சேடி கத்த முயல, திடீரென்று ஒரு விரிப்பை எடுத்து அவள் வாயில் திணித்தாள். பிறகு அவளது இரு கைகளையும், கால்களையும் கட்டி,

இங்குமங்கும் ஒரு விடுதலையைத் தேடி அலைந்தாள்.

ஆத்திரமும் வியர்வையும் வழிய, நெஞ்சு நகரா போல் அதிர, இங்குமங்கும் சாடித் தப்புவதற்கு வழி ஏதும் தெரியாமல்,

கடைசியில் சாளரம் ஒன்றுதான் ஒரே வழி என்று தீர்மானித்தாள்.

பெட்டகத்தைத் திறந்து, புடவைகளை அள்ளி, ஒன்றின் நுனியோடு ஒன்றாக முடிந்து, கீழே நழுவவிட்டு, மேலே உப்பரிகை விட்டத்தில் ஒரு மூலையைக் கட்டி,

கடைசியில் அந்தப் புடவையைப் பிடித்துக் கொண்டே இறங்கினாள்.

சற்று வேகமாக வழுவியதில் கீழே கால் அடி பட்டுச் சிறிது நேரம் அதிர்ந்தது.

தட்சணமே பீதியோடு எழுந்து சுற்று முற்றும் பார்த்து,

அந்த வெட்ட வெளியில் விருட்டென்று ஒரு விச்சுளிப் பறவைபோல் பறந்து, அந்த மந்தார மரங்களின் மறைவுக்குள் நழுவ,



வேண்டாத வினையாய் அந்தப் பட்டுக் கறுப்புக் குதிரை ஹிஹ்ஹிஹ்ஹி என்று பிர்க்காக்களுடன் கனைத்தது.

அந்தத் திடீர்ச் சத்தத்தில் அவள் நெஞ்சு பிஞ்சாக நைய,

பதறிப்போய்த் திரும்பினாள்.

நல்ல வேளை, வெட்டவெளியில் யாருமில்லை,

ஆனால் அடுத்த வினாடி, அந்த மாடி உப்பரிகைப் பக்கம் அரவம் எழுந்தது. அங்குத் திடீரென்று தோதா தோன்றி, நாலா பக்கமும் வேகமுடன் பார்த்து பிறகு அந்தப் புடவை ஏணியைக் கண்டதும் ''ஏஏஏய்! யார் அங்கே?'' என்று ஆத்திரமாகக் கத்தினான். ''ஏஏஏய்! பெண் தப்பிச்சுட்டா! பிடியுங்க பிடியுங்க!''

மாளிகையின் முகப்பு வேறு பக்கம் இருந்தது. அதிலிருந்து இரண்டு வீரர்கள் வருவதற்கு முன் சுவர்ணமுகி துள்ளி எழுந்து மரங்களின் இடைவழியே நழுவி ஓட ஆரம்பித்தாள்.

காலில் முள்ளும் கற்களும் பொத்துவிட, மேலே அங்கங்களில் கூர்மைக் கிளைகள் கிழித்துவிட,

எதையும் பொருட்படுத்தாமல், மேலெல்லாம் வெற்றிலைச் சாறு தெறித்தாற்போல் ரத்தங்கள் துளும்ப,

மூச்சை இறைத்தவாறு ஒரே வெறியாக ஓடினாள் அவள்.

போகப் போக மரங்கள் நெருங்கி ஒரு அரண்யம் போல் இருட்டுடன் எதிர்கொள்ள,

இளைப்புத் தாங்காமல் கால்கள் தடுமாறி ஒரு புதரின் பக்கம் மல்லாந்து வீழ்ந்தாள்.

அதே நேரம் தோதாவும் ஆட்களும் அந்த மர அடர்த்தியுள் பரவலாக நுழைந்து கொண்டிருந்தார்கள்.

ஸாந்தோமேக்குள் கோபமாக நுழைந்தான் அர்ச்சுன தேவன்.

அவனோடு ஒரு பரிவாரம் சேர்ந்திருந்தது.

பாதி அவன் அமர்த்தியது. மீதிப் பாதி பசுபுலேட்டி ரங்காஜம்மா முதலியோர் உவந்தளித்தது.

போதாததற்கு மயிலாப்பூர் கொத்தவாலிடமிருந்து முப்பது வீரர்களை இரவல் வாங்கிக் கொண்டான்.

நாட்டில் நடக்கும் சிங்காதனச் சண்டையில் யார் யாருடைய கட்சி என்று தெரியாது. தனது தளவாய் முத்திரையைக் காண்பித்து கொத்தவால் நாயக்கரிடமிருந்து அந்த வீரர்களை இரவல் வாங்கிக் கொண்டான் அர்ச்சுனன்.

காலையில் கோபாவேசமாக ஸாந்தோமேயில் நுழைந்தான்.

சாலையில் கடுகிப் போய் அவனை அழைத்து ஏமாற்றிய அந்த வீட்டை இலக்காக அடைந்தான்.

அதன் வாசலில் நின்றதும், "ஏ பரங்கி சிறுக்கிகளே!" என்று கர்ஜனை புரிந்தான் அவன்.

இரண்டு அண்டை வீட்டு வாயில்களும் திறந்து, வெளியே கோபாவேசமான இந்தியப் படை நிற்பதைப் பார்த்ததும் திறந்த அவசரத்திலேயே அடைத்துக் கொண்டன.

அர்ச்சுனன் தலையை ஆட்ட, ஒரு வில்லாளி சீறிக் கொண்டு அம்பை எய்து அந்த வீட்டின் மரக்கதவை ஓசையோடு கீற வைத்தான்.



லோ லோ லோ என்று போர்த்துக்கீசிய பிரலாபங்கள்.

எதிர் வாசல்களில் சில வெள்ளைக்காரர்கள் வெளிவர, அவர்களைப் பயமுறுத்தும் வகையில் அம்பு தலை மேலாகச் சீறியது.

வீட்டுக்குள்ளிருந்து இதற்குள் குரல் போர்த்துக்கீசிய மொழியில், "ஐயா, ஐயா! எதுவும் செய்யாதீர்கள். கதவைத் திறக்கின்றோம். என்ன வேண்டும் சொல்லுங்கள்!" என்றது.

அந்நாளில் தென்னாட்டின் கிழக்குக் கடற்கரை முழுதும் போர்த்துக்கீசிய மொழியை எளிய ஜனங்கள் கூட அறிந்திருந்தார்கள். பேசுவதற்கும் அறிந்திருந்தார்கள்.

வில்லாளி உடனே, "கதவைத் திறவுங்கள்! வெளியே வாங்கள்!" என்று போர்த்துக்கீசிய மொழியில் இரைந்தான்.

கதவு திறந்தது.

லுல்லுல்லுல்லோ என்று ஐரோப்பிய பெண்கள் சின்னதும் பெரிசுமாய் வெளியே பயந்து கொண்டே வந்தார்கள்.

தெருவை அடைந்ததும் அவர்கள் பரந்த கவுன்கள் குடைகளாய் பரந்தன.

வெளிறிய முகங்களுடன் அர்ச்சுனனைப் பார்த்துக் கை கூப்பினார்கள். இரண்டு சின்ன வயசுகள் கீழே மண்டியிட்டார்கள்.

"ஐயாவை ஏமாத்தினீங்களா?" என்றான் வில்காரன்.

"ஆமாங்கோ!" என்றாள் ஒரு இளவயதுப் பெண்.

''எவ்வளவு பணம் பறிச்சே? எவ்வளவு பொன் எடுத்தே?''

''அல்லாத்தையும் கொடுத்துடறேங்கோ!''

தலைவி போன்றவள் தலையசைக்க இரண்டு பேர் உள்ளே ஓடிச் சிறிது நேரத்தில் ஒரு கனமான பையோடு வெளியே வந்தார்கள்.

அர்ச்சுனன் பல்லைக் கடித்தவாறு கீழே இறங்கினான். அவன் கால் இப்போது வலுப் பெற்றிருந்தது.

''இந்தாப்பா! உள்ளே போய் யாராவது சோதனை போடுங்க!'' என்றான்.

''ஐயோ வேண்டாம்! ஐயோ வேண்டாம்!'' என்று தலைவி புலம்பலாகக் கூற, ''ம், பேசாதே!'' என்று அடக்கினான் வில்லாளி.

உள்ளே இருவர் சென்று வெகு நேரம் வரை திரும்பி வரவில்லை.

பிறகு பல ஓசைகள் எழும்ப, ஏழு மெலிந்து போன இந்தியப் பெண்கள் முன்னாலும் அவர்கள் பின்னாலுமாக வந்தார்கள்.

''சுவாமி! இவர்களைச் சிறை வைத்திருந்தார்கள் உள்ளே!'' என்று இருவரும் சொல்ல,

வில்லாளி கையில் கோல் எடுத்து போர்த்துக்கீசிய பெண்கள் முன்பாக ஒரு ஒட்டம் காட்ட, ''ஐயோ! ஐயோ!'' என்று அலறினார்கள் அவர்கள்.

இந்தியப் பெண்கள் தாங்கள் விலைக்கு வாங்கப்பட்டவர்கள் என்றும் தங்களை அடிமையாய் உள்ளே சிறை வைத்திருக்கிறார்கள் என்றும், பணக்கார வெள்ளை



யருக்குத் தங்களை ஆசை நாயகிகளாக அனுப்புகிறார்கள் என்றும் புலம்பலாகத் தெரிவித்தார்கள்.

''விஜயநகர சாம்ராஜ்யத்தில் இருந்து கொண்டே இந்த அநியாயம் செய்வீர்களா'' என்று அர்ச்சுனன் கர்ஜனையோடு கேட்டு, ''எடு அபராதம்! நூறு பவுன் நாணயங்கள் கொடுங்கள்!'' என்று கட்டளை இட்டான்.

அது அதிகமான தொகை என்று அவர்கள் கூற, வில்லாளி மேலும் அவர்களை மிரட்ட, கடைசியில் ஒரு வழியாய் பாதி பவுன் நாணயங்களாகவும், பாதி வராகன் களாகவும் கொடுத்து அபராதத்தைச் செலுத்தினார்கள்.

அரச்சுனன் அவர்களை எச்சரித்துவிட்டு, அந்த இந்தியப் பெண்களோடு புறப்பட்டான்.

வீதி வழியே சென்று ஒரு விசாலத் தோட்டத்தை அடைந்ததும், அர்ச்சுனன் பரிவாரங்களுடன் நின்று, அந்தத் திறமையான வில்லாளியை நோக்கி, ''உம் பேர் என்னப்பா?'' என்றான்.

விநயத்துடன் வந்த வில்லாளி, ''வீரமாலி'' என்றான்.

''நல்லது வீரமாலி! இவ்வளவு துல்லிய வீச்சில் அம்பு விட்டவரை நான் பார்த்ததில்லை'' என்று அர்ச்சுனன் புகழ,

''ஐயா! அவர் வில்லில் இன்னும் எத்தனையோ வேலை செய்து காட்டுவார்! எல்லாம் வித்தைகளாகக் கூட இருக்கும்'' என்றான் ஒருவன்.

''வீரமாலி! நான் ஒரு பெண்ணைத் தேடி வந்திருக்கிறேன். அவளைக் கப்பலில் ஏற்றி இராவிட்டால் அவள் இந்த நகரத்துக்குள்தான் இருக்க வேண்டும்.

அவளைக் கண்டு பிடித்தாக வேண்டும். அவளைக் கப்பலில் கொண்டு போனார்கள் என்றால், நாம் உடனே நாகப்பட்டினம் ஓட வேண்டும். அங்கே மரக்கலம் அமர்த்தி அந்தக் கப்பலைப் பிடிக்க வேண்டும்'' என்றான் அர்ச்சுனன்.

''ஐயா! அந்தப் பெண் யார்?'' என்றான் வீரமாலி.

''ஒரு பிரதானியின் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் பெயர் சுவர்ணமுகி!'' என்றான் அர்ச்சுனன்.

''சுவர்ணமுகி!'' என்று ஒரு கீச்சுக்குரல் கேட்டது.

அர்ச்சுனன் திரும்ப, அடிமைப் பெண் ஒருத்தி எழுந்து நின்றாள்.

''ஐயா! சுவர்ணமுகி என்ற பெண் நாகலாபுரத்திலிருந்து என்னோடு வந்தாள். அவள்தான்!''

அந்தப் பேச்சைக் கேட்ட பரபரப்பில் அர்ச்சுனன் அவளை நோக்கிக் காலை இழுத்து ஓடினான். ''ஆமாம்மா! அவள்தான்! அவளேதான்! நீ பார்த்தாயா? எங்கே போனாள்! என்ன ஆனாள்?'' என்று ஆத்திரமுடன் கேட்டான்.

''ஒரு ஒலாந்தியன்தான் என்னைப் பிடித்துக் கொண்டு வந்தான். இங்கே கடற்கரையில் எங்களில் பலரை விற்பனை செய்தான். சுவர்ணமுகியை யாரோ ஆங்கிலேயன் வாங்கிக் கொண்டு சென்றான்.''

''யார் அவன்?''

''தெரியாது. என்னை இந்தப் போர்த்துக்கீசிய வீட்டார் வாங்கினார்கள். வாங்கியதிலிருந்து எங்களுக்கு அழகு செய்ய, நடை நடக்க, போர்ச்சுகீஸ் பேச, ஆட்டம் ஆட, முதலிய சிருங்கார வாழ்க்கைக்கான எல்லா வழிகளிலும்



பயிற்சி தந்து கொண்டிருக்கிறார்கள். பின்னால் என்னை வெள்ளைக்கார நாட்டின் உல்லாச மாளிகைகளுக்கு விற்பனை செய்வார்களாம்'' என்றாள்.

''அநியாயம் அநியாயம்! இந்த நாட்டு மண்ணிலா இது போன்ற வியாபாரங்கள் நடக்கின்றன. இந்தப் போர்த்துக்கீசியர்களை அழித்து ஒழித்துவிட்டு. . .'' நறநறவென்று பல்லைக் கடிப்பதோடு பேச்சை நிறுத்தினான் அர்ச்சுனன்.

வீரமாலி மெதுவாக அவனிடம் வந்து ''ஐயா, இங்குள்ள போர்த்துக்கீசியக் குடும்பங்கள் எல்லாவற்றிலும் இந்திய அடிமைகள் இருப்பார்கள். எல்லோரையும் விடுதலை செய்ய விரும்புகிறீர்களா? அல்லது சுவர்ணமுகியை மட்டும் தேட விரும்புகிறீர்களா?'' என்றான்.

அர்ச்சுனன் கண்கள் மெல்ல குளமாயின. தானே அடங்குபவன் போல், ''சுவர்ணமுகியை தேடினால் மட்டும் இப்போது போதும். அதுதான் நம் நாட்டிற்கு மிக முக்கியம்'' என்று கூறினான்.

''அப்படியானால் அந்தக் கேளிக்கை மாளிகைக்குப் போக வேண்டும். அங்கே ஒரு இரவில் நமக்கு வேண்டிய விஷயத்தைக் கிரகித்து விடலாம்'' என்றான் வீரமாலி.

''புறப்படு!'' என்றான் அர்ச்சுனன்.

''இப்போதல்ல! இரவு! இப்போது நம் பரிவாரங்களை உடனே இந்த நகருக்கு வெளியில் கொண்டு போய் மயிலாப்பூரில் விட்டு விடுவோம். இங்கிருந்தால் ஆபத்து! சிறிது முன்னால் நமக்கு இசைவாக இருந்த குருட்டு அதிர்ஷ்டம் எப்போதும் நம்முடன் இருக்கும் என்று சொல்ல முடியாது.''

இரவில் கேளிக்கை மாளிகைக்குப் போனார்கள். உள்ளே பாட்டும், கூத்தும், சூதாட்டமும் வலுத்திருந்தன.

வெவ்வேறு மேஜைகளில் வெவ்வேறு கும்பல்கள் சூதாட,

ஒரு மேஜை முன்னால் அர்ச்சுனனும் வீரமாலியும் அமர்ந்தார்கள்.

சற்று அப்பாலிருந்த மேடையில் ஐரோப்பிய சங்கீதத்துக்கு ஆடிக் கொண்டிருந்த ஒரு வெள்ளைப் பெண் அவர்கள் இருவரையும் உடனே தெரிந்து கொண்டாள்.

காலையில் அர்ச்சுனன் சூறையாடிய போர்த்துக்கீசிய வீட்டைச் சேர்ந்த இளம்பெண் அவள்.

அவள் இரண்டு திடகாத்திர வெள்ளைக்காரர்கள் காதுகளில் குசுகுசுத்து ஏதோ கூற, வெள்ளைக்காரர்கள் தங்கள் குறுக்கத்திகளை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு அர்ச்சுனன், வீரமாலி இருக்கும் மேஜையை நோக்கி வந்தார்கள்.

இருவரும் அந்த இருவர்களின் பின்னால் நின்றார்கள். அவர்கள் கைகள் இடுப்பு உள்ளே மெல்ல நழுவின.

* * * * *

**Justice in this Country (South India) is weighed and sold by weight of gold.**

**- Betrand**

# 16

ஓபோர்தோ என்ற அந்தக் கேளிக்கை மாளிகை எல்லா வெள்ளையருக்கும் சுவர்க்கமாக இருந்தது. குடி, சூதாட்டம், பணயம், பெண் போகம் ஆகிய மனித இச்சைகள் யாவற்றுக்கும் சுதந்திரமான இடம் கொடுத்தது அது.

இதனால் ஸாந்தோமேயின் கேந்திர இடமாக விளங்கியது அந்த மாளிகை.

ஊரின் பெரிய புள்ளிகள் எல்லாம் அதன் மடியில் எப்போதும் தவம் கிடந்தார்கள்.

வெள்ளை அழகிகளுக்கு அது ஒரு பணம் பறிக்கும் வேட்டக்களமாக இருந்தது.

பத்து வயதுச் சிறுமி முதல் ஐம்பது வயது பெண் வரை மனித சபலங்களின் எண்ணற்ற வகை முறைகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருந்தார்கள்.

இரண்டு போர்த்துக்கீசிய நபர்கள் தமது கைகளை இடுப்புக்குள் கொண்டு போக,

அதன் நுண்ணிய நிழல் ஜாடைகளை நுட்பமாக உணர்ந்தான் வீரமாலி.

அவன் வலது கால் மேஜை அடி வழியாக நீண்டு அர்ச்சுனனின் இடது காலிடம் சேதியைச் சொன்னது. இருவரும் மேஜைப் பலகை அடியில் தங்கள் கைகளைக் கொடுத்தார்கள்.

நான்கு கால்கள் மேல் இரண்டு இலைப் பலகை போட்டு அந்த மேஜையை உருவாக்கி இருந்தார்கள்.

அதை இருவரும் கவனித்திருந்தார்கள்.

இருவர் கண்களும் சர்வ கவனமுடன் அடுத்த நிழல் சலனத்தை எதிர்பார்த்திருந்தன.

சில விநாடிகளில் இரு வெள்ளையரும் ஒரு குதிக்கும் ஆத்திரமுடன் வீச்சென்று கத்தியை உருவினார்கள். உருவினதுதான் தெரியும். அவை மேலே போனதோ, காற்றை கீறி விட்டுக் கீழே இறங்கியதோ தெரியாது.

அவ்வளவும் நொடிப் பொழுதில் நடந்தவை.

கண்களால் உணரக்கூட முடியாது.

அவை இறங்கிய வேகத்தில் அவைகளின் குறுக்கே மனித உடல் வந்திருந்தால், அந்த ஆயுதங்கள் உடலின் அதள பாதாளத்துக்குள்ளே போயிருக்கும்.

ஆனால் வீரமாலி இடது புறமும், அர்ச்சுனன் வலது புறமும் நகர,

அந்தக் கட்டையான கத்திகள் இரண்டும் கோபக் கனலுடன் கரிச்சென்று காற்றில் சிதைந்து மேஜைப் பலகை மீது ஆக்ரோஷமாகக் குத்தி நின்றன.

குத்திய வேகத்தில் அவை பல அங்குலங்கள் உள்ளே, புகுந்து கிடுகிடுவென்று ஆடி நின்றன.

அடுத்த கணம் பலகை எழுந்த அதிசயம் அதைவிட ஜாலமாக இருந்தது.

இரண்டு கேடயங்கள் போல் அவை கிளம்பி இந்த இரு வெள்ளையர்கள் முகங்களிலும் பளீர் என்று அறைந்தன.

இருவரும் தடுமாற்றத்தில் விழ உள்ளே ஆஹாகாரம்.



டோமினோ ஆடிக் கொண்டிருந்த இருவர் சிங்கென்று துள்ளி வந்தார்கள். பலமாக வசைபாடி இந்தியர்கள் மீது பாய்ந்தார்கள்.

அவர்களுக்குத் துணையாக இன்னும் இரண்டு பேர் சேர்ந்தார்கள்.

அர்ச்சுனனும் வீரமாலியும் இதற்குள் நாற்காலிகளைத் தூக்கி விட்டார்கள்.

ஒற்றைக் கையால் சிலம்பாட்டம் ஆட கண்ணாடி டம்ளர்கள் டணார் டணார் என்று சிதறின.

மேலே கண்ணாடிக் கூண்டுகள் ஆயிரமாகச் சிதறின.

லோ லோ லோ என்று பெண்கள் கீச்சுக் குரலில் கத்தினார்கள்.

கவுன்கள் பறக்க வாசல் படிகளில் இடிபாடுகளோடு சிதறினார்கள்.

உள்ளே வெள்ளைக்காரர்கள் மேலும் பலர் ஒன்று சேர்ந்து கொள்ள,

அர்ச்சுனனும் வீரமாலியும் ஒரு நிஜ யுத்தமே நடத்த வேண்டி வந்தது. சளைக்கவில்லை. இங்கும் அங்கும் தாவிக் கிடைத்ததை எல்லாம் எடுத்துத் தாக்கினார்கள்.

கவுண்டரில் இருந்த கண்ணாடிப் பாத்திரங்கள் பறந்தன. கூஜாக்கள் மதுவுடன் போய்ச் சுவரில் மோதின.

நாற்காலிகள் பறந்தன. மேஜைப் பலகைகள் பறந்தன. எங்கும் கணீர் கணீர் என்று ஒசைகள் சிதறின. அவ்வப்போது ஒரு மனித ஒலி அவலமாக எழுந்தது.

சில நிமிடங்கள் வரை போர் மழை. பிறகு, பலத்த கூக்குரலுடன் வெள்ளைக்காரர்கள் வெளியே வழிய,

மெல்ல மெல்ல ஆர்ப்பாட்டங்கள் இறக்கையை மடித்துக் கீழே இறங்கிக் கொண்டிருந்தன.

ஒபோர்த்தோ மாளிகை மயான நிசப்தம் ஆன பிறகு, இரு இந்தியர்களும் ஒரு மனத் திருப்தியுடன் வெளியே வந்து படிகளில் எக்காளமுடன் காலை ஆற்றி நின்றார்கள்.

"பிரமாதம் வீரமாலி!" என்று அர்ச்சுனன் சொல்ல, "உங்கள் மல்யுத்தம் பிரமாதம்!" என்றான் அவன்.

டபீர் என்று அப்போது ஒரு சத்தம். இருவரும் திரும்பிப் பார்க்க, ஒரு நடு வயது வெள்ளையன், உள்ளே ஒளிந்திருந்தவன் பின்புறமாக வந்து அவர்களைச் சுட்டிருந்தான்.

அரை விரற்கடையில் குண்டு அர்ச்சுனனைக் கடந்து ஓடியது.

கோபாவேசமாக இருவரும் திரும்பி, கட்டடத்துள் மீண்டும் பாய்ந்து, அந்த வெள்ளையனைச் சுவர் ஓரமாகக் கிடுக்கினார்கள்.

வெள்ளையன் வியர்க்க விறுவிறுக்க மேலும் ஒரு முறை சுட்டு, கடைசியில் இளைப்பாகிக் கீழே விழுந்தான்.

அர்ச்சுனன் அவனைச் சொக்காயோடு தூக்கி நிறுத்தினான்.

முகவாயில் கும்மென்று ஒரு முஷ்டியை அடித்துச் சிதற விட்டான்.

"ஐயோ! ஐயோ!" என்றான் வெள்ளைக்காரன். "என்னை விடுங்கள் என்னை விடுங்கள்!"

மேலும் பல பூசைகள் கொடுத்துவிட்டு, ஒரு உடைந்த நாற்காலியில் ஒரு தள்ளுத் தள்ளினான் அர்ச்சுனன்.



"சொல்லு! இந்த ஊரில் இந்திய அடிமைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

நடுங்கிய குரலில் வெள்ளையன், "நூற்றுக்கணக்கிலே இருக்காங்க!" என்றான்.

"எந்தெந்த வீட்டிலே இருக்காங்க சொல்வியா?"

"சொல்றேன், சொல்றேன்."

"உனக்கு இந்த ஊர்தானே?"

"அநேகமா இந்த ஊர்தான்!"

"பெரிய குடும்பத்துப் பெண் யாராவது இங்கே அடிமையா இருக்காங்களா?"

"அநேகம் பேர் இருக்காங்க!"

"சுவர்ணமுகின்னு ஒருத்தி இருக்காளா?"

"யார் அவ? எப்படி இருப்பா?"

"உயரமா இருப்பா. தீர்க்கமான மூக்கு, உயர்ந்த குடும்பம். சந்திரகிரியைச் சேர்ந்தவள்."

"நெற்றியிலே சிவப்பு நாமம் போட்டிருப்பாளா?"

"ஆமாம்."

"அப்படிச் சொல்லுங்க!" என்று எழுந்து உட்கார்ந்தான் வெள்ளையன்.

"எனக்கு அவளைத் தெரியும். பத்திரமா இருக்கா."

"எங்கே?"

வெள்ளையன் தன் கோட் பையிலிருந்த பாட்டிலை உருவினான். "உங்கள் ஆரோக்கியத்துக்கு!" என்று சொல்லு ஒரு மடக்கில் பாதிப் புட்டியைக் குடித்தான்.

"எனக்கு ஒரு பலவீனம்! நம்பர் ஒண்ணு மது, ரெண்டு சூதாட்டம், மூணு கவிதை, நாலு பொண்ணு!"

''ஓகோ! சுவர்ணமுகி எங்கே சொல்லு!''

''எங்கே தெரியாது!''

''பத்திரமா இருக்கான்னு எப்படிச் சொன்னே?''

''அது தெரியும். ஒரு வெள்ளையன் கிட்டே இருக்கா!''

''யார் அவன்?''

''ட்ரேக் ராஜர். ஒரு தான்தோன்றி வியாபாரி! உதவாக்கரை! எனக்கும் அவனுக்கும்தான் போட்டி! யார் அந்தப் பெண்ணை வைத்துக் கொள்கிறதுன்னு!''

ராஜரின் பெயரைக் கேட்டதும்,

அர்ச்சுனன் திடீரென்று தீவிரமானான். அவன் மனத்தில் அதுவரை அரித்திருந்த ஒரு கவலை பக்கென்று அணைந்தது.

''ஓ! நீயும் அவனும் போட்டியா? எங்கே பார்த்தீர்கள் அவனை?''

''இங்கேதான்! கடற்கரையிலே! ஒலாந்தியன் வான் கோயன்ஸ் கொண்டு வந்தான். ராஜர் தனக்கு வேணும்னு சொன்னான். நான் விடல்லை. ரெண்டு பேரும் சண்டை போட்டோம். செம்மையாகத் தாக்கினேன். பெண்ணோடு ஒடிட்டான்.''

''எங்கே போனாங்க?''

''வடக்கேதான்.''

''ஓ!'' என்று சொல்லி அர்ச்சுனன் புருவத்தைத் தூக்கினான்.

சிறிது யோசித்தான்.

''உன் பேர் என்ன?''



''பிரான்ஸிஸ் டே.''

''டேயா?'' என்றான் அர்ச்சுனன் ஆச்சரியமாக.

'ஏன், என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''உனக்கு மசூலிப்பட்டினமா?''

''எப்படித் தெரியும்?''

''தெரியும். உன்னை ஆனகொந்தியில் பார்த்திருக்கிறேன்.''

''அடேடே!'' என்று எழுந்தான் டே.

''இங்கே ஏன் வந்தீர்கள்?'' என்று இப்போது மரியாதையுடன் பேச ஆரம்பித்தான் அர்ச்சுனன்.

''எனக்கு ஸாந்தோமே ஒரு பெரிய பொழுதுபோக்கு. என் அருமை டியானா இங்கே இருக்கா. இந்த கிளப் இங்கே இருக்கு! சூதாட்டம் என் அடுத்த உயிர்! என் டியானாவுக்கு அடுத்தபடி! அதனால் அடிக்கடி மசூலிப்பட்டணத்தை விட்டு இங்கே அடிக்கடி வருவேன். தங்குவேன், போவேன்.''

அர்ச்சுனன் கட்டடத்து நடுக் கூடத்தைப் பார்த்தான்.

அவன் விளைவித்த நாசம் முழுதும் கூளம் கூளமாகத் தெரிந்தது.

''உங்கள் கிளப்பை நாசம் செய்ததற்கு வருத்தமடைகிறேன். ஆனால் அதற்கு வலுவான காரணம் உண்டு. இந்தியர்களை நீங்கள் கேவலமாக்கி, அடிமையாக்கி இங்கே வச்சிருக்கீங்க! அது எங்களுக்குப் பிடிக்கலை. நல்லது டே! நாங்கள் வந்த காரியம் ஒரு மாதிரி முடிஞ்சு போச்சு. நாங்கள் வரோம்.''

கிளம்பினார்கள்.

''நாம்ப வடக்கே போறோம்!'' என்றான் அர்ச்சுனன் வீரமாலியிடம்.

நெருக்கமான மரங்கள் வளர்ந்திருந்த அந்த அடவியின் நடுவில் சுவர்ணமுகி வெகுநேரம் ஒரு புதர் ஓரம் படுத்திருந்தாள்.

ஆயாசமும் இளைப்பும் அவளை வெகுவாகச் சோர்வடைய வைத்தன.

நடப்பது நடக்கட்டும் என்று கண்ணை மூடிப் படுத்து விட்டாள்.

அது ஒருவித விரக்தி! உலகத்தின் மீதே அவளுக்கு வெறுப்பு வந்திருந்தது.

மௌனக் கண் கவிழும்போது, தூரத்தில் எங்கேயோ மனித அரவங்கள்; பல எச்சரிக்கைகளும் உத்தரவுகளுமாகக் கேட்டன.

நிச்சயம் அவளைத் தேடத்தான் ஆட்கள் வருகிறார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

அதைப் பற்றி அவுள் எந்த அக்கறையும் காட்ட வில்லை.

நடப்பது நடக்கட்டும் என்று இருந்து விட்டாள்.

கண்கள் சுழன்று வர மெல்ல தூக்கம் ஒரு கனமான பாரம் போல் இமைகளில் வந்து அழுந்தின.

சில விநாடிகள்தான்!

பிறகு அவள் சுவர்ணமுகி என்ற நினைவையே இழந்து தூக்கத்தின் நூறு பிருசம் ஆழத்தில் அப்படியே ஆழ்ந்து போனாள்.

தூக்கத்தில் ரொம்ப தூரம் போன பின் எங்கிருந்தோ அந்தக் குரல் வந்தது.

என்ன குரல்?



பழகிய குரல் போல் இருக்கிறதே!

குதிரை ஒன்று பைசாசம் போல் வந்தது.

அதன் உடம்பில் ரத்தம் மெழுகிய கோலம்.

அந்தத் தீ வெளிச்சப் பகலில் அது வருவதே வினோத பயமாக இருந்தது.

அது அவள் அருகில் வந்து நின்றதும்,

மேலே அந்த உருவம் தெரிந்தது.

களைத்து சோர்ந்து உலைந்த உருவம். யுத்த களத்தின் சூட்டிலிருந்து அப்போதுதான் வந்திருக்கிறது. அவனைப் பார்த்தால். . .

என்ன கம்பீரமாகப் பார்த்தான் அவன்!

என்ன அழகாகப் பேசினான் அவன்!

என்ன அக்கறையுடன் விஷயத்தைச் சொன்னான் அவன்.

அவன் உருவமும், அவன் குரலும் ஏன் அவள் எங்கு போனாலும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது!

அது ஒரு பெரிய விந்தை தானே!

இங்கே இந்தக் காட்டில் கூட அந்த உருவம் இதோ, இதோ, இதோ. . .

கண்ணை பக்கென்று விழித்தாள் அவள்.

தன் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளச் சில கணங்கள் ஆகின.

ஆகா! அரண்யத்தில் அல்லவா இருக்கிறோம்!

இவன் யார்?

யார் இந்த நபர்?

வாரிச் சுருண்டு எழுந்தாள் அவள்.

* * * *

**Extraordinary events threw into terror all inhabitants of this province**

**- Betrand**

## 17

கண்ணை விழித்தபோது சுவர்ணமுகியின் முன் நின்றது ஏனாதி குலப் பெண் ஒருத்தி. இருட்டுக்குக் காலும் கையும் முளைத்தது போல் கறுப்பாகத் தெரிந்தாள். சுவர்ணமுகியை விசேஷமாகப் பார்த்தாள்.

அப்போது 'அஹ்ஹஹ்ஹோய்' என்று தோதாவின் ஆட்கள் சுவர்ணமுகியைத் தேடி காட்டைக் கோதிக் கொண்டு வந்தார்கள்.

அந்தச் சத்தத்தைக் கேட்டதும் சுவர்ணமுகி பயந்து அந்தப் பெண்ணிடம் அபிநயம் காட்ட,

அவளும் அவளது காட்டுப் பாஷையில் விரைவாகப் பேசி, சுவர்ணமுகியை எழுப்பி அழைத்து ஒரு புதர் வளைவு வழியாக இழுத்துக் காட்டின் கர்ப்பத்துக்குள் போனாள்.

அரண்யம் என்பது எப்படி இருக்கும் என்று அன்றுதான் சுவர்ணமுகிக்குத் தெரிந்தது.

கோங்கு, தோது, தேக்கு, மருது, குங்கிலியம், நாவல், ஆச்சா, வாகை, புன்னை, மந்தாரம், அசோகம் ஆகிய வகை வகை மரங்கள் கூட்டமாக நெருங்கி வளர்ந்திருக்க,

அதைச் சுற்றி புஷ்பச் செடிகளும், கொத்தான்களும், எண்ணற்ற பசுமை வகைகளும் அடர்வாகப் படர்ந்திருக்க,



சூரியன் ஊசிச் சிதறல் கூட கீழே விழவில்லை. கனாந்தகாரமாக இருந்தது. இருட்டு நிரந்தரமாக வாசம் செய்ததால் இரவுப் பூச்சிகள் சதா சிணுசிணுத்துக் கொண்டிருக்க,

எங்கும் சமயத்தில் ஒரு சோகப் புலம்பல் போலவும், சமயத்தில் தண்டைச் சிலம்பு போலவும் ஒலிகள் தோன்றிக் கொண்டே இருந்தது.

ஏனாதியை நம்பிக்கையோடு பின்பற்ற, அவளும் அந்த அரண்யத்தைத் தலைகீழாக அறிந்தவள், கிட்டத் தட்ட கண்ணை மூடிக் கொண்டு நடப்பவள் போல் நடந்து போனாள்.

ஒரு இடத்தில் ஒரு தழைப் புதரை விலக்கிச் சென்றாள். மற்றொரு இடத்தில் ஒரு மரக்கிளையைத் தாண்டிச் சென்றாள்.

சில இடங்களில் இருட்டு வெகு இறுக்கமாக, தனது கையையே சுவர்ணமுகியால் பார்த்துக் கொள்ள முடியவில்லை.

தண்ணென்று ஒரு பனிக் குளிர்ச்சி. தரை அநேக இடங்களில் மெத்து மெத்தென்று புழுதி வகையாக இருந்தது.

அந்தகாரத்தின் நடுவே: தூரத்தில் பார்த்தால் இடைவெளிகளில் தெரிந்த சின்னச் சின்ன வெளிச்ச ஒட்டைகள் அவள் கண்களுக்குப் புலனாகி வந்தன.

ஏனாதி எதைப் பற்றியும் அஞ்சவில்லை. ராஜபாட்டையில் போவது போல் அனாயாசமாக நடந்தாள்.

சீக்கிரத்தில் ஒரு கிலுகிலு ஒலி மெல்ல உதித்துப் போகப் போக அவர்களை நோக்கி எதிர் வந்தது.

மர அடர்வுகள் சற்றுக் குறைந்து வந்து ஒரு இடத்தில் திடீரென்று வெட்ட வெளியாகி விட்டது. திடீரென்று ஒரு பரந்த காட்சி அவள் கண் முன் விரிந்தது.

புது உலகம் பார்ப்பது போல் எங்கும் குடிசைகளும், குடியிருப்புக்களும் தெரிய, அந்த ஏனாதி இனத்தவர்கள் கூடி சுறுசுறுப்பான பணிகளில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது.

இங்கும் அங்கும் பாறைகள் பூத உருவங்கள் போல் படுத்திருக்க, ஒரு பகுதிப் பாறைகள் மட்டும் சின்ன இயற்கை அரண் போல் சற்று உயரமாகக் குண்டும் திண்டுமாக வளர்ந்திருந்தன.

அவற்றில் ஒன்றிலிருந்து ஜரிகையிழை அருவி கீழே முப்பதடி விழுந்து பாறைகள் வழியே ஸ்படிக நிறத் திரவம் போல் வடிந்து ஒடியது.

ஏனாதிப் பெண்மணி அந்தச் சிவப்பு நிறப் பெண்ணை அழைத்துப் போக,

அதைத் தூரத்திலிருந்தே பார்த்த அத்தனை ஏனாதிகளும் புள்ளிகளாக அங்கங்கே ஸ்தம்பித்து நின்றனர்.

ஏனாதிகளுக்குப் பொதுத் தலைவர் என்று யாரும் கிடையாது.

ஒரே குடும்பத்தினர் ஒரே சமூகமாக வசிப்பார்கள்.

அந்தச் சமூகத் தலைவனிடம் சுவர்ணமுகியைக் கொண்டு போக,

அந்த வயதான தலைவர் அவளிடம் ஒருவிதத் தெலுங்கும் தமிழும் கலந்த பாஷையில் ஆதுரமாக வினவினார்.



ஒரு உயர்குலப் பெண் விரோதிகளால் விரட்டப் பட்டு வந்திருக்கிறாள் என்பதை அறிந்து,

அவளை வெகுவாக உபசரித்து, நல்ல வார்த்தைகள் சொல்லி, இனிய இரக்க மொழிகளால் அவளை இதமாக்கி, தனிக் குடிசை ஒன்றில் தங்க வைத்தார்கள்.

அர்ச்சுன தேவனும் வீரமாலியும் ஸாந்தோமேயை விட்டு வெளியேறினார்கள்.

மயிலாப்பூரை அணுகியதும் அர்ச்சுனன் குதிரையை இழுத்துப் பிடித்தான்.

''வீரமாலி! இப்படி வா!'' என்று சொல்லி ஒரு ஓடைச் சலசலப்பின் கரையில் நீர் பொசிந்த பசுந்தரையில் கால்களை நீட்டமாக விரவி அமர்ந்தான்.

''ட்ரேக் ராஜர் சுவர்ணமுகியை அழைத்துப் போவதென்றால் வடக்கேதான் போயிருக்க வேண்டும். எங்கே போயிருப்பான்'' என்றான் அர்ச்சுனன்.

''சுவர்ணமுகிக்கு யாரேனும் உறவுக்காரர்கள் இருக்கிறார்களா?'' என்றான் வீரமாலி.

''ரங்கப்பா இருந்தார். அவர் கொல்லப்பட்டார். ஆகவே நாராயணவனம் போக மாட்டள், சந்திரகிரிக்கும் போக மாட்டாள், காளஹஸ்திக்கும் போக வழியில்லை, நாகலாபுரமும் போக மாட்டாள். ஒருவேளை வெங்கிடகிரிக்குப் போயிருப்பாளோ?'' என்றான் அர்ச்சுனன்.

வீரமாலிக்கு சுவர்ணமுகியும் தெரியாது. அவளது உறவினர்களும் தெரியாது.

நாட்டில் எந்த நாயகர் கூப்பிட்டாலும் வில்லை எடுத்து சண்டைக்கு ஓடப்பட்டவன் அவன்.

வில் எறிவதில் அபார சாமார்த்தியம் அவனிடம் இருந்ததால் அவனைப் பொதுவாக எல்லோரும் விரும்பினார்கள்.

மயிலாப்பூர் தண்டநாயகனிடம் அவன் ஊழியம் செய்து கொண்டிருக்க,

அர்ச்சுனன் விரும்பியதால் அவனோடு புறப்பட்டு வந்தவன்.

''வெங்கடகிரியில் அவளுக்குத் தெரிந்தவர்கள் உண்டு'' என்று தொடர்ந்தான் அர்ச்சுனன்.

''அங்கே போவது இப்போது ஆபத்து ஆயிற்றே? விஜயநகர (வம்சத்து) குடும்பச் சண்டை இன்னும் முடியவில்லையே!'' என்றான் வீரமாலி.

''நீ சொல்வதும் சரிதான்! ஒருவேளை ட்ரேக்ராஜா அவளை மசூலிப்பட்டிணத்துக்கு அழைத்துப் போயிருப்பானோ?''

''அங்கே ஏன் போக வேண்டும் சுவாமி?''

''ஒரு விஷயம் கவனித்தாயா? இப்போது யாருக்காவது அமைதியான புகலிடம் வேண்டுமென்றால் வெள்ளைக்காரனின் கோட்டைக்குத்தான் போகவேண்டி இருக்கிறது.''

''அதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது சுவாமி!''

''அது நம் தலையெழுத்து! ஒருவேளை ட்ரேக்ராஜா அவளை ஒரு பாதுகாப்புக்கு வேண்டி அந்த ஊருக்கு அழைத்துப் போயிருப்பான்.''

''அப்போது அங்கே போகலாமா?''



''அதற்கு முன் ஒரு யோசனை.''

''சொல்லுங்கள் சுவாமி!''

''ஒருவேளை இந்தத் திருட்டுப் பயல்கள் இங்கேயே அவளை வைத்திருப்பார்களோ?''

''இந்த ஸாந்தோமே வெள்ளைகளா?''

''ஆமாம். அதுமட்டுமில்லை. எனக்கு ஒரு ஆசை. எல்லா இந்திய அடிமைகளையும் நாம் இவர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும்.''

''முடியாது. ஸாந்தோமுக்குள் வெள்ளையர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். சுதந்திரம் உண்டு. இதற்கான விஜய நகரப் பட்டயம் வைத்திருக்கிறார்கள்.''

''அதனால் என்ன? இப்போது இருக்கும் நாட்டுக் குழப்பத்தில் பட்டயத்தைப் பற்றிக் கவலைப்படுவது யார்?''

''அதுமட்டுமில்லை. வெள்ளைக்காரர்களிடம் நல்ல வீரர்கள் உண்டு. (ஆப்பிரிக்க) கப்ரேக்கள் உண்டு. துப்பாக்கிகள் உண்டு. குண்டுகள் உண்டு. அவர்களை வெல்வது நம்மால் முடியாது.''

''முடியும் வீரமாலி!''

''எப்படி?''

''இன்று ஒபோர்த்தோ சூதாட்ட மாளிகையை அடித்து நொறுக்கினோமே அது எப்படி?''

''அது ஒரு திடீர்த் தாக்கு. அதுமட்டுமல்ல. தாக்கிய நாம் அங்கே நெடு நேரம் நிற்கவில்லை. நின்று, அவர்கள் படையோடு வந்திருந்தால் சமாளித்திருக்க முடியுமா?''

''முடியாது. அது எனக்குப் புரியும். நான் விரும்புவது இந்தத் திடீர்த்தாக்கு, திடீர் மறைவு, இந்த யுக்தியைத்தான்.''

''சுவாமி!'' என்று குரல் தணிந்து கூறினான். ''ஈரமற்ற பிண்டாரிகள் அல்லவா அப்படிச் செய்வார்கள்!''

சிரித்தான் அர்ச்சுனன். ''நாம் அதைத்தான் இப்போது செய்ய வேண்டும். நாட்டில் இருக்கும் குழப்பத்தில் இப்படிச் செய்வதுதான் நமக்கு ஒரே வழி. தர்ம யுத்தம் செய்யும் காலம் மலையேறி விட்டது.''

''அப்படியானால் இது ஒரு வழிப்பறி!''

''ஆமாம்! ஆனால் கள்வர் செய்வதல்ல. படையினர் செய்வது. இன்று அதன் பலனை என் கண் எதிரே ஸாந்தோமேயில் பார்த்தேன். இதையே இனி கையாண்டால் என்ன? இதை அன்றி நமது நாட்டை உத்தாரணம் செய்ய எனக்கு வேறு வழி எதுவும் தோன்றவில்லை, மாலி!''

வீரமாலி சிறிது ஆழ்ந்து யோசித்தான். பிறகு தலையை மெதுவாக ஆட்டிக் கொண்டே ''ஆமாம், சுவாமி! தங்கள் எண்ணம் இப்போது புரிகிறது. இதுகூட சிறந்த யோசனைதான். ஏனெனில் நல்லதை நிலைநிறுத்த விரும்பும் ஒரு சின்னக் குழுவுக்குக் கூட இதன் மூலம் பெரிய பலன் கிடைத்து விடுகிறது.''

''ஒத்துக் கொண்டாயே? சரி! நாளை மயிலாப்பூரிலிருந்து இருபதுபேர்தான் கிளம்புகிறோம். காலையில் போய் நகர் உள்ளே புகுந்து தாக்குகிறோம். சூறையாடுகிறோம். உடனே மறைகிறோம். சரிதானா?''

''சரிதான்!''

ஸாந்தோமே அந்த இளங்காலையில் மிருதுவாக உறங்கிக் கொண்டிருந்தது.

அழகான லாந்தர் விளக்குகளால் இரவை மெல்லிய உஷத் காலமாக்கி, அருமையான மது, மாது, சூதாட்ட



வகைகளால் அதன் ஒவ்வொரு விநாடிகளையும் சொர்க்க, ஆனந்த உல்லாச சுகிர்தமாகக் கழிப்பது;

இரவுகள் நடுநிசித் தாண்டித் தேயும் போது மெல்ல ஆடிக் கொண்டே வீடுகளை அடைந்து தத்தம் பஞ்சணை மஞ்சங்களில் ஆனந்தமாக ஒரு தூக்கத்தை அனுபவிப்பது.

இப்படிப்பட்ட ஸாந்தோமேயில் அன்று காலை புலரும்போது,

இருபது ஈட்டிகளும் ஒரு தலைவனும் வெகு வேகமாக நுழைந்து கொண்டிருந்தார்கள்.

வந்தவர்கள் முதலில் வணிக வீதியை அடைந்து பெரிய மாளிகைகளின் வாயிற் கதவுகளைத் தாக்கினார்கள்.

அவர்கள் வந்த சில நிமிஷங்களில் வீதி திடீர் என உசுப்பி விடப்பட்ட குழந்தை போலப் பிரலாபிக்கத் தொடங்கியது.

''விடாதே! உள்ளே போ! வெட்டு! ஜெய வேங்கடராஜா! குத்து!'' என்று பெரும் கூக்குரல்கள்.

ஒவ்வொரு மாளிகையிலும் அவர்கள் நுழைய, அவை ஒவ்வொன்றிலிருந்தும் இந்திய அடிமைகள் பீறிக் கொண்டு வெளியே பீச்சினார்கள்.

திகில் கலந்து மகிழ்ச்சி அவர்கள் முகங்களில் ஓடியது.

''ஓடு! ஓடு! நிற்காதே! பரங்கியை அடி, கொல்லு!''

சத்தங்கள் எங்கும் ஆக்ரோஷமாகத் தெறிக்க, சீக்கிரம் அந்த நாகரிக வணிக வீதி தன் அழகை இழந்து ஒரு விதவை போல் ஆகிவிட்டது.

அர்ச்சுனன் மேலே மேலே ஆக்கிரோஷமாகப் போய்க் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு இடத்திலும் வெற்றிமேல் வெற்றியாக அவனுக்குக் கிட்ட.

அவன் கண் முன்னே விஜயநகரக் கொடி மேலே மேலே ஏறிக் கம்பீரமாகப் பறப்பது போலும்,

அதில் கிரீடம் தரித்த சுவர்ணமுகி புன்னகையோடு விகசித்து, சூரிய ஜோதியாகத் தெரிவது போன்றும்,

ஒரு அற்புதக் காட்சி ஜொலித்துக் கொண்டே வர,

ஹா, இதென்ன? இடுப்பில் இதென்ன கூர்மையான வலி!

முகம் உபாதையால் திருக, மெல்லத் திரும்பினான் அர்ச்சுனன்.

அவன் கண் விகாரமாகியது.

* * * * *

இடது கண்ணால் கடைக்கணித்து வசியப்படுத்துபவள் எப்போதும் அடிமையாக இருப்பாள்.

– சாமுத்திரிகா லட்சுணம்

## 18

அர்ச்சுன தேவனின் விலாப்புறம் ஆத்திர வெள்ளையன், நீண்ட ஈட்டியை வைத்திருந்தான். அதைப் பார்த்ததும் அர்ச்சுனன் திடுக்கிட்டான். அவனால் தப்பிக்க முடியாத நிலை. திருதிருவென்று விழிக்கும்போது, ''உன் ஆயுதங்களைக் கீழே போடு!'' என்றான் வெள்ளையன்.

அர்ச்சுனன் வாளைக் கீழே போட்டான்; அடுத்து வில்லைக் கீழே போடு முன் 'கணங்' என்ற சப்தத்துடன் அவன் விலாவைக் குத்தியிருந்த அந்த எதிரியின் ஈட்டி தரையில் உதிர்ந்தது.

ஆத்திரத்துடன் பார்க்க, ''டேய் முட்டாள்! கீழே இறங்கு! அவரை எதுவும் செய்யாதே!'' என்று கீழே தரையிலிருந்து கத்தினார் பிரான்ஸிஸ் டே.

அவர் கையில் நீளக் கத்தி இருந்தது. அதை வைத்துத்தான் அவர் அந்த ஈட்டிக்காரனைத் தட்டியிருந்தார்.

அந்த வெள்ளையன் கீழே டேயைப் பார்த்ததும் உடனே தயக்கமானான். கண்டிக்கப்பட்டவன் போல் அசட்டு முகத்துடன் கீழே இறங்கினான்.

அர்ச்சுனன் பெரிய மூச்சு விட்டான்.

டே அவனைப் பார்த்து, ''அர்ச்சுன்! நீங்கள் சுற்றும் பார்க்காமல் தாக்குகிறீர்கள். இந்தியர்களுக்கு இது பெரிய பலவீனம். தர்ம யுத்தம் என்று நேருக்கு நேர் நீங்கள் பரம்பரையாகச் சண்டையிட்டுத்தான் பழக்கம். இந்தக் காலத்துக்கு உதவாது'' என்றான்.

அர்ச்சுனன் கீழே குதித்தான்.

டே ஒரு மடக்கு புதுச்சேரி சாராயத்தைக் குடித்து விட்டு, ''ம், போங்கள்! இன்னும் இரண்டு வீட்டை முடித்துவிட்டு வாருங்கள்'' என்று உற்சாகமுடன் கூறினார்.

அர்ச்சுனன் உடனே தொடர்ந்து போய் மேலும் இரண்டு வீடுகளைச் சூறையாடிவிட்டு டேயிடம் திரும்பி வந்தான்.

டே கடகடவென்று போதைச் சிரிப்புச் சிரித்து, ''பிரமாதம்! போர்ச்சுக்கீசியருக்குச் சரியான பாடம்! எத்தனை அடிமைகள் ஓடுகிறார்கள் பார்!'' என்று சந்தோஷமாகக் கூறினார்.

தெரு ஒரு திருவிழா போல் கோலாகலமாய் இருந்தது. அடிமைகள் மகிழ்ச்சி புரண்டு ஓட, வெள்ளையர்கள் பீதியோடு பறந்து கொண்டிருந்தார்கள்.

எங்கும் குதூகலக் கூச்சல்கள், கூப்பாடுகள், இரைச்சல்கள், தூசி எங்கும் பறந்து காலை வெய்யிலைக் குழப்பமாக மறைத்திருந்தது.

மச்சு வீடு ஒன்றில் திமர் என்று தீப்பிடிக்க, அதுவும் அங்குள்ள பீதியை உச்ச நிலைக்குக் கொண்டு போய்க் கொண்டிருந்தது.

''டே! நாங்கள் வருகிறோம். இங்கே நின்றால் ஆபத்து'' என்று சொல்லி அர்ச்சுனன் குதிரை மீதேறி ஓட,

அவனது கும்பலும் உடனே அவனைப் பின் தொடர்ந்து சென்றது.

ஸாந்தோமே கோட்டையை விட்டு வெளியில் வெகு தூரம் போன பின் அர்ச்சுனனும் சகாக்களும் நின்றார்கள்.



திரும்பிப் பார்க்க, ஆச்சரியமாக டே கையில் குடுவையுடன் குதிரையில் குதித்து வருவது தெரிந்தது.

அர்ச்சுனன் கீழே குதித்து, அவரை இரு கைகளாலும் எதிர்கொண்டு, ''டே! உங்களுக்கு மிக்க நன்றி சொல்ல வேண்டும். நீங்கள்தான் என் உயிரைக் காப்பாற்றினீர்கள்'' என்று தழுதழுத்துக் கூறினான்.

''அர்ச்சுனன்! உங்கள் நன்றியைப் பிற்காலத்துக்குப் பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள். எனக்கு வேண்டும்போது வாங்கிக் கொள்கிறேன். நினைவுபடுத்தியே வாங்கிக் கொள்வேன். இப்போது ஒரு விஷயம். ஸாந்தோமேயைச் சூறையாடியதற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தப் போர்த்துக்கீஸியர்கள் எங்களுக்கு (ஆங்கிலேயருக்கு) ரொம்பத் தொல்லை கொடுக்கிறார்கள். ஆகவே, நீங்கள் இவர்கள் மீது ஒரு கல்லைப் போட்டாலும் அது எங்கள் நன்றிக்கு உரிமைப்பட்டது.

இரண்டாவது நான் சொல்ல வேண்டியது உங்கள் போர் முறை. இந்தியர்கள் போரில் திறமையைக் காட்டுபவர்கள். ஆனால் ஒழுங்கைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இது பெரிய பலவீனம். ஒரு படை எவ்வளவு திறமையாக இருந்தாலும் ஒழுங்கைக் காட்டாவிட்டால் நிச்சயம் தோல்வி அடையும்.

''இந்த ஒழுங்கு முறையை நீங்கள் பயிற்சி மூலம் அடைந்தால் பிரமாத வீரர்கள் ஆவீர்கள். யாருக்கும் பயப்பட வேண்டாம்'' என்றார் அவர்.

''நல்லது டே! வேண்டி வந்தால் எங்கள் படைக்குப் பயிற்சி அளிப்பீர்களா?'' என்றான் அர்ச்சுனன்.

''நிச்சயம் செய்வேன்! நீங்கள் பயிற்சி பெற்றால்தான் யாரையும் வெல்ல முடியும். டச்சுக்காரர்களும், போர்த்துக்கீசியரும் உங்களிடம் வாலாட்ட மாட்டார்கள்.''

''டே! பயிற்சிக்கு இப்பொழுது அவசியம் இல்லை. நாங்கள் வடக்கே அவசரமாகப் போகிறோம். பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.''

''நல்லது! ஒரு ரகசியம் சொல்கிறேன். பயிற்சி செய்யாத வரையில் நீங்கள் இப்போது செய்த போர் முறைதான் சரி! தாக்குங்கள், உடனே ஓடுங்கள்! இந்த முறையை அனுசரித்து மொகலாயப் படைகளைக் கூட நீங்கள் வெல்ல முடியும்!''

''புத்திமதிக்கு நன்றி சொல்கிறேன். அதைக் கடைப் பிடிப்போம். நாங்கள் வருகிறோம் டே! எங்களுக்கு வடக்கே நிறைய வேலை இருக்கிறது.''

''போய் வாருங்கள்! நான் கோவளம் போக வேண்டும். டியானா அங்கே போயிருக்கிறாள். ஸாந்தோமே சூறையானதை அவள் அம்மாவுக்குக் காண்பிக்க வேண்டும். அவள் அம்மாவின் முகம் போகும் போக்கைப் பார்க்க வேண்டும்.'' என்று பிரான்ஸிஸ் டே சொல்லி,

தமது கடைசியில் தெரிவித்த ஆசையில் லயிப்பவர் போல் முகத்தில் முறுவலாகி, குடுவையை உயரத் தூக்கி, மதுவைத் தாரையா வாய்க்குள் வார்த்து, ''இந்தியர்களே உங்கள் ஆரோக்கியத்துக்காக! உங்கள் ஆரோக்கியத்துக்காக!'' என்று பலமுறை கூவிக் கொண்டே இருந்தார்.

அர்ச்சனன் கோஷ்டியார் பறந்திருந்தார்கள்.



வெங்கடகிரிக்குச் செல்லும் பாதையில் ஒரு குக்கிராமத்துச் சத்திரத்தில் தோதா தண்டு இறங்கி இருந்தான்.

உள்ளே பெரிய கல்யாணக் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக வெகு ஆக்ரோஷத்துடன் உலாவிக் கொண்டிருந்தான்.

எட்டத்தில் கூடத்தின் வாயிலில் பலராமுடு சத்தியன், ஆதிகேசவலு ஆகிய அவன் சகாக்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

தோதாவின் சங்கடமான நிலையை அவர்கள் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காட்டையும், நாட்டையும் கோதி எடுத்து சுவர்ணமுகி கிடைக்காமல் திரும்பியவர்கள் அவர்கள்.

தோதா அவர்கள் தோல்வியைக் கண்டு வெகுவாகக் கலங்கியிருந்தான்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று கூறிப் பல்லைக் கடித்தவாறு உலாவிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது பொழுது சாயும் நேரம் மெல்ல அந்தி வெளிச்சம் சுருங்கி வர, எல்லோரும் சித்திரங்கள் போல் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

திடீரென வாசலில் சலசலப்பு ஏற்படத் தோதா அதட்டலான குரலில், ''என்ன, அங்கே?'' என்று கூவினான்.

''மெல்ல இறங்கு! மெல்ல! மெல்ல!'' என்று தீங்குரல் ஒன்று கேட்க,

தொடர்ந்து சலிங் சலிங் என்று புலம்பும் கொலுசுகள் தெளிவாகக் கேட்டன.

அதை அடுத்து, கஸ்தூரி, சந்தன, புனுகு வாசனைகள் கலந்து வர,

தோதா தன் நடையைத் தளர்த்திக் கடைசியில் புள்ளியாக நின்றான்.

வாசலில் பட்டுப் பல்லக்கு ஒன்று வந்து இறங்கியிருந்தது.

அதிலிருந்து ரத்னாவளியும், அதைத் தொடர்ந்து சித்ரகலாவும் இறங்கினார்கள். சித்ரகலா ரத்னாவளியின் பதினைந்து வயது மகள். இரு அழகிய வட்ட விழிகளால் எல்லாப் புறங்களையும் அதிசயமாகப் பார்த்துக் கொண்டு, தாயின் கரிசனமான வார்த்தைகளுக்கு இசைய மௌனமாகக் கால்வைத்து அந்தச் சத்திரத்துப் படிக் கட்டுகளில் ஏறினாள் அவள்.

நீளமான பின்னல் பின்புறங்களில் செல்லமாகத் தழுவ விட்டன.

சித்திரம் போல் கண்கள் இங்கும் அங்கும் அம்மானை ஆட, சத்திரம் ஒரு புதுக் களையுடன் உயிர் பெறத் தொடங்கியது.

முகம் சின்ன நிலாத் தட்டு.

அதில் இரு விழிகளும் இரு இருள் சிமிழ்கள்!

முதிர்ந்தும் முதிராத உதடுகளில் ஒரு பூஞ்சையான இளம் முறுவல்.

சின்னச் சந்தமும் சின்ன நடையும் கலந்த ஒரு வெண்பா போல் உள்ளே நுழைந்தாள் அவள்.

''தோதா இங்கேதானே இருக்கிறார்?'' என்று கேட்டுக் கொண்டு, அதற்கு மறுமொழி எதிர்பார்க்காமலே உள்ளே நுழைந்தாள் ரத்னாவளி.



கூடத்துள் அவளும் அந்தச் சின்னப் பூப்பேழையும் நுழைய, தோதா தனது கவலைகளைத் தற்காலிகமாக இழந்து உள்ளே வருபவர்களைப் பார்த்துப் பிரமித்து நின்றான்.

''ரத்னம்மா வரணும்'' என்றான்.

அந்தச் சின்ன சித்ரகலை மெல்லத் தன் பார்வையை நிமிர்வு செய்து, ஒரு மறுகலான லயிப்பை அரை நொடியே காட்டி, பிறகு தன்னிடம் இழுத்துக் கொண்டாள்.

ரத்னாவளி உடனே தோதாவை அழைத்துக் கொண்டு சத்திரத்தின் தனி அறைக்குப் போய்,

''தோதா! இதென்ன? தளவாய் (நரசய்யா) ரொம்பக் கோபத்தில் இருக்கிறார். நீ சுவர்ணமுகியைக் கொண்டு வராவிட்டால் உன்னைச் சிரச் சேதம் செய்வேன் என்கிறார்.'' என்று கலவரமாகக் கூறினாள்.

ஏற்கனவே அபிநயத்தில் தேர்ந்தவள்! இப்போது இயற்கையும் சேர, தனது கலவரத்தைத் திறமையோடு எடுத்துக் காட்டினாள் அவள்.

''தளவாய் அந்தக் காட்டு மாளிகைக்கு வந்தாரா?'' என்று ஆவலுடன் கேட்டான் தோதா.

''ஆமாம்! நீதான் வரும்படி ஓலை எழுதினாய். வந்தார். ஏமாந்தார். நல்லவேளை அந்த வேளையில் அவர் முன்னால் இல்லாமல் போய்விட்டாய்! இருந்திருந்தால் நீ அங்கேயே சமாதி! அவர் ஊருக்குத் திரும்பின பின்தான் நீ அனுப்பிய ஆள் வந்து சுவர்ணமுகி தப்பிவிட்ட செய்தியைச் சொன்னான். அவருக்குக் கோபமோ கொஞ்ச நஞ்சமல்ல! சுவர்ணமுகி வரவேண்டும். இல்லாவிட்டால்

தோதாவின் தலை வரவேண்டும் என்று கர்ஜிக்கிறார். தோதா! உனக்கு இந்தச் சோதனையான நேரம் வருமா?''

என்று பிகுபிகுவென்று ஒரு அபிநயக் கோபம் முகத்தில் படர, லேசாக விழி ஓரங்களை லளிதமான விரல் சுண்டுகளால் வடித்துக் கொண்டாள்.

''ரத்னம்மா! நான் செய்தது தப்பிதம்! அவள் தப்புவாள் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவளைக் கட்டி வைத்திருக்க வேண்டும். இப்போது நான் என்ன செய்வேன். காட்டையெல்லாம் கோதி விட்டேன். நாட்டையும் தேடுகிறேன். எப்படியும் அவளை விடமாட்டேன்.'' என்றான்.

அப்போது ஒரு தீவர்த்தியை உள்ளே தூணில் ஒருவன் நட்டுவிட்டுப் போக,

ஒரு பளீர் வெளிச்சம் எங்கும் பரவியது.

தோதாவின் கண்கள் அவசரமாக அந்த இளம்பெண் முகத்தைத் தேடின.

அவளோ, இந்த உலகில் இல்லாத மெய் மறப்பாக எங்கேயோ பார்த்து மறுகி இருக்க,

தோதா அவளைக் கவனிப்பதை ஜாடையாகக் கவனித்துத் தன் புன்முறுவலைத் தன் நுனி நாவால் துடைத்துக் கொண்டாள்.

''தோதா! உட்கார்! சித்ரகலா உட்கார்! தோதா! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும். என் மீது நம்பிக்கை வைத்துச் சொல்! என் மகள் மீது ஆணை! நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். நீ திறந்து சொல்லலாம்!'' என்றாள்.



திகைத்துப் போன தோதா, ''ரத்னம்மா! அப்படி என்ன கேட்க நினைக்கிறாய்?'' என்றான்.

''ஒன்றுமில்லை. உன் குணம் எனக்குத் தெரியும். உன் செய்கைகளும் எனக்குத் தெரியும். என்னிடம் மட்டும் மனம் திறந்து சொல்! சுவர்ணமுகியை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? அதை மட்டும் சொல்! நான் உனக்கு வேறு யுக்தி சொல்லித் தருகிறேன். தளவாயைத் தள்ளிவிடுவோம். நீ கவலைப்படாதே. நான் உன் பக்கம்'' என்று சொன்னவள், சித்ரகலாவை மெல்ல பார்க்க,

அவள் முறுவலாகி, ''எனக்குத் தாகம் எடுக்கிறதம்மா, தண்ணீர் கிடைக்குமா?'' என்று கேள்வியை ரத்னாவளி மீதும் பார்வையைத் தோதாவின் மீதும் போட்டாள்.

* * * * *

இங்கே (தமிழ்நாட்டில்) வசதியான பெண்கள் சித்திரப் புடவை உடுத்தி,கையில் தங்க வளையல் மோதிரங்கள் அணிகிறார்கள். அழகான தோற்றமுள்ள இவர்கள் வெளியில் நேர்த்தியாகவும், வீட்டில் மோசமாகவும் காட்சி தருகிறார்கள்.

– ஜான் நியோஃப் (1664)

## 19

சித்ரகலாவின் விழிச் சித்திரங்கள் தோதாவின் மீது விழுந்தன. அவன் மன இறக்கைகள் சடசடத்தன. எங்கேயேனும் பறக்கலாம் போல இருந்தது. அவள் கண்ணுக்குள்ளேயே பறக்கலாம். ஆகாயமாகத் தெரிந்தன அவை. அவ்வளவு அகலம், தூரம், விஸ்தாரம்.

''தண்ணீரா? இதோ வரேன்!'' என்று சொல்லி சொல்லி ஆளை விளித்து நீர் கொண்டுவரச் செய்தான்.

சித்ரகலா நீரைப் பருகினாள். பருகும்போது கடைக் கண்ணை மெல்ல அவன் மீது அவரோ கணித்தாள். அம்பு பட்டவன்போல் துடித்தான் அவன்.

ரத்னாவளி, உடனே, ''நீ ரொம்பக் களைச்சுட்டே, கொஞ்சம் சயனம் செய்யம்மா!'' என்று சொல்லி அடுத்த அறைக்குள்ளே சித்ரகலாவைக் கொண்டு விட்டு வந்தாள்.

பிறகு தோதாவைத் தன் அபிநயக் கண்களால் பார்த்து, ''சொல்லு தோதா! சுவர்ணமுகி எங்கே?'' என்றாள்.

''ரத்னம்மா! நீ கூடவா என்னைச் சோதிக்கிறாய்? உனக்கு விஷயம் தெரியாதா? உண்மையில் அவளை நான் இழந்து விட்டேன்'' என்றான் தோதா.



'அடேயப்பா' என்ற அர்த்தத்துடன் ஒரு பார்வை வீசினாள் ரத்னாவளி! இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கீழ் உதட்டை வாய்க்குள் மடித்தாள். ''ராயசம் கிருஷ்ண நாய்க்கன் வம்சமாச்சே நீ! லேசுலே சொல்றவனா? கல்லுளி மங்கான்!'' என்று வாயால் வலித்தாள்.

தோதா சங்கடமாக விழித்தான்.

''இல்லை ரத்னம்மா! நம்பு! சுவர்ணமுகி என்னோடு இல்லை. அவளை ஒளிச்சு வைக்கவும் இல்லை'' என்றான் அழாக்குறையாக.

''இருக்கட்டும் இருக்கட்டும்! யார் யார் எப்படி இருப்பான்னு எனக்குத் தெரியும்! இந்தக் குலத்திலே பிறந்து இதுகூடத் தெரியலைன்னா நான் தொழிலுக்கு என்ன லாயக்கு? சரி! சித்ரகலாவைப் பார்த்தியா?'' என்றாள் ஒரு காலை மடித்துக் கொண்டு.

''இப்போ வந்திருந்தாளே! அவள்தானே?'' என்றான் தோதா.

''ஆமாம்! என் கடைக்குட்டி! இன்னும் கன்னி கழியலை'' என்றாள், ரத்னாவளி. அவள் வலது கன்னத்தில் ஒரு குழி விழுந்தது.

தோதா உம்மென்று பலவீனமாகச் சொன்னான்.

''நரசய்யாவிடம் இவளைக் காட்டவில்லை. நரசய்யா என்ன? யாரிடமும் இதுவரை காட்டவில்லை. எனக்கு இஷ்டமில்லை. என் கடைக்குட்டி ரொம்பக் கெட்டிக்காரி. நக அழகு ஒண்ணையே இன்னிக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவளைப் போய்ப் பத்தோடு பதினொண்ணு அத்தோடு இது ஒண்ணுன்னு ராணி

வாசத்திலே (அந்தப்புரம்) சேர்க்கிறதிலே எனக்கு இஷ்டமில்லை. நரசய்யா பார்த்தான்னா இன்னிக்கே இவளைத் தூக்கிட்டுப் போய்த் தனி மாளிகையே கட்டி வச்சுடுவாரு! ஊஹூம் வேண்டாம். . .''

இவள் என்னத்துக்குப் பீடிகை போடுகிறாளோ தெரியலையே என்று அலமந்தான் தோதா.

''இந்தப் பெண்ணை இங்கே கொண்டு வந்திருக்கிறதிலே விசேஷம் இருக்கு. அவள் பிறந்தபோதே கையில் சக்கரம் இருக்கு, தரணியை ஆளுவான்னு காளஹஸ்தி ஜோஸ்யர் சொன்னாரு. அதுக்கு வேளை இப்போ வந்திருக்கு.''

பீடிகை பலமாக இருந்தது.

''எப்படிச் சொல்றே, ரத்னம்மா?'' என்றான் தோதா.

''ஏன், நாகலாதேவிக்கு வரல்லையா?'' என்று கேட்டு முகவாயைக் கைக் கிண்ணத்தில் வைத்தாள் அவள். தளுக்கு மட்டும் மூக்கில் ஆடியது.

'நாகலா தேவி' என்று மனத்துள் முணுமுணுத்தான் தோதா. அந்தத் தேவதாசிப் பெண் அரண்மனையிலிருந்து கொண்டு இளவரசன் கிருஷ்ணதேவனைத் தன் காதல் வலைக்குள் சிக்க வைத்தாள். கிருஷ்ணதேவன் அவள் மீது ஒரே மோகமானான். நாகலா அவனிடமிருந்து ஒரு சத்தியம் வாங்கிக் கொண்டாள். அவன் ராசாவாக மாறினால் அவளை அவன் பட்டமகிஷி ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அவள் எதிர்பார்த்தது போல, அவனும் ராசாவாகி, கிருஷ்ணதேவராயராக மாற, அந்தத் தாசிப் பெண்ணுக்குக் கொடுத்த சத்தியத்தை மறக்காமல்



அவளைத் தன் பட்டமகிஷியாக ஏற்றுக் கொண்டார் அவர்.

ராயரின் இந்த அற்புதக் காதலை எத்தனையோ பேர் தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் காவியமாகப் பாடி விட்டார்கள்.

இப்போது சித்ரகலாவை யாருடைய காதலுக்கு இலக்காக்கப் போகிறாள் இந்த ரத்னாவளி?

கேள்வியை அவளிடம் கேடடதும் ரத்னாவளி தனது பெரிய வாயில் பெரிய முறுவல் சொடுக்கி,

''ஏன்? நீதான் என் பெண்ணை ஏற்றுக் கொள்! நீயே ராசாவாக மாட்டாயா என்ன?'' என்றாள் அழுத்தமாக.

''நானா?'' என்றான் தோதா.

''ஆமாம்! இப்போ நாட்டில் யார் யார்தான் ராஜா ஆவார்கள் என்று சொல்வதற்கில்லையே! வாள் பிடித்தவர் எல்லாம் ராஜாவாகிவிடுகிறார்களே! பிரசித்தி பெற்ற விஜயநகர வம்சாவளி உடைந்து சிதறி விட்டதே! தலைக்குத் தலை சிங்காதனத்துக்குப் போட்டி போட, நாட்டில் ஒரு பலவானையோ புத்திசாலியையோ காண வில்லையே! இப்படி இருக்கும் சூழ்நிலையில், தோதா. . .'' என்று நிறுத்தினாள் ரத்னாவளி.

தோதா ஒரு கொக்கியான பார்வையை அவள் மீது தூக்கிப் போட்டான்.

''நீ ஏன் ராஜாவாக ஆகக் கூடாது? உன்னிடம் எந்தத் தகுதிதான் இல்லை? குணம், குலம் இருக்கிறது, பலம் இருக்கிறது. எல்லாவற்றையும் விட ராஜ்யலக்ஷ்மியே உன்னைத் தேடி வந்திருக்கிறாளே!'' என்றாள் ரத்னாவளி.

ராஜ்யலக்ஷ்மியா? எங்கே?'' என்றான் தோதா.

''பார், பார், பார்! என்னிடமே இந்தத் தேர் வடம் விடுகிறாயே! வேண்டாம்! சுவர்ணமுகி என்ற பெண்ணுக்கு மதிப்பு இல்லை. ஆனால் அவளிடம் இருக்கும் ரகசியம் இருக்கே, அது எவ்வளவு பெரிய மதிப்பு உடையது?'' என்றாள் அவள்.

''எதைச் சொல்றே, ரத்னாம்மா?''

''விஜயநகரப் பொக்கிஷம்! அது மட்டும் கிடைத்தால் ஒரு சாம்ராஜ்யத்தையே விலைக்கு வாங்கிவிடலாமே! அந்தப் பொக்கிஷ ரகசியம் சுவர்ணமுகியிடம் தானே இருக்கு!'' என்று கூறி ரத்னாவளி ஒரு 'அடிச்சான் தப்பல்' அபிநயித்தாள்.

''ஓகோ! பொக்கிஷத்தைத்தான் ராஜ்ய லக்ஷ்மின்னு சொன்னியா?'' என்றான் தோதா.

''ஆமாம்! இதை அடையத்தான் பல பேர் காத்திருக்காங்க. உன் கையிலே இதுதானா வந்து கிடைச்சிருக்கு. நான் சொல்றதைக் கேளு. என் மகளை ஏத்துக்க. உனக்கு என் ஐயாயிரப் படையைத் தரேன். பொக்கிஷத்தை எடுத்துக்க. ராஜ்யத்தைப் பிடி. எவன் எவனோ ராஜா ஆகிறான். நீயே ஆயிடு. பிரமாதமா ஆளலாம். எங்கே எனக்கு உறுதி கொடு!'' என்று சொல்லி கையை நீட்டினாள் அவள்.

தோதா தயங்க, அவளாகவே அவனுடைய கையை எடுத்து அழுத்தினாள்.

காலையில் அருவிக் கரையிலிருந்து சுவர்ணமுகி குளித்துவிட்டு வரும்போது கிக்கியு அவளோடு வந்தாள். ஏனாதி குலத்து இருபத்தைந்து வயதுப் பெண் அவள்.



கட்டுமான உடல் பிடிப்புடன் துறுதுறு என்ற விழிகளில் ஒரு கன்றுத் துள்ளலோடு இருந்தாள். எப்போதும் பூத்திருக்கும் சிரிப்பு.

இங்கு வந்த சில நாட்களில் அவளது சிநேகிதம் சுவர்ணமுகிக்கு மிகவும் பிடித்திருந்தது.

தனியாகக் குடிசை போட்டுச் சுவர்ணமுகிக்கு எல்லா, சௌகரியங்களையும் செய்து கொடுக்க ஏனாதி குலத்தார் கிக்கியுவை அனுப்பியிருந்தார்கள்.

குடிலுக்கு வந்ததும் சுவர்ணமுகி கையில் ஒரு ஓலையையும் தங்கக் கம்மலையும் வெளியே கொணர்ந்தாள்.

''கிக்கியு! ஜாக்கிரதையாகப் போவாயா?'' என்றாள் சுவர்ணமுகி.

''என்னோடு இரண்டு பேர் வராங்க. நீங்க கவலைப்படாதீங்க!'' என்றாள் கிக்கியு.

''முதல்லே நாராயணவனம் போய்ப் பாரு. யாதவ ரங்கநாதராயர் வீடு எது என்று கேளு. சொல்லுவாங்க! அங்கே போய் ராயரைப் பாரு. அவர் மட்டும் தனியாக இருக்கும்போது இந்த ஓலையைக் கொடு. வேறு யாரிடமும் கொடுக்காதே!'' என்றாள் சுவர்ணமுகி.

பிறகு அவள் கையில் கம்மலையும் கொடுத்து, ''உனக்குக் கஷ்டம் ஏற்பட்டால் இதை விற்றுக்கொள்!'' என்று கூறினாள்.

கிக்கியு அவளிடம் விடைபெற்றுப் போக, பாறைகளில் அவள் தாவிக் குதித்துக் கீழே இறங்கிப் போவதை சுவர்ணமுகி பெருமூச்சோடு பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவள் போன பிறகு கொந்தி என்று அழைக்கப்படும் ஒரு நடுவயதுக்காரி, அள்ளி முடிந்த கூந்தலுடன் கையில் கிச்சிலிப் பழங்களையும், பனங்கிழங்கையும் தூக்கிக் கொண்டு வந்தாள்.

''இந்தாம்மா! எடுத்துக்க! இன்னும் எத்தினி நாள் சொந்த மனுஷாளை விட்டு இருப்பியோ! ராணி மாதிரி இருக்கே. இப்படிக் காட்டுக்குள்ளே வந்துட்டியே!'' என்று வழக்கம்போல் அப்போதும் அங்கலாய்த்து உட்கார்ந்தாள்.

''நாட்டிலே பஞ்சம் கொந்தி! உறவுக்காரங்க போன இடம் தெரியலை. ஊருகரைங்களை விட்டு அவங்க அவங்க ஓடிட்டாங்க'' என்றாள் சுவர்ணமுகி.

''ஒருத்தர்கூட உனக்கு ஏதலையா அகப்படலையா? இப்படி காட்டி ஜனங்க கிட்டே இருக்கியே அம்மா!'' என்று மேலும் அவள் சுவர்ணமுகியின் துயரத்தைப் புதுப்பித்துக் காட்டினாள்.

அவள் அப்படிச் சொல்லும்போது அந்த இடத்தில் அழுதுவிடலாம் போல இருந்தது சுவர்ணமுகிக்கு.

பல்லை இறுகக் கடித்து, வார்த்தையை ஒன்றும் வெளிவிடாமல் இருந்தாள்.

''போகட்டும் கொஞ்சநாள் பொறுத்துக்க. வர்ற பௌர்ணமிக்கு ராசா வேட்டையாட வருவாரு! அவரோடு கூட சனங்களா வருவாங்க! அவங்ககிட்டே கேட்டியானா உன் சொந்த மனுஷங்க அகப்படுவாங்க!'' என்றாள் கொந்தி.

''எந்த ராசா வருவாரு?'' என்று முறுவலோடு கேட்டாள் சுவர்ணமுகி.



''நரச ராசா!'' என்று வாய் முழுக்குமாக உச்சரித்தாள் கொந்தி.

''என்ன ராசா?''

''நரச ராசா!'' என்றாள் அழுத்தந் திருத்தமாக.

சுவர்ணமுகியின் கண்கள் விரிந்தன. பார்வை கொந்தியை விட்டு எங்கோ காட்டுக்குள் ஓடியது. ''எப்போ வருவார்னு சொன்னே?''

''பௌர்ணமிக்கு.''

அப்புறம் கொந்தி பேசியதெல்லாம் சுவர்ணமுகியின் காதில் விழவில்லை.

வெறும் 'உம்'களாகக் கொட்டி, கடைசியில் அவளை ஒருவாறு வழியனுப்பிவிட்டு, குடிலுக்குள் உட்கார்ந்தாள்.

கைகள் தாமாகத் தலையைப் பற்றிக் கொண்டன.

நரசய்யா தளவாய் வந்தால் இந்த மலை ஜனங்கள் சுவர்ணமுகியைப் பற்றி நிச்சயம் சொல்லி விடுவார்கள்.

அல்லது அவர்களைக் கட்டுப்பாடு பண்ணினாலும் நரசய்யாவின் ஆட்கள் ஒருவேளை இந்தக் குடியிருப்புக்குள் வந்து அவளைக் கண்டு பிடித்தாலும் பிடிப்பார்கள்.

ஒரு பாதுகாப்புக் கிடைக்கிற வரை இங்கே தங்கலாம் என்று சுவர்ணமுகி நினைத்திருந்தாள். அது நடவாது போல இருக்கிறதே!

துக்கம் இருட்டைப் போல அவளைச் சூழ, பகல் முழுதும் எதுவும் ஓடவில்லை. சாப்பிடவும் இல்லை.

என்னென்னவோ பயங்கள் வந்து ஓடின.

இந்த நாடு சீராகி எப்போது அமைதி அடையப் போகிறது.

ஒரு தலைமுறையாக ஜனங்களும் ராஜ குடும்பங்களும் அல்லாடுகின்றனவே, என்று நினைத்தாள் அவள்.

மெல்ல இரவு படர,

தாரகைகள் சின்ன முருக்கம் பூக்கள் போல் வானம் எங்கும் அலர்ந்தன.

மெலிதான ஒரு கனவு வெளிச்சம், அந்தப் பிராந்தியம் முழுவதும் பரவியது.

பெரிய அரண்யத்தின் அருகில் இருந்ததால் அந்தப் பிரதேசத்தை ஒரு அமிதமான நிசப்தம் சிக்கென்று மூடியது.

காட்டுக்கு உரிய பசமை கலந்த வாடை உள்ளே குடிலுக்குள் வந்து மெல்ல அவளைத் துவட்டியது.

மனம் ஒரு கனமான அமைதியோடு கீழே படிய,

தூரத்தில் ஒரு பெண் பாடும் காதல் பாட்டு மெல்ல ஒரு புகை போல் அந்தப் பிரதேசம் முழுதும் நிறைந்தது.

காதல் பாட்டு எனினும் அவள் பாடும் தொனியில் அது சோகம் கலந்து தெரிந்தது.

இங்கே வந்த சில தினங்களுக்குள் கிக்கியுவிடமிருந்து அவள் ஏராளமான விஷயங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறாள்.

இங்கே அண்ணியைப் பார்த்து மைத்துனன் பாடும் காதல் பாட்டும், மைத்துனனைப் பார்த்துக் கொழுந்தி பாடும் காதல் பாட்டும்தான் அதிகமாகப் பாடப்பட்டன.

பாடும்பொழுது அவர்கள் தொனியில் இழையும் கிளுகிளுப்பு கேட்பவர் மனத்தை ஏதோ செய்துவிடும்.



இன்று இந்த இரவு வேளையில் சுவர்ணமுகியின் மனத்தை அது அப்படித்தான் செய்தது.

எங்கேயோ புகுந்து இனமில்லாத சுருதியை மீட்டுவது போன்று இருந்தது.

தனக்கு நேர்ந்ததை எல்லாம் நினைத்துப் பார்த்தாள் சுவர்ணமுகி. சோதனைகள் ஒன்று மாறி ஒன்றாக வந்த வண்ணம் இருக்கின்றன. இன்னும் நின்றபாடில்லை.

மெல்ல அரை நிலாவின் வெளிச்சம் ஒரு வெள்ளித் துணி போல் உள்ளே படிய,

அவள் கண்கள் இரண்டும் நீர் நிறைந்த இரு வாவிகளாக மாறிவிட்டன.

வெகுநேரம் கண்களைத் துடைத்த வண்ணம் இருந்தாள். பிறகு, மெல்லக் கண் அயரும்போது,

அந்த ஓசை,

குதிரை தன் கால்களைத் தூக்கி வைத்து வரும் குளம்பு ஓசை, அவள் மனசில் மட்டும் கேட்டது. மனக் கண் முன் அந்தக் காட்சி உற்பத்தி ஆகியது.

உடம்பு முழுதும் ரத்தம் பூசிய அந்த இளைஞன் என்ன கம்பீரமாக வந்தான்!

தன் வலியையும் உபாதையையும் பொருட்படுத்தாது எவ்வளவு அழகாகப் பேசினான் அவன்!

பாபம்! அவனுக்கு நிறைய உதவி செய்திருக்க வேண்டாமோ?

அவன் காட்டிய எதிர்ப்பையும் சட்டை செய்யாது அவனைத் தூக்கி பல்லக்கில் போட்டு ஒரு மருத்துவரிடமும் காட்டியிருக்கக் கூடாது? இப்படி இங்கிதம் தெரியாத பெண்ணாக இருந்தேனே!

அப்படிச் செய்யாமல் அவனை வெய்யிலுக்கு இலக்காக்கி அந்தக் கட்டாந்தரையில் போட்டு விட்டு வந்தோமே!

எவ்வளவு பெரிய தப்பு அது!

கனவுக்குள் இன்னும் குளம்பொலிகள் கேட்டுக் கொண்டே இருந்தன.

டக்கு டக். . . டக்கு டக். . .

அந்தச் சப்தங்கள் பெரிதாகி வர, அவை கனவுக்குள் மட்டும் கேட்கவில்லை, நிஜமாகவே குடிலுக்கு வெளியே கேட்கிறது என்று தெரிந்ததும் கண்களைத் திடுக்கிட்டு விழித்தாள் அவள்.

* * * * *

*கண்ணாரக் கண்டய்யன் கட்டழகைச் சேவித்தேன்;*
*எண்ணாதெல்லாம் நினைந்தே யெண்ணினேன்.*

–முத்து வீரப்பபிள்ளை
மான்விடு தூது', (15 ஆம் நூற்றாண்டு)

## 20

சுவர்ணமுகி அந்தச் சத்தத்தைத் தனது எத்தனையோ பிரமைகளில் ஒன்றாக நினைத்தாள்.

ஆனால் குளம்பு ஒலியைத் தொடர்ந்து சின்னச் சின்ன பாத சிராய்வுகள் கேட்க,

போர்வையை உரித்துவிட்டு எழுந்தாள்.

வாயிலைப் பார்த்தாள். நிலா அரைத் தூக்கமாகக் கிடந்தது. சிள் சிள் என்று எங்கும் பூச்சிச் சிணுக்குகள். காட்டுக்குள் அவ்வப்போது பிராணிகளின் தீனங்கள்!

வாயிலுக்கு வந்தாள்.

வெளியே ஒரு சொப்பனம் பூத்திருந்தது.

எங்கும் மாயமான மிருது வெளிச்சம். இயற்கையே மயக்கம் கண்டது போல் காட்சி! உலகம் ஜடமாக ஸ்தம்பித்திருந்தது. உயிரற்ற வெறும் வரை சித்திரம்!

அவளது குடில் பாறை மேல் இருந்தது. கீழே இறங்கக் கரடுகளாகப் படிகள்.

அந்தப் படிகளின் முடிவுக்கு அப்பால் மண் தரையில் அவள் பார்த்ததும் ஒரு கணம் மூச்சு நின்றது. அது என்ன உருவம்?

பிரமையா, கனவா, ஆவியா, பிம்பமா, ஜாலமா?

கண்களைக் கசக்கினாள். பார்த்தாள். குபீர் என்று நெஞ்சை அடைத்தது உணர்ச்சி.

உருவம்தான், நிஜ உருவம்தான்.

அது அந்த வீரனா?

திருப்பதி அருகில் குதிரை ஏறி வந்து அவளைச் சந்தித்த இளைஞனா?

திரும்பவும் கண்களைக் கசக்கினாள். மீண்டும் பார்த்தாள். அவள் பார்ப்பது ஆவி இல்லையே?

முன்னால் ஓர் அடி எடுத்து வைத்தாள்.

பார்வையைத் தீவிரமாக்கிப் பார்த்தாள். அவன் மட்டுமல்ல! அவனருகில் சற்று விலகி ஒரு குதிரையும் நின்றது.

நின்றது மட்டுமல்ல! வாலையும் ஒரு முறை சுழற்றி அவள் கண் முன்னால் அடித்தது.

இதற்கு மேல் தாளாது போக, அவள் வாய் திறந்து, "யார் நீங்கள்?" என்று கேட்டாள்.

அந்தப் பிரதேசத்தில் இருந்த சொப்பனத்தன்மையே அவள் பேச்சால் கலைந்தது.

இளைஞன் உடனே பதில் சொல்லவில்லை.

இரண்டு படிகள் ஏறி வந்து நின்றான். "இளவரசி!" என்றான்.

அவள் இதயம் வெளிப்புறம் குதித்தது. கண்களில் நீர் முட்டியது. அது அவன்தான்! அவன் குரல்தான்!

இருந்தாலும், "யார் நீங்கள்?" என்றாள் சிறிது அழுத்தமுடன்.

அவள் கேட்டதும், அவனது உறுதி சிறிது சிதறியது.

அந்தப் பழைய நாகலாபுரம் சம்பவத்தை நினைத்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடந்தது. அந்தச் சூரியப் பொட்டு விழாவுக்குத் திரள் திரளாக ஜனங்கள் வருவார்கள். காணாதவர்களை யெல்லாம் காணலாம். திருவிழாபோதுதான் அபூர்வ உறவுக்காரர்கள் கூடச் சந்திப்பார்கள்.



அந்தப் பல்லக்குகளில் ரங்கப்பாவுக்காக அவன் காத்திருக்க,

கடைசியில் அவர்கள் வீட்டு இரு முத்துப் பல்லக்குகள் வந்தன. "வழி, வழி" என்று இரைச்சல்! ஒரு ஜன அலை மடிந்து ஓடியது.

முதல் பல்லக்கை அவன் அணுக, அதன் திரையை விலக்கிக் கொண்டு ஒரு இளம் பெண் இறங்கினாள்.

ஒரு கணம் அவள் முக வெளிச்சம் பளீர் என்று மினுக்கியது.

ஒரு மின் ஒளி பாய்ந்தது என்றே அவன் நினைத்தான்.

அப்படி நிலவுப் பாலாக முகம். இரு கண்களில் இரு விளிம்பு கட்டிய கடல்கள். மெல்லிய அதரத்தில் மாதுளம் பசுமை.

இறங்கியவள் துள்ளி, மேலாடை எடுத்துத் தன்னைப் போர்த்திக் கொள்ள,

ஒரு ஒளி அணைந்தது போல் அவன் உணர்ந்தான்.

எனினும் அந்தச் சன்னமான போர்வை வழியே அவளது அழகு மெல்லிய ஜரிகை இழைகளாக இங்குமங்கும் பொட்டுத் தெறித்துக் கசிந்து கொண்டிருந்தது.

அந்த இளைஞன் தன் பிரமிப்பிலிருந்து மீள வெகு நாழிகை ஆகியது.

பின்னர் இரவில் ஏனோ அந்தக் காட்சி அடிக்கடி அவன் மனத்தில் தோன்றி மறைய, உள்ளத்தில் ஊமையாக

வலி எழுந்தது. 'இவளிடம் என்ன இருக்கிறது!' என்று நினைத்தான். அபூர்வமான அழகு! அபூர்வமான முக வெட்டு. உடல் முழுதும் அவளது வசந்த கால பரிணமிப்புகள். எல்லாம் சேர்ந்து என் மார்பைப் பிடித்து அழுத்துகின்றனவே என்று நினைத்தான்.

அன்று மட்டுமல்ல. பல இரவுகள் அவன் உறங்க முடியவில்லை. அவள் நினைவுகள் ஒரு சுகமான கனமாக அவனை அழுத்தியது. இன்பமும் இருந்தது. வேதனையும் இருந்தது.

இதன் பிறகு ராஜ்ய காரியங்களும் குடும்ப வேலைகளும் அவனை வெவ்வேறு திசைகளில் இழுத்துச் செல்ல,

அதிசயமாக, அவளது நினைவும் அவனுடனேயே தொடர்ந்து வருவதை உணரத் தொடங்கினான்.

தொடரும் நினைவுகள் அவனைச் சும்மா இருக்க விடவில்லை.

அடிக்கடி தனிமையில் நின்று பெருமூச்சு விட்டான்.

வெறும் சூன்யத்தைப் பார்த்துப் பிரமையோடு விழித்தான்.

சில சமயம் இன்னதென்று சொல்ல முடியாத ஏக்கம் அவன் இதயத்தில் புகுந்து ஒரே வேதனையைக் கொடுத்துவிட்டுச் சென்றது.

இது என்ன அதிசயம்! என்ற எத்தனை முறை அவன் நினைத்திருக்கிறான்!

எப்போதும் வேதனையே தரும் ஒரு நினைவை அவன் ஏன் மனதார நேசிக்கிறான்?



அவனது காரியங்கள் மிகுந்த அன்றாட வாழ்க்கையில், பலமுறை அந்த நினைவு அவனை விட்டு விலகிச் சிறிது மறைந்த போதிலும்,

பின்னர் எப்போதாவது அவன் ஏமாந்து இளைப்பாறும் நேரத்தில் இரண்டு மடங்கு வேகத்துடன் அந்த நினைவு வந்து அவனை ஆக்கிரமித்துவிடும்.

சீக்கிரத்தில் அந்த நினைவு அவன் மனத்தில் ரகசியமாகத் தாலாடும் நினைவாக மாறிவிட,

அவனுக்கு அந்தப் பெண் வாழும் நாராயண வனமே சுவர்க்க லோகமாக, பூங்காவாகத் தோன்றியது. ரங்கப்பாவின் வீடு புனிதத் திருமாளிகையாகத் தோன்றியது.

எவ்வளவோ ஆர்வப்பட்டும் அந்தப் பெண்ணை மறுமுறை அவன் பார்க்கவே இல்லை.

இன்று இந்தக் காட்டு மத்தியில் ஒரு குடிலின் முன்புறத்தில் நடுநிசி வேளையில் அவளைப் பார்க்கும்போது,

அவளை அந்தப் பழைய தொடர்போடு நினைவுபடுத்தி நினைக்கும்போது,

''நீங்கள் யார்?'' என்று அவள் கேட்கிறாளே, மனம் என்னமாகக் கொந்தளித்தது?

''கடவுளே! இவள் அதே பெண்ணாக இருக்க வேண்டுமே!'' என்று உள்ளம் எவ்வளவு உருக்கமாகப் பிரார்த்தனை செய்தது.

''இளவரசி!'' என்றான் அவன். ''என்னைத் தெரியவில்லையா? திருப்பதியிலிருந்து நீங்கள் வரும் வழியில் சந்தித்தேனே!'' ஆவலோடு கேட்டான் அவன்.

சுவர்ணமுகியின் முகம் பாகு போல் இளகியது. பல்லை இறுக்கி, மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு என்ன பேசுவது என்று அவள் யோசிக்கும்போது,

"இளவரசி! ரத்தக் களறியாக அப்போது வந்தேன். சேடி என்று உங்களைக் கூறிக் கொண்டதையும் நம்பினேன். நான் அப்போது ஒரு ஜீவ நிலையில் இல்லை. அநேகமாக இறந்திருந்தேன். உலகமோ, அதிலிருக்கும் ஆட்களோ எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. நான் மரணதேவனை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டிருந்தேன்."

"ஓகோ!" என்றாள் சுவர்ணமுகி. "அப்புறம் தப்பி விட்டீர்களாக்கும்!"

ஒரு அங்கலாய்ப்பில் தனது ஆவலை வடித்து விட்டாள்.

உண்மையில் அவன் எப்படித் தப்பினான், அவள் கண் முன்னே நின்ற அதே வீரனா என்பதை அவன் வாய் மூலமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு என்ன ஆசை அவளுக்கு?

"ஆமாம், இளவரசி! முள் மரத்தடியில் என்னைக் கிடத்தி விட்டுப் போனீர்கள்! நான் இறந்திருப்பேன். ஆனால் என்னை வாழ வைத்தது என் துரோகியான நண்பன்" என்றான் கோபமாக.

"யார் அது?"

"இப்போது தங்கள் துயரங்களுக்குக் காரணமாக இருக்கிறானே அவனேதான்! தோதா! நீங்கள் போன பிறகு அவன் அந்த மரத்தடிக்கு வந்து என்னைப் பார்த்தான்."



"உதவி செய்தாரா?"

"இல்லை. என்னை அங்கேயே பரிதவிக்க விட்டு, கெக்கலித்து வார்த்தை சொல்லி ஓடிவிட்டான். அப்போதுதான் அவனது நயவஞ்சகத்தனம் தெரிந்தது. அவனது வஞ்சம் தெரிந்த அதே கணத்திலேயே நான் வாழ நினைத்தேன். உயிர் எப்படியும் பெற வேண்டும் என்று துடியாகத் துடித்தேன். கடவுள் எனக்கு அருள் புரிந்தார். அங்கே வந்த கன்னட பைராகிகள் என்னைக் காப்பாற்றினார்கள்."

சுவர்ணமுகி அவனை மெலிதாகப் பார்த்தாள். அவள் உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள்! எனினும், தனது ராஜ பரம்பரையின் பண்புகள் காரணமாக, தன் உள் ஆர்வங்களை அடக்கிக் கொண்டு, "இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று மட்டும் கேட்டாள்.

அர்ச்சுனன் தனக்கு நேர்ந்ததையெல்லாம் கூறி, கடைசியில் துப்பு விசாரித்துக் கொண்டு அந்தக் காடு வரை வந்து விட்டதைக் கூறினான். தனது சின்னப் படையை அரண்யத்துக்கு வெளியே ஒரு மாளிகையில் நிறுத்தி வைத்துவிட்டு அவன் மட்டும் தைரியமாகக் காட்டுக்குள் புகுந்து வந்ததைக் கூறினான்.

"இளவரசி! தோதா இங்கே எங்கேயாவது சமீபத்தில் இருப்பான். நிச்சயம் இங்கே உங்களைத் தேடி வருவான். அதற்குள் நீங்கள் போய்விடுவது நல்லது. எனக்கு அனுமதி கொடுத்தால் என் படையையும் பல்லக்கையும் அழைத்து வருவேன். காலையில் நீங்கள் கிளம்பி விடலாம்!" என்றான்.

"ஐயா! பொறுங்கள்! காலை வரை இங்கே இளைப்பாறுங்கள்! பிறகு போகலாம்" என்றாள் அவள்.

''இல்லை இளவரசி! நேரமில்லை. உடனே நீங்கள் இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாக வேண்டும். இல்லாவிடில் ஆபத்து! நரசய்ய தளவாய் தோதாவை நம்பாமல் அவரே ஒரு படையுடன் இந்தக் காட்டை நோக்கி வருவதாக எனக்குச் செய்தி வந்தது. காலை வரையில் பொறுக்க முடியாது'' என்றான் அவன்.

''நல்லது!'' என்றாள் சுவர்ணமுகி. ''பத்திரமாகப் போய் வாருங்கள்!''

''சீக்கிரம் வருவேன். அதுவரை எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இருங்கள்'' என்று கூறிப் படிகளில் விரைவாக இறங்கினான்.

''வருகிறேன்'' என்று கூறிக் குதிரை மேல் தொத்தி ஏறினான்.

சுவர்ணமுகி அவனைத் தன் மெழுகான கண்களோடு பார்த்தாள்.

சற்று எட்டத்தில் அவன் போனதும் அவனைக் கூப்பிட வேண்டும் போலத் தோன்றியது.

சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

கீழே பாறைகளின் இடுக்குகளில் குதிரையும் அவனும் நிழல்களாகப் போனார்கள்.

சீக்கிரம் நிழல்கள் மறைந்துவிட, மிக மெல்லிய குளம்பு ஒலிகள் அவள் காதுகளில் நுட்பமாக வந்து விழுந்தன.

பொழுது விடிந்து வானம் மினுமினுப்பாகிக் கொண்டிருந்தபோது,

முதலில் அவள் காதுகளில் வகைப்படுத்த முடியாத கோஷம் ஒன்று விழுந்தது.



திடுக்கிட்டு எழுந்தாள்.

அது உண்மையா என்று நினைக்கும்போது ஒரு ஆரவாரமே தெளிவாக அவள் காதுகளில் விழ ஆரம்பித்தது.

அவளுக்கு ஒரு திகைப்பு ஏற்பட்டது.

என்ன நடக்கிறது?

காட்டில் ஏதாவது கலவரமாகி அல்லது சமுத்திரம் ஏதாவது பொங்கி வருகிறதா?

தடதடவென்று காலடிச் சத்தம். கொந்தி ஓடிவந்தாள். ''அம்மா ராஜ படை வருகிறது. ஒளிஞ்சுக்கோ'' என்றாள்.

''ஏன்?'' என்று கலவரத்துடன் கேட்டாள் சுவர்ணமுகி.

''அழகான பெண்ணுக்கெல்லாம் ஆபத்து. நரசய்யா தளவாய் வரார். எல்லாப் பெண்களும் ஒளிஞ்சுக்கிறாங்க பார், நீயும் போ'' என்றாள் அவள்.

சுவர்ணமுகி கலக்கத்துடன் குடிலை விட்டு வந்து படிகளில் இறங்க ஆரம்பித்தாள்.

* * * * *

அவர்களது வறுமையைத் தவிர ஜனங்கள் பல அநியாய வரிகளையும் கொடுமைகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டி வந்தது. அரசர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டே இருந்தார்கள்.

—ஜான் டி பிரிட்டோ

## 21

அர்ச்சுனன் காட்டுக்கு ஊடே விரைவாகச் சென்றான். ஒரு ஓடையைப் பின்பற்றி நெடுந்தூரம் சென்று, ஒரு பரந்த கருங்கல் பாறை வெளியைக் கடந்து புக்கரஜா குளத்தின் கரை வழியாகப் பிரயாணித்து, சிறிது தூரம் ஒற்றையடிப் பாதையில் சிரமப்பட்டுக் கடைசியில் அந்தச் சந்திரிகிரிச் சாலையை அடைந்தான்.

இருள் கரைந்து கொண்டிருந்தது. கிழக்கே உஷையின் குறுநகை குங்குமமிட்டது. குதிரை மிகவும் சோர்ந்து தலையைத் தொங்கவிட்டது.

ஆச்சரியமாக அவன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் அவனது பரிவாரங்களைக் காணவில்லை.

அதற்குப் பதிலாகக் காரிவண்ணன் என்ற குதிரை வீரன் மட்டும் நின்று கொண்டிருந்தான்.

''ஐயா வந்ததும் அழைத்துக் கொண்டு வரச் சொன்னாங்க'' என்றான் இரு கைகளாலும் வணங்கி.

''எங்கே போனார்கள்? என்ன நடந்தது?'' என்று பரபரப்புடன் கேட்டான் அர்ச்சுனன்.

''ஏதோ செய்தி வந்தாப்போல, மாமுண்டி சத்திரத்துக்கு உங்களை கூட்டியாரச் சொன்னாங்க.'' என்றான் வீரன்.



''வா, போகலாம்'' என்று அவர்கள் விரைந்தார்கள். அர்ச்சுனன் குதிரை கடந்த பல தினங்களில் மிகவும் உழைத்திருந்தது. இன்று அவ்வளவு முழு மனத்துடன் அது ஒத்துழைக்கவில்லை. எனவே சத்திரம் போய்ச் சேருவதற்குள் விடிந்து ஒரு நாழிகை ஆகிவிட்டது.

சத்திரம் சாலையை விட்டு ஒதுங்கி இருந்தது. வாசலில் நிறையக் குதிரை வீரர்கள் நின்றார்கள். அர்ச்சுனன் தன் வீரர்களை இனம் கண்டு கொண்டான். சில புதியவர்கள் அங்கே தென்பட்டார்கள்.

அர்ச்சுனன் வருவதை அடுத்து வீரமாலி சத்திரத்து இருட்டிலிருந்து வெளியே வந்து அவனை வரவேற்றான்.

''ஐயா, அவசரம். உள்ளே ராஜா வேங்கடர் இருக்கிறார்.'' என்று பரபரத்துக் கூறினான் வீரமாலி.

அர்ச்சனனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரே எட்டில் நான்கு படிகள் தாண்டி உள்ளே ஓடினான்.

உக்கிராண அறையில் வேங்கடரைத் திண்டுகள் போட்டுப் படுக்க விட்டிருந்தனர்.

அவர் மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. காலையும் கையையும் துவள விட்டு மிகவும் சோர்ந்து, நைந்த துணி போல் கிடந்தார்.

''மகாராஜா!'' என்று நெஞ்சு பொங்கக் கூறினான் அர்ச்சுனன்.

அவர் அருகில் மண்டியிட்டு அவரது வலது கையைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

வேங்கடர் மத்திய பிராயத்தில் இருந்தார். முகத்தில் களைப்பினால் ஏற்பட்ட முதுமை. நெற்றியில் அவர்

வயதுக்கு ஒவ்வாத சுருக்கங்கள். மேலே தூசியும் புழுதியும் படிந்த பட்டு அங்கியை அணிந்திருந்தார்.

அர்ச்சுனனுக்கு துயரம் பொங்கி வந்தது. பிரசித்தி பெற்ற விஜயநகர சாம்ராஜ்யத்தின் மாமன்னரா இவர்?

ஹரிஹரர், புக்கர், கிருஷ்ணதேவராயர் போன்ற மாமன்னர்களின் வரிசையில் வந்தவரா இவர்?

பாவம், ஒரு குறுநில மன்னர் போல் மாட்சிமை இல்லாது இப்படி ஒரு வழிப்போக்கு சத்திரத்தில் அனாதை போலக் கிடக்கிறாரே!

அர்ச்சுனன் முன்னால் பெரியவர்கள் வர்ணிக்கும் விஜயநகரமும் அதன் ராஜசபையும் தோன்றியது. சேனைகள் என்ன, பரிவாரங்கள் என்ன, மந்திரி குழாம் என்ன, தளவாய்கள் என்ன, ராயசங்கள் என்ன, விற்பன்னர்கள் என்ன, கவிஞர்கள் என்ன, அஷ்ட திக்கஜங்கள் என்ன அணிவரிசையான தேவதாசிகள் என்ன, வெள்ளை தேசப் பிரதிநிதிகள் என்ன, வாய் புதைத்த குறுமன்னர்கள் என்ன!

இப்படி அத்தனை ஜனங்களும் கலந்து ஜொலித்த கிருஷ்ண தேவராயரது ராஜசபை எங்கே? அதன் கம்பீரம் எங்கே? அதன் கீர்த்தி எங்கே?

எல்லாம் கனவாய்ப் போய்விட்டதே! அந்த விஜயநகர ஊரே அழிந்து புல் முளைத்து விட்டதே! அதை அடுத்து ஆனகொந்தியும் அழகில்லாமல் ஆகிவிட்டதே!

எங்கேயோ மலைக்கு இடுக்கில் இருக்கும் சந்திரகிரியில் பதுங்கிக் கண்டு, பழைய விஜயநகர கீர்த்தியை இன்னும் எத்தனை நாள் குங்குமம் வைத்த சம்புடம் போல் நினைத்துக் கொண்டிருப்பது?

வடக்கே சமுத்திரம் போல் மொகலாய ராஜ்யம். அருகே அசுர பலங்களில் சுல்தானிய ராஜ்யங்கள்!



இவைகளினால் ஏற்கெனவே தன் பிரதேசங்கள் கபளீகரம் செய்யப்பட்ட பின்பு,

எஞ்சியுள்ள சில சீமைகளை மட்டும் வைத்துக் கொண்டு, பெயருக்குச் சக்கரவர்த்தி என்று ஒப்புக் கொள்ளும் தமிழ்நாட்டு நாயக்கர்களையும் நம்பிக் கொண்டு,

எத்தனை நாள் இந்த விஜயநகர ராஜ்யம் வாழ முடியும்?

விஜயநகர ஊரே அதன் கையில் இல்லை. பெயர் மட்டும் விஜயநகர ராஜ்யம்!

இப்படி நாட்டு எல்லை குறைந்து, நாட்டு மாட்சிமை சிதைந்து போய்த் தனது வாழ்க்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் ஒரு பலவீன ராஜ்யத்தில்

இன்று சிங்காதனத்துக்குச் சண்டை!

ராஜ கிரீடம் அணிவதற்காகச் சண்டை!

இன்று அல்ல, நேற்று அல்ல, பதினைந்து ஆண்டுகளாகவே நடக்கிறது.

ஒருவர் மாற்றி ஒருவர் ராஜாவாக வந்து போகிறார்கள்.

நாட்டின் க்ஷேமத்தைக் கவனிப்பதற்கு முன்பு தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கே சண்டை போட வேண்டி வருகிறது.

வாழ்நாள் முழுவதையும் சண்டையிலேயே கழிக்கிறார்கள். சீக்கிரம் அல்பாயுசிலேயே மடிகிறார்கள்.

இன்று இந்த வேங்கடருக்கு கடைசிக் காலம் வந்து விட்டதா?

பெருத்த நினைவுகளின் பின்னணியில் மனம் வெதும்பி அர்ச்சுனன் மன்னர் வேங்கடரைப் பார்க்க,

அவர் அப்போதுதான் கண் திறந்து அவனை அடையாளம் கண்டு கொண்டார்.

உடனே சற்றே தலையை நிமிர்த்தி ''அர்ச்சுனா, சண்டைக்குப் பிறகு உன்னைப் பார்க்க முடியவில்லை. சண்டையில் நீ செய்த உதவி எல்லாம் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம். வாய் நன்றியைத் தவிர என்னால் வேறு விதத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. உனக்கு விஷயம் தெரியுமா?'' என்று மெல்லிய குரலில் கேட்டார்.

குரலில் ஒரு ராஜ கனிவு துளும்பியது. அவனை அணைத்துக் கொள்வது போல் ஓர் இதம் இருந்தது. ஒரு தந்தை முன்பு இருப்பது போன்ற பாசம் அவனுக்குத் தோன்றியது.

''மகாராஜா! நான் எங்கேயோ போய்ச் சிக்கிக் கொண்டேன். தங்கள் தொடர்பு இல்லாமல் இந்தச் சிறுபுத்திக்காரன் இருந்து விட்டேன். இப்போது என்ன நேர்ந்திருக்கிறது சொல்லுங்கள், மகாராஜா!'' என்றான்.

''சந்திரகிரியை நாம் இழந்து விட்டோம்'' என்றார் வேங்கடவர்.

அர்ச்சுனன் முகம் இரும்பு போல் இறுகியது.

கண்கள் அந்தக் கணமே கலங்கி, விழி நெடுக நீர் படிந்தது.

எதுவும் ஓடவில்லை.

ஒரு மகாராஜா முன்னால் இருக்கிறோம் என்பதையும் நினையாது விக்கி அழ ஆரம்பித்தான்.



அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு குழந்தை போல் தேம்ப ஆரம்பித்தான்.

மகாராஜா வேங்கடர் அவன் தலையை மெல்லத் தடவிக் கொடுத்தார்.

''அர்ச்சுனா! அழாதே! எழுந்திரு! இப்போது நமக்கு அவசர வேலை இருக்கிறது. நேரமில்லை'' என்று கூறி அவன் முகத்தை நிமிர்த்தினார்.

தேம்பலைச் சற்று அடக்கிக் கொண்டு அர்ச்சுனன் தன் முகத்தைத் துடைத்தான். ''மகாராஜா! என்ன செய்ய வேண்டும்?'' என்று ஈரம் கலந்த குரலில் கேட்டான்.

''இனிமேல் நம் ராஜ்ய பரிபாலனத்துக்கு நாம் எங்கே போயிருப்பது? நாம் இருப்பதற்கு ஒரு நகரம் வேண்டுமே!'' என்றார் வேங்கடர்.

அவர் அப்படிக் கேட்பதே அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது.

எனினும் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, ''தெற்கே ஏதாவது நாயகர் நகரத்தில் புக வேண்டியதுதானே, மகாராஜா!'' என்றான்.

வேங்கடர் மெதுவாகச் சிரித்தார். ''அர்ச்சுனா! பெயருக்குத்தான் அவர்கள் நம் குறு மன்னர்கள். நடைமுறையில் அவர்கள் ஏகச் சக்கிராதிபதிகள். விருப்பமிருந்தால் உதவி செய்வார்கள். இல்லாவிட்டால் வெறும் கையைக் காண்பிப்பார்கள். நாம் நம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதுதான் நல்லது'' என்றார்.

''ஏன் மகாராஜா! யாராவது ஒரு நாயக்கர்கூட தங்களை உள்ளன்போடு நேசிக்க மாட்டார்களா?'' என்று கேட்டான் அர்ச்சுனன்.

''வேலூர் நாயக்கரிடம் போகலாம் என்று பார்க்கிறேன்'' என்றார் வேங்கடர்.

''ஆகா! அவர்தான் நமக்கு ஏற்றவர், என்றும் தங்கள் மீது அபிமானத்தோடு இருப்பவர்'' என்றான் அர்ச்சுனன்.

''நல்லது. அதைத்தான் நானும் தீர்மானித்தேன். இப்போது நேரமில்லை. இங்கே இருக்க இருக்க ஆபத்து. உடனே புறப்படுகிறோம். நீயும் வருகிறாய்!'' என்றார் மாமன்னர்.

''இந்த அடியவனா?'' என்றான் அர்ச்சுனன்.

''ஆமாம் அர்ச்சுனா! போகும் வழியில் திம்மன் படை நிச்சயம் நம்மை வழிமறிக்கும். நேற்று மாலை அதனுடன் சண்டை போட்ட களைப்பில் நான் இருக்கிறேன். நீயும் உன் பரிவாரமும் வந்தால்தான் வழியில் சமாளித்துக் கொண்டு போக முடியும்.''

அர்ச்சுனன் வாயில் வார்த்தைகள் தவித்தன. அரசர் விருப்பம் என்றால் அது கட்டளைதான். அதை நிறைவேற்ற அவன் கடமைப்பட்டவன் மட்டுமல்ல, ஆயிரம் மடங்கு விருப்பம் உள்ளவன்.

ஆனால் சுவர்ணமுகியின் நினைவு தோன்ற, மனம் கலங்கியது. 'ஒரு பல்லக்குக் கொண்டு வருகிறேன்' என்று இதோ வந்தவன் திரும்பிப் போகவில்லை என்றால். . .

அவன் யோசிக்க, அந்த அறை நிசப்தமாயிருக்க, மீண்டும் அவனுக்குக் கலக்கம்.



தனது கலக்கத்தை மகாராஜா தப்பிதமாக எடுத்துக் கொண்டால். . .

அவரிடம் சுவர்ணமுகியைப் பற்றிச் சொல்லி விட்டால். . .

அதற்கு இது தருணமல்ல. சுற்றிவர ஆட்கள் இருக்கிறார்கள்.

தவிர சொன்னாலும் பிரயோசனம் என்ன?

சுவர்ணமுகியை விட மகாராஜாவுக்குத்தான் இப்போது அதிக ஆபத்து. அவரைக் காப்பாற்றுவதுதான் முதல் கடமை.

''சரி, மகாராஜா புறப்படுவோம்!'' என்றான் அவன்.

சிறிது நேரத்தில் எல்லோரும் புறப்பட்டார்கள்.

அர்ச்சுனன் ஸாந்தோமேயிலும், மயிலாப்பூரிலும் கஷ்டப்பட்டுச் சேர்ந்திருந்த பரிவாரம்தான் ராஜாவின் பரிவாரமாகப் போயிற்று.

அவன் தருவித்திருந்த ஒரே பல்லக்குத்தான் ராஜாவின் பல்லக்காகப் போயிற்று.

பரிவாரம் அவசரமுடன் புறப்பட, – திம்மன் படை குறுக்கிடுவதற்கு முன் அவர்கள் நெடுந்தூரம் போய்விட வேண்டுமென்று விருப்பம் – அர்ச்சுனன் சில கணங்களே தயங்கி ''வீரமாலி!'' என்றான்.

வீரமாலி அருகில் வந்தான்.

அவனைக் காட்டுக்குள் அனுப்பி சுவர்ணமுகிக்குப் பாதுகாப்பு அளிக்கலாம் என்று நினைத்தான் அர்ச்சுனன்.

ஆனால்,

இப்போது அரசர் இருக்கும் பரிதாப நிலையில், படை இழந்து, பலம் இழந்து தனியாக நிற்கும் தருணத்தில் நிச்சயம் அர்ச்சுனன் உதவி மட்டுமல்ல, நல்ல வீரர்கள் பலரின் உதவி அவருக்குத் தேவை.

''ஒன்றுமில்லை, வீரமாலி! மன்னரைக் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டு போவோம்!'' என்று மட்டும் கூறி, குதிரையைச் செலுத்தத் தொடங்கினான் அர்ச்சுனன்.

''நீ ஒரு முட்டாள்! சர்வ முட்டாள்! ஒரு நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்கு வந்தும் அறிவு இல்லை.'' என்று வசைபாடினான் பிரான்சிஸ் டே.

அவன் முன்னால் அந்தச் சுங்குவார் சத்திரத்தின் தரையில் ட்ரேக் ராஜர் பதில் ஏதும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான்.

''அந்தப் பெண் ஒரு ராஜகுமாரி என்று ஏன் என்னிடம் முன்னமே சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அவள் வழிக்கு நான் வந்திருக்க மாட்டேனே! அதை விட்டு என்னைக் கடற்கரையில் அவமானம் செய்தாய். சரி போகட்டும். அந்தப் பெண்ணை ஒரு இந்தியனிடம் ஒப்படைத்தேன் என்றாயே, யார் அந்த இந்தியன்?''

''அவன் எனக்குத் தெரிந்தவன். தோதா என்று பெயர். நட்போடு பழகியவன்.''

''நட்பு! இந்தியரின் நட்பு என்பது எப்படிப்பட்டது என்று உனக்குத் தெரியாதா? இன்று ஒருத்தனுக்கு நட்பு, நாளை வேறு ஒருத்தனுக்கு நட்பு! பணமும் பலமும் உள்ள இடமெல்லாம் இந்த இந்தியர்கள் நட்பை மாற்றிக் கொண்டே இருப்பார்களே! உன் தோதா உனக்கு என்ன செய்தான். உன்னிடமிருந்து அந்தப் பெண்ணை வாங்கிக் கொண்டு நட்போடு உன்னை வழியனுப்பினான். நீ திரும்பும் வழியில் இரவுக்கிரவே ஆட்களை அனுப்பி உன்னை மடக்க வைத்தான். நல்லவேளை, பொருள் நஷ்டப்பட்டாலும் நீ உயிர் தப்பினாய். . . இந்தச் சத்திரத்தில் உடம்பு சரியில்லாமல் எத்தனை நாள்தான் படுத்துக் கொண்டிருப்பாய். நான் பார்க்காவிட்டால் உன் கதி என்ன ஆகியிருக்கும்? ம். . . எழுந்திரு! என்னோடு மசூலிப்பட்டணத்துக்கு வா! ஏதாவது வியாபாரம் செய்! ஊருக்கு நல்ல பிள்ளையாகத் திரும்பு. . . ம். . . எழுந்திரு!''



ட்ரேக் ராஜர் பலவீன உடம்பை மெல்ல தளர்த்தி எழுந்திருந்தான்.

டேயைப் பார்ப்பதற்கே கூச்சமாக இருந்தது; அச்சமாகவும் இருந்தது.

சத்திரத்தை விட்டு வெளி வந்து அந்த காஞ்சிபுரச் சாலையைப் பார்த்தான். டேயின் பரிவாரம் சற்று நீண்டு தெரிந்தது.

அதைப் பார்த்துவிட்டு, வெறுமையாக வானத்தைப் பார்க்க,

சுவர்ணமுகியின் உருவம் ஒரு மின்னல் தோற்றமாக ஒரு முறை சொடுக்கி மறைந்தது.

* * * * *

விஜய நகர அந்தப்புரத்தில் பல பெண்கள் மல்லர்களாகவும் வில்லாளிகளாகவும் இருந்தார்கள். பலருக்கு வாள் பயிற்சி உண்டு. பலர் ஜோசியக்காரிகளாகவும் பல்லக்குத் தூக்கிகளாகவும் கணக்கர்களாகவும் இருந்தார்கள்.

(Nuniz) – நுனிஸ்

## 22

அந்த விசாலமான மாளிகையில் அவள் ஒரு வாரம் தங்கியிருந்தாள்.

அங்கே எப்படி வந்தாள் என்று தெரியாது.

அவள்து துயரங்கள் முடிந்து விட்டன என்று முதலில் நினைத்தாள்.

அவளைத் தெரிந்தவர்கள் யாரோ அவளுக்கு விமோசனம் அளித்திருக்கிறார்கள் என்று நினைத்தாள்.

அப்படியானால் அவர்கள் இப்போது எங்கே? இந்த ஒரு வாரமாக ஏன் அவர்கள் வரவில்லை?

நாட்கள் மேலே செல்ல

சந்தேகம்தான் எழுந்தது.

அவளோடு வந்திருந்த செல்லி என்ற மலைப்பெண் சின்ன வயசானாலும் சூட்டிகையாக இருந்தாள். என்ன தைரியம் அவளுக்கு? சேலையை வரிந்து கட்டி, அந்த உயரச் சுவரில் காலையும் கையையும் போட்டு அடித்து அதிசயமாக ஏறினாள். மலை இனப் பெண்! கை, கால், உடம்பு, தசைகளில் குருட்டுத்தன தைரியம் பேசியது.

மேலே அந்தக் காற்றுப் போக்கி வழியாக வெளியே பார்த்து, ''அக்கா! மலைமேலே இருக்கோம்!'' என்று குரலில் ஆச்சரியம் பெய்து பேசினாள்.



மலையா? என்ன மலை?'' என்றாள் சுவர்ணமுகி.

''சமலக் காடு மாதிரி இருக்கும்மா! தூரத்திலே ஏழு மலை மாதிரி தெரியுது'' என்றாள் செல்லி.

''பக்கத்திலே வீடு கீடு தெரியுதா?'' என்றாள் சுவர்ணமுகி ஆவலுடன்.

''இல்லையம்மா! ஒரே பள்ளம்! கிடுகிடு பள்ளம். சுத்தி எல்லாம் காடு.''

''வழி தெரியுதா பாரு!''

செல்லி வெகு தூரம் பார்த்தாள். ''இல்லையம்மா. தெரியலை'' என்று சொல்லிக் கீழே குதித்தாள்.

அவள் கால்கள் எப்படி அந்த வீழ்ச்சியை ஏற்றுக் கொண்டன!

செல்லியின் இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகு அவளுக்குப் பல கலக்கங்கள் உண்டாயின.

இது என்ன சிறைவாசமா?

இங்கே ஏன் அவளை அடைத்துப் போட்டிருக் கிறார்கள்?

எதிரி கைகளில் அவள் சிக்கிவிட்டாளா?

காட்டில் அன்று நடந்ததை எண்ணிப் பார்த்தாள். 'தளவாய் நரசய்யாவின் படை வருகிறது, ஒளியுங்கள்' என்று கூக்குரல் எழுந்த பிறகு பாறையிலிருந்து அவள் கிடுகிடு என்று இறங்கினாள்.

கடைசிவரை இறங்கினவள் பிறகு மீண்டும் குடிலுக்குள் ஓடி அந்த சீனிவாசன் பொம்மையை எடுத்து வெளியே வந்தாள். செஞ்சந்தனத்தில் அவள் செய்த மரப்பாச்சி! அவளுக்கு ஒரு பொழுது போக்கு இந்தப்

பொம்மை செதுக்குவது. சீனிவாசர் பொம்மை அநேகமாக முடிந்து விட்டது. கண் திறக்க வேண்டும்.

அதைச் செய்யாமல் அரை குறையாக ஓடுவது பிடிக்கவில்லை. அபசகுனம் என்று நினைத்தாள்.

பொம்மையை எடுத்து வந்து மற்ற ஏனாதிப் பெண்களுடன் ஓடும்போது, அந்தப் பத்மாவதி நினைவு வந்தது.

ஆகா, என்ன அழகாகச் செதுக்கி வைத்திருந்தாள் அவள். திருச்சுகனூரில் (திருச்சானூர்) இருந்து நேரில் பிரசன்னமானது போல் இருந்தது. அவளால் நம்ப முடியவில்லை. அந்தப் பொம்மை இவ்வளவு நேர்த்தியாக வடித்திருக்கிறது. வட்டப் பாவாடையும், நகைகளும், கிரீடமும், அந்த இளம் புன்னகையும்.

"ஓ! சீனிவாசரை நீதான் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாயா?" என்று எத்தனை முறை அதை நோக்கிக் கேட்டிருக்கிறாள்?

அதை கேட்கும்போது மனத்தில் அவளுக்கு எவ்வளவு வேட்கையும், பொய்க் கேலியும், பொய் உவகையும் தோன்றியது?

"பொல்லாதவள் நீ! காதலித்தாயா?" என்று எத்தனை முறை செல்லமாகக் கடிந்திருக்கிறாள்?

அப்படிக் கடியும்போது அவள் உள்ளத்தின் விசால விளிம்புகளைத் தொட்டு எவ்வளவு உணர்ச்சிப் பிரவாகம் ஓடியது?

என்ன பிரவாகம் அது?

என்ன உணர்ச்சி அது?



புரிந்து கொள்ள முடியவில்லையே!

நினைத்தால் பயமாகவும் இருந்தது. பரவசமாகவும் இருந்தது.

ஓடும்போது பத்மாவதியைக் குடிலில் விட்டு விட்டோமே என்று வருத்தம்.

திரும்பிப் போய் எடுக்க முடியவில்லை. அவளைப் பற்றி இழுத்து ஏனாதிப் பெண்கள் அந்த ஒளிவிடத்துக்கு ஓடினார்கள்.

ஒரு பாறைக்குப் பின்புறத்தில் குகை போன்ற அமைவு.

அதன் குழிவுக்குள் அத்தனை ஏனாதிப் பருவப் பெண்களும், பெரிய பெண்களும் கூடிவிட்டார்கள்.

சிக்கென்று அமைதி.

மூச்சைக்கூட அடக்கி, என்ன நடக்கப் போகிறதென்று காத்திருந்தார்கள்.

ஓசை பெரிதாகி வந்தது.

சீக்கிரத்தில் கனத்த மனிதக் குரல்கள் காற்றை நிறைத்தன. ஓசையான பாதரட்சைகள் கேட்டன. அதிகாரங்களும், தோரணைகளும் நாலு பக்கமும் சிதறின.

ஊடே ஏனாதி ஆண்களின் பலவீனக் குரல்களும் கேட்டன.

எப்படித்தான் அது நடந்தது, தெரியாது. திடீரெனக் கிங்கரர்கள் போல மூன்று வீரர்கள் அந்த மறைவிடம் முன்னால் நின்றார்கள். உள்ளே அத்தனை பெண்களையும் ஒரே வீச்சில் கண்டுபிடித்து விட்டார்கள்.

பெண்கள் விளிறிப் போய் கூச்சல் போட்டு நானாவிதத்திலும் சிதற,

வீரர்கள் மற்ற சகாக்களுக்குக் குரல் கொடுத்தவாறு அவர்களை விரட்ட ஆரம்பித்தார்கள்.

அவளும் செல்லியும் அகப்பட்டது ஒரு துரதிர்ஷ்டம். மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தது தெரியாது.

அவளைக் கைகட்டி நடத்திச் சென்றபோது,

மனம் படாதபாடு பட்டது.

'விதி இப்படித் தொடர்கிறதே?' என்று நினைத்தாள்.

''அர்ச்சுனன் சீக்கிரம் வரக்கூடாதா?'' என்றும் நினைத்தாள்.

இரவில் அவரோடு போயிருக்க வேண்டும்.

போகாதது தப்பிதம்.

இப்போது அவர் வரக்கூடாது? காலையில் வந்துவிடுவேன் என்றாரே!

இந்தக் கணம் எதிர்ப்பட்டு அவளை மீட்கக் கூடாதா?

போகிற வழியில் ஒரு ருசியற்ற பாலை அவர்கள் பருக வைத்து, கீழே உட்காரச் சொல்லி. . .

அவ்வளவுதான் நினைவு இருக்கிறது.

அதற்குப் பிறகு இங்கே இந்த மாளிகையில் கிடப்பது மட்டும்தான் தெரிகிறது.

இதன் உட்புற அமைப்புகளைப் பார்த்தால் சிறை போன்று தெரியவில்லை.

மாளிகை போல் புதுமையாக இருக்கிறது. ஆனால் அந்தப் பெரிய இரட்டை அறைப்பகுதியை ஏன் தாழ்ப்பாள் போட்டு வைத்திருக்கிறார்கள்?



வேளா வேளைக்கு உணவை ஒன்றும் பேசாத ஒரு தாதியிடம் ஏன் கொடுத்து அனுப்புகிறார்கள்?

எத்தனை முறை கேட்டாலும் அந்தத் தாதி புன்னகை மட்டும் செய்கிறாள். மற்றப்படி உதட்டை இறுக்கமாக மூடி வைத்திருக்கிறாள்.

அந்தத் தாதி திறக்கும்போது மாளிகை மையத்திலிருந்து சுகந்தமான வாசனை உள்ளே மிதந்து வருகிறதே!

சில சமயம் நுட்பமான சங்கீதம்.

சமயங்களில் பூங்கொத்துச் சிரிப்புகள். இரவு ஆனால் மோகினிகள் நடப்பது போல் சலிங் சலிங் என்று சின்னச் சதங்கை முனகல்கள்.

என்ன இடம் அது?

அன்று காலையில் வழக்கத்துக்கு மாறாக மாளிகைக்கு வெளியே அரவங்கள், சின்னச் சின்னச் சத்தங்கள் உள்ளே வந்து உருண்டன. ஒரு தனி ஒற்றைச் சிரிப்பு. பெண் சிரிப்புத்தான். ஆனால் பெண் தன்மை இல்லை.

சிறிது நேரத்தில் அவர்கள் அறையில் வெளித் தாழ்ப்பாள் திறக்கும் சப்தம்.

வழக்கமான தாதி வந்து, ''வாருங்கள்'' என்று சமிக்ஞை செய்தாள்.

மனம் இலேசாகத் தடதடக்க, அவளும் செல்லியும் எழுந்து போனார்கள்.

நீளத் நடைத் தாழ்வாரம்.

இருபுறமும் அறைகள்.

போகப் போகச் சுகந்தம் பெருகிக் கொண்டு வந்தது.

திடீரென்று பரந்த கூடம் காட்சி கொடுத்தது.

சபை நடத்தலாம். அத்தனை பெரிது. உருண்டைத் தூண்கள், சித்திர விதானம், வேலைப்பாடுகளுடன் விளக்குத் தண்டுகள், எங்கும் தூவிக் கிடந்த நாற்காலி, மெத்தை தண்டு வகையறாக்கள்.

அரவம் கேட்டுத் திரும்பினாள்.

வலது கோடியில் அந்தக் காட்சி பிரமிப்பைக் கொடுத்தது.

இரண்டு பெண்கள் சேலையை வரிந்து கட்டி மல்யுத்தம் செய்து கொண்டிருக்க, சுற்றி வர ஒரு சிறிய கூட்டம்.

அத்தனையும் பெண்கள்.

அவர்களில் பலர் மல் யுத்தத்துக்கு ஆயத்தம் போல் சேலை வரிந்திருந்தார்கள்.

அவர்கள் புஜங்களில் ஒரு ஆம்பிள்ளையைப் போல் தசை கொழுத்திருந்தது. உடம்பும் காலும் இரும்புபோல் இறுக்கமாக வார்த்திருந்தன. முகத்தில் பெண்மைக்களையை மழுக்கிக் கொண்டு ஒரு ஆண்தனம் விகசித்துக் கொண்டிருந்தது.

நாட்டில் அந்தப்புரப் பெண்களில் பலர் மல்லர்களாகவும், சிலம்புக்காரர்களாகவும், வில்லாளிகளாகவும் இருப்பது அவளுக்குத் தெரியும். பலருக்கு வாள் பயிற்சி, வேல் பயிற்சி எல்லாம் கூட உண்டு.

சொல்லப்போனால் பெண்களே நிர்வகிக்கும் அந்தப்புரத்துக்குள் ஒரு ஆண், அவன் வீராதி வீரனாக இருந்தால் கூட நுழைந்து விட முடியாது.



அவனுக்கு ஈடு கொடுக்கும் எத்தனையோ பெண் வீரர்கள் அங்கே இருக்கிறார்கள்.

அவளுக்குத் தெரிய வேண்டியது இந்த மலை மாளிகை ஒரு அந்தப்புரமா என்பதுதான்.

அவள் யோசிக்கும் நேரத்தில் ஒரு பெண் கீழே விழுந்து விட,

கைதட்டலும், சிரிப்பும், பலேக்களும் எழுந்தன.

கடைசியில் அவளுக்குப் பின்புறத்தைக்காட்டி, ஒரு பெரிய ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணி தன் முகத்தைச் சிறிதே திருப்பி அவளை நேராக முகத்தில் பார்த்தாள்.

சுவர்ணமுகிக்கு ஒரு பரிச்சய நாடி எங்கேயோ சொடுக்கியது.

பெண்மணி உடனே தனதுஸ்தூல உடம்பை ஆசனத்துக்கு வெளியே குலுக்கி எடுத்து , சிறிது சாவகாசம் எடுத்துத் திரும்பி, பிறகு குட்டை அடிகள் வைத்து அவளை நோக்கி நடந்து வந்தாள்.

அவளுக்குப் பின்னால் அத்தனை பெண்களும் ஊர்வலம் சேர்ந்தார்கள்.

வெளிச்சமான பகுதிகளுக்கு அவர்கள் வரும்போது சுவர்ணமுகி அந்தப் பெண்மணியை முழுதுமாகப் பார்த்தாள்.

ஒன்று பளீர் என்று உதித்தது.

அவளது நடையும், உடம்பு பூராவுமான சுவர்ண மினுக்கும், வாயில் உறைந்து போன காவியும் அவளைத் தேவதாசி குலத்தவள் என்று எண்ண வைத்தது.

என்றைக்கோ அவளிடம் வாழ்ந்து, இன்று தூர்ந்து போயிருந்த பரத நாட்டியம், அவள் நடையில் சின்னத் தளுக்குகளைக் கொடுத்தது.

யார் இவள்? எங்கேயோ பார்த்திருக்கிறோமே!

வந்தவள், சுவர்ணமுகியின் நேர் எதிரே உள்ள பட்டு மெத்தை ஆசனத்தில் உட்கார, மற்றவர்கள் அவளது பின்னால் பிறை போல நின்று கொண்டார்கள்.

எல்லாரும் ஒரே சமயம் ஈட்டிப் பார்வைகளுடன் சுவர்ணமுகியைப் பார்த்தார்கள்.

அதே சமயம் சுவர்ணமுகி மனத்துக்குள் அலைந்து, பல முக்கு முனைகளை அலசி அந்தப் பரிச்சயத்தைத் தேடி, கடைசியில் இதோ. . . இதோ. . .

இவள் ரத்னாவளி அல்லவா?

பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எவ்வளவு பருத்து விட்டாள்!

''உட்கார்!'' என்று அவள் குரல் இடிபோல் கேட்க, சுவர்ணமுகி பக்கத்தில் ஆசனத்தைத் தேடினாள்.

''கீழே உட்கார்.''

அவள் உட்கார, கெல்லி சற்றுத் தயக்கம் காட்டிக் கீழே சம்மணம் இட்டாள்.

பிறகு ரத்னாவளி, பின்புறம் திரும்பிக் கண்ணைக் காட்ட, நான்கு பெண் மல்லர்களைத் தவிர மற்ற அத்தனை பேரும் கலைந்து உள்புறத்து அறைகளை நோக்கி நடந்தனர்.

எல்லோரும் போன பிறகு, ''நீ யார்?'' என்று கர்ஜனை செய்தாள் ரத்னாவளி.



சுவர்ணமுகியின் இதயம் நடுங்கியது.

''சொல்லு.''

''நான் நெல்லூரி வீரமன்னாரு செட்டியோட குமாரத்தி வெங்கம்மா!''

''வெங்கம்மா?'' என்று நைச்சியத்தோடு கேட்டாள் ரத்னாவளி.

''ஆமம்மா!''

''காட்டுக்குள்ளே எப்படி வந்தே?''

''அம்மாவும் அப்பாவும் பஞ்சத்திலே செத்திட்டாங்க. ஊர்ல இருக்க வழியில்லை. பலபேர் தொந்தரவு பண்ணினாங்க. காட்டுக்குள்ளே போயிட்டேன். உங்களுக்குத் தெரியாதா? ஜனங்களெல்லாம் இப்போ காட்டுக்குள்ளேதான் போறாங்க!''

சிரித்தாள் ரத்னாவளி.

அத்தனையும் பொடிப் பற்கள். மனுஷி சிரிப்பது போல் இல்லை. ஒரு சிறிய பிராணி வாயைத் திறந்தது போல் இருந்தது.

''பொய் சொல்லாதே! நீலி! உண்மையைச் சொல்றியா இல்லையா?''

முகத்தை அப்படி இலேசாக அசைக்க, ஒரு மல்லர் பெண் முன்னால் வந்தாள். இடுப்பைச் சுற்றிக் கையை விரவியவுடன் ஒரு சாட்டை நீள வாலோடு வெளி வந்தது.

''போடு!'' என்றாள் ரத்னாவளி.

சுவர்ணமுகியின் கண் பயத்தில் சிவப்பாக, மல்லப் பெண் அவள் பின்னால் வந்தாள்.

எதுவும் அவள் செய்ய மாட்டாள் என்று நினைக்கு முன் ஆஷ்ஷ் என்ற சத்தத்துடன் முதுகில் சாட்டை விழுந்தது.

''அம்மா!'' என்று அலறல்.

செல்லி அலறவில்லை. முகம் மட்டும் சிணுங்கியது. இரண்டு பேருக்கும் சேர்ந்து விழுந்த அடி அது.

ஆஷ்ஷ்!

இரண்டாம் முறை அது விழுந்தது. சுவர்ணமுகி சுருண்டு விழுந்தாள்.

செல்லி உடனே அவளைப் பிடித்துக் கொண்டாள். இரண்டு கைகளையும் காற்றில் துடிக்கவிட்டு, சுவர்ணமுகி கோழையும் கண்ணீரும் வழியக் கீழே சாய்ந்தாள்.

''நிறுத்துங்கம்மா அடிக்காதீங்க!'' என்று கத்தினாள் செல்லி.

''நீ பேசாம இரு!'' என்றாள் மல்லர் பெண்.

''உண்மையைச் சொல்லுங்க! விட்டுடறோம்'' என்றாள் ரத்னாவளி.

சுவர்ணமுகி மெல்ல எழுந்தாள். கண்ணீரோடு, ''நான் சொல்வது சத்தியம்மா! என் பெயர் வெங்கம்மா! என் ஊரு நெல்லூரு!'' என்று இரக்கமாகப் புலம்பினாள்.

''போடு இன்னம்!'' என்றாள் ரத்னாவளி.

ஆஷ்ஷ் ஆஷ்ஷ்கள் மேலும் அந்தக் கூடத்தில் எதிரொலித்தன.

சுவர்ணமுகியின் பூவுடல் நைந்து கீழே விழ, அவள் முகம் நிழலாகக் கறுத்தது.



'நிறுத்து!'' என்று சொல்லி ரத்னாவளி அவள் அருகே வந்தாள்.

''தண்ணி கொண்டா!''

தண்ணீர் தெளித்து எழுப்பினார்கள்.

சுவர்ணமுகி முதுகில் ஒரு காயம் இரத்தத்தை வெளியே பிளாச்சிட்டது.

அதைப் பார்த்தும் ரத்னாவளி துணுக்குற்றாள்.

பெரிய மூச்சுக்களுடன் தனது ஆசனத்தில் போய் உட்கார்ந்தாள்.

சுவர்ணமுகியை எழுப்பி உட்கார்த்தி மெல்லப் பிடித்துக் கொண்டாள் செல்லி.

ரத்னாவளி அவளைப் பார்த்து ''உண்மையைச் சொல்லப் போறியா இல்லையா?'' என்று கர்ஜித்தாள்.

''உயிர் போக அடியுங்கம்மா! நான் உண்மையைத்தான் சொல்றேன்'' என்று பலவீனமாக உரைத்தாள் சுவர்ணமுகி.

''உங்க தாத்தா பேரு என்ன?'' என்று யுக்தியோடு கேட்டாள் ரத்னாவளி.

''நெல்லூரி வீரராகவப் பெருமாளு!''

''அவருக்கு சம்சாரம் யாரு?''

''கிருஷ்ணாம்பா.''

''தாத்தா என்ன வேலை செஞ்சார்?''

''தறி வச்சிருந்தார்!''

''உங்க அப்பா?''

''அவரும் தறிதான்!''

''பாவு நூலுக்கு எத்தனை ஊடு நூல் போடணும்?''

''ஒரு அங்குலத்துக்கு நாப்பதும் வரும், நூறும் வரும், அதெல்லாம் துணியைப் பொறுத்ததம்மா!''

''நீ என்ன வேலை செய்வே?''

''வீட்டு வேலை செய்வேன்!''

''அதக் கேக்கலை! நெசவிலே என்ன தெரியும்? நெய்வையா, நூற்பையா, சாயம் போடுவையா?''

''நான் புகை போடுவேம்மா.''

''புகையா?'' என்று சந்தேகத்துடன் ரத்னாவளி பின்னால் திரும்ப,

''துணிக்கு வாசனை போடறதை சொல்றா!'' என்றாள் ஒரு பெண்.

''துணியை நெஞ்சீங்களே! எங்கே விப்பீங்க?''

''மசூலிப்பட்டணம் துரை வருவாரு வாங்கிப்பாரு!''

ரத்னாவளி எழுந்தாள்.

சுவர்ணமுகியின் பக்கத்தில் போய் அவளைச் சுற்றி வந்தாள். அவள் கூந்தலைத் தொட்டு முகர்ந்து பார்த்தாள்.

''ஹூம்!'' என்று சொல்லித் திரும்ப வந்தாள். ''யாரையோ கொண்டு வந்து உள்ளே அடைச்சிருக்காங்க! விரட்டு இவங்களை!''

சுவர்ணமுகியின் முகம் பிரகாசம் அடைந்தது. ஒரு பெண் அவளையும் செல்லியையும் நோக்கி முன்வர

''நிறுத்து!'' என்று ஒரு சத்தம்.

* * * * *

**விஜயநகர தேவதாசிகள் ஒவ்வொருவரும் தனித்தனி படை வைத்திருந்தார்கள். அவர்கள் பலம் பொருந்தியவர்களாகவும், செல்வாக்கு உள்ளவர்களாகவும் இருந்தார்கள்.**

**(Paes) – பயிஸ்**

# 23

**வ**ந்தவள் வங்கவரம் வத்சலா என்ற பெண். ரத்னாவளியின் சகிகளில் ஒருத்தி. பருத்த மார்புகளுடன் வந்தபோது தஞ்சாவூர் ரகத்துச் சிலைச் சித்திரம் போல் இருந்தாள். மூக்கு முகவாய் எல்லாம் அதே அசல்தான்.

''இந்தப் பெண்ணை விட்டுடாதே ரத்து!'' என்று சொல்லிச் சற்றுத் தள்ளி அவளை அழைத்துப் போனாள்.

''இவதான் சுவர்ணமுகி!'' என்றாள்.

ரத்னாவளியின் ஆச்சரியம் கண்ணைப் பிதுக்கி வெளிவந்தது. ''இவதானா?'' என்று முகவாயில் அத்தனை விரல்களையும் வைத்தாள்.

பிறகு திரும்பிப் பார்த்து ''அந்தப் பெண்ணை உள்ளே அழைச்சுக்கிட்டுப் போ!'' என்று கட்டளையிட்டு விட்டு,

வத்சலாவை நோக்கி, ''இவன்னு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''நான் ரங்கப்பா வீட்டு நவராத்திரியிலே பார்த்திருக்கேன். அவ கண்ணைப் பார்த்தியா? இவளை புஷ்பம் மாதிரி நானே மோகிச்சிருக்கேன்.''

ரத்னாவளிக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. தன் பருமனான விரல்களால் வத்சலாவின் கையைப் பொத்திக் கொண்டு, ''வா, வா, வா!'' உப்பரிகைப் பக்கம் அழைத்துப் போனாள்.

மலைப் பகுதியில் ஒரு மேட்டின் நெற்றியில் கட்டப்பட்டிருந்தது அந்த மாளிகை.

குங்கிலியக் காடெல்லாம் கீழே பசுங்கடல் தூரத்துக்குத் தூரம் தெரிந்தது.

மேலே நீல வெளிப் பரப்பில் வெண்மை துலங்கும் மேகங்கள் நகர்ந்தன.

இருவரும் உப்பரிகையின் பட்டு மெத்தை ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

''வச்சு! எனக்கு என்ன சொல்லணும்னு தெரியலே! ஒரே மகிழ்ச்சி போ! ஒரே மகிழ்ச்சி! ஒரே கல்லுலே ரெண்டு மாங்காய் அடிச்சுட்டேன். ஒரு திட்டம் சொல்றேன் பாரு! உன்னை அழைச்சதே அதுக்குத்தான்.''

''சொல்லு!'' என்றாள் வங்கவரம் வத்சலா.

''ரகசியம் கேட்டுக்கோ! யார்கிட்டேயும் சொல்லாதே! இவதான் பழைய இம்மாடி ஸ்ரீரங்கராஜா இருந்தாரே!. .''

''ஆமா!''

''அவரோட பொண்ணு!''

''அப்படியா?'' வத்சலா கண்கள் ஆச்சரியத்தைப் பீச்சி அடித்தன.

''ஆமாடி! அதை வெளியிலே தெரியாம ரங்கப்பா தம் பொண்ணுன்னு சொல்லி வளர்த்துக்கிட்டு வந்திருக்காரு.''

''ஒஹ்ஹோ!''

''சண்டையிலே செத்துப் போயிட்டார் பாரு! சாகறதுக்கு முன்னாடி தோதாவைக் கூப்பிட்டு விஷயத்தை அவன்கிட்டே சொல்லியிருக்காரு!''



''அப்படியா?''

''ஆமாம்! அவன் போய் அவளைத் தேடிப் பிடிச்சிட்டான்.''

''ம். .''

''அப்புறம் கோட்டை விட்டுட்டான்.''

''அடேடே!''

''அது எனக்கு அதிர்ஷ்டமாப் போச்சே. நான் காட்டுக்குள்ளாற என் படையாட்களை அனுப்பி இந்தப் பெண்ணைக் கண்டு பிடிச்சுக் கொண்டாந்துட்டேன்.''

''தோதா என்ன ஆனான்?''

''அவனா? கோட்டை விட்டுட்டு இப்போ என் பெண்ணோட சல்லாபிச்சுக்கிட்டு அங்கே உட்கார்ந்திருந்தான். பெண்ணை அவன் கிட்டே விட்டிருக்கேன்.''

''நீ பலே கைக்காரி! இப்போ என்ன திட்டம் வச்சிருக்கே சொல்லு.''

''சொல்றேன். நாட்டிலே திம்மராஜாவும் வேங்கட ராஜாவும் சிம்மாதனத்துக்காகச் சண்டை போடறாங்க!''

''ஆமா!''

''தளவாய்ங்க இவர் பக்கம் நாலு பேர் அவர் பக்கம் நாலு பேர்னு சேர்ந்து குட்டையைக் குழப்பறாங்க.''

''சரி.''

''இதுக்கிடையே நரசய்யா தளவாய்க்கு ராஜாவாகணும்னு ஆசை வந்திருக்கு!''

''அந்தக் கிழத்துக்கா?''

''ஆமா! அவர் கிட்டப் போய் இந்தத் தோதா, சுவர்ணமுகி சமாச்சாரத்தைச் சொல்லிட்டான். 'இவ ஒரு ராஜகுமாரி, பழைய இம்மாடி ஸ்ரீரங்கராஜா மகள்னு!'

''ஓகோ!''

''தோதாவை அழைச்சுக்கிட்டுப் போய்ச் சொல்ல வச்சதும் நான்தான்னு வச்சுக்க.''

''சரிதான்.''

''அதை வச்சுக்கிட்டே அந்தக் கிழம் ஏதாவது நல்ல திட்டம் சொல்லும்னு பார்த்தால் என்ன சொல்லிச்சு தெரியுமா?''

''சொல்லு!''

''தானே அந்தப் பொண்ணைக் கட்டிக்குமாம். சிங்காதனத்துக்குப் போட்டி போடுமாம்!''

''இந்தக் கிழமா?''

''ஆமாம். ஆசை யாரை விட்டது?''

''திம்மராஜாவுக்கு அது துரோகம் ஆச்சே!''

''அதையெல்லாம் யார் பாக்கறாங்க? பட்டத்துக்கு ஏதாவது வழி இருக்கா? உடனே நுழைஞ்சுட வேண்டியது தான். நாடு சீரழிஞ்சு போச்சு.''

''நீயும் அவன் கட்சியிலே இருக்கிறவதான்!''

வத்சலா இதைச் சொல்லி ஒரு நொடி நொடித்தாள்.

''ஆமாடி! ஆமாடி! நீ சொல்லிக் காட்டுவேன்னு தெரியும். திம்மராஜா பட்டத்துக்கு வந்தா நரசய்யா கொடி பறக்கும். அதுனாலே என் கொடியும் பறக்கும்னு நினைச்சேண்டி! இன்னிக்கும் சொல்றேன். என்னிக்கு நான் அந்தப் பசுபுலேட்டி பங்காஜம்மா முன்னாடி



தோரணைக்கால் போட்டுக்கிட்டு ராஜ சபையிலே வெத்திலை குதப்பறேனோ அன்னிக்குத் தாண்டி என் நெஞ்சு வேகும். அதுக்காகத் தாண்டி இந்தத் திம்மராஜா பக்கத்திலே நான் இருக்கேன்.''

வங்கவரம் வத்சலா யார் பக்கமும் சேராதவள். ஒதுங்கியே இருப்பவள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தலையை 'ஹக்கேன்' என்று ஆட்டினாள்.

''நல்ல ஆசை உனக்கு! பசுபுலேட்டியைப் பழிதீர்க்கணும்கிறதுக்காக அநியாயக் கட்சியிலே போய்ச் சேருவையா?''

''திம்மராஜா கட்சியைத்தானே சொல்றே? போய்ட்டுப் போகட்டும்டி. நியாயத்தை இந்தக் காலத்திலே யார் பார்க்கிறா?''

''சரி, விஷயத்துக்கு வா! நரசய்யா இந்தப் பொண்ணைக் கட்டிக்கிறேன்னு சொல்லிச்சு!''

''சொல்லிடுத்தா! எனக்கு ஒரு யோசனை''

''சொல்லு.''

''இந்த சுவர்ணமுகியை யாருக்காவது ஒரு நல்ல ஆளுக்குக் கட்டிக் கொடுத்து, அவனை ராஜா ஆக்கினா என்னன்னு தோணித்து.''

''நினைச்சா ராஜாவாகிறதுங்கிறது அவ்வளவு சுலபமா?''

''சுலபமில்லை! ஆனா சுவர்ணமுகி யாருன்னு தெரிஞ்சா, தளவாய், கிளவாய், ராயசம், கீயசம் எல்லாரும் அவ பக்கம் திரும்பிடுவாங்கடி. இம்மாடி ஸ்ரீரங்கராஜா வம்சம்னா அவங்காதனே இந்த ராஜ்யத்தை ஆள உரிமை

இருக்கு. மத்தவங்களெல்லாம் இடையிலே வந்த வங்கதானே?''

''சரி சொல்லு! சுவர்ணமுகியைக் கட்டிக்கப் போறவன் ராஜாவே ஆயிடப் போறான்னு வை. அதுக்கு எந்த ஆளைத் தேர்ந்தெடுக்கப் போறே?''

''அதுக்குத்தாண்டி உன் உதவி வேணும்!''

''நான் என்ன செய்யணும் சொல்லு.''

''ரத்னாவளி உடனே தொடரவில்லை. வங்கவரம் வத்சலாவை ஒரு வசியப் பார்வை பார்த்தாள். முகத்தில் குறும்பு நகை கொட்டித் தகதகவென்று மினுக்கியது.

''கேட்டுக்க, வச்சு! வேங்கடராஜா தங்கை சந்திரம்மா இருககாளே!''

படக்கென்று கண்களை விரித்தாள் வத்சலா. படபடப்புடன் ''அவளுக்கென்ன?'' என்றாள்.

''சந்திரம்மாவும் நீயும் சிநேகம்னு எனக்கு நல்லாத் தெரியும்.''

''அதனாலே என்ன?''

''அந்த சந்திரம்மாவை வேங்கடராஜா மனைவி அவதூறு சொல்லி அரண்மனையை விட்டு விரட்டிட்டது எனக்குத் தெரியும்.''

''சரி, அதுக்கென்ன?''

''அவளுக்கு ஸ்ரீரங்கன் என்கிற பெயர்லே ஒரு மகன் இருக்கானா?''

''இருக்கான்.''

''அவனைத்தான் இந்த சுவர்ணமுகிக்கு மணம் முடிக்க வேண்டும் என்று பார்க்கிறேன்.''



'''வாவ்'' என்று ஒரு குரலோடு வத்சலா எழுந்திருந்தாள். 'உட்காரு, உட்காரு'' என்று கையைப் பிடித்துக் கீழே அமர்த்தினாள் ரத்னாவளி.

வத்சலாவின் வியப்பு அமிழவில்லை. மெல்ல அமர்ந்தாள். ''நீ என்ன உளர்றே?'' எனறு சூடாகக் கேட்டாள் ரத்னாவளியை நோக்கி.

''உளறவில்லை. சாத்தியமாக உண்டானதைத்தான் சொல்றேன். நான் சொல்றது நிச்சயம் நடக்கும். சுவர்ணமுகி யாருன்னு தெரிஞ்சா நாளைக்கு நாடே அவள் காலடியிலே கிடக்கும்!''

வத்சலாவுக்கு நெஞ்சு விம்மி வந்தது.

''நிஜமாவா சொல்றே?'' என்று உணர்ச்சிப் பொங்கக் கேட்டாள் அவள்.

''சந்தேகம் இல்லேடி. சுவர்ணமுகியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன்தான் நாளைக்கு ராஜாவாகப் போறான். இது சுட்டுப் போட்ட சத்தியம்'' என்று தொனியை அழுத்திக் கூறினாள் ரத்னாவளி.

வத்சலா வெளிப்புறத்தைப் பார்த்தாள். அவள் பார்வை உணர்ச்சிப் பிரவாகத்துடன் ஒடியது.

''நீ சொல்றது நடக்குமான்னு எனக்குத் தெரியாது. ரத்து! நடந்தா நான் சந்தோஷப்படுவேன். சந்திரம்மா தன் மதனிகிட்டே ரொம்பக் கொடுமைப்பட்டுட்டா. இப்போ தனியா இருந்து ரொம்பக் கஷ்டப்படறா! தனக்கு ஒரு காலம் வரணும்னு ராவும் பகலும் ஏழுமலையானை வேண்டிக்கிட்டு இருக்கா. யார் கண்டா? உன் மூலமா அந்தக் காலம் வருதோ என்னவோ!''

"வரட்டும்டி வரட்டும்" என்று சந்தோஷ மிகுதியில் பட்டுத் திண்டில் சாய்ந்தாள் ரத்னாவளி. "என்னாலேயே எல்லாம் நடக்கட்டும். எல்லாருக்கும் அது சுபமா முடியும்! ஆண்டவனும் அதுக்கு வழி விடுவான். இப்போ எனக்கு ஒரு காரியம் செய்! அதுக்கு முன்னாடி உன்கிட்டே ஒண்ணு கேட்கணும். எனக்கு உதவி செய்ய உனக்கு இஷ்டம் தானே?"

"இந்த விஷயத்திலே மறுக்க எனக்கு இஷ்டமில்லை. சந்திரம்மா எனக்கு உயிர்த்தோழி."

"அதுமட்டுமில்லே பாரு! திம்மராஜாவும், வேங்கடராஜாவும் தலைக்குத் தலை அடிச்சிக்கிறாங்க. ரெண்டு பேரும் என்னென்னவோ வழியிலே சிங்காதனத்துக்கு உரிமைக்காரங்களா வந்தவங்க. நேர் வழி உரிமை இல்லாதவரைக்கும் இப்படி அரை குறை உரிமைக்காரங்க வந்து சண்டை போட்டுக்கிட்டேதான் இருப்பாங்க! ஒத்துக்கிறியா?"

"ஒத்துக்கிறேன்."

"ஆனால் சுவர்ண்முகி நேர்வழி உரிமைக்காரி. அவள் யாருன்னு தெரிஞ்சுட்டதுன்னா ஜனங்களுக்கு அவள்தான் ராணி. பட்டத்துக்கு அவளது பாத்தியதையைத் தான் ஜனங்க ஒத்துக்கிடுவாங்க. அவள் மட்டும் பட்டத்துக்கு வந்துட்டான்னா நாட்டுக்குள்ளே மற்ற உரிமைச் சண்டை யெல்லாம் கப்சிப்னு அடங்கிடும். ஒத்துக்கிறியா?"

"ஒத்துக்கிறேன்."

"அதுக்காகவேகூட நீ என்னோட ஒத்துழைக்கணும். பதினைந்து வருஷமா நாடு அல்லல் பட்டதிலே நாம்ப நம்ப சம்பாத்தியத்திலே பாதிக்கு மேலே இழந்துட்டோம். என்னிக்கு அமைதி ஏற்பட்டு விவகாரங்களிலே நாம்ப நிம்மதியா ஈடுபடப் போறோம் சொல்லு!"



வத்சலாவுக்கு ரத்னாவளி எடுத்துக் கொடுத்த விவரங்கள் பளிச்சென்று தைத்துக் கொண்டன. அதை அவள் முகமே காட்டிற்று.

ரத்னாவளிக்கு அதனால் சந்தோஷம் பொங்கியது. அவளது பருமனான சரீரம் முழுதும் அது வழிந்தோடியது.

"அப்போ என் விஷயத்தைக் கவனிக்கிறேன்னு சொல்லு!" என்றாள் ரத்னாவளி.

"கவனிக்கிறேன்."

"உடனே காரியத்தில் இறங்கு!"

"என்ன செய்யணும் சொல்லு!"

"நீ போய் எப்படி சந்திரம்மா கிட்டே பேசுவியோ, எப்படி அவளை ஒத்துக்க வைப்பியோ தெரியாது. எந்த வகையிலும் காரியத்தை முடிச்சுக்கிட்டு இங்கே அவள் பிள்ளை ஸ்ரீரங்கனைக் கையோடு அழைத்து வந்துவிடணும் புரிகிறதா?" என்றாள் ரத்னாவளி.

வத்சலாவுக்கு முறுவல்களாக வந்தன. உவகைகள் வாரித் தெளித்து முகத்தில் நட்சத்திர மினுக்குகள் வந்தன.

அவளது மௌன அங்கீகாரத்தை அறிந்து கொண்டு,

"கடைசியில் ஒரு விஷயம்!" என்று சொல்லி எழுந்தாள் ரத்னாவளி.

வத்சலா அவளை ஆழ்ந்து நோக்கினாள்.

"இந்த விஷயம் நம்ப ரெண்டு பேருக்கு மட்டும் ரகசியமா இருக்கட்டும். யாரிடமும் சொல்லக்கூடாது. ஏழுமலையான் மீது ஆணை" என்றாள் அவள்.

"ஆணை" என்றாள் வத்சலா.

"அப்போ, நாளைக்குப் புறப்படு!" என்றாள் ரத்னாவளி.

"ஆகட்டும்" என்றாள் வத்சலா.

* * * * *

. . . மூத்த பையனுக்கு 18 வயது. ஆனால் அவனை விட்டு விட்டுச் சிறிய பையனான 12 வயது ராமதேவனை அந்தச் சலவை தொழிலாளி தனது அழுக்குக் கூடையில் போட்டு மறைத்து . . .

– பர்ரா டாஸின் 12-12-1916 கடிதம்

## 24

மூன்று மாதங்கள் சென்ற பிறகு மழை வந்தது.

எட்டு வருடங்களாக மலடியாய்ப் போன வானத்தின் வயிற்றை வலுக் கட்டாயமாகக் கீறிக் கொண்டு ஒரு சமுத்திரமல்ல, மகா சமுத்திரமே கீழே குதித்தது.

பூமி ஒரு சிவலிங்கமாக அபிஷேகத்தில் மூழ்கியது.

மரங்களும், வீடுகளும் அதன் அடிப்பில் பிய்ந்து விழுந்தன. பாறைகள் நெக்கு விட்டு இடம் பெயர்ந்தன. கால்வாய்களும், சிறுநதிகளும் விம்மிப்போய் வழி தெரியாமல் சமவெளிகள் எல்லாம் சீறி ஓடின.

பூமியெங்கும் தரையே தெரியவில்லை.

தண்ணீர்த் தகடு விரித்தது போல் எங்கும் ஒரே சமதளம் தெரிந்தது.

ஒருநாள் இரு நாள் அல்ல, இருபது நாட்கள் விடாத மழை.

தினமும் பெரும் பெரும் மேகங்கள் பாய் மரங்கள் போல் பறந்து வந்தன.

பூமிக்கு நேரிடையாக நின்று ஒரு கறுத்த கர்ப்பமாகச் சூல் கொண்டன.

நான்கு திசைகளிலும் மின்னல்கள் சாட்டை அடித்தன.

பைசாசக் காற்று ஒன்று அவ்வப்போது தோன்றி, பொறுப்பில்லாத வெறியன் போல் மூர்க்கமாக ஓடியது.



எட்டு வருடங்களாக அடக்கி வைத்திருந்த இயற்கையின் சீற்றங்கள் திடீரென்று விடுபட்டது போல் போகும் வழியெல்லாம் விளையாட்டுத் தனமாய் நாசங்களை விளைவித்தது.

எங்கும் ஓ என்று பேரிரைச்சல்கள்.

குறுக்கும் நெடுக்குமாக ஓடும் நீரின் சோ என்ற பிரலாபங்கள்.

ரங்கநாதபுரம் என்ற அந்தக் கிராமம் ஏற்கனவே க்ஷாமத்தில் நலிந்திருந்தது.

இப்போது மழையும் அதைக் குற்றுயிராக்கி விட்டுச் செல்ல, ஒரு வயாதன வீரன் போல் முடங்கி விட்டது.

அதன் தோப்புகளும், சோலைகளும் உடைந்து கிடந்தன. அதன் வயல்கள் எல்லாம் மேடிட்டு விட்டன. அதன் கால்வாய்களும் ஓடைகளும் தூர்ந்து விட்டன.

இருபது நாட்கள் கழிந்த பிறகு, காலையில் வானம் முதல் துளிர் வெளிச்சத்தைக் காட்டியபோது

அநேகமாய் உயிர் போயிருந்த கிராமம் மெல்லச் சிலும்பிச் சுவாசம் விட்டது.

அதன் நான்கு தெருக்களிலும் உயிர் இலேசாக அரும்பியது.

ஊரின் புறத்தே உள்ள தண்டநாயக மாளிகையில் அதிகாலையில் எழுந்திருந்த சுவர்ணமுகி,

தலையைச் சுற்றி முக்காடு கட்டிக் கொண்டு சிணுசிணுக்கும் தொழுவத்துக்குச் சென்றாள். தூவானம் இன்னும் இருந்தது.

கையில் பொன்னாகத் துலக்கப்பட்ட பித்தளைச் சொம்பு மினுக்கல் காட்டியது.

தொழுவத்தில் வரிசையாக ஆறு லட்சுமிகள் குங்குமப் பொட்டுக்களுடன் நின்று கொண்டிருந்தன.

முக்காலியைத் தூக்கி முதல் பசுவின் முன்னால் போட்டு, கன்றுக்கு ஊட்டி, பால் கறக்க ஆரம்பித்ததும் மனம் அந்தப் பாலின் 'சொய்ய்' இசையுடன் கலந்து எங்கேயோ போயிற்று.

அவளது துக்கமான வாழ்விலும் இடையிடையே வரும் சின்னஞ்சிறு இன்பங்கள் இவை.

இந்தத் தண்டநாயகர் வீட்டுக்கு வந்ததிலிருந்து அடிமை வாழ்வு தொடங்கி விட்டது.

காலையிலிருந்து மாலைவரை வேலை. இடையறாத வீட்டு வேலை. சமையல் செய்வதிலிருந்து தொழுவத்தின் பராமரிப்பு வரை குறுக்கு உடையும் கடின வேலைகள்.

இடையே அந்த ராட்சசி கிருஷ்ணவேணி கூப்பாடு போட்டுப் புதிய வேலை ஒன்றை ஏவிவிடுவாள்.

சிறிதும் சுணங்காமல் செய்ய வேண்டும். நூலிளை பிசகினாலும் வசவுகள் சாடிவரும். சமயத்தில் முதுகில்கூட அவளுடைய இரும்புக் கை தொம் என்று விழும்.

வாழ்க்கை எப்படி நாராசமாகி விட்டது!

ஒரு அரச பரம்பரையில் பிறந்த பெண்ணுக்கு இவ்வளவு கஷ்டங்கள் வருமா?

கதையில் கூடக் கேட்டதில்லை.

ஒரு அடிமையிலும் கேவலமாக வாழ வேண்டி இருக்கிறது.

''அம்மா' என்று மனம் முனகியது.

அம்மாவைச் சரியாகப் பார்த்ததில்லை – அப்பாவையும்தான்!



இரண்டு பேரையும் சிறையில் வைத்திருந்தார்கள் என்று மட்டும் தெரியும்.

அப்பாவுக்கு ஒரு ஆசை! தனது பரம்பரை எப்படியும் நிலைக்க வேண்டும் என்று.

இதனால் அண்ணன் ராமதேவனை ஒரு சலவைத் தொழிலாளியின் கூடையில் ஒளித்து வைத்துச் சிறைக்கு வெளியே அனுப்பி விட்டார்.

அதன் பின்னர் ஒரு வயதுக் குழந்தையான அவளைச் சிறைக் காவலாளி ஒருவன் கையில் கொடுத்து, பதிலாக அவனது குழந்தையை வாங்கிச் சிறைக்குள்ளே வைத்துக் கொண்டார்.

ஆக காவலாளியும் அவனது மனைவியும்தான் அவளுக்கு ஆரம்பப் பெற்றோர்கள்.

பின்னர் சிறிது காலத்தில் ரங்கப்பாவின் கைக்கு மாற. . .

அப்பா! எத்தனை கஷ்டமான கட்டங்களைக் கடந்து அவள் வந்து விட்டாள்!

இங்கே இந்தக் கிருஷ்ணவேணியிடம் அகப்பட்டுக் கொண்டு. . .

இவள் யார் தெரியவில்லையே!

மாளிகை ஆடம்பரங்களைப் பார்த்தால் நிச்சயம் தேவதாசியாகத்தான் இருக்கும்.

இவர்களுக்குத்தான் எவ்வளவு செல்வங்கள்!

மன்னருக்கு அடுத்தபடி செழிப்பாக வாழ்கிறார்கள் இவர்கள்.

இந்தக் கிருஷ்ணவேணியிடம் ஏன் ரத்னாவளி அவளை ஒப்படைத்திருக்கிறாள்?

இவளிடம் விலைக்கு விற்று விட்டாளா?

அல்லது வேறு ஏதாவது நோக்கத்துடன் இங்கே அவளைக் கொண்டு வந்திருக்கிறார்களா?

ஒன்று புரிந்தது.

பலமுறை அவளை, 'நீதான் சுவர்ணமுகியா சொல்லு, சொல்லு!' என்று அரித்து எடுத்திருக்கிறார்கள். அவள் சொன்னதில்லை! அவள் ஒரு மலைஜாதிப் பெண் என்றே திரும்பத் திரும்பத் தன்னைச் சொல்லிக் கொண்டாள்.

உண்மையை வரவழைக்க வேண்டி அவளை எவ்வளவு சித்திரவதை செய்தார்கள்! எவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள்! எத்தனையோ முறை பட்டினி போட்டார்கள்!

எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு பல்லைக் கடித்து இருந்து விட்டாள்.

இப்போது இந்தத் துன்பமான அடிமை வாழ்வு இன்னும் நீடித்துக் கொண்டே போகும்போது, மனம் திறந்து அவள் யார் என்று சொல்லிவிடலாம் போல இருந்தது.

சொன்னால் என்ன ஆபத்தோ!

ஒரு அரச பரம்பரையும், அதன் பழைய பொக்கிஷத்தின் ரகசியமும் அவள் மூலம் கிடைக்கும்போது சும்மா விடுவார்களா?

என்ன ஆனாலும் பரவாயில்லை. அவள் தனது உண்மைகளை வெளிப்படுத்தப் போவதில்லை.

உள்ளே இருந்து, "ஏ சனியனே!" என்று குரல் கேட்டதும், பால் சொம்போடு எழுந்திருந்தாள்.



கிருஷ்ணவேணி சிடுசிடுவாக வந்தாள்.

"பால் கறக்க எத்தனை நாழி?"

சுவர்ணமுகி குனிந்து கொண்டே செம்பை உள்ளே போய் வைத்தாள்.

திரும்பிக் கிணற்றடிக்கு வந்தாள். உள்ளே தண்ணீர் கொண்டு போக வேண்டும்.

ராட்டையைப் போட்டுக் குடத்தை இழுக்கும்போது டக்டக் டக்டக் என்ற ஒலங்கள் வர,

அவள் நினைவு ஒவ்வொரு முறையும் அந்தக் குதிரை வீரனை நோக்கிச் சென்றது.

'அவர் வருவாரா?'

நினைக்கும்போது கூடச் சின்ன உவகை தளிர்த்தது.

அவரை உயிருடன் கிடைக்கப் பெற்றதே வரப்பிரசாதம்! அந்தச் சந்தோஷத்தில் திளைத்திருக்கும் போது ஒரே ஒரு இரவுக்குள் மீண்டும் அவரைப் பறிகொடுத்தோமே!

எவ்வளவு அதிர்ஷ்டமில்லாதவள் அவள்! போது விடிவதற்குள் கிங்கிரர்கள் போல் அந்தப் பட்டாளம் ஏன் காட்டுக்குள் வர வேண்டும்? நரசய்யாவின் படை என்றார்கள். பின்னர் பார்த்தால் ரத்னாவளியின் 'யூகம்' (சொந்தப்படை) என்று தெரிந்தது. அவளையும் செல்லியையும் சிறைப் பிடித்துப் போக. . . அப்போதாவது அவர் (அர்ச்சுனன்) எதிர்ப்பட்டு அவளது துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக மாற்றியிருக்கக் கூடாதா?

அவர் எப்போது வந்தாரோ! எங்கெங்கே தேடினாரோ!

எவ்வளவு மனம் நொந்திருப்பார் அவர்!

இப்போது கூட அவர் தேடிக் கொண்டிருப்பார் இல்லையா?

ஆமாம், நிச்சயம் தேடிக் கொண்டிருப்பார்!

அவளால் அந்த இரவின் துளிப் பொழுதில் கூட அவரது கண்களை வாசிக்க முடிந்ததே!

அதில், அவள் மீது அவர் கொண்டிருந்த பரிச்சயத்தின் நெருக்கம் நன்றாகத் தெரிந்ததே!

அவளைப் பார்த்ததும் எப்படிப் பிரமை அடித்து நின்றார் அவர்!

சொல்ல முடியாமல், பேச முடியாமல், காலையும் கையையும் வெடவெடத்துக் கொண்டு. . . சிரிப்புக்கூட வந்தது. பாவம்! அந்த இடத்திலேயே அவரைத் தவிக்க விடாமல், ''நான்தான் சுவர்ணமுகி'' என்று சொல்லியிருக்கக் கூடாதா?

அவளை எவ்வளவு தூரம் தவிக்க வைத்து, அப்புறம் கூடத் தாராளமாகப் பேசாமல் அந்தப்புரத்துத் திரைக்குள்ளிருந்து பேசுவது போல் ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை மட்டும் உதிர்த்து. . . சீ! ஏன் அப்படிச் செய்தாள் அவள்!

இனிமேல் வந்தால் சரளமாகப் பேசவேண்டும். தட்டுத் தடங்கல் எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது! ஆமாம்!

வருவாரா?

நீரைப் பெரிய வாளியில் சரித்து, குடத்தைத் தூக்கி, இடுப்பில் வைத்ததும்,

இன்னும் அந்த டக்டக் சத்தம் கேட்டது.



திடுக்கிட்டு ராட்டையைப் பார்த்தாள். ராட்டை அப்படியேதான் இருந்தது. பின்னே எங்கிருந்து சத்தம் வருகிறது.

வாசலை நோக்கித் திரும்ப,

அவள் கண்கள் ஒரு கணம் விசாலமாகிப் பிறகு குறுகிப் போயின.

அதே ஆள்தான் வந்து கொண்டிருந்தான். பலமுறை பார்த்த ஸ்ரீரங்கன்!

அவனைக் கண்டால் அவளுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

அவளிடம் வந்து தாராளமாகப் பேசுகிறான். என்ன காரணம் என்று தெரியவில்லை. ஏதாவது கெட்ட நோக்கு இருக்குமோ என்று நினைத்திருக்கிறாள். பிறகு அவள் நடை உடையிலிருந்து அப்படிப்பட்டவன் இல்லை என்று கணித்திருக்கிறாள். ரொம்ப கண்ணியமாகப் பேசினான். ஒதுங்கியே நின்றான். அவளுக்கு நிறைய மரியாதை கொடுத்தான்.

ஒருவேளை, இதெல்லாம் அவள் ஒரு அரசகுமாரியா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இருக்குமோ?

குடத்தையும் வாளியையும் உள்ளே கொண்டு போய் வைத்தாள்.

கிருஷ்ணவேணியின் விழுத்த துணிகளை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு மீண்டும் வந்தாள். துணிகளை நனைத்து நிமிரும்போது பளீர் என சூரிய வெளிச்சம் கிணற்றைத் தழுவியிருந்தது.

வெகு நாட்களுக்குப் பின் முதன் முதலாக வந்த வெளிச்சம்.

அது தந்த வெம்மையில் மனம் சற்று மிளிர கனைக்கும் குரல் கேட்டு அவள் திரும்பினால்.

ஸ்ரீரங்கன் சிறிது தள்ளி விநயம் காட்டி நின்றான். ''இன்னும் காரியம் முடியவில்லையா?'' என்றான் மெல்லிய குரலில்.

அழகான இளைஞன். அடர்த்தியான புருவம், திடகாத்திரமான உடம்பு. கண்களில் மட்டும் எப்போதும் ஒரு பக்தனுக்கு இருப்பதைப் போன்ற கனிவு. அவைகளைப் பார்த்தாலே அவனை நம்பலாம் போல இருக்கும்.

''ம்'' என்று தலையைக் குனிந்தாள் அவள்.

''இத்தனை நாளும் மழை! என்னாலே வரமுடியாமல் போயிடுத்து!'' என்றான் அவன்.

அவள் பேசவில்லை.

''மழை வந்தது எல்லாருக்கும் சந்தோஷம். குடி படைங்க எல்லாம் மகிழ்ச்சியா இருக்காங்க. இது நாட்டுக்கு ஒரு நல்ல அறிகுறி!''

அதற்கும் அவள் பேசவில்லை.

''மழையிலே நீங்க எப்படி இருந்தீர்கள்? வீட்டில் சௌகரியமாக இருந்தது?'' என்று தொடர்ந்தான் அவன்.

அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தவள் வீட்டு உட்புறம் நோக்கித் திரும்பினாள்.

''கிருஷ்ணவேணி வெளியே போயிருக்காங்க. நீங்க தைரியமாப் பேசலாம்'' என்றான் அவன்.

இப்போது அவள் ஆத்திரம் இன்னும் பற்றிக் கொண்டது.



'ஐயா!'' என்று கடுமையாக விளித்தாள். அவள் கண் இரண்டும் ஜுவாலை இட்டது. ''உங்க அக்கான்னு சொல்றீங்களே! அவள் ஒரு ராட்சசி! கொடுமைக்காரி! இந்த வீட்டில் எங்களை என்ன கொடுமையாக நடத்தறா தெரியுமா? எவ்வளவோ பொறுத்துப் பார்த்தேன். இன்னும் கொஞ்ச நாள்தான்! அதற்கு மேலே என்னைக் கொடுமை பண்ணினா ஒரே வழி இந்தக் கிணத்துக்குள்ளார விழுந்துடுவேன்'' என்றாள் அழுத்தமாக.

வார்த்தைகளை வீசி எறிந்துவிட்டு அவனைப் பார்க்க, அவன் அதன் கடுமைகளைக் கண்டு நடுங்குவது தெரிந்தது.

கண்களில் ஒரு கிரக்கம் பீறி அடித்து வந்தது. அந்த நொடியில் அவனை நம்பலாம் போன்று ஒரு அடைக்கல உணர்வு அவளிடம் தோன்றியது.

''தயவு செய்து கேளுங்கள்! அப்படி எதுவும் செய்ய மாட்டீர்களே! எனக்கு சபதம் அளித்துக் கொடுங்கள். இல்லாவிட்டால் என்னால் இரவு உறங்க முடியாது'' என்று கூறினான் அவன். குரல் நடுங்கியது.

. அவள் அவனை அர்த்தமுடன் பார்க்க, அவன் தொடர்ந்தான். ''ஏன் உங்கள் மீது அவ்வளவு கரிசனம் என்று கேட்பீர்கள்! என்னால் அதை அறிந்து கொள்ள முடியவில்லை. உங்களைப் பார்த்ததும் எனக்கு இரக்கமும் பரிவும் மட்டும் வரவில்லை. ஒரு ராஜ பக்தியும்கூட வருகிறது'' என்றான்.

''ராஜபக்தி?'' என்று தெரியாதவள்போல விழித்தாள் அவள்.

''ஆமாம், ஒரு அரசனிடம் மக்கள் செலுத்தும் அன்பு! நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள். ரத்னாவளி

என்னை உங்களிடம் அனுப்பித்தது ஒரு துர்நோக்கத்திற்காக. ஆனால் அதற்கு நான் உடன்படவில்லை. ஏனெனில் தங்கள் முகம் என்னை ஒரு நன்னடத்தையிலேயே நடக்க வேண்டும் என உத்தரவு போடுகிறது. அதற்குக் காரணம் அறியேன். உங்களைப் பொறுத்த வரையில் என்னால் உண்மை தவிர வேறு எதுவும் பேச முடியாது'' என்றான் அவன்.

அவன் கூறுவதைப் பார்த்தால் அத்தொனியில் சத்தியம் இருப்பது போல் தோன்றியது.

இவனை நம்பலாமா?

ரத்னாவளி துர்நோக்கம் வைத்திருக்கிறாள் என்கிறானே! அது என்ன துர்நோக்கம்?

இவன் முகத்தைப் பார்த்தால் இவன் என் வசீகரத்தில் மனம் கலங்கி விட்டான் என்று தெரிகிறது.

இதையே வைத்து சாகசம் செய்து இவன் உதவியால் வெளியே தப்பித்து விடலாமா? அப்படிச் செய்தால் என்ன?

முதல் புடவையை வெளியே தண்ணீருடன் போட்ட அவள், நிமிர்ந்து அவனை சற்று ஆழமாகப் பார்த்தாள்.

அவளது கரிய விழிகள் பட்டதும் அவன் உடம்பே தத்தளித்தது.

அவன் பார்வை அவள் கண்களை தாங்காமல் கீழே குனிந்தது.

''ம்'' என்று தொடங்கி மேலே போனாள் அவள். ''என்னமோ ரத்னாவளிக்குத் துர்நோக்கம்னு சொன்னீங்களே அது என்ன?'' என்றாள் அழுத்தத்தோடு.

* * * * *

ராணி ஒரு குழந்தையைத் தனதாக்கிக் கொண்டாள். சூழ்ச்சி அரசர்க்குச் சீக்கிரம் தெரிந்து விட்டது. குழந்தையைத் தனது போலவே வளர்த்து வந்தாலும் பட்டத்தை அதற்குக் கொடுக்கவில்லை.

– ப்ர்ரா டாஸின் 12-12-1616 கடிதம்

## 25

ஸ்ரீரங்கன் தனது முயற்சியில் தைரியம் அடைந்தான். ''உங்களை வைத்து இந்த நாட்டைச் சூதாடலாம் என்று பார்க்கிறாள் ரத்னாவளி'' என்றான்.

''என்னைங்களா?'' என்றாள் சுவர்ணமுகி.

''என்னை வச்சு என்ன செய்ய முடியும்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

ஸ்ரீரங்கன் முகத்தில் கலக்கம். இன்னும் இந்தப் பெண் கொச்சை மொழியை விடவில்லையே! இன்னும் தன்னை மலை இனப் பெண்ணாகக் காட்டிக் கொள்கிறாளே என்று நினைத்தான்.

இருந்தாலும் தன் நம்பிக்கையை விடாமல், ''உங்களை அவளுக்குத் தெரிந்த ஆண்பிள்ளைக்குக் கல்யாணம் கட்டிக் கொடுப்பாள். நீங்கள்தான் சிங்காதனத்துக்கு உரியவர்கள் என்று பிரகடனம் பண்ணித் தன் பலத்துக்கு ஆள் சேர்ப்பாள் . . .'' என்றான்.

சுவர்ணமுகி புடவையைக் கீழே வைத்தாள். வலது கையை எடுத்து அதிசயம் போல் முகவாயில் வைத்தாள்.

''அப்படிச் செய்து விட்டால் நாளைக்கு ராஜ்யமும் அதிகாரமும் அவள் கைக்கு வந்த மாதிரி! இஷ்டப்படி வாழுவாள்'' என்று முடித்தான் ஸ்ரீரங்கன்.

''என்னை வச்சு இத்தனையும் முடியுங்களா?'' என்றாள் சுவர்ணமுகி.

''முடியும்.''

''நான் மலை ஜாதிப் பெண் ஆச்சே!'' என்றாள் அவள்.

ஸ்ரீரங்கன் முகத்தில் முறுவல் தோன்றி அழிந்தது.

சுவர்ணமுகி வெகுளித்தனமாகக் குனிந்து அவன் பேச்சில் சுவாரஸ்யமில்லாதது போல் தனது நடிப்பை நீடித்தாள்.

ஸ்ரீரங்கன் முகத்தில் இன்னும் குழப்பம் இருந்தது. கூடவே தீவிரமாக ஆலோசனை இடுவதும் தெரிந்தது. சுவர்ணமுகியின் கண்களைக் கனிவாகப் பார்த்தான்.

பிறகு, ''இப்போது ரத்னாவளிக்கு இருக்கும் ஆத்திரத்தில் நீங்கள் உண்மையில் இளவரசி இல்லை என்று தெரிந்தால்கூட உங்களையே இளவரசி என்று பிரகடனம் செய்தாலும் செய்வாள்'' என்றான்.

அலசுவதை ஒரு கணம் நிறுத்தினாள் சுவர்ணமுகி. அவன் சொன்னது அவளைச் சிறிது பாதித்திருந்தது.

''அப்படி முடியுங்களா?'' என்று கேட்டாள்.

''ஏன், திருவேங்கடராஜாவின் பத்னி செய்யவில்லையா?'' என்று கேட்டான் ஸ்ரீரங்கன்.

''என்ன செய்தாள்?''

''அவள் கர்ப்பம் தரித்ததாகப் பொய் சொல்லி ஒரு தாதியின் மகனைத் தன் குழந்தை என்று சொல்லவில்லையா? அதிலிருந்துதானே நாட்டில் பட்டத்துக்குப் பூசல்கள் ஏற்பட ஆரம்பித்தன'' என்றான் ஸ்ரீரங்கன்.

சுவர்ணமுகி யோசித்தாள்.

திருவேங்கடராஜாவின் பத்னிதான் அந்த ஏமாற்று வேலையைச் செய்தவள். ஆனால் ராஜாவுக்கு அது நன்றாகத் தெரியும். உரியவேளை வந்தபோது பட்டத்தை அந்த 'ஏமாற்றுப்' பிள்ளைக்குக் கொடுக்காமல் தமது உறவினர் பிள்ளைக்குக் கொடுத்தார்.

அந்தப் பிள்ளையின் வம்சத்தில் வந்தவள்தான் சுவர்ணமுகியும்.



பட்டம் பெறுவதற்காக இப்படிப் பல துர்ச் செயல்களை மேற்கொள்கிறார்கள் என்பதைச் சுவர்ணமுகி ஏற்கனவே அறிந்திருக்கிறாள்.

''ஐயா, என்னைக் கூட அப்படிச் செய்வாங்களா?'' என்று கலவரத்துடன் கேட்டாள் அவள்.

''ஏன், அவசியம் வந்தால் நிச்சயம் செய்வார்கள்'' என்றான் ஸ்ரீரங்கன்.

''நான் கேவலம் மலை இனப் பெண்ணாச்சே?''

''அதனால் என்ன? உங்களுக்கு ராஜ வம்சத்து மூக்கும் முழியும் இருக்கின்றன. அதை உபயோகப்படுத்தியே, நீங்கள்தான் ராஜகுமாரி என்று சொன்னாலும் சொல்வார்கள். எல்லாம் அந்த நேரத்து அவசியத்தைப் பொறுத்திருக்கிறது.''

ஸ்ரீரங்கன் அவளைச் சற்று விசேஷமாகக் கவனித்தான்.

சுவர்ணமுகி சிறிது யோசனை செய்கிறாள் என்பதே அவனுக்கு முறுவலைக் கொடுத்தது.

யோசித்துக் கொண்டே ஈரப் புடவையைப் பிழிந்தாள். அதே நேரம் அவள் சிந்திக்கிறாள் என்பது நன்றாகத் தெரிந்தது.

ஸ்ரீரங்கன் நம்பிக்கையோடு காத்திருந்தான்.

சிறிது நாழிகைக்குப் பிறகு அவள் நிமிர்ந்து, ''ஐயா, நான் மலை ஜாதிப் பொண்ணு! என்னைப் போட்டு சித்திரவதை பண்ணாதீங்க ஐயா!'' என்றாள் இரக்கமாக.

''நீங்கள் இங்கே இருக்கிறவரை சித்திரவதைதான் செய்வார்கள். நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்'' என்றான் ஸ்ரீரங்கன்.

''பொய் சொல்லி எனக்கு என்ன ஆகப் போகுது? நிஜத்தைத்தான் சொல்றேன் ஐயா! என்னை விட்டுறச் சொல்லுங்க! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு'' என்றாள் அவள்.

''நல்லது'' என்று சொல்லிச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான் அவன். பிறகு தணிவான குரலில் ''இதைத்தான் உங்களிடமிருந்து எதிர்பார்த்தேன். நீங்கள் நினைத்தால் உங்களை இங்கே விட்டு வேறு இடத்துக்குப் போக வழி செய்கிறேன். சம்மதமா?'' என்றான் அவன்.

அவனை ஆழமாகப் பார்த்தாள் அவள்.

''ஐயா, உங்களை மட்டும் எப்படி நம்பறது?'' என்றாள் சந்தேகம் தொனிக்க.

''நீங்கள் கேட்பது நியாயம்தான்! ஒரு ரகசியம் சொல்கிறேன். இந்த ரத்னாவளியும் கிருஷ்ணவேணியும் உன்னை வைத்து சூதாட்டம் ஆடலாம் என்று பார்க்கிறார்கள். இதில் என்னையும் ஈடுபடும்படி நம்பகமாக அழைத்திருக்கிறார்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை. நான் நல்ல குலத்தில் பிறந்தவன். நன்றாகக் கற்று அறிந்தவன். கூடியமட்டிலும் நல்லவனாகவே வாழ விரும்புகிறேன். இந்த நாட்டைத் தோற்றுவித்த வித்யாரண்யர் என் குரு! அவர் வாழ்ந்த நெறிப்படி நானும் வாழ விரும்புகிறேன். எனவே, இந்தத் தேவதாசிப் பெண்மணிகளின் தந்திரங்களுக்கு நான் உட்பட விரும்பவில்லை. உங்களுக்கு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்'' என்று நிறுத்தினான் அவன்.

அப்போது செல்வி வியர்வை பிழிந்து விழ, விறகுக் கட்டு ஒன்றைக் கொண்டு வந்து அங்கே போட்டாள்.

களைப்போடு ஸ்ஸ்ஸ்ஸ்ஸூ என்று சொல்லிக் கீழே உட்கார்ந்து முந்தானைத் தலைப்பால் தன்னை விசிறிக் கொண்டாள்.

சுவர்ணமுகி கேள்வியுடன் அவனைப் பார்க்க அவன் தொடர்ந்தான்:



''இன்று இரவு உங்கள் அறையைத் திறந்து வைக்கிறேன். நீங்கள் நள்ளிரவுக்குத் மேல் தப்பித்து வெளியே போங்கள். வெளியே ஒரு நாகலிங்க மரம் இருக்கிறதே அதன் அடியில் இரண்டு வீரர்கள் காத்திருப்பார்கள். நாங்கள் வந்ததும் உங்களைக் குதிரைகளில் ஏற்றிக் கொண்டு போது விடிவதற்குள் வேறு இடம் கொண்டு போய் விடுவார்கள்.''

சுவர்ணமுகி கண் கொட்டாமல் அவனையே பார்த்தாள். ''எங்கே கொண்டு போவாங்க?'' என்று கேட்டாள் கலவரத்துடன்.

''ஹனுமன்பள்ளி என்கிற ஊர்லே ஒரு மாளிகையிலே கொண்டு விடுவாங்க!'' என்றான் ஸ்ரீரங்கன்.

''ஹூக்கும்! இங்கே விட்டு அங்கே போய் மாட்டிக்கச் சொல்றீங்களா?'' என்று மூக்கைச் சுளித்தாள் சுவர்ணமுகி.

''சத்தியமாக நீங்கள் அங்கே மாட்டிக் கொள்ள மாட்டீர்கள். அது ஒரு நவரத்னச் செட்டியார் மாளிகை. நீங்கள் இஷ்டப்பட்டால் தங்கலாம். எல்லா வசதிகளும் உண்டு. இஷ்டப்படாவிட்டால் காட்டுக்கே போய் விடலாம்.''

''நாங்க காட்டுக்குள்ளேதான் போவோம். எங்கேயும் இருக்க மாட்டோம்'' என்றாள் சுவர்ணமுகி துடிப்போடு.

''எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு ஒரு பயம். நீங்கள் தப்பி விட்டீர்கள் என்று தெரிந்து ரத்னாவளி மீண்டும் பட்டாளத்தோடு உங்களைப் பிடிக்க வந்து விட்டால். . .''

சுவர்ணமுகியின் முகம் அதைக் கேட்டதும் நிழலிட்டது.

''அதனால்தான் சொல்கிறேன். நீங்கள் அந்த நவரத்னச் செட்டியார் மாளிகையிலேயே இருக்கலாம். விருப்பம் இருக்கிறவரை இருக்கலாம். சிறிது காலம்

இருந்து விட்டுப் பிறகு, உங்கள் காட்டுக்கே போவதானாலும் போகலாம்'' என்றான் ஸ்ரீரங்கன்.

சுவர்ணமுகி முந்தானையைத் திருகிக் கொண்டு அவனைப் பார்த்தாள். இதமான, நன்றி நிறைந்த பார்வை அது. புரியாத வசீகரங்களோடு குளிர்ச்சி வீசியது அது. எதிராளியிடம் கள்ளம் இருந்தால் அதை ஒழித்துவிடும் பார்வை.

ஸ்ரீரங்கன் அதன் வீச்சில் தாக்குதலாகி, சிறிது நடுங்குவதை அறிந்து கொண்டாள்.

''ஐயாவே இவ்வளவெல்லாம் எங்களுக்கு உதவணும்னு நினைக்கிறீங்களே, காரணம் என்ன?'' என்றாள் ஆதங்கத்தோடு.

இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. உடனே அவன் பதில் சொல்ல முடியவில்லை. பிறகு சமாளித்து,

''உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது செய்கிறேன். இந்தச் சந்தர்ப்பம் தானாக ஏற்பட்டதால் செய்கிறேன். இல்லாவிடில் நிச்சயம் மாட்டேன்'' என்று சொன்னான் அவன்.

''சரி, உங்களை மட்டும் எப்படி நம்பறது?'' என்று கேட்டாள் அவள்.

ஸ்ரீரங்கன் லேசாகச் சிரித்தான். ''எங்கேயாவது நம்பிக்கை வைத்துத்தானே ஆக வேண்டும்'' என்றான்.

''அதுக்கு உங்கமேலே ஏன் வைக்கணுங்க? நீங்க யாரு?'' என்றாள் துணிச்சலாக.

''நானா?'' என்று இழுத்தான் அவன். ''நிச்சயம் தெரிய வேண்டுமா?''

''தெரிஞ்சா நல்லதில்லே?'' என்றாள் அவள்.



சொல்றேன், கேளுங்கள்!'' என்று தொண்டையைக் கனைத்து அவளைப் புதுப்பிரகாசத்துடன் பார்த்தான். ''வேங்கட ராஜா தெரியுமில்லையா?''

''தெரியும். நம்ம மகாராஜா?''

''அவருடைய சகோதரி மகன் நான்! ஸ்ரீரங்கன் என்று பெயர்.''

அவள் கால் விரல்கள் கீழே பலமாக அழுந்தின. மற்றபடி மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சியை அவள் வெளியே காண்பிக்கவில்லை.

கேள்விப்பட்ட ஞாபகம் இருக்கிறது. ரங்கப்பாவுடன் அரண்மனை விழாக்களுக்குப் போன பல முறைகளில் ராஜ குடும்பத்தையும், உறவினர்களையும் அவள் பார்த்திருக்கிறாள். இன்னின்னார் யார் யார் என்று மற்றவர்கள் பேசுவதை அவள் கூர்ந்து கவனித்திருக்கிறாள். வேங்கடருக்கு ஒரு மருமகன் ஸ்ரீரங்கன் என்ற பெயரில் இருப்பது தெரியும். ஸ்ரீரங்கன் என்ற பெயரை அவளால் மறக்க முடியாது. காரணம் அவளது தந்தையின் பெயரும் ஸ்ரீரங்கன்தான் (இம்மாடி ஸ்ரீரங்கநாத ராஜா)

இப்போதுதான் சுவர்ணமுகிக்கு மற்றொன்று புரிந்தது. ஸ்ரீரங்கனிடம் சில சாயல்கள் வேங்கடராஜா போலவே இருந்தன.

''என்ன இன்னும் நம்பிக்கை இல்லையா?'' என்றான் அவன்.

சுவர்ணமுகிக்குச் சங்கடமாக இருந்தது. நல்லது. இவனை நம்பலாமா? இவன் நோக்கம் என்னதாக இருக்கும்? உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல குறிக்கோள்தானா?

இவனே திட்டம் போட்டு வேறு ஏதாவது இக்கட்டில் என்னைச் சிக்க வைத்து விடுவானோ?

எல்லோரும் சுயநலத்தையே நாடும் இந்தத் தருணத்தில் இவன் மட்டும் உயர்வு நோக்கம் வைத்திருக்கிறான் என்பதை எப்படி நம்புவது?

''யோசனையே வேண்டாம். ஒத்துக் கொள்ளுங்கள்'' என்றான் ஸ்ரீரங்கன்.

''ஐயா!'' என்றாள் அவள். ''எனக்குப் பயமா இருக்குங்க. நான் எங்கேயும் வரலைங்க'' என்று முடித்தாள் நிர்த்தாட்சண்யத்துடன்.

ஸ்ரீரங்கன் அசைவற்று நின்றான்.

''இல்லை. . .'' என்று அவன் என்னவோ சொல்ல வாயெடுக்க,

''வேண்டாங்க, நான் வரலைங்க!'' என்றாள் அவள்.

ஸ்ரீரங்கன் தலையைக் குனிந்தவாறு திரும்பினான். கனமான நடைகளைப் போட்டு வீட்டுக்குள் நடந்தான்.

அவன் போன பிறகு சுவர்ணமுகி உணர்வில்லாமல் வேலைகளைச் செய்தாள். சிறிது நேரத்தில் கிருஷ்ணவேணி வீட்டுக்குத் திருமபினாள். சுவர்ணமுகியின் வேலைகளில் குறை கண்டுபிடித்து ஏகமாகத் திட்டினாள். சிறிது நேரம் கிணற்றடியில் தூங்கிவிட்டிருந்த செல்லியை ஓங்கி முதுகில் அடித்தாள்.

இரவு வெகு நாழிகைக்குப் பிறகு அவள் உறங்க ஆரம்பித்தபோது உடம்பெங்கும் வலித்தது.

என்ன வேலை! என்ன உழைப்பு!

சிறிது நேரம் கூட அவகாசம் கொடுக்காமல் ஓட ஓட விரட்டினாள் அந்த ராட்சசி.

கீழே தரையில் ஒரே விரிப்புத்தான். தரையின் மழைக் குளிர் அவள் மீது ஊர்ந்து ஏறியது. அதனால் ஏற்படும் துன்ப உணர்ச்சி அவளைத் துவட்ட,



தனது நிலையை உணர்ந்து அவள் வருந்த ஆரம்பித்தாள்.

கண்ணீர் மெல்ல அரும்பு போல் வெளிவந்தது.

மனத்தின் ஒரு பகுதி மெதுவாக இழிந்து தன் அவலத்தை நினைக்கும்போது,

மற்றொரு பகுதி வானத்தில் எட்டிப் பறந்து இந்த வீரனை நோக்கி ஓடியது.

முன்பு திடீரென்று காட்டுக்குள் வந்து குதித்தாரே!

அதே போல் இங்கேயும் வந்து குதிப்பாரா?

என்னைக் காப்பாற்ற வருவாரா? அல்லது ஒரு பொருட்டாக என்னைக் கருதாமல் தம் வேலையைப் பார்த்துப் போய்விடுவாரா?

ஊஹூம்! மாட்டார்! அவர் அப்படிப்பட்டவர் இல்லை!

அவர் விழியிலேயே கண்ணியம் தெரிந்தது.

அது மட்டுமா?

நான் ஓரமாக வளைத்து ஒரு பார்வை பார்த்தேனே,

அதில் அவர் வசமாகச் சிக்கிக் கொண்டார் என்று நன்றாகத் தெரிந்து விட்டது.

என்னை விட்டுப் போகவே அவருக்கு இஷ்டமில்லை.

கீழே இறங்கிப் பாறைகள் வழியே மறையும்போது, என்னைப் பார்த்துக் கொண்டே போனார்.

அந்த இரவு வேளையும், காட்டுச் சூழ்நிலையும், குளிர்ச்சியான காற்றும், அவர் போகும் காட்சியை எப்படி ஒரு மறக்க முடியாத அனுபவமாகச் சித்தரித்து விட்டன!

இப்போது நினைத்தாலும் மெய்மறக்கிறது!

இந்த நினைவுகளில் அவள் மிதந்து மெல்லக் கண் அயர்ந்து விட,

எவ்வளவு நாழிகை என்று அறியாத வேளையில் யாரோ அவள் கையை மெல்ல உலுக்கிவிடக் கண்களைத் திடுக்கிட்டு விழித்தாள்.

அவளுக்குத் திகில் தந்த அந்த உருவம் யார்?

துள்ளி எழுந்தாள் அவள்.

அவள் முன் நின்றது ஸ்ரீரங்கன்!

* * * * *

"இந்த நாட்டில் மழை பெய்து விட்டால் ஒரே தண்ணீர் காடுதான். போக்குவரத்து எதுவும் முடியாது."

– ஜான் டி பிரிட்டோ

# 26

"சத்தம் போடாதீங்க! எழுந்திருங்க! வெளியிலே போறோம்!" என்றான் ஸ்ரீரங்கன்.

சுவர்ணமுகி இன்னும் அவநம்பிக்கையில் இருந்தாள். அவள் தத்தளிப்பதைப் பார்த்தால் எந்த நிமிடமும் கத்தி விடுவாள் போல.

ஸ்ரீரங்கன் பதறினான். "தயவுசெய்து கேட்டுக்கிறேன். சத்தம் போடாதீங்க. . . என்னை நம்புங்கள்!" என்று மிகவும் நயத்துடன் கூறினான்.

சுவர்ணமுகி யோசித்தாள்.

ஸ்ரீரங்கன் குரலில் சிறு அளவு உண்மைத் தன்மையும் இருந்தது. இதுவரை அவளிடம் அவன் தப்பிதமாக நடந்ததில்லை. நம்பினால் என்ன?

இடுப்பைத் துழாவினாள். கெல்லி கொடுத்த விஷ வேர் இன்னும் இருந்தது. ஏதாவது நடந்தால் வாயில் போட்டு மென்று விடலாம்.

கெல்லியை எழுப்பினாள். இருவரும் புறப்பட்டார்கள். பின்புறக் கதவைத் திறந்தார்கள். கிணற்று வழியே நடந்தார்கள். தொழுவத்திலிருந்து ஒரு லட்சுமி திரும்பிப் பார்த்தது.

வெளியே ஒழுங்கில்லாப் படிகளில் இறங்கினார்கள். ஒரே சகதி! குளிர் இன்னும் வாட்டியது. அங்கும் இங்கும் நீர்ப் பாய்ச்சல்களின் கொட கொடக்கள். எத்தனை நாட்களுக்குப் பிறகு சுதந்திரமான வெளிச்சக் காற்றைச் சுவாசிக்கிறாள்?

முட்டுவரை சகதிப் பாங்கில் நடந்து இரண்டு மண் பாதைகளைக் கடந்து, சாலைக்கு வந்தார்கள். அருகில் உள்ள குட்டைகளில் கால்களைக் கழுவினார்கள். இரண்டு குதிரைகள் காத்திருந்தன. ஒரு வேலையாள் வணக்கமாக நின்றான்.

''ஏறிக்குங்க!'' என்றான் ஸ்ரீரங்கன்.

பலமுறை முயன்று ஏறினார்கள்.

வேலையாள் குதிரையை நடத்திச் சென்றான். ஸ்ரீரங்கன் முன்னால் போனான்.

போகும் வழியெல்லாம் வெள்ளக் காடாக இருந்தது. சின்ன ஓடைகள் கூடப் புடைத்துக் கொண்டு ஓடின. போகிற வழியெல்லாம் வழுக்கலாக இருந்தது. குதிரைகள் மெதுவாக நடந்தன.

விடியும்போது ஒரு சிற்றூரில் சத்திரத்தில் இருந்தார்கள்.

அன்றைய தினம் முழுவதையும் அங்கே கழித்து விட்டு இரவு மீண்டும் புறப்பட்டார்கள்.

இரண்டு நாட்கள் பிரயாணம் செய்து தோத மலையை அடைந்தார்கள். சற்றுப் பெரிய ஊர், வெளியே தோப்புகள் சூழ்ந்த சில மாளிகைகள் இருந்தன. ஒரு மாளிகையில் அவர்கள் இறங்கினார்கள்.

மாளிகையில் இறக்கிவிட்டு இரண்டு வேலையாட் களைத் துணை வைத்துவிட்டு ஸ்ரீரங்கன் இதர பொருட் களைச் சேகரித்து வருகிறேன் என்று போனான். இரண்டு நாட்களில் ஒரு குடித்தனத்துக்கான சகல மளிகைப் பொருள்களையும் இதர வசதிகளையும் கொண்டு வந்து சேர்த்தான்.



சுவர்ணமுகி எல்லாவற்றையும் பற்றில்லாமல் கவனித்தாள். உள்ளூர ஒரு கலக்கம் இருந்தது. ஸ்ரீரங்கன் அவளை சுவர்ணமுகி என்று அறிந்திருக்கிறான். யார் சொன்னார்கள் தெரியவில்லை. இப்படி எல்லோருக்கும் தன் இரகசியம் பரவிவிட்டால் இங்கே வாழ்வது கடினம்?

இந்த ஸ்ரீரங்கன் எதற்காக இதை எல்லாம் செய்கிறான்?

துர்நோக்கம் இருக்குமோ? புரியவில்லை.

ஒரு மாதம் வரை சுவர்ணமுகி அவனிடம் பிடி கொடுத்துப் பேசவில்லை.

அவன் பேச வந்தால் கூட ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

அவனும் அவளை அதிகம் தொந்தரவு செய்யவில்லை. ஒரு க்ஷேம விசாரிப்புக்கு மட்டும் அவளைப் பார்த்துவிட்டுப் போனான்.

நாட்கள் போகப் போக சுவர்ணமுகிக்கு அச்சங்கள் ஏற்பட்டன. இங்கேயே இருந்து கொண்டிருந்தால் முடிவு? ஒரு இதமான வார்த்தையைக் கூட யாரிடமும் பரிமாறிக் கொள்ளவில்லையே. எல்லோரும், அன்னியர்களாக இருக்கிறார்களே! அன்யோன்யமாகப் பேச ஒரு பந்து ஜனம் இல்லையே!

ஒரு நாள் காலை.

ஸ்ரீரங்கன் அந்த மாளிகைக்கு வந்து கீழ் அறையில் தங்கியிருந்தான்.

மேலே வரவில்லை. அவனுக்கு உடம்பு சரியில்லை. படுத்திருக்கிறான் என்று சொன்னார்கள்.

மதியம் ஆகும்போது கீழே பெரிய அரவங்கள் கேட்டன. சுவர்ணமுகி பலகணிப் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

ஐம்பது பேர் அடங்கிய சொந்தப் படையுடன் இரு பெண்மணிகள் வந்திருந்தார்கள். படையும், ஒரு பெண்மணியும் தூரத்தில் நிற்க,

ஒரு பெண்மணி மட்டும் குதிரையைச் செலுத்தி மாளிகை முகப்பில் வந்து நின்றாள்.

தூரத்தில் நிற்பவளைப் பார்த்ததும் கிருஷ்ணவேணி என்று தெரிந்தது. மற்றவள் யார்?

சுவர்ணமுகிக்குப் பயம் ஏற்பட்டது. இவர்கள் ஏன் இங்கே வந்திருக்கிறார்கள்? ஏதாவது ரகளை ஏற்படப் போகிறதா?

''ஸ்ரீரங்கா!'' என்று குரல்! சுவர்ணமுகி பலகணி வழியே மறைந்து பார்த்தாள்.

அந்தப் புதியவள்தான் வெளியில் இருந்தவாறு விளித்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீரங்கன் பெரிய போர்வை எடுத்து மூடிக் கொண்டு, வாசல் படியில் வெடவெடத்தவாறு நின்றான்.

பெண்மணி தன் குதிரையை விட்டு இறங்கவில்லை. அவளைப் பார்த்ததும் தனது தாய் பத்மலோசனி என்று ஸ்ரீரங்கனுக்குப் புரிந்து விட்டது.

பத்மலோசனி தன் குதிரையை ஓட்டிக் கொண்டு வாசல் முகப்புக்குள் வந்தாள். படிகள் அருகில் நின்றாள்.

''ஸ்ரீரங்கா! நீ என் மகனா?'' என்றாள் கோபமுடன்.

''அம்மா!'' என்று தழுதழுத்தான் ஸ்ரீரங்கன். ''நான் என்றும் உன் மகன்தான்! இதில் என்ன சந்தேகம்?'' என்றான் தாழ்மையோடு.

''இந்தக் காரியம் நீ செய்வாயா?'' என்றாள் பத்மலோசனி கோபத்துடன்.

''அம்மா! நான் ஏதும் தப்பிதம் செய்யவில்லை. தயவு செய்து உள்ளே வாருங்கள் அம்மா!'' என்றான் அவன்.



''நீ நிற்கும் படியைக் கூட நான் மிதிக்க மாட்டேன். ஒரு தாய்க்கு நீ செய்யும் கைம்மாறு இதுதானா?'' என்றாள் கோபத்தோடு பத்மலோசனி.

அவளுக்கு நாற்பது வயதிருக்கும். இளமையாகத் தோன்றினாள். ராஜகளை முகத்தில் வீசியது.

''அம்மா! நிச்சயம் நான் தங்களுக்கு எந்தப் பாதகமும் செய்யவில்லையே!'' என்றான் ஸ்ரீரங்கன்.

''அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு நீ ஏன் இங்கே வந்தாய்?'' என்றாள் தாய்.

''அம்மா!'' என்று சொல்லித் தழுதழுத்தான் ஸ்ரீரங்கன். ''என்னைப் பொறுப்பீர்களா! தாங்கள் என்னை அனுப்பிய நோக்கத்தை என் மனம் ஒப்புக் கொள்ளவில்லை அம்மா!''

''என்ன காரணம்?''

''என்னவோ, பெரியப்பா வேங்கட ராஜாவுக்கு எதிராக நான் போக விரும்பவில்லை.''

''ஸ்ரீரங்கா! நீயா இதைச் சொல்கிறாய்?''

''ஆமாம், அம்மா! தப்பிதமானால் என்னை அவசியம் பொறுத்தருளுங்கள்!''

''அரசாளுவதற்கு உனக்கு இஷ்டமில்லையா?''

''அம்மா!'' என்று நிறுத்தினான் அவன். ''அரசாளுவதற்கு ஆட்கள் எத்தனையோ பேர் போட்டி போடுகிறார்கள். நானும் இந்தப் போட்டியில் இறங்கிக் குட்டையைக் குழப்ப விரும்பவில்லை.''

பத்மலோசனிக்கு சுவாசம் வீசி அடித்தது. பெரிய மார்புகளுடன் விம்மினாள்.

''ஸ்ரீரங்கா! உன் பெரியம்மா எனக்கு இழைத்த கொடுமைகளை எல்லாம் மறந்து விட்டாயா?'' என்று சீறினாள் அவள்.

ஸ்ரீரங்கனுக்கு அது தெரியும். அரண்மனையுள் இருந்தவரை அவனது தாயாருக்கும், ராணியாருக்கும் ஒத்துப்போகவே இல்லை.

''மறக்கவில்லை அம்மா! ஆனால் ஒரு சொந்த விஷயத்துக்காக நான் இந்த நாட்டைப் பலி கொடுக்க விரும்பவில்லை.''

பத்மலோசனியின் கண்கள் உருண்டன.

''உன்னை யார் நாட்டைப் பலி கொடுக்கச் சொன்னார்கள்?'' என்றாள் சீற்றமாக.

''நீங்கள் சொல்லாவிட்டாலும் பலன் அதுதான் ஏற்படும். நாட்டில் ஏற்கனவே பதினைந்து வருடங்களாக சிங்காதனப் போர் நடந்து விட்டது. மக்கள் சீரழிந்து விட்டார்கள். இத்துடன் பஞ்சம் வேறு. ஜன சமூகம் முழுவதும் ஒரு நரகத்தில் ஆழந்து விட்டார்கள் அம்மா! இந்த நிலையில் நானும் சிங்காதனத்துக்குப் போட்டியிட்டு. . .''

''அப்படி செய்யா விட்டால் வேறு என்னதான் செய்யப் போகிறாய்?''

''வேங்கடராஜாவுக்கு உதவி செய்யப் போகிறேன். அவர் மூலம் நாட்டில் அமைதியும் சுபிட்சமும் ஏற்படச் செய்யப் போகிறேன்.''

''இதுதான் உன் முடிவா?''

எரிந்து கேட்டாள் அவள்.

''முடிவு மட்டுமல்ல. உங்களையும் கேட்டுக் கொள்கிறேன், அம்மா. திம்மராஜா, நரசய்ய தளவாய், ரத்னாவளி, தோதா இன்னும் எத்தனையோ சுயநலக்காரர்கள் இந்த நாட்டின் உண்மை ராஜ வாரிசுக்கு எதிராகக் காரியங்கள் செய்து நாட்டைப் பாழ்படுத்தி வருகிறார்கள். நான் சொல்கிறேன் அம்மா! இந்தச் சுயநலக் கோஷ்டிகளில் தயவுசெய்து என்னையும் சேர்க்காதீர்கள்! உங்களுக்கும் ஒரு வேண்டுகோள்: பெரியம்மா உங்களைச் சரியாக நடத்தவில்லை என்று ஒரு சொந்தக் காரணத்துக்காக நீங்களும் பெரியப்பாவுக்கு (வேங்கட ராஜாவுக்கு) எதிராகப் போய் விடாதீர்கள்.''



''சீ! நிறுத்து உன் உபதேசத்தை! நீயும் ஒரு பிள்ளையா? உன்னைப் பார்த்தால் கூடப் பாவம்! நீ எக்கேடு கெட்டுப் போ! அந்தப் பெண் எங்கே? அவளை நான் அழைத்துப் போக வேண்டும்.

குதிரையிலிருந்து கீழே குதித்தாள்.

ஸ்ரீரங்கன் பத்மலோசனியை ஏறிட்டுப் பார்த்தான். ''அம்மா!'' என்றான் உணர்ச்சிப் பெருக்கோடு. ''இதற்காகத்தான் நீங்கள் இங்கே வந்தீர்களா?'' என்றான் தாழ்ந்து கொண்டு.

''ஆமாம்!'' என்றாள் அவள். ''நீ எங்கே ஓடியிருக்கிறாய் என்று துப்புத் தேடிப் படையோடு வந்திருக்கிறேன். என் பிள்ளையின் போக்குத் தெரிந்து ஊர் சிரிக்க வேண்டாமா?'' என்று சீறினாள் அவள்.

''அம்மா! நான் அந்தப் பெண்ணைத் தருவதற்கில்லை. தயவு செய்து நீங்கள் போகலாம்!''

''என்ன?'' என்றாள் பத்மலோசனி. ''ஒரு பெண்ணைத் திருடி வந்துவிட்டு அவளைத் தரமாட்டாயா? இதோ படையை அழைக்கிறேன்.''

''அம்மா!'' என்று சற்று உரக்கக் கூறினான் அவன். உங்கள் படை அந்தப் பெண்ணைப் பிடிப்பதென்றால் என்னைக் கொன்றுவிட்டுத்தான் உள்ளே போக வேண்டும்.''

பத்மலோசனி முகத்தை நிமிர்ந்தாள்.

''சூள் உரைக்கிறாயா?''

''இல்லையம்மா! என் பணிவான ஆசை அது! ஒரு தாயின் கட்டளையை நிறைவேற்றாத பிள்ளை அவள் முன்னாலேயே இறப்பது மேலில்லையா?''

பத்மலோசனி பொருட்படுத்தவில்லை.

தூரத்தில் இருந்த கிருஷ்ணவேணிக்குக் கையைக் காட்டினாள்.

அதைத் தொடர்ந்து அந்த காவல் படை முன்னால் நகர்ந்தது.

ஸ்ரீரங்கனுக்குக் கண்கள் கொதித்தன. ஜுர வேகத்திலும், அவன் தட்டுத் தடுமாறிப் படிகள் மீது ஏறினான். முன் அறைக்குள் புகுந்து ஒரு வாளையும் கேடயத்தையும் எடுத்து வந்தான். பதற்றத்துடன் வாசல் துவாரத்தில் நின்று கொண்டான்.

படிகள் பக்கம் அந்தச் சிறுப் படைக் குழு நெருங்க, ''உம்ம்!'' என்றாள் பத்மலோசனி.

ஸ்ரீரங்கன் வாளைத் தூக்கினான்.

உச்சமான காய்ச்சல் அவனுக்கு. கண்கள் அனலில் வெந்தன. கைகள் நடுக்கமிட்டு ஆடின.

முதலில் இருவர் பாய்ந்து வந்தார்கள். ஸ்ரீரங்கன் முதல் திறன்களைக் காட்டினான். வாள் இரு வாள்களை எதிர்த்தது. அவனால் சரியாக நிற்க முடியவில்லை. சுவரில் சாய்ந்து கொண்டு சண்டையிட்டான்.

களைப்பும் சோர்வும் அவனைப் பொத்தி விட்டன.

கால் முகூர்த்தம் கூட அவனால் நிற்க முடியவில்லை.

கையில் பிடித்த வாளுடன் அவன் கீழே துரும்பு போல் உதிர்ந்தான்.

படையாட்கள் உள்ளே புகுந்தார்கள், இரைச்சலும் கெக்கலிப்பும் அவர்களோடு சென்றன.



உள்ளே மாளிகையில் எல்லாத் திசைகளிலும் படையாட்கள் பரவ, கிருஷ்ணவேணி இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு படிகளில் ஏறி நின்றாள்.

''வாங்க!'' என்று பத்மலோசனியை அழைத்தாள்.

பத்மலோசனி முகத்தில் ஆங்காரம் வெடிக்க, பும் என்று உதடுகளை வெளி நீட்டி ஒவ்வொரு படிகளிலும் கால்களை ஆக்கிரமிப்பாக வைத்து ஏறினாள்.

மேலே ஏறியதும் ஸ்ரீரங்கன் அங்கே விழுந்த ஆடை போல் கிடப்பதைப் பார்த்தாள்.

அவளது புத்திர பாசம் தலை அளும்ப, அதைத் தாண்டிக் கொண்ட வஞ்ச மனப்பான்மை மேலே எழுந்தது.

''ஹூம்!'' என்று அலட்சியமாக ஸ்ரீரங்கனைப் பார்த்து வாளாவிருந்தாள்.

கிருஷ்ணவேணி படிகள் ஏறி ஸ்ரீரங்கன் அருகில் போய் நின்று ''ஸ்ரீரங்கா!'' என்றாள்.

அவன் பேசவில்லை.

மெல்ல அவனைத் தொட்டு எழுப்பினாள், எழுந்திருக்கவில்லை.

அவள் நெஞ்சம் பதைத்தது.

''பத்மம்ம காரு! இப்படி வந்து பாருங்க!''

முதலில் அசட்டையாக இருந்த பத்மலோசனி மெல்ல நடந்து மேலே வந்தாள்.

ஸ்ரீரங்கன் இற்ற கயிறாக மடிந்து கிடப்பதைப் பார்த்ததும் அவள் கண்கள் மேலும் இறுக்கமாயின. இதயத்தின் மீது அவள் கை தானாகச் சென்றது.

* * * * *

. . . சித்தம்
திரும்புமோ? எப்படியோ? தெய்வமே என்றேன்
கரும்பு மதலும் வரக்கண்டேன்;

– ராஜேந்திரன் துகில் விடு தூது

## 27

சுவர்ணமுகியும் செல்லியும் ஓட்டமாக ஓடினார்கள்.

போகிற வழியெல்லாம் வழுக்கல். இருவரும் கவனமுடன் காலை வைத்துத் துள்ளியும் தாவியும் ஓடினார்கள்.

சீக்கிரம், அந்தப் புதர்க்காடு அவர்களை அழைத்தது. ஒரு காலத்தில் பச்சைப் பசேர் என்று இருந்த காடு, இப்போது குச்சும் கிளைகளுமாக வெறும் கிளைக் காம்புகள் மட்டுமே தெரிந்தன. கொத்துக் கொத்தான புதர்கள்.

அவைகள் ஊடே புகுந்ததும் சிறிது ஆசுவாசம் ஏற்பட்டது.

திரும்பிப் பார்த்தார்கள்.

அடேயப்பா! மாளிகையை விட்டு எவ்வளவு தூரம் வந்து விட்டார்கள்!

இனிமேல் யாராவது தேடிவந்து அவர்களைக் கண்டுபிடிப்பது நிச்சயம் முடியாது.

இருவரும் மேலும் நடந்து ஒரு பாறைக் கூட்டத்தின் பக்கம் வந்தார்கள். மழைக்கால ஓடை ஒன்று அருகே உற்பத்தியாகி இருந்தது. சத்தமில்லாமல் அழகாக வழிந்து ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு மறைப்பான பாறை இடுக்கில் இருவரும் அமர்ந்தார்கள்.



சுவர்ணமுகி ஆசுவாசத்துடன் காலை மடித்துக் கொண்டதும் அந்த நினைவு வந்தது. ஸ்ரீரங்கன் என்ன ஆகியிருப்பார்? எதிர்த்துச் சண்டை போட்டிருப்பாரா அல்லது. . .

உடம்பு சரியில்லை என்றார்களே? இப்போது எப்படி இருப்பார்?

அவரைப் போய்த் தவறாக நினைத்தோமே! இப்போது பார்த்தால் அவளுக்காக அல்லவா அவர் போராடுகிறார்! அவர் வார்த்தையில் நம்பிக்கை வைக்காமல் இருந்து விட்டோமே! இப்போது நினைத்தால் எவ்வளவு அவமானமாக இருக்கிறது!

உலகம்தான் எவ்வளவு கெட்டு விட்டது? ஒரு தாய் தன் மகனோடு சண்டை போடுகிறாள்? அதிசயமாக இல்லை? கலி முற்றிவிட்டது.

ஒரு விஷயம் சுவர்ணமுகிக்குத் தெளிவாகப் பட்டது.

எல்லோரும் அவளை வேட்டையாட ஆரம்பித்து விட்டார்கள்.

அவளைப் பிடித்துத் தங்கள் வசமாக்கிக் கொள்வதன் மூலம் நாட்டின் சிங்காதனத்தை ஒவ்வொருவரும் பறிக்க விரும்புகிறார்கள்.

எல்லோருக்கும் அவள் ஓர் இலக்காகப் போய்விட்டாள்.

நிம்மதியாக இருந்த அவள் வாழ்க்கைக்கு இப்போது சோதனை வந்து விட்டது.

இருட்டும் வரை அங்கேயே இருந்தார்கள். பிறகு செல்லி மட்டும் அந்த இருட்டில் மெல்ல நடந்து போய்ச் சுற்றுப்புறங்களை நோட்டம் பார்த்துவிட்டு வந்தாள்.

யாரும் அவர்களைத் தேடி வரவில்லை என்று தெரிந்ததும் நிம்மதியாக அங்கேயே இரவைக் கழிக்கத் தீர்மானித்தார்கள்.

பொழுது விடிந்ததும் வெகு நேரம் வரை அங்கேயே தங்கி யிருந்தார்கள். பிறகு செல்வி 'பார்த்துவிட்டு வருகிறேன்' என்று வெளியே புறப்பட்டுப் போனாள்.

வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்தாள்.

"அம்மா! அவர் மட்டும் இருக்காரம்மா!" என்றாள் பரபரப்புடன்.

"யாரு? ஸ்ரீரங்கரா?" என்றாள் சுவர்ணமுகி.

"ஆமாங்க!"

"வேறெ யாரும் இல்லையம்மா. போயிட்டாங்க!"

சுவர்ணமுகி எழுந்தாள். "வா, செல்வி போகலாம்" என்று புறப்பட்டாள்.

இருவரும் சுற்றுப்புறங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தார்கள்.

மாளிகையை நெருங்க நெருங்க சுவர்ணமுகிக்குப் பதற்றம் ஏற்பட்டது.

முகப்பில் சிறிது தயங்கி நின்று கடைசியில் உள்ளே போனாள்.

கூடத்துக்குள் போய் அறைக்குள் அவசரமாகப் பிரவேசித்தாள்.

உள்ளே பார்த்ததும் கண்கள் ஊன்றி நின்றன.

ஸ்ரீரங்கன் தீனமாகப் படுத்திருந்தான்.

உடம்பு வெகுவாக மெலிந்திருந்தது.

கைகளும் கால்களும் நிழலாக வாடியிருந்தன. முகம் கறுத்திருக்க, விழிகள் ஆழ்ந்த பள்ளத்துள் மூடியிருந்தன.



மெல்ல அடியிட்டு அருகே வந்தாள். மண்டியிட்டாள். "ஐயா!" என்றாள் கருணையோடு.

அவன் விழிக்கவில்லை. இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான்.

"ஐயா!" என்றாள் மீண்டும்.

பிறகு தனது மெல்லிய நீண்ட விரல்களை அவன் நெஞ்சில் வைத்து மெதுவாக அலக்கினாள். "ஐயா!"

ஸ்ரீரங்கன் மெல்லமாகக் கண்களை விழித்தான். முதலில் வெளிச்சத்தைப் பார்த்ததும் கண் கூசியது. பையப் பைய நிதானமாக்கிக் கொண்டு பார்க்க, அவள் உருவம் தெரிந்தது.

ஒரு நொடி தோள் குலுங்கியது.

"நீங்களா?" என்றான் ஆச்சரியம் தளிர்க்க.

"ஆமாம், ஐயா! உங்களுக்கு உடம்பு சரியில்லையே! உங்களைத் தனியாக விட்டுப் போய்விட்டார்களே!" என்றாள்.

அவன் நெற்றி வெறுப்பில் சிறிது சுருங்கியது. "நான்தான் போகச் சொன்னேன். வரவில்லை என்று சொல்லிவிட்டேன். பாபிகள் என் தாயாரின் மனத்தையும் கெடுத்து விட்டார்கள். அவளும் அவர்கள் சொல் பேச்சைக் கேட்டுக் கொள்கிறாள்" என்றான்.

பிறகு, "நீங்கள் சாப்பிட்டீர்களா, தூங்கினீர்களா?" என்று அவளைக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான்.

சுவர்ணமுகிக்கு வேதனை பொத்துக் கொண்டு வந்தது. கண்களில் ஒரு பொட்டு நீர் துளிர்த்தது.

"ஐயா, நாங்கள் ஓடிவிட்டோம். இரவு முழுவதும் வெளியில் இருந்துவிட்டு இப்போதான் வருகிறோம். ஐயா! உங்களை இப்போதுதான் புரிந்து கொண்டேன். நீங்கள்

உண்மையிலேயே எனக்கு அனுகூலமாக இருந்திருக்கிறீர்கள். ஆரம்பத்தில் உங்களைச் சந்தேகித்து விட்டேன். என்னைப் பொறுத்தருளுங்கள்! ஐயா, எழுந்திருங்கள்! நான் கஞ்சி வைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறி எழுந்தாள் அவள்.

அவன் தடுப்பதையும் பொருட்படுத்தாமல் உள்ளே போனாள். இதற்குள் செல்வி அடுப்பு மூட்டியிருந்தாள். எல்லாம் ஈர விறகுகள். வீடு முழுதும் புகைந்தது.

அரை முகூர்த்த நேரத்தில் சூடாகக் கஞ்சியை ஆற்றி அவள் கொணர்ந்தாள்.

ஸ்ரீரங்கன் சுவர் ஓரம் சாய்வாக அமர்ந்து வெறுமையாகப் பார்த்திருந்தான்.

அவள் வந்து உட்கார்ந்ததும், அவன் மெல்ல அவள் பக்கம் திரும்பி, கஞ்சியை வாங்கிக் கொண்டான்.

மெதுவாகச் சூடு பார்த்து ஒரு மடக்குப் பருகியதும் அவன் முகம் தெளிவாகியது.

''எனக்கு. . .'' என்று ஆரம்பித்துச் சில கணங்கள் நிறுத்தினான். சுவர்ணமுகி ஆவலுடன் அவனைப் பார்த்தாள். ''எனக்கு ஒரே ஒரு வருத்தம். . .'' என்றான் அவன்.

''என்ன சொல்லுங்கள்?'' என்றாள் அவள்.

''நீங்கள் இன்னமும் யார் என்பதை என்னிடமிருந்து மறைக்கிறீர்கள். அது என் மனத்தைப் புண்படுத்துகிறது!'' என்றான்.

சுவர்ணமுகி கீழே குனிந்தாள். அவள் மனத்தில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது.

''ஐயா!. . .'' என்றாள். பிறகு மேலே பேச முடியாமல் நின்றாள்.



''நீங்கள் மனம் திறந்து சொல்லலாம். அதைக் கேட்டுக் கொள்ள நான் அருகதை படைத்தவன் என்பதை நீங்கள் இதற்குள் உணர்ந்திருக்க வேண்டும்'' என்றான் அவன்.

சுவர்ணமுகி நிமிர்ந்தாள். திரையிட்டுக் கொண்டு கண்ணீர் அவள் விழிகளில் துடித்தது.

''ஐயா!'' என்றாள்.

சிறிது நேரம் தடுமாறினாள்.

''ஐயா!'' என்றாள் மீண்டும். ''தாங்கள். . . தாங்கள். . .'' என்று மேலே போகத் தயக்கமாகி நிறுத்தினாள்.

ஸ்ரீரங்கன் அவளை இரக்கத்துடன் பார்த்தான். ''வந்து. . .'' என்று தொடங்கி, ''என்னை நம்பினால் மட்டும் நீங்கள் சொல்லலாம். இல்லாவிட்டால் விட்டு விடுங்கள்!'' என்றான்.

கண்களைச் சிறிது நேரம் மூடித் திறந்தான்.

''ஐயா. . . ஐயா!. . . சொல்கிறேன். . . நிச்சயம் சொல்கிறேன். . . தாங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்களோ, அவளேதான் நான்!''

அவன் கண்கள் பளிச்சிட்டன.

''சுவர்ணமுகி!'' என்றான்.

அவள் தலையை மட்டும் அசைத்தாள். பிறகு, ''என் வாயால் சொல்ல வைக்காதீர்கள். நான் சபதமிட்டிருக்கிறேன்!'' என்றாள்.

''யாரிடம்?''

''தளவாய் ரங்கப்பரிடம்.''

''என்ன சபதம்?''

அவர் அனுமதி இல்லாமல் என்னைப் பற்றிய உண்மையை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று!''

''அவர்தான் இறந்து விட்டாரே!''

''உண்மைதான் ஐயா! ஆனால் அவர் அந்தச் சபதம் என்னிடமிருந்து வாங்கியதற்கான காரணங்கள் இன்னும் இறக்கவில்லை.''

''என்ன காரணங்கள்?''

''இந்த விஜயநகர ராஜ்யம் உள்பூசல்கள் எல்லாம் ஒழிந்து ஒரு அமைதி நிலைக்கு வந்த பிறகே நான் என் உண்மையைச் சொல்ல வேண்டும்! அதற்கு முன் சொன்னால் ஏற்கெனவே உள்ள குழப்பத்தை அது இன்னும் அதிகமாக்கி விடும் என்று கூறினார். ரங்கப்பா சுவர்க்கம் போய்விட்டார். ஆனால் அவர் கூறிய காரணங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன, இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

ஸ்ரீரங்கன் அவள் கூறியதைக் கேட்டு யோசித்தாள்.

''ஆமாம் இளவரசி! தாங்கள் கூறியது உண்மை. ஆனால் நிலைமையைப் பாருங்கள். தாங்கள் யார் என்பது இப்போது பரவலாகத் தெரிந்து விட்டது. அதிலும் நண்பர்களைவிட விரோதிகளிடம்தான் அதிகம் தெரிந்திருக்கிறது. இது பாதகம் இல்லையா?''

''பாதகம்தான்! ஆனால் சந்தர்ப்ப வசத்தால் நேர்ந்து விட்டது அது. திருப்பதிப் போரில் ரங்கப்பா மரண அடிபட்டு விழுந்தார். அவர் இறப்பதற்கு முன் என் இரகசியத்தை யாரிடமாவது சொல்லிவிட நினைத்தார். அதனால் அவருடன் நெருக்கமாகப் பழகி, நம்பிக்கைக்குப் பாத்திரமான இருவரிடம் மட்டும் கூறினார். அந்த இருவரில் ஒருவர் நல்லவர். இன்னொருவர் தீயவர். எதிரிகளின் உளவாளி!''

''யார் அவர்கள்?'' என்றான் ஸ்ரீரங்கன்.



''ஒருவர் அர்ச்சுன தேவன். மற்றவர் தோதாத்ரி என்ற தோதா!''

''தோதா?''

''ஆமாம். அவர்தான் உளவாளி. என்னையே வஞ்சிக்கப் பார்த்தார். நல்ல வேளையாகப் புரிந்து கொண்டேன்.''

''இப்போதுதான் எனக்குப் புரிகிறது, இளவரசி! விஷயம் வெளிப்பட்ட வழி தெரிந்து விட்டது!'' என்று கூறிய ஸ்ரீரங்கன் யோசித்து விட்டு, ''தலைக்குத் தலை இப்போது உங்களைத் தேடி அலைகிறார்கள். கிருஷ்ண வேணியும் என் தாயாரும்கூட இங்கிருந்து போய்ச் செய்தியைப் பரப்பி இருப்பார்கள்! உடனே நாம் இந்த இடத்தை விட்டு அகல வேண்டும். சீக்கிரம் ஏதாவது சாப்பிடுங்கள், புறப்படலாம்!'' என்றான் அவன். பரபரப்பு அவனிடம் தோன்றி விட்டது.

சுவர்ணமுகி கைகளைப் பிசைந்தாள்.

''ஐயா, கஷ்டங்களுக்கு மேல் கஷ்டங்கள் வந்தால் என்ன செய்வது? என் ரகசியம் வெளியானதிலிருந்தே இவ்வளவு சோதனை நடக்கிறதே! இனியும் என்ன நடக்குமோ?'' என்று வேதனையுடன் கூறினாள் அவள்.

''சொல்லுங்கள், சுவர்ணமுகி! நமக்கு அதிக நேரமில்லை. நீங்கள் எங்கே போக விரும்புகிறீர்கள்?''

அவள் தயங்கினாள்.

பிறகு, ''ஐயா! அர்ச்சுன தேவன் எங்கிருக்கிறார்? அவரை நான் பார்க்க முடியுமா?'' என்று கேட்டாள் சிறிது படபடப்புடன்.

''அர்ச்சுனன்?'' என்று கேட்டான் ஸ்ரீரங்கன். ''தெரியவில்லையே!'' என்று வெறுமையுடன்.

சுவர்ணமுகியின் முகம் சாம்பியது.

''ஏன்? அவர் உங்களுக்குத் தெரிந்தவரா?''

''ரங்கப்பா வீட்டுக்கு அடிக்கடி வருவார்.''

''ஓ, அப்போது பழக்கமா?'' என்றான்.

''இல்லை! அப்போது பார்த்தது கூட இல்லை. இப்போதுதான் தெரியும்!''

ஸ்ரீரங்கன் முகம் சலனமில்லாமல் இருந்தது.

''இப்போது அவரது இருப்பிடம் போக விரும்புகிறீர்களா?''

''இல்லை'' என்றாள் அவள். ''பார்க்க விரும்புகிறேன் அவ்வளவுதான்'' என்றாள்.

மனத்தில் ஒரு பாற்கடல் பொங்கியது. விம்மிய அலைகள் மேலும் மேலுமாக எழுந்தன. கீழை ஓரம் ஒரு சந்திரன் தளும்ப, சொப்பனமாக வானம் விழித்தது. ஒரே ஒரு குயில் ''அர்ச்சுனா! அர்ச்சுனா!'' என்று இசைத்தது. எங்கும் அதன் குரல் வர்ணங்களாக விழுந்தன.

அவள் கண்கள் கூழாகி அலர்ந்து நிற்க, ஸ்ரீரங்கன் அவளையே சிறிது நோக்கினான்.

''சுவர்ணமுகி! அர்ச்சுனன் இப்போது வேங்கடராஜாவோடு இருந்தாலும் இருப்பார்.''

''அப்போ சந்திரகிரிக்கே போகிறேன்'' என்று படபடத்துக் கூறினாள் அவள்.

''வேங்கடராஜா இப்போது சந்திரகிரியில் இல்லை'' என்றான்.

''எங்கே போயிருக்கிறார்?''

''வேலூருக்கு.''

''ஏன்?''



''சந்திரகிரி கைமாறி விட்டது.''

''அப்படியா?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''ஆமாம்! திம்மராஜாவின் ராஜ்யம் அங்கே நடக்கிறது.''

அவளது முகத்தில் அழுகைக் குறி வந்தது.

''ஐயா! நான் ஒரு அனாதை! என் உறவினர்கள் யாவரும் மறைந்து விட்டார்கள்! அல்லது கொல்லப்பட்டு விட்டார்கள். பரிச்சயமானவர்களும் அநேகமாக யாரும் இல்லை. சந்திரகிரிக்காவது போகலாம் என்று நினைத்தேன். அதுவும் போய் விட்டதே!'' என்றாள்.

பிறகு கையைப் பிசைந்தவாறு ''ஐயா! வேலூர் போனால் என்ன? வேங்கடவர் அங்கேதானே இருக்கிறார்!'' என்று கேட்டாள் அவள்.

''ஓ! போகலாம்!'' என்றான் அவன்.

''அது பாதுகாப்பான இடம்தானா?''

''ஆமாம்!'' என்றான் அவன்.

அன்று மாலை அவர்கள் புறப்பட்டார்கள். மறுநாள் மாலை வேலூரை அடையும்போது கோட்டை வாசலிலேயே பெரிய பரபரப்பு ஏற்பட்டது. கோட்டைக் கதவுகளை அவசரமாக மூடிக் கொண்டிருந்தார்கள்.

அகழிப் பாலத்தையும் உறுவிக் கொண்டிருந்தார்கள். விசாரித்ததில் 'நாயக்கர் உத்தரவு' என்று தெரிய வந்தது.

இருவரும் அகழிக் கரையில் விக்கித்து நிற்க, குதிரை ஒன்று வேகமாக ஒடிவந்து விளிம்பருகில் பிரயாசையோடு நின்றது.

சுவர்ணமுகி திரும்பிப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

* * * * *

இந்த அரசர்கள் தங்கள் உறவினர்களைத் தங்களுடன் அண்டி இருக்க விடுவதில்லை. தூரமான இடங்களில் நல்ல பாதுகாப்பில் வைக்கிறார்கள்.

– பிரிட்டோ

## 28

அந்தக் குதிரை வீரனைப் பார்த்ததும் சுவர்ணமுகி பாதங்களை ஆழ ஊன்றினாள்.

வந்தவன் அர்ச்சுன தேவன்!

வெகு தூரத்திலிருந்து வந்திருந்தான். உடம்பில் இங்குமங்கும் அழுக்குத் திட்டுகள். அணிந்த குப்பாயமும் பல இடங்களில் கிழிசல். எங்கேயோ சாகஸ காரியம் ஒன்று செய்து மீண்டவன் போல் தோன்றினான்.

அவள் உள்ளம் மெல்லத் துளும்பியது. உடல் லேசாகப் பல இறுக்கங்கள் அவிழ்ந்தன. காதுகளில் இரண்டு குயில்கள் சுவரங்கள் நெஞ்சைத் தொடும் சோக அழகில் விழுந்தது.

கண்களில் துன்ப இனிமை தளும்ப,

ஹ்ருதய! அலம் ஸுகிதயா,

அயம் விபவ உபஸ்தித இதி!

(மனமே சந்தோஷம் வந்ததென்று மகிழ்ச்சியில் மூழ்காதே)

என்ற காளிதாசனின் மாளவிகா புலம்பிய வார்த்தைகள் மனத்தில் பின்னலிட்டன.

மாளவிகாவைப் போல் அவளும் குதூகலத்தை அடக்கப் பார்த்தாள்.

குதிரையை நிறுத்திய அர்ச்சுனன் திரும்பி அவளைப் பார்த்ததும் புருவத்தை உயர்த்தினான். வாய் திறந்து ஒரு



வார்த்தை அநேகமாக வெளிவந்து விட்டது. ஆனால் அருகில் இருக்கும் புதியவனைப் பார்த்ததும் அது நின்று விட்டது.

அப்போது ஏற்பட்ட தர்மசங்கடத்தில் அங்குமிங்குமாகப் பார்த்து, கடைசியில் கொத்தள துவாரத்தை நோக்கி, "ஹேய்" என்று குரல் கொடுத்தான்.

தலைப்பாகையோடு கோட்டை நாயகம் எட்டிப் பார்த்தார். உடனே புரிந்து கொண்டவர் போல் கதவைத் திறக்க ஓடினார்.

கிர்ரக் கிர்ரக் என்று உலோக ஒலியுடன் இரும்புச் சங்கிலிகள் ரோதையில் உருள பெரிய இறக்கை போன்று அகழிப் பாலம் கீழே படிந்து தூசியைக் கிளப்பியது.

பிரம்மாண்ட கோட்டைக் கதவும் திறக்கப்பட நாயகம் வெளியே வந்து அர்ச்சுனனை உள்ளே அனுமதித்தார்.

ஸ்ரீரங்கனும் நாயகம் அருகில் போய், தனது முத்திரையைக் காட்டி இன்னார் என்று அறிமுகப்படுத்த,

"சுவாமி! யாரையும் உள்ளே விட வேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவு. தாங்கள் யார் என்று உள்ளே செய்தி அனுப்புகிறேன். அனுமதி வந்ததும் உள்ளே விடுகிறேன். அதுவரை தயவு செய்து அந்தத் தண்ணீர்ப் பந்தலில் தங்குங்கள்" என்று நாயகம் கூறினார்.

ஸ்ரீரங்கனும் இரு பெண்களும் அந்த ஓட்டு வீட்டில் தங்க வேண்டி வந்தது.

இரவு முழுவதும் செய்தி வரவில்லை.

ஸ்ரீரங்கனுக்குக் கவலையாக இருந்தது. தனது பெரியப்பா வேங்கடராஜா ஏன் உடனே தன்னை உள்ளே அழைக்கவில்லை என்று நினைத்தான்.

இதுவரை இதுபோன்று நிகழ்ந்ததில்லை. எத்தனையோ வித சங்கடமான நிலைகளில் கூட அரச குடும்ப முத்திரையைக் காட்டினால் அவன் உடனே மன்னர் பக்கம் அழைத்துச் செல்லப்பட்டான்.

இன்று ஏன் அதுபோல் நடக்கவில்லை?

ஒரு விடை தோன்றிற்று.

வேங்கடராஜாவின் பலம் வெகுவாகு க்ஷீணித்து விட்டது. அதுவும் சந்திரிகிரி அவர் கையை விட்டுப் போன பிறகு, அவரைச் சுற்றியிருந்த எவ்வளவோ பேர் அவரை விட்டு விலகி விட்டார்கள்.

இப்போது மன்னர் அநேகமாக சகாயம் இழந்து நிற்கிறார்.

வந்தவாசி தளவாய் தாமர்ல வேங்கடப்பன் ஒருவர்தான் இன்னும் தளர்ந்து விடாமல் மன்னருக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

ஒருவேளை இவர்தான் ஸ்ரீரங்கனை உள்ளே விடாமல் தடுத்து நிற்கிறாரோ!

இருக்கலாம்.

மன்னர் பலவீனமாக இருக்கும் நிலையில் மன்னரின் உறவினர்கள் யாராவது அதை பயன்படுத்தி மன்னரைக் கொன்று பட்டத்தை அபகரிக்க முயலலாம்.

அப்படித்தான் இந்த விஜயநகர வம்சத்தில் நடந்து வருகிறது.

இந்தக் காரணத்தால் தளவாய் தாமர்ல, ஸ்ரீரங்கனையே சந்திக்கிறாரோ, என்னவோ

ஒன்று அவருக்கு இதற்குள் புரிந்திருக்க வேண்டுமே!



வேங்கடராஜாவின் பக்கம் நின்று எதிரி திம்மராஜாவை ஒரு முக்கிய சண்டையில் முறியடித்தவன் ஸ்ரீரங்கன் ஆயிற்றே!

அதை வேங்கடராஜா மறந்திருக்க மாட்டாரே! தளவாய் தாமர்லவும் நன்றாக அறிந்திருப்பாரே!

அவ்விதம் தனது பெரியப்பாவுக்குப் பலவிதத்தில் துணை நின்று கஷ்ட நேரங்களில் உதவி செய்த அவன், இன்று அந்தக் கோட்டைக்குள் அனுமதிக்கப்படாமல் இருந்தது வேதனையாக இல்லை?

ஒருவேளை. . .

அவனது தாயாரின் செய்கை வேங்கட ராஜாவின் காதுகளை எட்டியிருக்குமோ?

அதனால் அவனை அவர் சந்தேகிக்கிறாரோ?

'பெரியப்பா! சத்தியமாக எனக்கு ஆளும் ஆசை கிடையாது. தங்கள் சமூகத்தில் ஒரு ஊழியனாக இருக்கத்தான் விரும்புகிறேன். சந்தேகமிருந்தால் இதோ என் தலையை வெட்டியே தங்கள் பாதங்களில் காணிக்கையாக அளிக்கிறேன்' என்று மனம் பொறுமிச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

கோட்டைக்கு வெளியே இருப்பது எவ்வளவு பெரிய அவமானம்?

ஸ்ரீரங்கனுக்கு அனுமதி மறுநாளும் கிடைக்கவில்லை.

அதற்கு மறுநாளும் கிடைக்கவில்லை.

அவன் பொறுமை இழந்து விடுவான் என்கிற நிலையில் மூன்றாம் நாள் கோட்டை நாயகம் வெளியே வந்து, அவனையும் அந்த இரு பெண்களையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

உள் மதிலைக் கடந்து, மேளக்கார வீதியை அடைந்து ஒரு பாதுகாப்புச் சுவர் படைத்த வெள்ளைக்கல் மாளிகைக்குள் கொண்டு விட்டு,

''சுவாமி, தாங்கள் இங்கே தங்குமாறு மன்னர் கூறியிருக்கிறார். எல்லா வசதிகளும் இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வீதியைத் தாண்டித் தயவு செய்து உட்புறம் வர வேண்டாம் என்று மன்னர் தங்களிடம் கேட்டுக் கொள்ளச் சொன்னார்'' என்று கூறினார் நாயகம்.

''ஐயா! நான் அவசரமாக மன்னரைப் பார்க்க வேண்டும். செய்தி வைத்திருக்கிறேன்.'' என்றான் ஸ்ரீரங்கன் பொறுமை இழந்து.

''அவசியம் அதை மன்னரிடம் தெரிவிக்கிறேன். விடைபெறுகிறேன், ஸ்வாமி!'' என்று கூறி நாயகம் பணிவாக வெளியே போனார்.

ஸ்ரீரங்கன் விரக்தியுடன் உள்ளே திரும்பினான்.

இரண்டு மூன்று நாட்கள் வரை சுவர்ணமுகி திக்பிரமையுடன் இருந்தாள்.

ஸ்ரீரங்கனுடன் வேலூர் வந்தது சரிதானா என்று தோன்றியது.

இனி என்ன நடக்கும் என்று மனம் அல்லாடியது.

அவளது மற்ற சில்லறைத் துயரங்களை மிஞ்சிக் கொண்டு ஒரு வேதனை மட்டும் மலை போல் அடிக்கடி எழுந்தது.

அர்ச்சுனன்!

அவர் ஏன் அவளுடன் பேசவில்லை?

அவளை ஏன் பார்க்க வரவில்லை?



கோட்டைக்கு வெளியே பார்த்தவர் ஏன் அவள் மீது எந்தச் சிரத்தையும் எடுக்காமல் போனார்?

ஒருவேளை வேற்றாளுடன் இருப்பதைப் பார்த்து, அந்தச் சந்தர்ப்பம் சரியானதல்ல என்று போய் விட்டாரோ?

அந்த இடத்தில் அவளைத் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால் அவளுக்கு ஏதாவது ஆபத்துக்கள் நேரிடலாம் என்று தோன்றியிருக்கும்.

இருக்கட்டும்.

நிச்சயம் அவள் கோட்டைக்குள்ளே வந்திருக்கும் செய்தி அவருக்குத் தெரிந்திருக்கும்.

அவர்தான் வேங்கடராஜாவுக்கு அத்தியந்தர் ஆயிற்றே!

விஷயம் அறிந்து அவர் ஏன் அவளைப் பார்க்க வரவில்லை?

நான்காம் நாள் பகலுக்கு மேல் ஒருவித ஆரவாரம் அவள் காதுகளில் விழுந்தது.

அவளும் செல்லியும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்த நேரம்.

உண்பதற்கு மட்டும் சமையலறைக்குப் போய் வந்து, மீதி எல்லா நேரங்களையும் அவர்கள் அந்தப் பின்கட்டு விஸ்தார அறையிலேயே கழித்தார்கள்.

அரவம் கேட்டதும் ஆட்டத்தை நிறுத்திச் சாளரம் வழியே வெளிப்புறம் நோக்க,

அங்கே தோன்றிய பரபரப்பான இயக்கங்கள் அவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்தன.

ஜனங்கள் கூட்டம் கூட்டமாகக் குறுக்கும் நெடுக்குமாக வீதியில் போனார்கள்.

அவர்கள் ஊடே காவல் வீரர்களும் சற்று அவசரமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

கைவண்டிகளில் யுத்த தளவாடங்கள் கோட்டை முகப்பை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.

சீக்கிரம் பணியாட்களை வினவ, விஷயம் தெரிய வந்தது.

நகரை முற்றுகையிட எதிரிகள் வந்திருந்ததால் கோட்டையைச் சுற்றிவர அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

''வந்திருக்கிற எதிரிகள் யார்?'' என்று சுவர்ணமுகி வினவ, ''திம்மராஜா!'' என்று உத்தரம் கிடைத்தது.

பகல் முழுதும் எதிர்பார்ப்பிலும், அல்லோல கல்லோலத்திலும் செலவழிந்தது.

இரவுகூட அரவங்கள் தொடர்ந்தன.

சுவர்ணமுகி ஒரே குழப்பமாக இருந்தாள். நாகரிக வாசத்தை அடைந்தது அவளுக்குத் தவறாக தோன்றியது.

காட்டுக்குள்ளேயே இருந்திருக்க வேண்டும்.

எந்தவிதக் கவலையும் இல்லாமல் இருந்திருக்கலாம்.

இரவு உணவு உண்ட பிறகு இருவரும் கவலையுடன் படுத்தார்கள்.

சுவர்ணமுகிக்குத் தூக்கம் வரவில்லை.

வெளிப்புறம் ஏதாவது சத்தம் கேட்டு அவளை உலுப்பிக் கொண்டே இருந்தது.

நடுநிசிக்குப் பிறகு மெல்லக் கண்ணயரும்போது சின்ன அரவங்கள் கேட்டுக் கண்ணை விழித்தாள்.

சாளரத்துக்கு வெளியே ஏதோ நெளிந்து இறங்கிக் கொண்டிருந்தது.



திகைப்புடன் பார்க்க, அது ஒரு நூலேணி என்று தெரிந்து விட்டது.

ஏதாவது ஆபத்து வருகிறதா என்று மனசில் திகில் ஏற்பட்டது.

நூலேணி கட்டிடத்தின் வெளிப்புறம்தான் இறக்கியிருக்கிறது.

கட்டடம் நல்ல பாதுகாப்போடு மூடப்பட்டிருக்கிறது. அதனால் அவளுக்குக் கவலை இல்லை.

நூலேணி கீழே வரை போன பிறகு யாரோ இறங்கும் பிரயத்தனங்கள் தெரிந்தன. மெல்லிய நட்சத்திர ஒளி இப்போது வெளிப்புறத்தைச் சற்றுத் தெளிவாகக் காட்டியது.

உருவம் கீழே இறங்க, அவளுக்கு எதுவும் பிடிபடாமல் இருந்தது.

தரையில் காலை வைத்ததும் உருவம் நிமிர்ந்து உடலைச் சரிசெய்து நேராக அந்தச் சாளரத்தை நோக்கி வந்தது.

சுவர்ணமுகி கண்கொட்டாமல் பார்த்தாள்.

அருகில் வந்த அந்த ஆள், ''அம்மணி! அம்மணி?'' என்று உள்நோக்கிக் குரல் கொடுத்தான்.

இனியும் வெறுமனே இருத்தல் சரியில்லை என்று உணர்ந்த சுவர்ணமுகி, எழுந்து உட்கார்ந்து, ''யார்?'' என்றாள்.

''இந்தாருங்கள் ஓலை!'' என்று கையை வினயத்தோடு நீட்டியது உருவம்.

''யார் கொடுத்தார்கள்?''

''அர்ச்சுனத் தேவர்.''

சுவர்ணமுகி சட்டென்று எழுந்தாள்.

சாளரம் அருகே சென்று சுருளை வாங்கிக் கொண்டாள். உருவம் விடைபெற்று வணங்கிச் சென்றது. சுருளை வாங்கிய சுவர்ணமுகி சிறிது நேரம் எதுவும் புரியாமல் விக்கித்து நின்றாள்.

பிறகு கூடத்தின் மாடத்தில் விளக்கு எரிவதை அறிந்து அங்கே சென்று அதைப் படிக்க முயன்றாள்.

பக்குவப்படாத ஓலையில் எழுதியிருந்ததால் புது எழுத்துக்கள் உடனே தட்டுப்படவில்லை.

பிறகு கூர்ந்து கவனிக்க, வாசகங்கள் மெல்லப் புலப்படலாயின.

'சுவர்ணமுகி சமூகத்துக்கு, அர்ச்சுனத் தேவன் எழுதிய விண்ணப்பம்.

தங்களைப் பல இடங்களில் பல நாள்கள் தேடித் திரிந்து கடைசியில் விரக்தியாகி விடும் நிலையில் நல்லவேளை நீங்கள் கிடைத்தீர்கள்.

எனக்கு ஒரு ஆச்சரியம், எப்படி நீங்கள் ஸ்ரீரங்கனுடன் காணப்பட்டீர்கள் என்று.

இப்போது அவரைப் பற்றியும் அவரது தாயாரைப் பற்றியும் பல வதந்திகள் அடிபடுகின்றன.

அந்த நிலையில் தாங்கள் அவரிடம் வந்து சேர்ந்தது ஆச்சரியமாக உள்ளது.

சந்தர்ப்பச் சூழ்நிலையால் அவரை நீங்கள் பாதுகாப்புக்கு அணுக நேரிட்டிருக்கலாம்.

அப்படித்தான் என் மன அனுமானம் இருக்கிறது.

இருந்தாலும் ஒரு எச்சரிக்கை சொல்லுகிறேன். தயவு செய்து நீங்கள் யார் என்று அவரிடம் சொல்லிவிட வேண்டாம்.



உங்களைச் சந்திக்க முயன்று கொண்டிருக்கிறேன். யுத்த நேரம் வந்துவிட்டதால் இன்னும் முடியவில்லை.

இவண்

அர்ச்சுன தேவன்.

முதலில் அதன் செய்தியை விட அந்தக் கடிதமே அவளைப் பரவசப்படுத்தியது.

அந்த நேர்த்தியான எழுத்துக்களை ஆவல் கனியப் பார்த்தாள்.

ஒரு கணம் ஓலையே அவளுக்குத் தூது வந்திருப்பது போல் தோன்றியது.

கையில் அதை ஒரு புறா போல் கசங்காமல் வைத்துக் கொண்டு பரவசமாக அதை அணைக்கப் போகும் வேளையில்,

அரவம் ஒன்று கேட்டது.

திரும்பினாள். பார்வை திகைப்புடன் நின்றது.

* * * * *

நான் சிங்காதனத்தில் உட்கார்ந்திருக்கிறேன். ஆனால் மந்திரிகள் நாட்டை ஆளுகிறார்கள். என் சொல்லை யார் கேட்பார்கள்?

– கிருஷ்ண தேவராயர்

## 29

வந்தது ஸ்ரீரங்கன்.

''நீங்களா?''

''ஏதோ சத்தம் கேட்டது பார்த்தேன்'' என்றான்.

''தூக்கம் வரவில்லை. பழைய ஓலை ஒன்று கிடைத்தது பார்க்கிறேன்'' என்று கூறிய சுவர்ணமுகி உடனே தன் அறைக்குப் புறப்பட்டாள்.

ஸ்ரீரங்கனும் திரும்பினான்.

'சந்திக்கிறேன் என்று அர்ச்சுனன் எழுதியிருக்கிறார். சந்திப்பாரா?' என்று நினைத்தாள் சுவர்ணமுகி.

அவள் அர்ச்சுனனை எதிர்பார்த்துப் பத்து நாட்கள் ஓடிவிட்டன.

அர்ச்சுனன் வரவில்லை.

காரணம் இருந்தது.

வேலூரை திம்மராஜா முற்றுகையிட்டிருந்தார். ஊர் முழுவதும் அல்லோலப்பட்டது. தெருக்களில் கூச்சலும் குழப்பமும்.

பொதுஜனங்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க, வீதிகளில் வீரர்கள் குறுக்கும் நெடுக்கும் விரைந்து கொண்டிருந்தார்கள்.

'நம்மூர் நாயக்கர் இந்த வேங்கடராஜாவுக்குப் புகலிடம் கொடுத்திருக்கக் கூடாது' என்று பலர் பேசினார்கள்.



'அவர் நமக்கெல்லாம் மகாராஜா! அவர் ஒருத்தர் இருப்பதால்தான் வடக்கே பீஜப்பூர் சுல்தான் நம்மீது வராமல் இருக்கிறார். எனவே அவரைப் பாதுகாப்பது நம் கடமை' என்றார்கள் பலர்.

நாயக்கரும் அவரது காரியஸ்தர்களும் ஜனங்களுக்கு ஊக்கமளித்து முழு மனத்துடன் ஒத்துழைக்கக் கேட்டுக் கொண்டார்கள்.

முற்றுகை ஆரம்பித்து இரண்டு வாரம் சென்று விட்டது.

நாட்டில் ஏற்கனவே பஞ்சம் பரவியிருந்தது.

இப்போதுதான் முதல் மழையே பெய்திருக்கிறது.

விவசாயம் இன்னும் ஆரம்பிக்கவில்லை.

மழை விழுந்த பிரமிப்பிலிருந்து இன்னும் ஜனங்கள் எழவில்லை.

இந்நிலையில் கோட்டைக்குள் ஜனங்கள் சேமித்து வைத்திருந்த தானியங்கள் சொற்பமாக இருந்தது.

இரண்டு வாரம் தாண்டியதும் எல்லோருக்கும் கவலை வந்தது. தானியக் கடைகள் மூடப்பட்டு விட்டன. எங்கும் ஜனங்கள் தானியத்தைத் தேடி அலைய ஆரம்பித்தார்கள். மிகவும் சொற்ப விலையில் தங்கம் வெள்ளிகளை விற்க ஆரம்பித்தார்கள்.

முதலில் மன்னர் உத்தரவுகளுக்குப்பயந்து அமைதியைக் காத்த ஜனங்கள் இப்போது நாற்சந்திக்கு வந்து தாராளமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

வசதி இல்லாத சாதாரண ஜனங்கள் அரிசி கிடைக்காமல் பட்டினி கிடக்க ஆரம்பித்தார்கள்.

வயிறு கிளப்பிய வேதனையில் தைரியமாக அரண்மனை நோக்கிச் சென்று அரிசி வேண்டிக் கலவரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

பல இடங்களில் சூறைகள் நடந்தன. பல மாளிகைகள் தீக்கு இரையாகின. ஊரே ஓர் ஒழுங்கு இல்லாமல் சீர்குலைய ஆரம்பித்தது.

''எத்தனை நாள் தள்ள முடியும்?'' என்று துயரத்தோடு கேட்டார் வேங்கடராஜா.

வேலூர் நாயகர் பேசவில்லை.

தாமர்ல வேங்கடப்பா குறுக்கிட்டார். ''அர்ச்சுனன் இதற்குள் மதுரைக்குப் போயிருக்க மாட்டான்?'' என்று கேட்டார் அவர்.

''ஹும்!'' என்று அவநம்பிக்கையோடு திரும்பினார் வேங்கட ராஜா. ''நல்ல நாட்களில் கூட நம்மீது அவருக்கு அபிமானம் இல்லை. இருந்தால் கப்பத்தை ஒழுங்காகக் கொடுக்காமல் இருப்பாரா?'' என்றார்.

''இப்போது உதவி கேட்டு அனுப்பி யிருக்கிறோம். என்ன சொல்கிறார் பார்க்கலாம்!'' என்றார் வேலூர் நாயகர்.

''நமக்கு வாழ்வா தாழ்வா என்பது இப்போது பிரச்னை! தெற்கே நாம் ஐக்கியமாக இல்லாவிட்டால் மொகலாயர்கள் நம்மை அடிமையாக்கி விடுவார்கள்'' என்றார் தாமர்ல.

''ஐக்கியம் என்பது மதுரை நாயக்கர் அகராதியில் கிடையாது.'' என்றார் வேலூர் நாயகர்.

''செஞ்சி, வேலூர் நாயகர்களிடம் நம் மகாராஜா அதிக பாசம்வைத்திருக்கிறார் என்பது திருமலை நாயக்கருக்குக் கோபமோ என்னவோ!'' என்றாற் தாமர்ல.

''நம்மிடையே இந்தப் பூசல்கள் வைத்துக் கொள்வது இப்போது முறையல்ல. இப்போது வேண்டுவது ஒற்றுமை'' என்றார் வேங்கடராஜா.



''செஞ்சிப் படையாவது சீக்கிரம் வரவேண்டுமே'' என்றார் வேலூர் நாயகர்.

''வந்தால்தான் முற்றுகையைத் தகர்க்க முடியும். இன்னும் எத்தனை நாள் தாங்குவோம்?'' என்றார் வேங்கடராஜா.

''ஒரே ஒரு வாரம் தாங்கலாம். அதற்கு மேல் ஜனங்கள் புரண்டு விடுவார்கள்'' என்றார் தாமர்ல.

''கோட்டைக்குள் அரிசி இல்லை'' என்றார் வேலூர் நாயக்கர்.

''பதுக்கி வைத்துள்ள அரிசியை வெளியே கொண்டு வந்தால் கூட ஒரு வாரத்துக்கு மேல் தாங்காது'' என்றார் தாமர்ல.

விஜயநகர சாம்ராஜ்யத்துக்குத் தெற்கே உள்ள மதுரை, தஞ்சாவூர், வேலூர், செஞ்சி ஆகிய ராஜ்யங்கள் உட்பட்டவை.

இந்த ராஜ்யங்களை ஆளும் நாயகர்கள் கப்பங்களை செலுத்துவதோடு, சமயம் வரும்போது படைகளும் உதவி, மகாராஜாவை பாதுகாக்க வேண்டும் என்பது நியதி.

ஆனால் விஜயநகரம் ஏற்கனவே க்ஷணித்து விட்டதால் அதன் உறுப்பு ராஜ்யங்கள் எதைப் பற்றியும் கவலைப் படுவதில்லை. தங்கள் தங்கள் பிரச்னைகளிலேயே அவை மூழ்கி இருந்தன.

மேலும் இந்த உறுப்பு ராஜ்யங்கள் ஒன்றின் மீது ஒன்று பொறாமையும் பூசலும் கொண்டிருந்தன.

இதன் காரணமாக விஜயநகரம் என்ற மையத்தின் கீழ் ஒற்றுமைப்படுவது துர்லபமாக இருந்தது.

மேலும் பத்து நாட்கள் ஓடின. ஜனங்களுடைய பொறுமை வரம்பைக் கடந்து விட்டது. சில பட்டினிச் சாவுகளும் நடந்து விட அவர்கள் கூட்டம் கூட்டமாகக் கோட்டை வாயிலை நோக்கிப் படை எடுக்க ஆரம்பித்தார்கள். ''எங்களை விடு! எங்களை விடு!'' என்று அவர்கள் கோஷம் எங்கும் எழ ஆரம்பித்தது.

காவலாளிப் படையினர் அவர்களைத் தடுத்து தங்கள் அசுர பலத்தால் உள்ளே நோக்கி விரட்டி விட,

வெகுண்டு ஜனங்கள் போகும் இடம் எல்லாம் தீயைக் கொளுத்திவிட்டுச் சென்றார்கள்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகிறது என்று தெரிந்து வேங்கடராஜா சபை ஒன்று கூட்டினார்.

''இனியும் பொறுத்துப் பிரயோஜனமில்லை. நான் வெளியே போய்ச் சண்டை இடுகிறேன். அதற்கு மேல் ஆண்டவன் சித்தம்'' என்றார் அவர்.

''தாங்களா? நிச்சயம் போகக் கூடாது. தங்களை நம்பித்தான் எங்கள் வாழ்வே இருக்கிறது.'' என்றார் தாமர்ல.

''போதும். இந்த விஜயநகர மகா சாம்ராஜ்யத்தை இப்போது ஒரு குறுநிலமாக்கி விட்டோம். இனி நமக்கு ஒரு வாழ்வு கிடைக்கப் போகிறதா?'' என்று வருத்தத்துடன் அங்கலாய்த்தார் வேங்கடராஜா.

''நிச்சயம் வாழ்வு வரும், மகாராஜா!'' என்று ஒரு அசரீரிக் குரல் கேட்க எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கம்பீர உருவம் ஒன்று வாயில் நிலைப்படியில் விநயமாகக் கீழே குனிந்தது.

பிறகு அது நிமிரும்போது அங்கே ஸ்ரீரங்கனைக் கண்டார்கள்.



வேங்கடராஜா அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''மகாராஜா தங்கள் சபை விவாதங்கள் இடையே குறுக்கிடுவதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள். தாங்கள் வாழ்வதும் அன்றி இந்த சாம்ராஜ்யத்தை மீண்டும் பழைய மகோன்னதத்துக்குக் கொண்டு வரப்போகிறீர்கள். இது உறுதி. அதற்கான சூசகங்கள் தோன்றி விட்டன. இந்தச் சிறியவன் தாங்கள் விதித்துள்ள கட்டுப்பாட்டையும் மீறி இங்கே வந்துள்ளதற்குக் காரணம் அதுதான். எனக்குப் படை கொடுங்கள். நான் கோட்டைக்கு வெளியே போரிடுகிறேன்.''

நிசப்தம் சிறிது நேரம்.

''உன்னால் முடியாது'' என்றார் தாமர்ல.

''ஏன்?'' என்றான் அவன்.

''எம்மிடம் படை பலம் கிடையாது'' என்றார் வேலூர் நாயக்கர்.

''ஒரு ஐநூறு வீரர்களைக் கொடுங்கள். தகர்க்கிறேன்'' என்றான் ஸ்ரீரங்கன்.

''பலி கொடுத்துவிட்டு வருவாய்'' என்றார் தாமர்ல.

வெகுண்டு திரும்பினான் ஸ்ரீரங்கன். ''நிச்சயம் மாட்டேன். ஒன்று வெற்றி அடைவேன். இல்லாவிடில் சுவர்க்கம் அடைவேன். இது சபதம்'' என்று உரத்துக் கூவினான் ஸ்ரீரங்கன்.

''ஹ ஹா!'' என்று சிரித்தார் தாமர்ல.

''வீண் பிரயாசை. அனுபவமில்லாமல் பேசாதே!'' என்றார் வேலூர் நாயகர்.

ஸ்ரீரங்கனின் கண்களில் தீ பிழிந்தது. ''அனுபவமா? எனக்கா இல்லை? மன்னரிடம் கேளுங்கள். வடக்கே பீஜப்பூர் மன்னருடன் இருமுறை மோதி இருக்கிறேன். அது போதாதா?'' என்று இரைந்து கேட்டான் அவன்.

வேங்கடராஜா அவனை ஆழ்ந்து பார்த்தார். பேசவில்லை.

ஸ்ரீரங்கனும் அவரை நேராகக் கண்ணில் பார்த்தான்.

அவன் கண் கலங்கியது.

மெல்ல மண்டியிட்டுக் கீழே தாழ்ந்தான்.

அவன் கண்களில் பளிங்கு போல் நீர் வார்த்தது.

"பெரியப்பா! தங்களை உறவு முறை சொல்லி இங்கே அழைத்ததற்குப் பொறுத்தருளுங்கள். என் மீது நம்பிக்கை இல்லையா? நான் தங்களுக்குத் துரோகம் செய்வேனா? நான் சாப்பிடுவது உங்கள் உப்பு. இதோ எனக்கு உத்தரவு கொடுங்கள். நான் சென்று வெற்றி அடைகிறேன். அல்லது வீர சுவர்க்கம் புகுகிறேன்" என்றான்.

வேங்கடராஜா பேசவில்லை.

"இன்னும் நம்பிக்கை இல்லையா மகாராஜா! தங்கள் உறவினன் என்பதற்காக என் மீது அவநம்பிக்கை கொள்ள வேண்டுமா? இது நியாயமா? தருமமா? என்னை அனுப்புங்கள் மகாராஜா! போருக்கு அனுப்புங்கள்!"

என்று குழைந்தவாறு முன்னால் நகர்ந்து வந்தான் ஸ்ரீரங்கன்.

மன்னரை நெருங்கியதும் அவரது பாதங்களைப் பற்றிக் கொண்டான்.

கண்களின் பாஷ்பங்களை அவைகளில் வழியவிட்டான்.

"எழுந்திரு ஸ்ரீரங்கா!" என்றார் வேங்கடவர்.

அவன் ஈரமுள்ள முகத்துடன் நிமிர்ந்தான்.

"நாளைக் காலை நீ போகிறாய். உனக்கு ஐந்நூறு பேர் படையும் கிடைக்கிறது. நீ செய்வதைச் செய்!" என்றார் அவர்.



மதுரை நோக்கி உதவி கேட்கப் போயிருந்த அர்ச்சுனன் செஞ்சி அடைந்ததும் விஷ ஜுரத்தில் விழுந்தான். விஷ ஜுரம் போல் தூக்கித் தூக்கிப் போட்டது. ஒரு வாரம் படுத்த படுக்கையாக இருந்தான்.

செஞ்சி அரசர் கிருஷ்ணப்ப நாயக்கர் அவனைக் கண்ணே போல் கவனித்துக் கொண்டார்.

அர்ச்சுனன் பொறுமை இல்லாமல் துடித்துக் கொண்டிருந்தான். "ஐயோ! வேலூர் முற்றுகையில் இருக்கிறதே! நான் மதுரைக்கும் போக முடியாமல் இப்படி அகப்பட்டுக் கொண்டேனே! தக்க தருணத்தில் உதவிகளோடு போகாவிட்டால் முற்றுகை வெற்றி பெற்றுவிடுமே" என்று புலம்பினான்.

மேலும் நான்கு தினங்கள் சென்றதும் ஒருவாறு ஜுரம் குறைந்ததும், "சுவாமி! எனக்கு விடை கொடுங்கள்! நான் மதுரை போய்த் திரும்புகிறேன்" என்று கிருஷ்ணப்பரிடம் கூறினான் அவன்.

கிருஷ்ணப்பர் அவனை ஆதுரத்துடன் பார்த்தார். "அர்ச்சுனா! உன்னைப் போல ராஜபக்தி உள்ள பிள்ளைகள் நூறு பேர் இருந்தால் நம் சாம்ராஜ்யம் பிழைத்து விடும். இப்போது நீ தெற்கே போவது முறையல்ல. வழி சரியில்லை. மழை பெய்திருக்கிறது. இன்னும் பெய்கிறது என்று செய்திகள் சொல்லுகிறார்கள். இந்நிலையில் இந்த உடம்பில் நீ மதுரை சென்று திரும்புவதானால் இரண்டு மாதம் ஆகும். தவிர, மதுரை நாயக்கருக்கு சேதுபதியோடு இருக்கும் தகராறு முடிந்ததோ இல்லையோ தெரியாது. இந்த நிலையில் நீ அங்கே போய், உதவி வாங்கித் திரும்புவதற்குள் வேலூர் காத்துக் கொண்டிருக்குமா?" என்று கேட்டார்.

அர்ச்சுனனுக்குத் தவிப்பாக இருந்தது. "அப்படியானால் என்ன செய்ய சுவாமி?" என்றான்.

''என் இரண்டாயிரம் படையைத் தருகிறேன். அழைத்துப் போ! அதற்கு மேல் திரட்ட வழியில்லை. பணமில்லை. பொக்கிஷம் வெறுமை! எங்கும் பஞ்சம். இதையெல்லாம் ஈடுகட்டும்படி உனக்கு ஒரு உபாயம் சொல்கிறேன்'' என்றார் அவர்.

''சொல்லுங்கள் சுவாமி!''

''பஞ்சமோ பட்டினியோ எதிலும் சிக்காமல் வடக்கே தப்பித்து இருப்பவர்கள் ஆங்கிலேயர்கள். தந்திரத்தில் வல்லவர்கள். சண்டையில் திறமையானவர்கள். அவர்கள் உதவியை நாடினால் என்ன?'' என்றார் அவர்.

''அவர்கள் வெறும் வியாபாரிகள். அவர்களிடம் ஏது பெரிய படை?'' என்றான் அர்ச்சுனன்.

''அப்படிச் சொல்லாதே. அவர்கள் நூறு பேர் இருந்தால் நமது ஆயிரத்துக்கு நிகரானவர்கள்! அவர்கள் போர்த் திறனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் போர் முறையே வேறு. ஒழுங்காகவும் சீராகவும் சண்டை செய்வதில் கெட்டிக்காரர்கள் அவர்கள்தான்! நாட்டில் இப்போது இருக்கும் குழப்ப நிலையில் இப்படி சிங்காதனத்துக்காக, உறவும் உறவும் அடித்துக் கொள்ளும் வேலையில் இந்த வெள்ளைக்காரர்கள் நமக்குத் துணையாக இருந்தால் நிச்சயம் நமது லட்சியம் நிறைவேறும். நீ உடனே அவர்கள் உதவிக்கு ஏற்பாடு செய்தால் நமது தத்தளிப்புக்கள் சீக்கிரம் தீர வழி உண்டு. உடனே புறப்படு. மதுரை மன்னருக்கான ஓலையை நான் தூது மூலம் மதுரைக்கு அனுப்பி வைக்கிறேன். நீ அதற்குக் கவலைப்பட வேண்டாம்'' என்றார் அவர்.

அர்ச்சுனன் வடக்கு நோக்கிப் புறப்பட்டான்.

* * * * *

''கோட்டைக்குச் சிறிது இடைவெளி தள்ளிக் காடுகளை மண்ட விடுங்கள். எதிரிகளைச் சீக்கிரம் முறியடிக்கலாம்.

– ஆ. முத்தமால்யத

## 30

போகும் வழியில் தேவராய சதுர்வேதி மங்கலத்தில் இறங்கி அக்கிரகாரத்துக்குள் நுழைந்து, பழைய நண்பன் கிருஷ்ண சந்திரனைப் பார்த்தான் அர்ச்சுனன்.

இருவரும் ஒரே உபாத்தியாயரிடம் மல்வித்தை கற்றவர்கள்.

''இதென்ன சந்துரு. . . இப்படித் திண்ணையில் உட்கார்ந்து. . .'' என்று இழுத்தான் அர்ச்சுனன். நண்பன் விச்ராந்தியாகத் தக்ளி நூற்பதைப் பார்த்து.

''சண்டைக்குப் போகலாம்னு பார்த்தா எந்த ராஜா – பக்கம் தர்மம் இருக்கிறது என்று தெரியவில்லை'' என்றான் கிருஷ்ண சந்திரன். வெறும் பூணூலும் உடம்புமாக இருந்தான்.

அர்ச்சுனன் தன் விருத்தாந்தங்களைக் கூறி மதுரை போய் வந்ததைத் தெரிவித்தான்.

''ஐயோ! அர்ச்சுனா! அவரை (கிருஷ்ணப்ப நாயகர்) நம்பினாயா? அவர் எந்தப் பக்கம் காற்று வீசுகிறதோ அங்கே சாய்வாரே!'' என்றான் கிருஷ்ண சந்திரன்.

''இப்போது சில வருஷங்களாக எங்கள் மன்னருக்கு ஆதரவாக இருக்கிறார். அதனால்தான் போனேன்'' என்றான் அர்ச்சுனன்.

''நாட்டில் இவர்கள் போக்குகளைப் பார்த்தால் 'தூ' என்று துப்ப வேண்டும். அங்கே லிங்கம நாயகர் (வேலூர்

நாயகர்) எப்படி இருக்கிறார்? சரியான சமயம் பார்த்து உங்க ராஜா தலையை வெட்டிவிடப் போகிறார்'' என்றான் கிருஷ்ண சந்திரன் தக்களியைத் துடையில் திரித்துக் கொண்டே.

''லிங்கமர் இதுவரை மன்னர் பக்கமே இருக்கிறார். அதனால் நம்புகிறோம்'' என்றான்.

''திருமலை நாயகர் ஒரு மதில்மேல் பூனை! இந்தப் பக்கம் சாய்ந்தாலும் சாய்வார், அந்தப் பக்கம் சாய்ந்தாலும் சாய்வார்! சொல்ல முடியாது. ஆகப்போக ஜனங்கள் பாடு திண்டாட்டம்! அரிசி என்ன விலை விற்கிறது தெரியுமோ?''

''ரூபாய்க்கு ஆறு படி''

''அது எப்போதோ மலையேறிப் போயிடுத்து. வேலூர் முற்றுகை ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது பணத்துக்கு (கால் ரூபாய்) ஒரு படி விற்கிறார்கள். எந்தக் காலத்திலேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயா? கலி முற்றிவிட்டது.''

''இப்போ ஒரு வேண்டுகோள், நீயும் என்னோடு வருகிறாய்! படை நடத்த ஆள் இல்லை!''

''நானா?''

''ஆமாம்! தக்களியை உள்ளே போடு! நாடு இருக்கிற நிலையில் நல்லவர்கள் நாலு பேராவது சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும். கிளம்பு.''

தக்களி நின்றது.

கிருஷ்ணசந்திரன் பிரேமையோடு அர்ச்சுனன் கண்களுக்குள் பார்த்தான். ''உனக்கு நாட்டு மேலே அவ்வளவு வாஞ்சை வந்துடுத்தா?'' என்றான்.



அர்ச்சுனன் எதுவும் பேசவில்லை. சிறிதாக முறுவலித்தான்.

''இதோ வந்துட்டேன்.''

வேலூர்க் கோட்டைக்கு மூன்று காத தூரத்தில் படையை நிறுத்தினார்கள்.

''அர்ச்சுனா! நீ காத்திரு! உனக்கு உடம்பு சரியில்லை. நான் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்று சொல்லி விட்டுக் கிருஷ்ணசந்திரன் குதிரை ஏறிப் போனான்.

வேலூர்க் கோட்டையைச் சுற்றி நூற்றுக்கணக்கான கூடாரங்கள் தோன்றியிருந்தன. குதிரைகளும், பொதி மாடுகளும் அங்கங்கே கூட்டமாகத் தீனி தின்று கொண்டிருந்தன. லம்பாடிகள் எடுபிடி வேலைகளுக்காகக் காத்திருந்தார்கள். சுமைகளையும் யுத்த தளவாடங்களையும் அவர்கள்தான் தூக்கிச் செல்வார்கள்.

வியாபாரிகள் ஒரு கடைத் தெரு வைத்திருந்தார்கள்.

ஊழியர்கள் இரவுச் சமையலுக்காக ஆயத்தங்கள் செய்ய, ஆயிரக்கணக்கான பானைகள் உலை ஏறக் காத்திருந்தன.

படையில் முதல் ஆவேசத்தில் போகும் ஏனாதி முதலிய மலை இனத்து ஜனங்கள் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

'திம்மராஜாவுக்கு இவ்வளவு படை ஏது? வடக்கே சுல்தான் யாராவது கொடுத்திருக்கிறார்களா?' என்று அதிசயித்தான் கிருஷ்ணசந்திரன்.

அகழியின் விளிம்பில் நெருக்கமாக இருந்த ஆயிரக்கணக்கான வீரர்களைக் கண்டு அவன் பிரமித்தான்.

குதிரையை ரகசியமாக மறைவிடத்தில் கட்டிவிட்டு, யார் கண்ணிலும் படாமல் ஒரு பாதுகாப்பான தூரத்தைத் தேர்ந்தெடுத்துக் கோட்டை முழுவதையும் சுற்றிப் பார்த்தான் அவன்.

வீரர்கள் நெருக்கமாக எறும்புக் கூட்டம் போல் நின்றார்கள்.

இரண்டு இடங்களில் அகழியைத் தூர்க்கும் பணி நடந்து கொண்டிருந்தது.

விஷம் தோய்ந்த மாமிசத் துண்டுகளை அகழியில் பல இடங்களில் வீரர்கள் எறிந்து கொண்டிருந்தார்கள்.

அகழிக்கும் கோட்டைச் சுவருக்கும் இடையில் உள்ள இடங்களில் பல நீள தூரங்கள் அடர்த்தியான மரங்களும் புதர்களும் வளர்க்கப்பட்டிருந்தன.

அவற்றில் புலிக் குடும்பங்கள் உலாவியதால் அவைகளை அழிக்க எரிகணைகளைக் கவண் யந்திரங்கள் மூலம் பல வீரர்கள் ஏவிக் கொண்டிருந்தார்கள்.

பாலாற்றிலிருந்து மணல் மூட்டைகளை யானைகள் பெரும் பொதிகளாகத் தூக்கி வந்து கொண்டிருந்தன.

கோட்டையில் பலம் வாய்ந்த முன்வாசல் பாதுகாப்புக்கு எதிரில் அகழிக் கரை ஓரமாக இரண்டு தற்காலிக பீடங்கள் செங்கல்லாலும், மண்ணாலும் எழும்பிக் கொண்டிருந்தன.

இவைகள் மேல் நின்று கோட்டைக்காரார்களுடன் சம உயரத்தில் அம்புகள் எய்து சண்டை செய்யவே இந்த ஏற்பாடுகள்.

அவற்றின் சாரங்களில் இரண்டு பெரிய கவண் யந்திரங்களை ஏற்ற முயற்சி நடந்து கொண்டிருந்தது.



ஆயிரக்கணக்கானவர்கள் இவ்விதம் போர் ஆயத்தத்தில் முனைந்திருக்க,

ஹோ, ஹோ என்ற சப்த அலைகள் நொடிக்கு நொடி ஏற்றமும் இரக்கமுமாகக் கேட்டு அப் பிரதேசத்தையே நடுங்க வைத்துக் கொண்டிருந்தது.

இவ்வளவு கோலாகலமான முற்றுகையைப் பார்த்துக் கிருஷ்ண சந்திரன் பிரமித்துப் போனான். 'நிச்சயம் வேலூர்க் கோட்டை ஒழிந்தது, மன்னரும் ஒழிந்தார்' என்று நினைத்தான்.

விரைவாகத் திரும்பி மறைவிடத்துக்கு வந்து குதிரையைச் சீறிக் கிளப்பிச் செலுத்தினான் அவன்.

இரவு முதல் நாழிகைக்கு அப்பால் அவன் அர்ச்சுனன் தண்டு இறங்கிய இடத்தை அடைந்து,

''அர்ச்சுனா! இவ்வளவு பெரிய படையைச் சமீப காலத்தில் பார்த்ததில்லை. கோட்டை ஒழிந்தது'' என்று இரைத்தவாறு கூறினான்.

பிறகு தண்ணீர் அருந்தி ஆசுவாசமாகி, தான் பார்த்த விஷயங்களை யெல்லாம் சம்பிரமமாக விவரிக்க,

அர்ச்சுனனின் விரிந்த கண்கள் விரிந்தபடியே நின்றன.

சில விநாடிகள் ஜீரணிப்புக்குப் பிறகு ''இந்த இரண்டாயிரம் படை போதாதா?'' என்றான் பரிதாபமாக.

''தூள் தூளாயிடும்'' என்றான் கிருஷ்ண சந்திரன், தனது மெல்லிய குடுமியை அவிழ்த்து முடிந்து கொண்டு.

''அப்போது என்ன செய்யலாம்?'' என்றான் அர்ச்சுனன்.

''திரும்ப வேண்டியதுதான்!''

''எனக்கு அது பிடிக்கவில்லை.''

''கோட்டைக்காரர்களே எல்லாவற்றையும் பார்த்துக் கோட்டைக்குள் சும்மா இருக்கிறார்கள். உனக்கு ஏன் வீண் வம்பு?''

''இல்லை சந்துரு! ஏதாவது செய்யத்தான் வேண்டும். கோட்டைக்குள் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் இருக்கிறது.''

''ராயரைத் (மன்னர்) தானே சொல்கிறாய்?''

''இல்லை. மற்றொரு பொக்கிஷம்!''

''விஜயநகரத்துக்கு ஏது பொக்கிஷம்? எல்லாம்தான் கரைந்து விட்டதே!''

''இல்லை சந்துரு! இன்னொரு பொக்கிஷம்! அதைப் பெற்றால்தான் விஜயநகரப் பொக்கிஷத்தையும் பெறலாம், ராயரையும் காப்பாற்றலாம்.''

''என்ன அப்படி அதிசயப் பொக்கிஷம்?''

கேள்வியைக் கேட்டு, கிருஷ்ணசந்திரன் பார்வையைக் கூர்மையாக்கி, அர்ச்சுனனது கண்களில் அர்த்தத்தைத் தேட,

அர்ச்சுனன் விழிகள் இரண்டும் குழைந்து கூழாகி யிருந்தன.

''என்னடா! பாணம் அடிக்கட்டுதா? கண் பேசுதே!'' என்றான் கிருஷ்ணசந்திரன். கூடவே, ''வேபதுஸ்ச மே மனஹு! ரோம ஹர்ஷம் ச ஜாயதே!'' (மனம் நடுங்குகிறது, ரோமங்கள் பொடித்து நிற்கின்றன) என்று வேண்டுமென்றே கீதையை மேற்கோள் எடுத்தான்.

''உண்மைதான்!'' என்றான் அர்ச்சுனன்.

''யாராவது தேவதாசியா?''



''இல்லை. மேல் குடும்பம்தான். அவள் வாழ்ந்தால்தான் விஜயநகரம் வாழ முடியும்!''

கிருஷ்ணசந்திரன் உதட்டை மடித்துத் தலையை யானை ஆட்டம் ஆட்டி, ''ஹந்த! மம ஹ்ருதய வ்யாகூலம் கோ ஜானாதி?'' (ஆ! என் இதயத்தின் வியாகூலத்தை யார் அறிவார்கள்?) என்று புலம்பலோடு கூறினான்.

''விளையாடுகிறாய், சந்துரு! எல்லாம் விபத்துத்தான்! மனத்துக்குச் சஞ்சலத்தையும், ஆனந்தத்தையும் தருவது பிரேமையைத் தவிர வேறு இல்லை. அதில் காலம் வரும்போது விழவேண்டியதுதானே? ஆனால் என் நோய் எனக்குத் தெரிகிறது; மற்றவரிடம் அந்த நோய் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது!''

''ஓகோ! ஒருபட்சக் காதலா? வில்லைக் கீழே போடு! அரசர்கள் சண்டை போடட்டும். பிரஜைகள் காதலிப்போம். காவியம் செய்வாம்.''

வாளைக் கீழே போட்டு, கையைக் கட்டினான் கிருஷ்ண சந்திரன்.

அர்ச்சுனன் லேசாகச் சிரித்தான். ''சந்துரு! வாளைக் கீழே போட்டது சரி! என் மனம் கோட்டைக்குள் அகப் பட்டு விட்டதே! அதை மீட்டிக் கொண்டு அல்லவா நாம் போக முடியும்!'' என்றான்.

''வாஸ்தவம்தான். மார்க்கம் இல்லையே! மனம் அங்கேயே இருக்கட்டும். அப்புறம் எடுத்துக் கொண்டால் போயிற்று.''

''ஆபத்து சந்துரு!''

''எனக்கு வேறு வழி தெரியவில்லை. நம்மிடம் இருப்பதோ அரைக்கால் படை! அதை எதிரிகள் மாவாக அரைத்து விடுவார்கள்!''

அர்ச்சுனன் யோசித்தான். கிருஷ்ணசந்திரனும் யோசித்தான். அர்ச்சுனன் மனத்தில் பெரிய கவலை. சுவர்ணமுகி இந்நேரம் என்ன செய்வாள்? துயரப்படாமல் சௌகரியமாக இருப்பாளா? அவளைச் சந்திக்காமல் வந்து விட்டோம்! அவளுக்கு அது வேதனை அளித்திருக்குமா? ஒருவேளை! அவன் அதிகமாகக் கற்பனை செய்து கொள்கிறானோ! அவளுக்கு அவன் மீது எந்தவிதப் பாசமும் இல்லாமல் இருக்குமோ?

மனம் இவ்விதம் அல்லோலப்பட, கண்களிலிருந்து அவனை அறியாமல் துயரப் புஷ்பங்களாக நீர்த் துளிகள் உதிர்ந்தன.

''அர்ச்சுனா!'' என்று திடுக்கிட்டுக் கூறினான் கிருஷ்ண சந்திரன். ''உன் மென்மை அறியாத மூர்க்கனாக இருக்கிறேனே? நான் சித்தம்! நாளைக் காலையிலேயே எதிரிகளைத் தாக்குவோம்.''

''சந்துரு! எனக்காக உணர்ச்சி வசப்படாதே! நம் படையால் அதைச் செய்ய முடியாது. எனக்கு ஒரு யோசனை! நாம் தந்திரத்தால் அதைச் செய்தால் என்ன?''

''என்ன தந்திரம்?''

''விடியக் கருக்கலில் எழுந்திருக்கிறோம். வெகுண்டு போய் ஒரு தாக்குத் தாக்குகிறோம். யாரும் அதை எதிர்பார்க்க மாட்டார்கள்!''

''சரி! நூறு பேர்ப்படை ஆயிரம் பேரைக் கொல்லாமல் ஐம்பதாயிரம் பேரைக் கொல்ல முடியாது.''

''நாம் எதிரிகள் எல்லோரையும் எதிர்க்கப் போவதில்லை. நேராகத் திம்மனின் பாசறைக்குத்



துளைத்துக் கொண்டு போகிறோம். திம்மனைக் கொல்கிறோம்! – அது போதும் நம் வெற்றிக்கு!''

கிருஷ்ண சந்திரன் யோசித்தான். கொஞ்சம் சாகஸம் தேவை! சாமர்த்தியம் தேவை! எல்லாவற்றையும்விட ஒரு இருதயம் தேவை! சரி, பார்த்துவிடுவோம். ''சரி, அப்படியே செய்கிறோம்!'' என்றான் அவன்.

அதே இரவு வேளை.

வேலூர்க்கோட்டை அரண்மனையில் அந்தரங்க அறை ஒன்றில் வேங்கடராஜா முன்னிலையில் சுவர்ணமுகி தலை குனிந்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

''உட்காரம்மா!'' என்றார் வேங்கடராஜா, அவளை மேலிருந்து பாதம் வரை பலமுறைகள் பார்த்தார்.

கண்களைத் தீவிரமாக்கி அதன் கூர்ச்சியினால் அவளைக் கீறி விடுபவர் போல் பார்த்தார். உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் ஸ்ரீரங்கன்.

அவன் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

''உன் பேர் என்னம்மா?''

''சுவர்ணமுகி!''

''உன் தந்தை இம்மாடி ஸ்ரீரங்க மகாராஜாவா?''

''ஆமாம்.''

''அதற்கு ஏவாது ருசு இருக்கிறதா?''

சுவர்ணமுகியின் உணர்ச்சிகள் கொந்தளமிட்டு மேலே துளும்பின.

ஒரு கணம் இடுப்பில் கட்டியிருக்கும் அந்த ரட்சையை எடுத்து விடுவோமா என்று நினைத்தாள்.

அதை மனம் ஒப்பவில்லை.

எந்தக் குறிநோக்கும் இல்லாமல் அவள் மனத்துக்கு முற்றிலும் பாத்திரமானவருக்கே அதைக் காண்பிக்க வேண்டும் என்று தந்தை இம்மாடி ஸ்ரீரங்கர் வேண்டியிருக்கிறார்.

அதைத்தான் ரங்கப்ப தளவாயும் அவளிடம் கூறியிருக்கிறார்.

அப்படிப் பாத்திரமானவர் வேங்கடராஜா என்று அவள் நினைக்கவில்லை.

எனவே ரட்சையை எடுக்க அவள் விரும்பவில்லை.

''சொல்லம்மா, குரு உண்டா?''

அவள் அவரை மலங்கப் பார்த்தாள்.

''ரங்கப்ப தளவாய்தான் குரு!''

''அவர்தான் இறந்து விட்டாரே!''

''வேறு எதுவுமில்லை.''

''ரங்கப்பாவிடம் வருவதற்கு முன்னால் வேறு யாரிடம் வளர்ந்தாய்?''

''தேர்ப்பாகன் கார்த்திகன்!''

''அவனும்தான் இறந்து விட்டானே!''

சுவர்ணமுகிக்கு வேதனை துள்ளி வந்தது. எத்தனை கேள்விகள் கேட்கிறார் இவர்? அவள் யார் என்று அறிய இவ்வளவு விசாரணையா?

''இறந்துபோன முந்திய மகாராஜா ராமதேவராயர் உனது சொந்தச் சகோதரன்தானே?''



''ஆமாம்.''

''அப்படியானால் அவனிடம் ஏன் நீ சென்று இன்னார் என்று கூறிக் கொள்ளவில்லை?''

சுவர்ணமுகிக்கு அதற்கு மேல் தாளவில்லை. 'எக்' என்று ஒரு விக்கல் விக்கினாள். கண்கள் குடமாக உடைந்து தண்ணீரைச் சொரிந்தன.

வேங்கடராஜா திடுக்கிட்டு அவளைப் பார்க்க, வெகு வேகமாக வரும் வேலூர் லிங்கம நாயகர் அவர் கண்களில் விழுந்தார்.

வேங்கடராஜாவைத் தனியாக அழைத்துப் போய் ஓர் ஓலைச் சுருளை எடுத்துக் காண்பித்தார்.

''ஸ்ரீரங்கா! இதோ வருகிறேன்'' என்று பரபரப்பில் புறப்பட்டார் வேங்கடராஜா.

சுவர்ணமுகி வெகுவாக விசித்துக் கொண்டிருந்தாள்.

* * * * *

கோட்டையிலிருந்து வீரர்கள் பிரித்து எடுத்து வீசிய ஒவ்வொரு கல்லுக்கும் எதிரிகள் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தார்கள்.

– நூனிஸ்

## 31

ஓலையைப் படித்த வேங்கட ராஜா பதற்றம் அடைந்தார். லிங்கமா! இப்படியும் நடக்குமா?'' என்று கேட்டார்.

ஓலை கோட்டை நாயகத்திடமிருந்து வந்திருந்தது. கோட்டைத் தளபதியான குமரேசனைப் பற்றி ஆவலாதி கூறியிருந்தார். எதிரியிடமிருந்து தளபதி பத்தாயிரம் வராகன் லஞ்சம் வாங்கியிருப்பதாகவும், மறுநாள் காலையில் யாருக்கும் தெரியாமல் கோட்டைக் கதவைத் திறந்து விடப் போகிறார் என்றும் தெரிவித்திருந்தான்.

''குமரேசன் அப்படிப்பட்டவனா?'' என்றார் வேங்கடராஜா.

''இல்லை. என்னிடம் விசுவாசமானவர்களில் அவன் ஒருவன். ஆனால் சந்தர்ப்பம் வந்தால் யார் யார் எப்படி மாறுவார்கள் சொல்ல முடியாது'' என்றார் அவர்.

கடந்த இரண்டு தினங்களில் அவர் வேலூருக்குள் எத்தனையோ வேடிக்கைகளைப் பார்க்கிறார்.

நேற்றுவரை அவரைப் போற்றியவர்கள் மறுநாள் திடீரென்று மாறிக் கொண்டிருந்தார்கள்.

''இப்போது என்ன செய்யலாம்?'' என்றார் வேங்கடராஜா.

''குமரேசனை அழைத்து விடுவோம். வந்தால் சிறைப் பிடிப்போம். வராவிட்டால் நாமே தந்திரமாகக் கொன்று விடுவோம்'' என்றார் லிங்கமர்.



''இரவே அது நடந்தாக வேண்டும்'' என்றார் வேங்கடர்.

''இதோ!'' என்று சொல்லி உடனே ஆளை அனுப்பினார் லிங்கமர்.

இருவரும் பிறகு கவலையோடு திரும்பிய போது அடுத்த அறையில் சுவர்ணமுகி சோகமாக நிற்பதைப் பார்த்தார்கள். ''இது ஒரு பிரச்னை!'' என்றார் வேங்கடர்.

''என்ன விஷயம்?'' என்று வெறுப்புடன் கேட்டார் லிங்கமர்.

''இவளைத் தெரியுமா?'' என்று குரலை தாழ்த்திக் கேட்டார் வேங்கடர்.

''தெரியாது'' என்றார் லிங்கமர்.

''இவள்தான் இம்மாடி ஸ்ரீரங்க மகாராஜாவின் மகள்?'' என்றார் வேங்கடர்.

''என்னது! சிறையில் இறந்த அந்த மகாராஜாவின் மகளா?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் லிங்கமர்.

''ஆமாம்!'' என்றார் வேங்கடர்.

''மகாராஜா! ஸ்ரீரங்க மகாராஜா சிறையில் இருந்தபோது ராமதேவன் என்ற பையனை மட்டும் சலவைக்காரரின் அழுக்குக் கூடையில் வைத்து வெளியே அனுப்பினார் என்பது எல்லோருக்கும் தெரியும்.''

''அப்போதே ஸ்ரீரங்க மகாராஜா இன்னொரு காரியமும் செய்திருக்கிறார். தனது ஒரே மகள் சுவர்ணமுகியைச் சிறைக் காவல்காரனிடம் கொடுத்து அவனது மகளை உள்ளே வாங்கி வைத்திருக்கிறார்.''

''ஆச்சரியம்!'' என்றார் லிங்கமர் புருவங்களைத் தூக்கி. ''இவ்வளவு வருஷம் இந்த விஷயம் வெளியாகாமல் இருந்ததா?''

''ஆமாம்! அதனால் இந்தப் பெண்ணுக்கு ஏதாவது தீங்கு நேரிடுமென்று யாரும் வெளியில் சொல்லவில்லை.''

''அவளது வளர்ப்புப் பெற்றோர்கள் யார்?''

''ஏன்? நமது நாராயணவனம் ரங்கப்ப தளவாய்!''

''அவரா? அவர் ஏன் வெளியே கூறவில்லை''

''அவள் ஒரு பெண்! அவளது திருமணம் முடிந்த பிறகுதான் அவளது வரலாற்றைக் கூற வேண்டும் என்று அவர் நினைத்திருந்தார். ஆனால் அதற்கு முன்னால் அவர் திருப்பதிச் சண்டையில் இறக்க வேண்டி நேர்ந்தது. இனியும் அந்த ரகசியம் தன்னிடம் மட்டும் இருக்கலாகாது என்று நம்பிக்கையான இருவரிடம் கூறியிருக்கிறார். இப்போது ரகசியம் வெளிவந்து விட்டது.''

லிங்கமர் தனது வாளின் கைப்பிடியைப் பற்றினார். ''மகாராஜா! இதில் ஏதோ சூது இருக்கிறது.'' என்றார்.

''எப்படிச் சொல்கிறாய்?''

''இத்தனை நாளும் இல்லாத பூதத்தை யாரோ கிளப்புகிறார்களே! நமக்குத் தெரியும் மறைந்த ஸ்ரீரங்க மகாராஜாவின் குடும்பத்தில் எஞ்சியது அவரது மகன் ராமதேவன் ஒருவர்தான் என்று!''

''ஆமாம்; அந்த ராமதேவன் சிறிது காலம் ஆட்சி புரிந்து, மகவு இல்லாமல் இறந்ததால் நான் இந்த ராஜ்யத்தின் மகுடத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. இப்போது திடீரென்று ஸ்ரீரங்க மகாராஜாவுக்கு ஒரு மகளும் இருந்தாள் என்று நம்ப வேண்டி வந்தால். . .''

''இறந்தாரே மகாராஜா ராமதேவர்! அவருக்குத் தெரியுமா தனக்கு ஒரு சகோதரி உயிரோடு இருக்கிறாள் என்று?''



''நானும் அதைக் கேட்டேன். அவளால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை.''

லிங்கமரின் கண்கள் விருட்டென்று உருண்டன. ''மகாராஜா! இப்படி வாருங்கள் வாருங்கள்!'' என்று அடுத்த அறைக்கு அழைத்துப் போனார்.

''இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது மகாராஜா! நாம் இப்போது இரக்கமில்லாத ஒரு காரியத்தில் இறங்க வேண்டும்.''

''என்ன செய்யலாம்?''

''இவளை இன்று இரவுக்குள் தீர்த்துக் கட்டிவிட வேண்டும்.''

வேங்கடராஜா திகைத்தார். ''ஏன் இப்படிச் சொல்கிறாய் லிங்கமா?''

''மகாராஜா! இன்றைய நிலைமையைப் பாருங்கள்! கோட்டை முற்றுகையாகி இருக்கிறது. உள்ளே ஜனங்கள் நம்மை எதிர்க்கிறார்கள். கோட்டைத் தளபதி துரோகம் செய்திருக்கிறார். இந்த வேளையில் யாரோ ஒருத்தி தன்னை பழைய மகாராஜாவின் மகள் என்று சொன்னால், இதெல்லாம் என்னவென்று தோன்றுகிறது? யாரோ ஒரு பெரிய சதிகாரன் இத்தனைக்கும் பின் நின்று இவைகளை நிகழ்த்துகிறான் என்றுதானே தோன்றுகிறது. இதில் தாட்சண்யமே வேண்டாம். இந்தப் பெண்ணை விட்டு வைத்தால் ஆபத்து. இதனால் எத்தனை தலைவலிகள் நமக்குக் கிளம்புமோ! மகாராஜா! யோசிக்காதீர்கள். இவளை இன்று இரவே முடித்து விடுவோம்'' என்றார் லிங்கமர்.

''ஏன் முடிக்க வேண்டும்? சிறை வைத்தால் என்ன?'' என்றார் வேங்கடர்.

"நாளை கோட்டை உடைந்து உள்ளே கலவரம் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்! இதுபோல் ஒரு பெண் இருப்பது தெரிந்தால் என்னென்னவோ நடக்கும். நமது மகுடங்களுக்கே ஆபத்து வரும்" என்றார் லிங்கமர்.

வேங்கடராஜாவால் மேலே பேச முடியவில்லை. அவர் ஒரே பதற்றத்தில் இருந்தார். எந்தச் சமயத்தில் என்ன நேருமோ என்ற பயம். இந்தச் சமயத்தில், ஒரு பெண் அவரிடம் அடைக்கலமாகி வந்திருக்கும் நேரத்தில். . .

"மகாராஜா! தாங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தப் பெண்ணை யார் அழைத்து வந்தார்கள்?"

"ஸ்ரீரங்கன்"

"யார்? தங்கள் தம்பியின் மகனா?"

"ஆமாம்."

"பேஷ்! பேஷ்!" என்று தலையை ஆட்டினார் லிங்கமர். "ஸ்ரீரங்கன் கொண்டு வந்தாரா? அப்போதே நினைத்தேன் மகாராஜா அவரைப் பாதுகாப்பில் வைத்திருக்கிறாரே. அதை மீறி அவர் இங்கே வந்து தங்களிடம் பேசியதை நான் நம்பவில்லை. இப்போது அதை நினைத்தால் கூட எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது."

"என்ன, சொல்லு!" என்றார் வேங்டர். ஏற்கனவே அவர் உடலில் ஆட்டம் இருந்தது.

"ஸ்ரீரங்கர் வெளியே போய் சண்டை செய்யத் தங்களிடம் அனுமதி கேட்டாரே, அதுவே சூழ்ச்சியாக இருந்தால். . ."

வேங்கடர் திடுக்கிட்டு விழித்தார். "லிங்கமா! அவன் அப்படிச் செய்ய மாட்டான்."



"சொல்கிறீர்கள்! ஒரு நெருக்கடி நேரத்தில் ஒருவர் என்ன செய்வார், என்ன செய்யமாட்டார் என்பதை யாரும் உறுதியிட்டுக் கூற முடியாது. ஸ்ரீரங்கன் வெளியில் போவது என்பது திம்மராஜாவோடு சேருவதற்குத்தான் என்று தெரிந்தால். . ."

வேங்கடருக்கு நெற்றி சுருங்கியது. தலை மேல் கை வைத்தார். "லிங்கமா! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. என்னை விட்டுவிடு!" என்றார்.

அவர் நிலையைப் புரிந்த லிங்கமர், "மகாராஜா! கவலைப்படாதீர்கள்! இந்தப் பெண்ணைப் பாதுகாப்பில் வைக்கிறேன். மற்றவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

"உன் இஷ்டப்படி செய்" என்றார் வேங்கடர்.

சுவர்ணமுகி அந்தப்புர அறை ஒன்றில் பாதுகாப்பில் வைக்கப்பட்டாள்.

வேங்கடரும் லிங்கமரும் மந்திராலோசனை அறையில் உறங்காமல் விழித்திருந்தார்கள். அவர்களோடு பின்னர் தாமர்ல வேங்கடப்பனும், அவர் தம்பி ஐயப்பனும் சேர்ந்து கொண்டனர்.

எல்லோரும் கோட்டைத் தளபதி குமரேசன் எப்படியும் வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

நடு இரவு வரை அவர் வராமல் போகவே குமரேசன் துரோகம் செய்து விட்டார் என்று அவர்கள் உறுதி செய்தார்கள்.

உடனே அவர்கள் அவசரமாக ஆலோசித்து இரு தீர்மானங்கள் எடுத்தார்கள்.

ஒன்று, இரவுக்கிரவே வேட்டையாடிக் குமரேசனைக் கொல்ல வேண்டியது.

இரண்டு, எதிரிகளைத் தாக்குவதற்காக வெளியே பாய்வதற்குச் சித்தமாக இருக்கும் ஸ்ரீரங்கனைத் தடுத்து நிறுத்தி; அவனையும் பாதுகாப்பில் வைப்பது!

குமரேசனைத் தேடி தாமர்ல சகோதரர்களும், ஸ்ரீரங்கனைத் தேடி லிங்கம நாயகரும் புறப்பட்டார்கள்.

குமரேசன் மேற்குக் கோட்டை வாசலில் தனக்குச் சாதமகான நூறு பேர் படையோடு ஒளிந்திருந்தான்.

தாமர்ல சகோதரர்கள் உளவறிந்து அவர்களைத் திடீர் தாக்கு தாக்க, வெகு சீக்கிரம் அந்த வாசலின் உட்புறம் பெரிய பூசல்!

தாமர்ல வேங்கடப்பன் உள் வாசலையும், அதை அணைத்துள்ள கட்டடங்களையும் சேர்த்துப் பிணைத்து ஒரு சங்கிலி போல் பாதுகாப்பை உண்டாக்கி விட்டார்.

எனவே, வெளியே போக வழியில்லாமல் உள்ளே பாய யத்தனித்த நூறு பேர்களும் வெவ்வேறு பகுதிகளில் மும்முரமாகத் தாக்கப்பட்டு தங்கள் உயிர்களை இழந்தனர்.

குமரேசன் கடைசி நிமிஷத்தில் தப்பித்துக் கொத்தளத்தில் ஏறி, தொங்கு பாலத்தின் சங்கிலியை வெட்டுவதற்கு அவசரமாக முனைந்தார்.

ஆனால் அவர் மீது விட்டெறியப்பட்ட எரிகணை அவரையும் சேர்த்துக் கொண்டு அகழியில் விழுந்தது.

அடுத்து, கிழக்குக் கோட்டை பாரிசத்தில் தனது சிறு படையுடன் ஸ்ரீரங்கன் காத்திருக்கும் வேளையில்,

லிங்கம நாயகர் அவனை வந்து எழுப்பியது ஆச்சரியமாக இருந்தது.

''ஏன் சுவாமி, மகாராஜா மனம் மாறி விட்டாரா?'' என்றான்.

''ஆமாம், உடனே உங்களை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார்'' என்றார் லிங்கமர்.

சற்று ஆச்சரியமுடன் எழுந்து ஸ்ரீரங்கன் அவரைப் பின்பற்றினான்.



அரண்மனைக்குள் நுழைந்த பிறகு லிங்கமர் ராஜ கூடம் போகாமல் வேறு எங்கேயோ போவதைப் பார்த்து,

''சுவாமி, எங்கே?'' என்றான்.

''இப்படி வாருங்கள் சொல்கிறேன்'' என்றார் லிங்கமர்.

இருவரும் பாதுகாப்பு அறைகளை நெருங்கினபோது ஸ்ரீரங்கனின் உதடுகள் துடித்தன.

''எங்கே மகாராஜா!'' என்றான்.

''இங்கே இருங்கள்! வருவார் அவர்'' என்றார் லிங்கர்.

''பாதுகாப்பு அறையிலா?'' என்றான் ஸ்ரீரங்கன்.

''ஆமாம்!'' என்றார் லிங்கமர்.

விருட்டென்று வாளை உருவினான் ஸ்ரீரங்கன்.

''ஹேய்'' என்று ஓங்கி எச்சரிக்கை செய்து, பாதுகாப்பாளர்கள் பளீர் என்று அவன் மீது பாய்ந்தார்கள்.

ஸ்ரீரங்கனின் வாள் வெளியே வருமுன் அவனை ஒரே பொத்தாகப் பொத்திக் கீழே தள்ளினார்கள்.

பிறகு அவனது வெகுண்ட உருவத்தை நெட்டித் தள்ளி அறைக்குள் தள்ளி அதன் இரும்புக் கதவுகளைப் பூட்டினார்கள்.

ஸ்ரீரங்கனுக்கு ஆத்திரம் ஓர் இரும்பு குண்டு போல் வீசி அடித்தது.

''ஏ, லிங்கமா, துரோகி! மகாராஜாவைக் கொன்று சாம்ராஜ்யத்தை அபகரிக்கப் பார்க்கிறாயா? நீ உருப்படுவாயா? துரோகி'' என்று கூப்பாடு போட,

மேலே காற்றுப் போக்கி வழியாக வந்த அவன் குரல் அரண்மனை எங்கும் வீசி அடித்தது.

* * * * *

விஜயநகரப் படைகள் வெட்ட வெளிகளில் தங்குவார்கள், கூரைகளை வேய்ந்து வரிசையாகத் தெருக்களை ஏற்படுத்தி ஒரு தாற்காலிக நகரம் செய்து கொள்வார்கள்.

– பர்போஸா

## 32

அன்றைய இரவு எல்லோருக்கும் முக்கியமானதாக மாறியிருந்தது.

அரண்மனைக்குள் பெரிய ராஜதந்திர நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது

வெளியே ஜனங்களிடையே குட்டி நாடகங்கள் நடந்து கொண்டிருந்தன.

இரவு முழுவதும் ஜனங்கள் உறங்கவில்லை. அவரவர் வீட்டில் ஒரு ரகசியமான பரபரப்பும், ஆயத்தங்களும் நடந்து கொண்டிருந்தன.

தங்கள் பாத்திர வகையறாக்களைக் கிணறுகளிலோ, குழிகளிலோ போட்டு மறைத்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கள் தங்கம், வைரம் இத்யாதிகளைத் தங்கள் மூட்டைக்குள் ரகசிய இடுக்குகளில் வைத்துத் தைத்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் கோட்டையை விட்டு வெளியேறி, ஒரு நீண்ட கால வெளியூர் வாழ்க்கைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் நிரந்தரமாகத் தெற்கே உள்ள ஊர்களில் குடியேற விரும்பினார்கள்.

நொடி நேரத்தில் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்து வெவ்வேறு இடங்களுக்கு ஓடிவிடும் ஒருவித க்ஷண வாழ்க்கையாகத்தான் அந்தக் குறிப்பிட்ட கால மக்களின் வாழ்க்கை இருந்தது.



ஏற்கனவே பல வீடுகள் பூட்டப்பட்டு விட்டன. குடும்பங்கள் நிழலோடு நிழலாக மேற்குக் கோட்டை வாசலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

துளி சத்தம் எழ வேண்டுமே, கிடையாது.

எல்லோரும் கோட்டை நாயகத்திடம் ஏதாவது நகையோ, தங்கமோ, வைரமோ கொடுத்துத் தங்கள் தங்கள் குடும்ப விடுதலையை யாசிக்க நினைத்திருந்தார்கள்.

ஊர் முழுதும் இதே நினைவை ஏகோபித்து நினைத்து எல்லோருமே மௌன உருவங்களாக நிழலின் ஒதுக்கத்தில் மறைந்து ஒரே நோக்கத்தோடு நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களது ஒரே எதிரி இப்போது லிங்கம நாயக்கரும், அவரது பரிவாரங்களும்தான்!

பசி என்னும் அசுர அக்கினி அவர்களது குடல்களை எரித்துக் கொண்டிருக்கும்போது,

நாடு, ராஜ்யம், ராஜா முதலியனவெல்லாம் வெறும் அர்த்தமற்ற வார்த்தைகளாக அவர்களுக்குத் தென்பட்டன.

தங்கள் தீர்மானத்துக்கு எதிரே யார் வந்தாலும் அதை எதிர்க்க அவர்கள் சித்தமாக இருந்தார்கள்.

இந்த ஜனங்களின் கூட்டம் மேற்குக் கோட்டை வாயிலில் குபுகுபுவென்று சத்தமில்லாமல் கூடியது.

கூடியிருந்த பெரும்பாலான குடும்பங்கள் பட்டினியிலும் முழுப் பட்டினியிலும் இருந்தபடியால் பாதி ஜனங்களும் நடைப் பிணங்களாகத் தென்பட்டார்கள்.

அந்த நள்ளிரவில் வாய் திறவா நிசப்தமுடன் அந்த உடல் சுருங்கிய மனிதர்கள் அங்கே கூடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அது ஒரு வேதாள உலகம் போல் தென்பட்டது.

அரண்மனையும் அப்போது சும்மா இருக்கவில்லை.

ஸ்ரீரங்கனைப் பாதுகாப்பில் வைத்த கையோடு லிங்கம நாயக்கர் வேங்கடராஜாவிடம் வந்தார்.

இலேசாக அயர்ந்திருந்த அவரை எழுப்பி, ''மகாராஜா! ஒரு சங்கடமான சூழ்நிலையில் சிக்கியிருக்கிறோம். எனக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டும். இந்தப் பெண், அவள் பெயரென்ன, சுவர்ணமுகியா அவள் உண்மையில் நமது பழைய மகாராஜா இம்மாடி ஸ்ரீரங்க ராஜாவின் மகள்தானா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியவில்லை. ஆனால் ரங்கப்ப தளவாயிடம் வளர்ந்தாள் என்று நினைக்கும்போது அது உண்மையாக இருக்கலாம்!'' என்றார் வேங்கடராஜா!

''அவர்தான் இறந்துவிட்டாரே! இதுபற்றி ஏதாவது பட்டயம் எழுதி வைத்திருப்பாரா?''

''இருக்கலாம். அதையெல்லாம் அர்ச்சுனனைக் கேட்டால் தெரியும்!''

''அவன்தான் மதுரை போனவன் வரவில்லையே! இந்தக் கூற்று உண்மையோ, பொய்யோ எனக்கு உடனே ஒரு காரியம் செய்யத் தோன்றுகிறது!''

''என்ன காரியம்?''

''பொழுது விடிந்தால் கோட்டை வாயிலில் என்ன நடக்கும் என்று தெரியவில்லை. இந்த நிலையில் பட்டத்துக்கு உரிமையுள்ள ஒரு பெண்ணை இங்கே விட்டு வைத்திருந்தால் எவ்வளவோ ஆபத்து ஆயிற்றே!''

''அதற்காக என்ன செய்ய வேண்டும்?''

''ஒன்று அந்தப் பெண்ணைக் கொல்ல வேண்டும். அல்லது. . .''



வேங்கடராஜா திடுக்கிட்டு லிங்கமரைப் பார்த்தார். ''அல்லது?. . .''

''அவளைத் தாங்களே மணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றார் லிங்கமர்.

''நானா'' என்று நாத்தடுமாறிக் கூறினார் வேங்கடராஜா.

''ஆமாம்; தாங்கள்தான்! அதுவும் இன்று இரவே செய்ய வேண்டும். பட்டத்துக்குரிய பெண்ணைத் தனியாக வைத்திருந்தால் ஆபத்து. அவள் கையைப் பிடிக்கும் யாரும் நாளை சிங்காதனம் ஏற ஆசைப்படுவார்கள்.''

''லிங்கமா! இந்த விஷயத்தைப் பற்றி இப்போது ஏன் அவசரம்? மெதுவாகக் கவனித்துக் கொள்ளலாம்.''

''இல்லை மகாராஜா! இப்போது நாம் ரொம்ப நெருக்கடியில் இருக்கிறோம். நாளைக் காலை நடக்கப்போவது நமது சாம்ராஜ்யத்துக்கே மிக முக்கியமானதாக இருக்கும்! சொல்லுங்கள்! அவளைக் கொன்றுவிடவா, அல்லது அவளை நீங்கள் ஒப்புக்குக் கல்யாணம் பண்ணி அந்தப்புரத்தில் தள்ளுகிறீர்களா?''

''நீ சொல்வது கொடூரமாக இருக்கிறதே!''

''உண்மைதான். எனினும் இதில் தீர்மானித்துத்தான் ஆக வேண்டும்.''

வேங்கடராஜா லிங்கமர் சொல்லும் விஷயங்களை ஏற்கனவே அறிந்தவர். அந்த நாளைய ராஜதந்திரம் அதுவாகத்தான் இருந்தது.

இருவரும் சிறிது வாக்குவாதம் நடத்திக் கொண்டிருக்கும்போது,

அரண்மனை வாயிலில் ஏதோ அரவங்களைக் கேட்டு அங்கே நோக்கி ஓடினார் லிங்கமர்.

நள்ளிரவுக்கு மேல் சுவர்ணமுகி உறங்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

தலைகாணியில் சாய்ந்து கண்களை மூடியும் உறக்கம் வரவில்லை. நல்ல உறக்கம் அவளை விட்டுப் போய் பல மாதங்கள் ஆகிவிட்டன!

வளர்ப்புத் தந்தை ரங்கப்ப தளவாய் அவளிடம் கூறியிருக்கிறார்: "அரச குடும்பத்தில் பிறப்பது வெறும் சுகம் என்று நினையாதே! நரகத்துக்கு ஈடான துக்கம் அதில் உண்டு!" என்று.

பிறந்ததே துக்கம்! வளர்ந்ததும் துக்கம்!

ரங்கப்பாவிடம் வந்த பிறகுதான் ஓரளவாவது சுகம் கிடைத்தது. இப்போது எதிர்காலத்தை நினைத்தால். . . என்ன பயமாக இருக்கிறது!

என்ன ஏமாற்றம்? வேங்கடராஜாவிடம் அறிமுகம் கிடைத்தால் உடனே அவர் நம்மைக் கௌரவித்துப் பிரமாதமாக உபசரிப்பார் என்று நினைத்தோமே! எல்லாம் பொய்யாகி விட்டதே!

இப்போது இங்கே இந்த அறையில் வைத்திருப்பது கூட காராக்கிருகத்தில் இருப்பது போல இருக்கிறதே!

அர்ச்சுனனுக்கு இது தெரியுமா? அவர் ஏன் இன்னும் வரவில்லை? எங்கே இருக்கிறார்?

ஒருவேளை அவருக்கு என் மீது கோபம் இருக்குமோ? அன்று கோட்டை அகழிப்புரத்தில் என்னைப் பார்த்ததும் பேசாமல் இருந்தாரே? இன்னொருத்தர் கூட நின்றதால் அவருக்குப் பேச இஷ்டமில்லையோ?

இருக்காது! அந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் ஓலை ஒன்று அனுப்பித்தாரே! அது அவர் மனம் சரியாக இருக்கிறது என்பதற்கு அடையாளம்தானே?



இருந்தாலும், ஸ்ரீரங்கனுடன் இருந்தது ஒரு சிறிய அளவாவது அவருக்குத் துன்பத்தைக் கொடுத்திருக்கலாம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

சந்தர்ப்பங்கள் அப்படி நேர்ந்துவிட்டனவே!

திருப்பதிக்குப் போனதிலிருந்து வரிசையாக அவளுக்கு நேர்ந்தவைகளை நினைத்துப் பார்த்தாள். கண்கள் புலபுலவெனக் கொட்டின. ரங்கப்பாவை மானசீகமாக நினைத்து, "இதைவிடவா நரகம் வேண்டும், சொல்லுங்கள்!" என்றாள்.

கதவை யாரோ திறந்தார்கள்.

இந்த ராத்திரியில் யார் திறக்கிறார்கள்?

உள்ளே அவசரமாக இரண்டு தாதிகள் வந்தார்கள். ஒரு தட்டில் பூ, சந்தனம், புடவை இவைகளுடன் வந்தார்கள்.

"நல்ல வேளை! விழிச்சுக்கிட்டு இருக்கீங்களே, எழுந்திருங்க!" என்றார்கள் தாதிகள்.

"என்ன விஷயம்?" என்று திகைப்புடன் கேட்டாள் சுவர்ணமுகி.

"கல்யாணம் நடக்கப் போகுது வாங்க!" என்றாள் ஒருத்தி.

"எனக்கா?"

"ஆமாம்!"

'சீ, போங்க வெளியே, போங்க வெளியே!" என்று தூக்கி எறிந்தாள் அவள்.

அதே நேரத்தில் பெண் காவலாளிகள் உள்ளே நுழைந்தார்கள்.

அதே இரவில் கோட்டைக்கு வெளியே சற்றுத் தூரத்தில் இருந்த அந்தக் காட்டு வெளிக்குள் அர்ச்சுனனும் கிருஷ்ண சந்திரனும் விழித்து இருந்தார்கள்.

அவர்களது இரண்டாயிரப் படை மரவெளியில் அயர்ந்து படுத்திருக்க,

இருவரும், ஒரு உச்சி மேட்டிலிருந்த பாறையில் ஏறி அமர்ந்து கொண்டு அந்த நள்ளிரவில் தூரத்தில் தெரிந்த கோட்டையை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கோட்டைப் பக்கத்தில் திடீரென்று எழுந்த சில தீவர்த்தி இயக்கங்கள் இரு இளைஞர்களையும் உசுப்பியிருந்தன.

"என்ன நடக்கிறது?" என்றான் அர்ச்சுனன்.

"கோட்டைக்குள் போய்விடுவார்களோ?" என்றான் கிருஷ்ண சந்திரன்.

"இந்த திம்மராஜாவுக்கு வந்த பவிஷைப் பார்த்தாயா? யாரோ இவ்வளவு படையைக் கொடுத்திருக்காங்களே!"

"நம்ப பக்கத்து ராஜாக்களே இருக்கும்!"

"சுல்தான் (பீஜப்பூர்) கொடுத்திருப்பாரோ?"

"அப்படிக் கொடுத்தாலும் ஆச்சரியப் படுறதுக்கில்லை"

"இப்போ இருக்கிற குழப்பத்திலே யார் என்ன வேணும்னாலும் செய்வாங்க!"

"அடடே! இங்கே பாரு!"

கிருஷ்ணச் சந்திரன் சுட்டிக்காட்ட, அர்ச்சுனன் திரும்பினான்.

கீழே கணவாய் போன்ற பள்ளத்தாக்கில் நிழல் கூட்டம் ஒன்று நடந்து சென்றது.

கணவாய் வெறுமையாய், வெண்மைக் கற்கள் நிறைந்து காணப்பட்டதால் ஒருவித மினுமினுப்போடு தெரிந்தது. அதன் பின்னணியில் அந்த நிழல் கூட்டம் ஊர்ந்து சென்றபோது அவர்களுக்குப் பளிச்சென்று தெரிந்து விட்டது.



"ஆட்கள்!" என்றான் கிருஷ்ண சந்திரன்.

"படை!" என்றான் அர்ச்சுனன்.

"இவ்வளவு சின்னப் படையா?"

"ஆமாம்! இது விநியோகப் படையாக இருக்கும். பொதிகள் போகுது – பார்!"

"யார் விநியோகம் நடத்தறாங்க? யாருக்கு"

"திம்மராஜாவுக்கு யாரோ உதவி பண்றாங்க!"

கீழே நிழல் கூட்டம் அவர்களுக்கு நேராக வந்தது.

கூட்டத்தின் பின்னால் அந்தக் குதிரைகள் தெரிந்தன. ஒரு பல்லக்குத் தெரிந்தது.

"கொஞ்சம் இரு!" என்று அர்ச்சுனன் எழுந்தான். கீழே கிடந்த வில்லை எடுத்தான். விண் விண் என்று இரண்டு அம்புகளைப் பறக்க விட்டான்.

படையின் பின் பகுதியில் ஒரு சலசலப்பு.

குதிரைகள் கனைத்துத் துள்ள, பல குரல்கள் எழும்பி நிழற் கூட்டம் உடனே நின்றது.

பல்லக்கிலிருந்து ஒரு ஆஜானுபாகு கீழே குதித்தான்.

மேட்டின் உச்சியை நோக்கி, 'ஹூ இஸ் தேட்? ஃப்ரண்ட் ஆர் ஃபோ? திஸ் இஸ் இங்கிலீஷ் கன்வாய்!" என்று கத்தினான்.

அர்ச்சுனன் ஒரு கணம் திகைத்தான். அந்தக் குரல் அவனுக்குப் பழகியது போல் இருந்தது.

கீழே கூர்ந்து பார்த்தான்.

பிறகு வாயில் இரு கைகளைக் குவித்து, "ட்ரேக் ராஜர்" என்று கத்தினான்.

குரல் பாறை முகடுகளில் மோதி எதிரொலித்தது. "ட்ரேக் ராஜர்."

"யார் நீ?" ராஜர் தனது பல் படாத தமிழில் கத்தினான்.

''அர்ச்சுனன்'' என்று கத்தினான் அர்ச்சுனன்.

ஒரு கணம் கீழே திகைப்பு.

பிறகு, ''அர்ச்சுனா, கம் ஆன் மை ஃபரண்ட்'' என்று கத்தினான் ராஜர்.

அர்ச்சுனனும் கிருஷ்ணசந்திரனும் புறப்பட்டார்கள். உச்சியிலிருந்து கணவாய்ப் பக்கம் இறங்க வசதியான பாதை இல்லை. இருவரும் தட்டுத் தடவி, பாறைகளில் பிடித்து, கைகளிலும், உடம்பிலும் சிராய்த்துக் கொண்டு கடைசியில் கீழே வந்து நின்றார்கள்.

ராஜர் ஓடி வந்தான்.

''அர்ச்சுன்! அர்ச்சுன்!'' என்று சொல்ல இருவர் கைகளும் ஒன்று சேர்ந்தன.

''ராஜர்! இது என்ன ராத்திரிப் பயணம்?''

''ரகசியப் பயணம்!''

''உன்னிடம் என்ன இருக்கிறது?''

''உணவு, யுத்த தளவாடம்!''

''எங்கே போகிறது?''

''வேலூர்க் கோட்டைக்கு.''

''யார் கட்சிக்குப் போகிறது?''

சிரித்தான் ராஜர். ''அர்ச்சுனா! நீ சொல்லு யார் கட்சிக்குப் போகணும் என்று!'' என்றான்.

''நீ முதலில் சொல்லு. யாருக்காக இதைக் கொண்டு போகிறாய்?''

ராஜர் உடனே மறுமொழி கூறவில்லை. அதற்குள் குதிரையிலிருந்து இறங்கி வரும் ஓர் உருவத்தின் மீது அர்ச்சுனனின் கண் விழுந்தது.

எச்சரிக்கையுடன் திரும்பியது.

* * * * *

சாதாரண விஜயநகர வீரன் வெகு சல்லிசான ஆடை தரித்துக் கையில் வாளும் ஈட்டியுமே ஆயுதமாக வைத்திருந்தான். ரத்தக்கறை தெரியாமல் இருப்பதற்கு அவர்களில் பலர் கருஞ்சிவப்பு நிறத்தில் அரை ஆடை அணிந்திருந்தார்கள்.

– பயஸ்

## 33

டிரேக் ராஜர் அருகில் வந்தவர் பிரான்ஸிஸ் டே!

அர்ச்சுனனை அடையாளம் கண்டு, ''இங்கே என்ன மோசடி பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று உரிமையோடு கேட்டு நகைத்தான்.

அவன் குதிரை திரும்பிப் பார்த்தது.

''நீங்கள் எங்கே இப்படி?'' என்றான் அர்ச்சுனன்.

''கலக்கமான தண்ணீரில் தூண்டில் போடுவது எங்களது பழமொழி. தொழில்கூட'' என்றார் டே.

''யாருக்குத் தூண்டில் போடுகிறீர்கள்?'' என்றான் அர்ச்சுனன்.

''அதை உங்களிடம் கேட்டால்கூடச் சரிதான். இப்போது யார் கட்சியை நாங்கள் ஆதரிப்பது? திம்மராஜாவையா, வேங்கடராஜாவையா?''

''நீங்கள் என்ன தீர்மானத்துடன் வந்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்'' என்றான் அர்ச்சுனன்.

''அதில்தான் எங்கள் இரண்டு பேருக்கும் சண்டை. ராஜர் வேங்கட ராஜாவை ஆதரிக்க வேண்டும் என்கிறான். நான் திம்மராஜாவை ஆதரிக்க வேண்டும் என்கிறேன். நாங்கள் ஒன்றும் படை பலம் எதுவும் கொண்டு வரவில்லை. தளவாடங்களும் உணவும் கொண்டு வந்திருக்கறோம். நீங்கள் சொல்லுங்கள். இப்போது திம்மராஜாவின் கைதானே ஓங்கி இருக்கிறது!''

அர்ச்சுனன் தயங்கினான்.

''இங்குள்ள படைகளைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.''

''அப்போது திம்மராஜா பக்கம் சாய வேண்டியதுதானே?''

''சாயலாம். அது தருமம் ஆகாது.''

சிரித்தார் டே. ''அரசாங்க விஷயத்தில் தர்மம் எதுவும் பார்க்க முடியாது.''

''நீங்கள் சொல்வது சரி. ஆனால் பொது ஜனங்கள் தர்மத்தின் பக்கம்தான் இருப்பார்கள்.''

டே நெற்றியைச் சுருக்கினார். அது ஒரு அர்த்தமுள்ள வாதமாகத் தோன்றியது.

''அர்ச்சுனா! பட்டத்துச் சண்டைகள் இத்தனை நடந்த பிறகு கூட ஜனங்கள் அரசாங்கத்தை நினைக்கிறார்களா, என்ன?''

''ஏன் நினைக்க மாட்டார்கள்? இங்கே அரசருக்குத் தெய்வத்துக்கு நிகரான மதிப்பும் மரியாதையும் உண்டு. பரம்பரை விஜயநகரின் உண்மை ராஜாதான் வேங்கடராஜா! நாளை அவரைத் தள்ளிவிட்டு வேறு யாராவது வந்தால் மக்கள் அதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.''

''அதைத்தான் நானும் சொன்னேன் அர்ச்சுனன்!'' என்று ராஜர் இடையில் புகுந்தான். ''இந்த நாட்டின் சமுதாய எண்ணமே வேறு! தர்மத்தில் நடப்பதைத்தான் ஏற்றுக் கொள்வார்கள்.''

''சரி, ராஜர்! நான் வேங்கட ராஜாவுக்கு உதவத் தயார். ஆனால் நாளை அவர் தோற்றுவிட்டால். . . இப்போது பலவீனமாகத்தானே இருக்கிறார்?''



அர்ச்சுனன் குறுக்கே புகுந்தான். ''நீங்கள் உதவி செய்ய வந்ததன் நோக்கம் என்ன? என்ன காரணம் கொண்டு உதவி செய்ய முன் வந்திருக்கிறீர்கள்?''

''இது தெரியாதா? இங்கே எங்களுக்கு இசைவான ஒரு ராஜ்யம் ஸ்தாபிதமானால் நாங்கள் நிறையச் சலுகைகள் பெறுவோம். போர்ச்சுக்கீஸியர்களும், டச்சுக்காரர்களும் எங்களுக்கு ரொம்பத் தொல்லை தருகிறார்கள். அவர்களை விரட்டி அடிப்போம்.''

''பிரமாத திட்டம் போட்டு வேலை செய்கிறீர்கள், டே!'' என்றான் அர்ச்சுனன்.

''வெறும் ராஜதந்திரம்!''

''சரி, டே! இப்போது தர்மத்தின் பக்கம் திரும்பினால்தான் எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கும். திம்மராஜா பட்டத்துக்கு வருகிறார் என்று வையுங்கள். மீண்டும் நாட்டில் கலகம்தான்! அமைதி ஏற்படவே படாது. அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

டே யோசித்தான். இந்தக் காரணம் அவனுக்கு வலுவாகத் தோன்றியது. அதை டே முதலில் ஆலோசிக்கவில்லை. யார் வந்தாலும் ராஜா என்று சொல்லிவிட முடியாது. அப்படி ஒரு பொம்மை ராஜா வந்தபோது நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்புகளை அவர் கேள்விப்பட்டிருக்கிறார்.

இப்போது யாராவது ராஜாவுக்கு உதவி செய்வதை விடத் தர்மத்துக்கு உதவி செய்வது மேல்!

அரச்சுனன் சொல் பிரகாரம், இந்திய மக்கள் தர்மத்தை அதிகம் விரும்புபவர்கள்.

அந்த தர்மத்தை ஆங்கிலேயர்களும் கடைப்பிடித்தால் கீர்த்தி நிச்சயம் ஏற்படும்.

''ராஜர்'' என்று அவன் பக்கம் திரும்பினான் பிரான்ஸிஸ் டே! ''உனக்கு வெற்றி! நாம் வேங்கடராஜா பக்கம் சேருகிறோம்'' என்றான்.

அந்த விநியோகப் படை உடனே தண்டு இறக்கப் பட்டது.

நால்வரும் ஆலோசனையில் இறங்கினார்கள். இரண்டு துருத்திய பாறைகளில் ஏறி மேலே விஸ்தாரமான வட்டப் பாறையில் அமர்ந்தார்கள்.

கிருஷ்ண சந்திரன் தன் கணிப்புகளைக் கூறினான்.

அர்ச்சுனன் தனது இரண்டாயிரம் படையின் சாத்தியக் கூறுகளைக் கூறினான்.

பிரான்ஸிஸ் டே தாம் கொண்டு வந்திருக்கும் இருநூறு பேர் விநியோகப் படை உண்மையில் மிகவும் பயிற்சி பெற்ற இந்தியப் படை, இது தவிர அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீக்கணைகளும், தீக்குடுவைகளும், துப்பாக்கிகளும் பலம் வாய்ந்தவை என்று கூறினான்.

அர்ச்சுனன் கோட்டைக்குள் இருக்கும் நிலை மைகளைக் கூறினான்.

எல்லாரும் ஒரு நாழிகை நேரம் பேசிய பிறகு சிறிது இளைப்பாற வேண்டிப் படுத்துக் கொண்டார்கள்.

அதிகாலையில் கடைசி ஜாமத்தில் எழுந்து புறப்படுவதற்கு முன், பெருத்த ஓசைகள் அவர்களைத் திகைக்க வைத்தது.

கோட்டைப் பக்கத்தில் ஏதோ நிகழ்ந்து கொண்டிருந்தது. பெரிய தீவர்த்தி ஊர்வலம் நட்சத்திர ஊர்வலம் போல் தெரிந்தது.



அவைகளிலிருந்து எழும் எண்ணெய்ப் புகை இவ்வளவு தூரம் சிறிது சிறிதே வந்தது.

பிரான்ஸிஸ் டே பைனாகுலரை எடுத்தார். அவருக்குக் கண் பற்றாததால் அர்ச்சுனனிடம் கொடுக்க, அவன் அதன் வழியே பார்த்து, ''ஐயோ, கோட்டைக்குள் படைகள் நுழைகின்றன. வடக்கு வாசலோ, மேற்கு வாசலோ திறந்திருக்கிறது!'' என்று படபடப்புடன் கூறினான்.

டே உடனே ராஜர் பக்கம் திரும்பினார்.

''ராஜர்! என்ன செய்யலாம்'' என்றான்.

''பின்னால் தாக்க வேண்டியதுதான்!'' என்றான் ராஜர்.

''தாக்கினால்?''

''உள்ளே போகிறவர்கள் திரும்புவர்.''

''எல்லோரும் திரும்பினால் நம் படை போதாது!''

''ஒரு கோட்டை வாசல் வழியாகப் பெரும் படை திரும்பி வருவது கடினம்! முதலில் பின்னால் தாக்கப் பட்ட செய்தி முன்னணிக்குப் போவதற்குள் நாம் நிறையக் காரியம் நடத்தலாம்.''

''என்ன சொல்கிறீர்கள் அர்ச்சுனா?''

''புறப்பட வேண்டியதுதான்!''

சீக்கிரம் படைகள் சித்தமாக்கப்பட்டுக் கோட்டை நோக்கி விரைந்தன.

கிழக்கே சிவந்த ரேகைகள் மெல்லியதாக அரும்பும்போது, படைகள் கோட்டைப் பக்கம் நெருங்கி விட்டன.

அவர்கள் எதிர்பார்த்தது போல் வடக்குக் கோட்டை வாசல் திறந்திருந்தது.

அதன் வழியாகக் கோலாகலமாக 'ஜே' போட்டுக் கொண்டு திம்மராஜா படைகள் நுழைந்து கொண்டிருந்தன.

ஒரு புற்றுக்குள் பெரிய பாம்பு நுழைவது போன்று இருந்தது அந்தக் காட்சி.

ராஜரும் அர்ச்சுனனும் குதிரைகளை முன்னால் கடு வேகத்தில் செலுத்தி முன்னோட்டம் பார்த்தார்கள்.

திம்மராஜா படைகள் குதூகலத்தில் இருந்ததில் பின்னால் வேவு பார்க்கும் இந்தக் குதிரை வீரர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை.

''ராஜர்!'' என்று கத்தினான் அர்ச்சுனன்.

இருவரும் குதிரைகளை நிறுத்தினார்கள்.

''அதோ பார்!''

கிழக்குக் கோட்டை வாயிலின் முன் ஒரு படையும் அதன் நடுவே பட்டத்து யானையும் இருந்தது.

திம்மராஜாவின் நீலக் கொடி பட்டத்து யானை மீது பறந்தது.

''திம்மராஜா அதோ கிழக்குக் கோட்டை வாசல் முன்னால் நிற்கிறார். உள்ளே போன அவர் படைகள் அந்தக் கிழக்கு வாசலைத் திறந்து அவரைக் கோலாகலமாக உள்ளே அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருக்க வேண்டும். இதுதான் தருணம். நம் படைகளுக்குச் சைகை காட்டு!'' என்றான் அர்ச்சுனன்.

ராஜர் திரும்பினான்.

கையைத் தூக்கிச் சமிக்ஞை செய்தான்.

பிரான்ஸிஸ் டே தூரத்திலிருந்து பதில் சைகை செய்தான்.



அடுத்த கணம் அவனது படை ஒரு பிரம்மாண்டமான அம்பு விரைவிட்டு வருவது போல் பீறியடுத்து வந்தது.

குதிரைகள் தாள வரிசையாகச் சடசடத்தன.

பயிற்சி பெற்ற இந்திய வீரர்கள் முகத்தைக் குனிந்து, பற்களை இடுக்கி, ஒரு கையால் ஆயுதத்தை உணர்ந்து கொண்டு ஒரே ஏகாக்கிரமாக இலக்கை நோக்கிப் பறந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் பின்னால் செஞ்சி நாயகரின் இரண்டாயிரம் படைகள் சற்று தளர்ந்து வந்தன.

முன் படைகள் செல்லும் அழகான பாங்கில் பொறாமை கொண்டு தாங்களும் அது போலவே ஒழுங்காகச் சீர் வரிசையில் பாய்ந்து செல்லப் பார்த்தன.

திம்மராஜாவின் மெய்க்காவல் படை என்ன நடக்கிறது என்று அறிவதற்கு முன், அதன் பிருஷ்டத்தில் சரியான உதை ஒன்று கிடைத்தது.

எல்லோரும் ஆச்சரியமுடன் திரும்பிப் பார்க்க அவர்கள் கண்களை நம்ப முடியவில்லை.

யார் படை இது. எங்கிருந்து வருகிறது. எதுவுமே அவர்களால் உணர முடியவில்லை.

திம்மராஜாவின் பிரதான சேனாதிபதி திடீரென்று ஆபத்தை உணர்ந்து பக்கத்தில் இருந்த எக்காளக்காரர்களைக் கொண்டு எச்சரிக்கை ஒலிகளை எழுப்பச் சொன்னார்.

இதற்குள் ராஜரின் படை உள்ளே வியூகம் உடைத்துப் பெரிய சேதங்களை விளைவித்த வண்ணம் முன்னேறிக் கொண்டிருந்தது.

மெய்க்காவல் படையின் இதர பகுதிகள் தம் முன் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு ஆயத்தமாகி எதிர்த் தாக்கு செய்வதற்கு முன்னால்,

அதன் பின்புறத்தில் கிருஷ்ண சந்திரன் நடத்திய செஞ்சிப் படைகள் ஆவேசமாக வந்து மோதின.

திடீரென்று இரு தாக்குதல் விழ, கலக்கமடைந்த காவல் படைக்கு நாலா திசைகளிலிருந்தும் தாக்குதல் வருவது போல் பிரமை ஏற்பட்டது.

இது அவர்களுக்குப் பெரிய விலவிலப்பைக் கொடுக்க, வாளைத் தூக்க வேண்டும் என்ற எண்ணம் கூட வலுப் பெறாமல் கீழே சோர்ந்து வீழ்ந்தது.

மெய்க் காவலின் விளிம்புகள் சிதறி எறும்புக் கூட்டம் போல் கலைந்தது.

அர்ச்சுனன் மூர்க்கமாய், கண் மூக்குப் பாராமல் முன்னேற, ராஜர் அவனுக்கு எச்சரிக்கை செய்தான். "அர்ச்சுன்! வெடிகுண்டு இருக்கிறது. நம் படையில் ஆள் சேதம் வேண்டாம். முதலில் குண்டைப் போட அனுமதி கொடு!" என்று கத்தினான்.

அர்ச்சுனன் இடம் விட, குதிரைக்காரர்கள் முன்னால் பாய்ந்து ஒரே வரிசையில் தமது நீளத் துப்பாக்கிகளை வெடித்துவிலகி நகர்ந்தார்கள். அவர்களது இடைவெளி வழியாக இரண்டாம் வரிசை குதிரைகள் முன்னால் சென்று தாமும் வரிசையாகக் குண்டுகளை வெடித்துச் சாகசமாக நின்றார்கள். அந்தக் குண்டுகள்தான் அந்தப் படைக்குக் கடைசி மரண அடி!

படை நாறுகளாகப் பிசிறு விட்டு, துரும்புகளாகப் பறந்தன.

"அர்ச்சுனா! பட்டத்து யானையைத் திருப்பறாங்க! விடாதே!" என்று ராஜர் கத்த,

அர்ச்சுனன் தனது வலது பாரிசத்திலிருந்து குதிரையைக் கிளப்பி யானையை நோக்கி வீறிட்டான்.

குறுக்கே அல்லோலமாக வந்து மோதும் குருட்டு வீரர்களைத் தவிர, வேறு எந்தவித எதிர்ப்பும் இல்லை.



அர்ச்சுனன் அவசரத்தை முன்னிட்டு, எதிரில் வருபவர்களை சாட்டியால் தள்ளிப் பீறிக் கொண்டு வழி சமைத்து முன்னால் பாய்ந்தான்.

ராஜர் இதற்குள் மறுவழியில் யானை பக்கம் வந்திட அவனது கைத்துப்பாக்கி பெரிய பின்புறங்களோடு திரும்பும் யானை மீது திரும்பியது.

பலத்த ஓசையுடன் கந்தக வெடி வெடித்து யானையின் பின் தொடையைக் காயப்படுத்த அது ஆகாயத்தைக் கிழிக்கும் குரலில் பிளிறி, முன்னும் பின்னுமாகக் கொந்தளித்தது.

மேலே அம்பாரம் 'சாமியாட்டம்' ஆட திம்மராஜா அதிலிருந்து அவசரமாக விலகினார்.

வெறுப்பும் கோபமும் கொண்டு சுற்றிப் பார்க்க, யானை அல்லாட அவர் விழாமல் இருக்கக் குனிந்து யானையின் பாசக் கயிற்றைப் பிடிக்க,

வெகு அருகில் நெருங்கியிருந்த அர்ச்சுனன் குதிரையிலிருந்து எம்பி, ஹூம் என்று ஒரு ஊங்காரமிட்டு, தனது நீண்ட சாட்டியைப் பிரமாத வேகமுடன் அவர் மார்பை நோக்கிப் பறக்க விட்டான்.

திம்மராஜா அரைக் கணம் மேல நிமிர, வாகாகத் தெரிந்த அவர் மார்பில், அதன் மெத்தைக் கவசத்தைக் கிழித்துக் கொண்டு சாட்டியின் பருமனான முனை நுழைந்தது.

வலி மின்னல் போல அடிக்க, வாயைத் திறந்தபடி திம்மராஜா யானை மேலிருந்து தரையை நோக்கி உதிர்ந்தார்.

அவரது கொடியும், அம்பாரமும் அவரோடு சேர்ந்து விழ,

அவரது மெய்க்காவல் படை கட்டுக்குலைந்து சிதறி நானா திசைகளிலும் ஓடின.

* * * * *

"யார் தப்பித்துப் போவதால் அரசுக்கும் ராஜாங்கத்திற்கும் தீங்கு வருமோ, அவரை உடனே கொன்று விடவேண்டும்."

– கிருஷ்ண தேவராயர்

## 34

திம்மராஜா கீழே விழுந்த பிறகு சீக்கிரம் கண்ணை மூடினார்.

அவரது படைகள் நாலா திசையிலும் சிதறின.

அவைகளை அர்ச்சுனனும், ராஜரும் விரட்டிச் சென்றார்கள்.

கோட்டைக்கு வெளியே தெற்குப் பாரிசத்தில் இருந்த திம்மராஜாவின் பகுதிப் படைகள் நடந்த விஷயத்தை அறிந்து கொண்டு அர்ச்சுனனிடம் சரணடைந்தன.

அவைகளின் தளபதிகளைப் பாதுகாப்பில் வைத்த அர்ச்சுனன் அரைக் கணம் கூட வீணாக்காமல் கோட்டைக்குள் புகுந்தான்.

ஏற்கனவே கோட்டைக்குள் புகுந்திருந்த திம்மராஜாவின் படைகளுக்கு வெளியே நடந்த விஷயங்கள் தெரியாது.

ஆகவே, அறியாமையில் ஆனந்தமாய் ஊரைச் சூறையாடிக் கொண்டிருந்தன.

இரு தளவாய்கள் வேலூர் அரண்மனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் நாலாபக்கமும் அல்லாடி, குழப்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

ஏற்கனவே சில வீடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்திருந்தன.



உள்ளே நுழைந்த அர்ச்சுனன் சூறையாடும் படைகளைத் தாக்க ஆரம்பித்தான்.

எதிர்பாராமல் வந்த அந்தத் தாக்கு அந்தப் படைகளை நிலைகுலையச் செய்தது.

ராஜர் படையின் துப்பாக்கிகள் படீர் படீர் என்று காற்றை உடைக்க,

எதிரிப் படையினர் அல்லோலமாயினர்.

வெடிப்புகை கந்தக நெடியுடன் எங்கும் பரவிச் சென்றது.

அந்த நெடியைக் கூட கொடிய விஷம் என்று எல்லோரும் கருதியதால் மூக்கைப் பிடித்துக் கொண்டு பேயோட்டம் ஓடினார்கள்.

உள்ளே புகுந்த அரை முகூர்த்தத்தில், எதிரிப் படைகளைக் கதிகலங்க அடித்து விட்டார்கள்.

ஆனால் ஏற்கனவே அவர்கள் விளைவித்த நாசம் மிதமிஞ்சி விட்டது.

அர்ச்சுனனின் படைத் தளபதிகள் சீக்கிரமே அங்கங்கே எதிர்த் தளபதிகளைச் சிறைப்படுத்திச் சங்கிலிகளில் பிணைத்து விட்டார்கள்.

சூறையாட முயல்பவர்களை ராஜரின் படையினர் விரட்டிச் சென்றனர்.

ராஜர் தனது மேற்கத்திய பழக்கத்தில் எல்லா நடவடிக்கைகளையும் திட்டத்தோடு செய்தான்.

ஆச்சரியமான முறையில் எதிரிகள் சீக்கிரம் அடங்கி விட்டார்கள்.

உள்ளே எழுந்த குழப்பங்கள் மட்டும் அங்கங்கே சிதறி விரைவாகத் தன் கடைசி மூச்சுக்களை விட்டுக் கொண்டிருந்தது.

அர்ச்சுனன் களைப்போடு நின்றான், ராஜர் வந்ததும், "ராஜர் சற்றுப் பொறு!" என்று சொல்லிக் குதிரை ஏறிக் கிழக்கு நோக்கிப் பறந்தான்.

சுவர்ணமுகி இருந்த மாளிகை அவனுக்குத் தெரியும். அதன் முன்னால் இறங்கி அவசரமாக அவளைத் தேடினான்.

மாளிகைக்குள் ஈ காக்கை இல்லை.

ஏமாற்றத்தோடு அர்ச்சுனன் திரும்பினான்.

ஸ்ரீரங்கன் எங்கே? சுவர்ணமுகி எங்கே?

அடுத்த பாய்ச்சல் அரண்மனையை நோக்கிப் பாய்ந்தான்.

போகிற வழியில் ராஜரை அழைத்துக் கொண்டு போக, மெய்க் காவலையும் கூட்டிக் கொண்டு அரண்மனைக்கு விரைந்தான்.

வாசலில் எதிரியின் இரண்டு தளபதிகள் ஏற்கனவே சிறைப்படுத்தப்பட்டு விலங்கோடு நின்று கொண்டிருந்தார்கள்.

அர்ச்சுனன் பளீரென்று இறங்கினான்.

"உள்ளே போனீர்களா? என்ன பார்த்தீர்கள்? என்ன செய்தீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டான்.

தளபதிகள் தொய்ந்து தலை தொங்கி நின்றார்கள். "உள்ளே யாரையும் பார்க்கவில்லை!" என்றார்கள்.

"சூறையாடினீர்களே! பொருள்கள் எங்கே?" என்று சீறினான் அர்ச்சுனன்.

"உள்ளே எதுவும் இல்லை!"

"நிஜமாகவா?" என்றான் அர்ச்சுனன் பல்லைக் கடித்துக் கொண்டு.



"ஆமாம்."

அர்ச்சுனனும் ராஜரும் பொறுமையாகத் தேடினார்கள். வியர்வையும், அலுப்பும் பொங்க, முற்றத்து நிழல் மேடை ஒன்றில் அமர்ந்தார்கள்.

"நிர்மூலமாக்கியிருக்கிறார்களே!" என்றான் ராஜர்.

"முக்காலையும் லிங்கப்ப நாயக்கர் அப்புறப்படுத்தியிருப்பார்" என்றான் அர்ச்சுனன்.

"யம காதகர்!"

"ஆமாம். எல்லாம் ஆலோசனைகளோடு செய்வார். அவருக்கு மட்டும் பாதிப்பு வந்துவிடக் கூடாது. அது இல்லாதவரை யாருக்கும் என்ன உதவியும் பண்ணுவார்."

"இப்போது எங்கே போயிருப்பார்?"

"அதுதான் தெரியவில்லை."

"வேங்கடராஜா எங்கே?"

"அவரையும் காணவில்லை. அதுதான் கவலை. தப்பித்திருப்பார்கள்."

"துர்ப்பாக்கியம்! அவர்கள் கட்சிதான் வெற்றி பெற்றிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆண்கள்தான் மறைந்தார்கள். பெண்கள்?" என்று திரும்பினான் ராஜர்.

"அதுதான் என் முக்கிய கவலை" என்றான் அர்ச்சுனன், "முக்கியமாக சுவர்ணமுகி யார் கையிலாவது சிக்கிவிடக் கூடாது! சிக்கினால் ஆபத்து!"

"கோட்டைக்குள்தான் இருந்தாளா?"

"ஆமாம், ராஜர்! இந்த அரண்மனையில் எங்கேயாவது சுரங்கம் இருக்க வேண்டும். லிங்கமா நிச்சயம் இந்த ஏற்பாடு செய்திருப்பார். இல்லாவிட்டால்

அரண்மனைப் பெண்கள் அத்தனை பேரும் எளிதில் வெளியேறி இருக்க முடியாது.''

''எனக்கும் அதுதான் யோசனை. தேடலாமா?''

''தேடலாம். அதற்குள் வேலை நிறைய இருக்கிறதே! நம் படைகளைச் சீரமைக்க வேண்டுமே! வெளியில் குழப்பமான அமைதி நிலவுகிறது?''

''ஆமாம்! அது முக்கியம். முதலில் அதைச் செய்வோம். கோட்டையை மூடுவோம். வேங்கடராஜா ஜெயித்தார் என்று முரசு அடிப்போம். சூறையாடப்பட்ட பொருள்கள் எல்லாம் அரண்மனை வாசலுக்கு வரவேண்டும். இல்லாவிட்டால் தண்டனை என்று அறிவிப்போம். வீடுகளில் சென்று சோதனை செய்வாம்.

இருவரும் புறப்பட்டார்கள்.

இரவில் அந்த கொங்கு மரக் காட்டில் சிறிதாக நெருப்பு மூட்டி அதில் நான்கு பேர் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

''அப்பா அப்பா! ஷன்னால் முடியலையே!'' என்று முண்டாசு மனிதர் புலம்பிக் கொண்டிருந்தார்.

அவர் உடம்பைப் பற்றி அணைத்து இரு தலைப் பாகைக்காரர்கள் உட்கார்ந்திருந்தனர்.

தாமர்ல வேங்கடப்பன் ஒருவர்.

வேங்கடராஜாவின் வலது கை போன்று விளங்குபவர். பூவிருந்தவல்லிச் சீமைக்கு அதிகாரி.

பக்கத்தில் இருந்தவர் வேங்கடப்பரின் சகோதரரான தாமர்ல அய்யப்பன்.

இருவரும் ஆசுவாச வார்த்தைகள் கூறிக் கொண்டிருக்க, கீழே முண்டாசுத் தலையுடன் புலம்பிக் கொண்டிருந்தவர் வேங்கடராஜா.



''வேங்கடப்பா! நான் இன்னும் ஏன் உயிர் வாழ வேண்டும்? ராஜ்யம் இப்படி சீரழிஞ்சு போயிற்றே! இந்த ஸ்ரீரங்கன் இப்படி மாறுவானா பார்த்தியா?'' என்றார் அவர்.

''எனக்கே ஆச்சரியம்!'' என்றான் தாமர்ல அய்யப்பன்.

''அவனைப் பாதுகாப்பில் வைத்தது தவறு. அவன் ஓர் உணர்ச்சிக்காரன்'' என்றான் தாமர்ல வேங்கடப்பர்.

''ஏன் என்ன தவறு? வெளியில் விட்டு வைத்திருந்தால் அவன் என்ன செய்திருப்பான் தெரியுமா? மகாராஜாவையே கொன்றிருப்பான். அவனுக்குச் சிங்காதனத்தின் மீது ஆசை! உங்களுக்குத் தெரியாது'' என்றார் வேலூர் லிங்கம நாயகர்.

தாமர்ல வேங்கடப்ப நாயகர் உடனே திரும்பினார்.

''அவன் சின்னவன். ராஜ்ய விசுவாசம் நிறைய இருந்தது. நீங்கள் அவனைச் சந்தேகித்தது தவறு'' என்றார்.

''நீங்கள் சும்மா இருங்கள். ஆபத்து காலங்களில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்று சீறினார் லிங்கமர்.

''உண்மைதான்! ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இவன் ஒரு சின்னஞ்சிறுவன். இவனால் நமக்கு எதுவும் நேர்ந்திருக்காது. இப்போது பாருங்கள்! அவன் நமக்கு விரோதியாகப் போய்விட்டான்.''

''வேங்கடப்பர் என் மீது அனாவசியமாக பழி சுமத்த வேண்டாம். நான் செய்ததெல்லாம் மகாராஜாவின் நன்மைக்காகச் செய்தது. அதை நம்பினால் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள். சின்னவன் என்று வேங்கடப்பர் சொல்லுகிறாரே! சின்னவனாகவா அவன்

நடந்து கொண்டான்? பாதுகாப்பிலிருந்து மீறி வந்து, மகாராஜாவின் முன் அந்த இரவில் உறுவிய வாளுடன் நின்று மிரட்டினானே, அது ஒரு சின்னவன் செய்கையா?''

தாமர்ல வேங்கடப்பர் மௌனம் சாதித்தார். ஒரு சந்தர்ப்பத்தை மோசமாக்க அவர் விரும்பவில்லை.

லிங்கமர் அடங்குவதாக இல்லை.

''மகாராஜா முன்னால் அந்த ராத்திரியில் என்ன கத்து கத்தினான்? 'பெரியப்பா நீருமா இந்த லிங்கமருக்கு உடந்தை? என்னையா இப்படிப் பாதுகாப்பில் வைப்பது? உம்மை விசுவாசத்தோடு நினைத்ததற்கு இதுதான் கைம்மாறா? பெரியப்பா! இதோ சபதம்! இனி நான் தங்களுக்கு விரோதி. லிங்கமருக்கு விரோதி! இந்த ராஜ்யத்தை நானே அபகரித்துக் கொள்கிறேன் பாருங்கள் என்று சீறிச் சீறி விழுந்தானே அவனா சிறுவன்? வேங்கடப்பர் தீர யோசித்துச் சொல்லட்டுமே!'' என்றார் அவர்.

வேங்கடராஜா சற்று இருமினார்.

''இப்போது எங்கள் நகரம் எதிரி வசம் போயிருக்கும். என் மக்கள் என்னைத் திட்டுவார்கள்'' என்றார் லிங்கமர் மீண்டும் ஆத்திரமுடன்.

''ஏன்? எங்கள் கதி மட்டும் என்ன வாழ்கிறதாம்? மகாராஜா இருந்தால்தான் எங்கள் சீமை எங்களுக்குச் சொந்தம். இல்லாவிட்டால் நாங்களும் நாடோடிகள்தான்!'' என்றார் தாமர்ல வேங்கடப்பன்.

வேங்கடராஜா மெல்ல எழுந்தார்.

''என்னால் உங்கள் அனைவருக்கும் துன்பம் ஏற்பட்டு விட்டது. என் ஆபத்து காலத்தில் நீங்கள் என்னோடு ஒட்டியிருந்து உதவியதை நான் மறக்க மாட்டேன்!



இப்போது என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை செய்யுங்கள்! எதிரிகள் நம்மைத் தேடி வருவார்களா?''

''வரலாம். நாம் வந்த சுரங்கப்பாதை வேறு யாருக்காவது தெரியுமா?'' என்றார் தாமர்ல.

''யாருக்கும் தெரியாது. தவிர, நான் வரும்போது தூக்குமத்தை இழுத்து மூடி விட்டேன். யாரும் திறக்க முடியாது'' என்றார் லிங்கமர்.

''நாளை எப்படியும் இந்த இடம் தேடி எதிரிகள் வருவார்கள்'' என்றார் தாமர்ல.

''அதற்குள் எங்கேயாவது போக வேண்டும்!'' என்றார் லிங்கமர்.

''செஞ்சிக்குப் போகலாம்'' என்றார் தாமர்ல.

''அங்கேயும் திம்மராஜா வந்தால். . .''

''அவ்வளவு தூரம் வர மாட்டார். . .''

''என்ன அநியாயம்?'' என்றார் வேங்கடராஜா! ''விஜயநகரத்தை விட்டு, ஆனகொந்தி அங்கிருந்து சந்திரகிரி, அங்கிருந்து வேலூர், இப்போது செஞ்சியா? இப்படியே போனால் தெற்கே கடலில் போய் விழ வேண்டியதுதான்.'' என்று வேதனைப்பட்டார். ''விஜய நகர ராஜ்யத்தின் கதி இப்படி ஆகி விட்டதே!''

எல்லோரும் தீவிரமாக யோசித்தார்கள்.

தெற்கே செஞ்சிக்கு அவசரமாகப் புறப்படுவது என்று தீர்மானித்தார்கள்.

சற்று எட்டத்தில் அரச குடும்பங்களின் பெண்டிர் கூட்டம் ஒதுங்கி இருந்தது.

அவர்களுக்கு முன் அறிவுப்புக் கொடுத்து விட்டு, எல்லோரும் ஒரு நாழிகைக்குப் பிறகு புறப்பட்டார்கள்.

அவசரமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட பல்லக்குகளில் ராஜ பெண்டிர் பயணம் செய்தனர்.

அதில் மூன்றாவது பல்லக்கில் உட்கார்ந்திருந்த சுவர்ணமுகி ஈரம் நிறைந்த கண்களோடு வெளி உலகைப் பார்த்தாள்.

நேற்று இரவு வேலூர்க் கோட்டையில் நடந்ததெல்லாம் பயங்கரமானவை.

இரவுக்கிரவே கடைசி ஜாமத்தில் புறப்பட்டு, சுரங்கத்தின் புழுக்கமும், நெரிசலும் நிரம்பிய பாதையில் அடி அடியாக நகர்ந்து, வெளியே வனாந்தரம் ஒன்றில் கடைசியாக வெளிவந்தபோது ஏதோ நரகம் வெளியே புகுந்து வந்ததுபோல் இருந்தது.

இப்போது இந்தப் பல்லக்கில் ஆடி ஆடிப் போகும்போது தனது வருங்காலத்தைப் பற்றி பயமும், திகிலும், பரிதவிப்பும் இருக்கிறதே, அது அந்தச் சுரங்கத்தில் ஊர்ந்தபோது, ஏற்பட்ட உணர்வுகளை விட மிகவும் கொடியதாக இருந்தது.

பகல் முழுவதும் வனாந்தரத்தில் தங்கிவிட்டு இரவின் நடு சாமத்தில் புறப்பட்டிருந்தார்கள்.

தீவர்த்தியின் நடுங்கும் வெளிச்சத்தில் பல்லக்குகள் விசித்திரப் பிராணிகள் போல் நடையிட்டுச் சென்றன.

வெளியே இருட்டு பிரளய காலக் கறுமையில் இருந்தது.

மேலே நட்சத்திரங்கள் தெரியவில்லை.

மனத்திலும் இருள் ஊழி சொரூபமாகத் தெரிய,

வாய் திறந்து புலம்பியவாறு, "வீரரே!" என்று அழைத்தாள். கண்ணீராக உகுத்தாள்.



மந்திரிசபையில் ஏதாவது ஒரு மந்திரி அரசருக்கு எதிராக எதிர்க் கருத்தை தெரிவித்தால் அதன்பின்னால் என்ன நோக்கம் இருக்கிறது என்பதை அரசர் ஆராய வேண்டும்.

– ஆமுக்தமால் யதா

## 35

சுவர்ணமுகி அந்தக் குதிரை வீரனை நினைத்துக் கொண்டு பிரயாணம் செய்தாள்.

அந்தப்புரவாசிகள் எல்லோரும் ஆறு பல்லக்கில் நெருக்கி அடித்துச் சென்றார்கள்.

முன்னிரவுகளிலும், பின்னிரவுகளிலும் மட்டும் பயணம் செய்தார்கள். பிரதானமான பாட்டைகளை விட்டு, சுற்று வழியான சிறு சிறு சாலைகளில் அவர்கள் கவனமாகச் சென்றார்கள்.

எங்கேயாவது தண்டு இறங்கும்போது சுவர்ணமுகிக்கு ஓடிவிடலாம் என்று தோன்றும். அல்லது உயிரை மாய்த்துக் கொள்ளலாமா?

வளப்புத் தந்தை ரங்கப்பா சொன்னதை அப்போது நினைவு கூர்வாள். "எந்தக் காரணத்தைக் கொண்டும் உயிரை மாய்க்காதே! வம்சம் தழைக்க வேண்டும்!"

சொந்தத் தந்தை இம்மாடி ஸ்ரீரங்க மகாராஜாவைப் பார்க்கா விட்டாலும், அவர் சொன்ன வார்த்தைகளைப் பத்திரமாக யாரோ ஏட்டில் எழுதி அவளது வளர்ப்புத் தந்தையிடம் கொடுத்திருந்தார்கள்.

"என் இரு குழந்தைகளையும் எனது வம்சம் எப்படியாவது தளிர்க்க வேண்டும் என்பதற்காக எவ்வளவோ ஆபத்து இருந்தும் தப்பிக்க வைத்து வெளியே அனுப்புகிறேன். ராஜ்யத்தை அனுபவிக்க

விடாமல் பாபிகள் என்னைச் சிறை வைத்து விட்டார்கள். எப்படியும் என் சந்ததியார் இந்த ராஜ்யத்தை அடைய வேண்டும் என்பதற்காக என் குழந்தைகளை வெளியே தப்பிக்க வைக்கிறேன். அவர்கள் பொறுப்பாக வளர்ந்து இந்த ராஜ்யத்தை அடைவதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

ஆமாம், தந்தைதான் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அவளுடன் தப்பித்த அண்ணன் ராமதேவன் பல இன்னல்களிடையே ராஜ்யத்தை அடைந்து சிறிது காலம் பரிபாலனம் பண்ணினான். ஆனால் அவன் சந்ததி இல்லாமல் இளவயதில் இறந்து போக, சற்றுத் தூரத்து உறவினரான இந்த வேங்கடராஜாவுக்கு ராஜ்யம் போயிருக்கிறது. இவரிடமிருந்து ராஜ்யம் சுவர்ணமுகிக்கோ, அவளது சந்ததியாருக்கோ வந்தால் மீண்டும் பழைய பரம்பரை வம்சாவளிக்கு ராஜ்ய பரிபாலனம் வந்துவிடும்.

இவ்விதமெல்லாம் தீர்க்கமான யோசனை பண்ண, தற்கொலை என்ற எண்ணம் தப்பிதமானது என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

ஆனால் வந்திருக்கும் கஷ்டங்களையும் சங்கடங்களையும் நினைத்தால், வாழ்க்கையை விட வாழாமை இன்பமாக இருக்கும் போல் இருக்கிறதே!

வருத்தமுடன் நினைவுகள் வர, மனம் சோர்ந்து கண்ணீர் அடிக்கடி துளும்பியது. சிறிது நேரம் கசிந்து கண்ணீர் உகுந்த பிறகு, மனம் கொஞ்சம் தெளிவு பெற்றது. அப்போது.

"அப்பா, எனக்கு அடிக்கடி சோர்வு வந்து அயர்கிறேன். எனினும் தாங்கள் விரும்பியதை மறக்க மாட்டேன்! அதையே லட்சியமாக வைத்திருக்க எனக்குப் பலம் கொடு'' என்று பிரார்த்தனை புரிந்தாள்.



ராஜகோஷ்டி ஆறுமுக புரத்தில் தங்கியிருக்கும் போது, செய்தி வந்தது.

செய்தியைக் கொண்டு வந்த அதிகாரிகள் அந்தக் கோஷ்டியைக் கண்டு பிடிக்க மார்க்கமில்லாமல் அலைந்து,

கடைசியில் அதிர்ஷ்டவசமாக ஒரு கோவில் பூசாரி கொடுத்த செய்தி பேரில் ஆறுமுக புரத்துக்கு வந்து கண்டுபிடித்து விட்டார்கள்.

திம்மராஜா கொல்லப்பட்டதையும், அவரது படைகள் முறியடிக்கப்பட்டதையும் அறிந்த வேங்கடராஜா மிகவும் சந்தோஷப்பட்டார்.

செய்தியைக் கொண்டுவந்த அதிகாரிகளுக்கு இரண்டு வைர ஆபரணங்களையும் பட்டு வஸ்திரங்களையும் பரிசிலாக அளித்தார்.

லிங்கம நாயகர் செய்தியை நம்ப முடியாமல் தத்தளித்தார். செஞ்சி கிருஷ்ணப்ப நாயகர் இரண்டாயிரம் படையை உதவினார் என்பதை நம்பவில்லை. அதுவும் அந்தப் படைகள் திம்மராஜாவின் ஐம்பதாயிரப்படைகளை வென்றது என்று சொன்னால் யார் நம்புவார்கள்? ஒரு இரண்டாயிரத்தை வைத்துத் தீரங்கள் செய்தால் அதன் தளபதி யார்? எப்படி இந்த அதிசயத்தைச் செய்தார்கள்.?

வேலூர் இனி அதோகதி என்று நினைத்திருந்தார். முற்றுகையின் கடைசி நாள் இரவு ஜனங்கள் அடங்காப் பிடாரிகளாகப் போய்விட்டார்கள். ராஜாவையும் மதிக்கவில்லை. ராஜ சைன்யத்தையும் மதிக்கவில்லை.

தாங்களே கோட்டைக் கதவைத் திறக்கச் சித்தமானார்கள். இதைப் போன்ற எழுச்சியை அவர் எந்தக் காலமும் பார்த்ததில்லை. இப்படி கோட்டையின் உட்பக்கம் தாறுமாறாக இருக்க, நிச்சயம் வேலூர்க் கோட்டை அழிந்தது என்று நம்பினார்.

இப்போது எல்லாம் தலைகீழாக நடந்திருக் கின்றனவே!

எல்லோரும் சேர்ந்து இனி நடக்க வேண்டிய வைகளைப் பேசியபோது, லிங்கமர், "இனியும் மகாராஜா வேலூரில்தான் இருக்க வேண்டும்" என்றார்.

"இல்லை! சந்திரகிரிக்குப் போவதுதான் சரி" என்று தாமர்ல சகோதரர்கள் கூறினார்கள்.

வேங்கட மகாராஜாவும் ஒத்துக் கொள்ள, ராஜ கோஷ்டி முன்பு போல் ஒளிந்து செல்லாமல் வெகு விமரிசையுடன் ராஜ பாட்டையில் செல்ல ஆரம்பித்தது.

சந்திரகிரி!

அநேகமாக மக்களாலும் மன்னராலும் கைவிடப்பட் டிருந்த அந்த மலை நகரம் தனது சோபையைப் பல மாதங்களாக இழந்திருந்தது.

ஏற்கனவே வருஷக்கணக்கான பஞ்சத்தில் பாதி, சுபிட்சத்தை இழந்திருந்தது.

இப்போது அதைப் பார்ப்பதற்கு நெடுநாள் படுத்திருந்த நோயாளி போல் சோகை பிடித்து வெளிறித் தெரிந்தது.

வேங்கட மகாராஜா அந்த நகரில் நுழைந்த போது, பூமி பூஜையும், கோட்டை தேவதை பூஜையும் செய்தார்.



உள்ளே நெளிந்த பாதையில் சென்று காளி கோவிலில் கும்பிட்டார். பிறகு வீதிகளில் போனபோது கண்ணீர் பெருகியது.

வீதிகள் களையிழந்து கிடந்தன.

மனிதர்களே துர்லபமாகத் தென்பட்ட தரையில் புழுதியும் செத்தையும் குவிந்து கிடந்தன.

அரண்மனை சென்று நேராக உப்பரிகை மாடத்திற்குச் சென்று, நேராகத் திருப்பதி மலையை நோக்கினார்.

சந்திரகிரி காட்டுக்கும் பள்ளத்தாக்குக்கும் அப்பால் அந்த ஏழு மலைகள் நீல நிறமாய்த் தெரிய,

நேர் எதிரே இருந்த மலைச் சிகரத்தில் அவர்கள் முன்னோர்கள் கட்டிய கண்டா மண்டபம் தெரிந்தது.

திருப்பதிப் பெருமாள் உணவு அருந்தி விட்டார் என்பதைக் கோயில் பெரிய மணி கண்டா மண்டபத்துக்கு அறிவிக்க,

மண்டபத்தில் இருக்கும் பெரிய வெண்கல மணியை அடிப்பதன் மூலம் அந்தச் செய்தியை ஊழியர்கள் சந்திரகிரிக்கு அனுப்பினார்கள்.

அன்று அவர் வந்து நிற்பதற்கும் காலை நைவேத்தியம் முடிந்து மணி ஓசை கேட்பதற்கும் சரியாக இருந்தது.

அதையே சுபசூசகமாக எடுத்துக் கொண்டார் அவர்.

ஒரு வாரம் வரை அரண்மனையிலும் நகரத்திலும் சீரமைப்பு வேலை நடந்தது.

மழையும் பெய்து, ராஜ்ய எதிரிகளும் ஒழிந்து விட்டபடியால், மக்கள் சின்னச் சின்னக் கூட்டங்களாகச் சந்திரகிரிக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வெள்ளிக் கிழமை வேங்கடராஜாவுக்கு புனர் மகுடாபிஷேகமும், சிங்காதனச் சாந்தியும் நடைபெற்றன.

மகாராஜா தமது தளவாய்களையும் தளபதிகளையும் வரவேற்று பரிசில்கள் வழங்கினார்.

அநேக குறுமன்னர்கள் வந்திருந்தார்கள்.

அர்ச்சுன தேவனை அழைத்து, அவனது வீரத்தைப் பாராட்டி, நாராயணவனச் சீமையை அவனுக்குப் பரிசிலாக அளித்தபோது, சபையில் எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள்.

அர்ச்சுனத் தேவனுக்கு மகுடமும், வீரவாளும், மார்பு ஆரமும் வெண்பட்டு அங்கியும் கொடுத்துக் கௌரவித்தார் மன்னர்.

இவற்றைத் தரித்து அர்ச்சுனன் திரும்பி வரும்போது அசல் ஒரு ராஜாவைப் போலவே காட்சி தந்தான்.

பாடல், ஆடல் கேளிக்கைகளுடன் சீக்கிரம் சபை கலைந்தது.

மாலையில் தன் மாளிகைக்குத் திரும்பிய அர்ச்சுனனுக்கு இன்பமும் துன்பமும் கலந்திருந்தது.

ஒரு சீமைக்கு அதிபதியாக அவன் மாறுகிறான்.

இது அவனது அன்னைக்குத் தெரிந்தால் பெரிதும் சந்தோஷப்படுவாள். போய்விட்டு வரவேண்டும்.

அதற்கு முன் இன்னொரு முக்கிய வேலை!

ஆரம்கானுக்குப் போக வேண்டும். அது ஆங்கிலேயரால் தோற்றிவிக்கப்பட்ட சின்ன வர்த்தக நகரம். ஆறுமுகம் என்பவரிடமிருந்து அந்த இடத்தை வாங்கியதால் அந்தப் பெயரை உச்சரிக்கத் தெரியாமல் ஆரம்கான் என்றார்கள்.



அங்கே பிரான்ஸிஸ் டேயும், ட்ரேக் ராஜரும் இருந்தார்கள். அவர்களிடம் போய் நன்றியைச் சொல்ல வேண்டும்.

எத்தகைய பண்பாடு அவர்களுக்கு! யுத்தத்தில் வெற்றி பெற்றோம் என்று தெரிந்தவுடன் அர்ச்சுனனிடம் படையையும், பொறுப்பையும் கொடுத்துவிட்டுச் சுவடு தெரியாமல் மறைந்து விட்டார்கள்.

அதை அடுத்த முக்கிய விஷயம் சுவர்ணமுகி!

அந்த இளவரசி எங்கே?

எங்கே அவள் போனாள்?

அல்லது யாராவது அபகரித்து விட்டார்களா?

வேலூரைப் பிடித்த பிறகு முதல் விஷயமாய் அவளைத் தேடித்தான் எங்கும் ஆட்களை அனுப்பினான்.

அவனே பல இடங்களுக்குச் சென்று தேடினான்.

சுவர்ணமுகி தங்கியிருந்த மாளிகையில் வேலைக்காரர்களைக் கேட்டபோது, அவளும் ஸ்ரீரங்கனும் இரவில் வெளியில் போனார்கள் என்றும் திரும்பி வரவே இல்லை என்றும் கூறினார்கள்.

ஒருவேளை ஸ்ரீரங்கனே அவளை அபகரித்துச் சென்றிருப்பானோ?

சண்டையின்போது ஸ்ரீரங்கன் என்ன ஆனான் என்று தெரியாது.

இங்கே சந்திரகிரி சபைக்கு வருவான் என்று எதிர்பார்த்தால் அதுவும் வரவில்லை.

மகாராஜாவின் மீது உயிர் விடுபவன் ஆயிற்றே! என்ன ஆனான்?

இரவில் அர்ச்சுனனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சுவர்ணமுகி அடிக்கடி நினைவில் வந்தாள். எங்கேயோ ஆபத்தில் அவள் சிக்கி இருப்பதாகவும், அவன்தான் அவளைக் காப்பாற்றச் செல்ல வேண்டும் என்றும் கற்பனை செய்தான்.

இரவு உணவு அருந்தியதும் அதிகாரிகள் வந்து 'மகாராஜா அவசரமாக அழைக்கிறார்' என்று அவனை அழைத்துப் போனார்கள்.

அர்ச்சுனன் பரபரப்புடன் புறப்பட்டான். அரண்மனை முகப்பில் நுழைந்ததும் அவனை அறியாமல் உடலில் ஒரு படபடப்பு ஏற்பட்டது.

மகாராஜா எதற்காக அழைத்திருப்பார் என்று நினைத்தான்.

உள்ளே போய் அரண்மனைக் காரியத்தை விசாரித்ததில் மன்னர் தமது வசந்த மாளிகையில் இருப்பதாகக் கூறினார்கள்.

கூடங்களைக் கடந்து, தாழ்வாரம் தாண்டி நிலா முற்றத்துக்கு வர,

ஏதோ ஓர் இனமில்லாத சக்தி அவன் பார்வையை மேலே ஆகர்ஷித்தது.

மேலே எல்லாம் ராணிகளின் மாடங்கள் என்று அவனுக்குத் தெரியும்.

பொதுவாக அந்த நிலா முற்றத்துக்கோ வசந்த மாளிகைக்கோ மிகவும் நம்பகமானவர்கள்தான் அனுமதிக் கப்படுவார்கள்.

இங்கே தனியனாய் அவன் செல்ல, அவன் பார்வை மேலே ஆகர்ஷிக்கப்பட, எதேச்சையாகப் பார்த்தான்.



அடுத்த கணம் அவன் பாதங்கள் தரையில் பாவவில்லை. திடீரென்று ஒரு புயல் அவனைத் தாக்குவது போல் இருந்தது.

மேலே நீளமான மாடத்தில், தீவர்த்தி ஜுவாலைகளில் அவளும் ஜுவாலையாக சுவர்ணமுகி கீழே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் விழிகள் கார்கால மழை போல் அவன் விழிகளில் குளுமையாக வந்து இறங்கின.

வியப்பில் இரு உதடுகளும் பிரிந்திருக்க, குழந்தையின் வாயில் உலகத்தைப் பார்த்த யசோதாவும் அப்படித்தான் ஆச்சரியத்தில் உதட்டைப் பிரித்திருப்பாள்.

அவள் முகம் ஒரு நிலவுக் கதிராகத் தெரிய, மாடத்தில் எழுதிய சித்திரமாக அவள் அசைவு எதுவுமில்லாமல் சமைந்து நின்றாள்.

அர்ச்சுனனுக்கு உணர்ச்சி தாளவில்லை.

வழக்கமாக அவன் மாடத்தைப் பார்க்கவும் மாட் டான், பெண்ணை ஏறிடவும் மாட்டான். இங்கே விதிவிலக்காக நின்றான்.

அவன் உயிர்க் கருவிலிருந்து உற்பத்தியாகிய சுவர்ணமுகி என்ற அழைப்பு, நுனி நாவரை வர, அவளது பக்கத்தில் பல பெண்மணிகளும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அப்படியே உறைந்து நின்று விட்டது.

அவன் பார்ப்பது கூட அவ்வளவு முறையல்ல என்று ஏதோ ஓர் உணர்வு அவனிடம் கூறியது.

எனினும் பார்வையைத் திரும்பிப் பெற இயலாதவனாய் அவன் நிற்க,

சுவர்ணமுகி சட்டென்று தன் முகத்தைத் திருப்பினாள். பிறகு அரைக் கணம் கூடத் தரியாமல் உள் நோக்கி அவள் போக,

அர்ச்சுனன் திடீரென்று ஓர் ஏமாற்றத்துக்கு ஆளாகி, பார்வையைக் கீழே தாழ்த்தினான். அதற்குள் தெப்பமாக அவன் ஆடைகள் நனைந்து விட்டன. அவன் கண்கள் ஒரு கடல் கவிழ்ந்தாற் போல் நீரைச் சொறிந்திருந்தன. பல கணங்கள் வரை அவன் முன்னால் ஒரே இருட்டு! எதுவும் தெரியவில்லை! அவனுக்கு எந்த உணர்வும் இல்லை.

காரணம் காரியம் எதுவும் தெரியாத ஒரு நிலைகுலைதலில் அவன் ஆழ்ந்திருக்க,

இரண்டு சேவகப் பெண்மணிகள் ஓடி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''என்ன சுவாமி என்ன? தங்களுக்கு ஏதாவது நேர்ந்ததா?'' என்று ஆதங்கத்தோடு கேட்க,

கைகளை அவன் விடுவித்துக் கொண்டு,

''எதுவுமில்லை. நான் வருகிறேன்'' என்று குனிந்தவாறு சொன்னான்.

அவன் குரல் அழுவனைக் காட்டிக் கொடுத்தது. அதிலிருந்த துயரமான கரகரப்பு அவனையும் மீறி உற்பவித்திருந்தது. விறுவிறுவென்று நடந்தான்.

* * * * *

சிங்கார மானமலைத் தேனுக்குத் தான்முடவன் அங்காத் திருந்ததை ஆய்ப்போமோ?

– வெள்ளைய ராஜேந்திரன் துகில் விடு தாது.

## 36

**வ**சந்த மாளிகையின் மேல் மாடத்தில் வேங்கட மகாராஜா உட்கார்ந்திருந்தார்.

அர்ச்சுனன் வந்ததும் அவனை அன்புடன் அழைத்துத் தம் பக்கத்தில் உட்கார்த்திக் கொண்டார்.

''விஷயம் தெரியுமா உனக்கு?'' என்று கேட்டார் அவர். அவரது குரலில் இருந்த கரகரப்பை உணர்ந்ததும் ஏதோ முக்கியமான விஷயம் என்று புரிந்து விட்டது.

மனத்தின் ஒரு பகுதி அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க ஆவலோடு இருந்தாலும் இன்னொரு பகுதி எதிரே இருந்த அரண்மனையின் வரிசையான மாடங்களில் மெதுவாகச் சஞ்சரித்தது. 'சுவர்ணமுகி! உனக்கு என்ன நடந்தது?' என்று அந்த மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

''ஸ்ரீரங்கன் நமக்கு எதிரியாகி விட்டான்!'' என்றார் மகாராஜா.

''அப்படியா?'' என்று ஆச்சரியமுடன் கேட்ட அர்ச்சுனன் ''மகாராஜா! அவர்தான் தங்களுக்கு அத்தியந்தராக இருந்தாரே! தாயாருக்குத்தான் ஆசை! ஆனால் இவர் ராஜப் பற்றோடு தங்களோடேயே ஒன்றி இருந்தாரே! தங்கள் படையை நடத்திச் சென்று முன்பு ஒரு முறை இதே திம்மராஜாவைத் தோற்கடித்திருக்கிறாரே! அவர் இப்போது தங்களுக்கு எதிராக மாறியதன் காரணம் என்ன?'' என்றான்.

லிங்கம நாயகர் ஸ்ரீரங்கனைச் சிறை செய்த விஷயத்தை மகாராஜா கூறினார். "அது நமக்கு எதிராக அவனை மாற்றி விட்டது. நானே லிங்கமனிடம் சொன்னேன், இது வேண்டாம் என்று! ஆனால் அவன் என் சொல்படி கேட்கவில்லை. நான் என்ன செய்ய முடியும்? அவர் தயவில்தான் நான் இருக்கிறேன்" என்றார் மகாராஜா.

"அது ராஜதந்திரம் அல்ல" என்றான் அர்ச்சுனன்.

"இல்லைதான்! ஆனால் கோட்டை அபாய நிலையில் இருக்கும்போது உள்ளே இருப்பவர்கள் நமக்கு விரோதிகளாக மாறிவிடக் கூடாது என்று அவரது அபிப்பிராயம்."

அர்ச்சுனன் யோசித்தான்.

"இப்போது அவருக்கு யாராவது உதவி செய்கிறார்களா?"

"ஸ்ரீரங்கன் பீஜப்பூருக்கு உதவி கேட்டு ஆள் அனுப்பி இருக்கிறான்."

"சுல்தானிடமா?"

"ஆமாம்."

"அது பெரிய துரோகம் ஆயிற்றே!" என்றான் அர்ச்சுனன்.

சிரித்தார் மன்னர். "நாம் அவனைச் சிறையில் போட்டது மாத்திரம் எந்த வகை?" என்று கேட்டார்.

அர்ச்சுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அந்த விஷயத்தில் நியாயமும் இருந்தது. அநியாயமும் இருந்தது.

ராஜ்யம் க்ஷீணித்திருக்கும்போது யார் எதைச் செய்தாலும் அதைப் பற்றிக் கேட்பாரில்லாமல் இருந்தது.



அதுமட்டுமில்லை. அவர்களுக்கு யாராவது உதவி செய்யவும் சித்தமாக இருந்தார்கள். இதுதான் அந்நாளைய ராஜ தந்திரமாக இருந்தது.

இதுவேதான் அந்த விஜயநகர ராஜ்யத்துக்குக் கடைசி அடிகளாக விழுந்து கொண்டிருந்தது.

"இன்னும் கேள்! தஞ்சை, மதுரை நாயகர்கள் அவனுக்கு உதவி செய்யப் போகிறார்கள்!"

"என்ன?" என்று வெகுண்டான் அர்ச்சுனன்.

"ஆமாம்! நமக்கு உளவு வந்தாயிற்று" என்றார்.

"அவர்கள் ஏன் உதவுகிறார்கள்?"

"காரணம் நீதான்!"

"நானா?"

"ஆமாம். செஞ்சிப் படைகளைக் கொண்டு வந்து வெற்றி பெற்று விட்டாயல்லவா? அதனால் நமக்கும் செஞ்சு நாயக்கருக்கும் அதிக பந்தம் ஏற்பட்டு விட்டதாம். அதை அவர்கள் விரும்பவில்லை! செஞ்சிக்கு இவர்கள் பரம விரோதிகள் என்பது உனக்குத் தெரிந்திருக்குமே!"

"ஓகோ!" என்றான் அர்ச்சுனன்.

"இவர்கள் எல்லாம் நமக்கும் கப்பம் கட்டுகிற சிற்றரசர்கள்! ஆனால் நமக்குப் பலம் இல்லாததால் நமக்கு நிகரான அதிகாரத்தோடு விளங்குகிறார்கள்" என்று சொல்லி வேதனைச் சிரிப்புச் சிரித்தார் மன்னர்.

"சரி மகாராஜா! இப்போது தாங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்னை ஏன் இங்கே அழைத்தீர்கள்?" என்றான் அர்ச்சுனன்.

"நமக்கு வேண்டுவது பொருள் பலம். அதற்கு ஒரு வழி கிடைத்திருக்கிறது. விஜய நகரப் பொக்கிஷத்தைப் பற்றித் தெரியுமல்லவா?"

''தெரியும். எல்லோரும் அதைத்தானே தேடி அலைகிறார்கள்!''

''அந்தப் பொக்கிஷத்தை அடையும் வழி ஒருவாறு நமக்குக் கிடைத்திருக்கிறது.''

''அப்படியா, மகாராஜா!'' என்று சொல்லும்போது அவன் நெஞ்சம் தழுதழுத்தது. அவன் முன்னால் சுவர்ணமுகி தோன்றினாள்.

''எப்படிக் கிடைத்தது?''

''அதைப்பற்றிக் கேட்காதே! அதை எடுத்து வரப் போகிறாய் நீ! உனக்கு உதவியாக ஒரு சின்னப் படை அனுப்புகிறோம். ராஜப் பிரதிநிதிகளாக அந்தப்புரப் பெண்கள் சிலரும் வருவார்கள்.''

''சரி மகாராஜா! நான் எங்கே புறப்பட வேண்டும்? எப்போது புறப்பட வேண்டும்?''

''எல்லா விவரங்களும் தருகிறேன். நீ இன்றைக்கு மூன்றாம் நாள் காலையில் புறப்படுகிறாய்!'' என்றார் மகாராஜா.

''ஆகட்டும் மகாராஜா!'' என்றான் அர்ச்சுனன். பேசிக் கொண்டிருக்கும்போதே அர்ச்சுனன் மனதில் சுவர்ணமுகியைப் பற்றியும் பொக்கிஷத்தைப் பற்றியும் நினைவுகள் ஓடின.

முந்தியே ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அரசரிடம் சொல்லாது விட்டு விட்டோம். அதற்குப் பிறகு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இப்போது மன்னரிடம் சுவர்ணமுகியைப் பற்றி வேறு யாரோ சொல்லியிருக்க வேண்டும். ஒருவேளை ஸ்ரீரங்கன் சொல்லியிருக்கலாம். அவன் சொன்னதால் முதல் பெருமை அவனுக்குப் போய்விட்டது.



பெருமை போனது மட்டுமல்ல! இப்போது சொன்னால் அப்போதே ஏன் சொல்லவில்லை என்று பேச்சு எழும்! அவன் வேண்டுமென்றே மறைத்தான் என்று குறை சொல்ல வழி இருக்கிறது.

இப்போது இந்தச் சமயத்தில் உண்மையைச் சொன்னால் கூடச் சங்கடங்கள் உள்ளன.

ஒருவேளை மன்னர் அந்தப் பொக்கிஷத்தைப் பற்றி அறிந்திருப்பது வேறு ஒரு வழி மூலமாக இருந்தால்? அனாவசியமாக சுவர்ணமுகியின் பெயரை இதில் இழுத்தாற்போல் ஆகிவிடும்.

முதலில் சுவர்ணமுகி இந்த அரண்மனைக்குள் எப்படி வந்தாள், அவள் தன்னைப் பர்றி எவ்வளவு தூரம் இங்கே தெரிவித்திருக்கிறாள் என்றெல்லாம் தெரியவில்லை.

தெரியாது இருக்கும்போது அவனாக இப்போது எதையும் கிளப்பிவிட விருப்பமில்லை.

எனவே தனது பேச்சு முழுவதிலும் அர்ச்சுனன் எதைப் பற்றியும் சொல்லாது இருந்து விட்டான்.

இரண்டு தினங்களாக மனம் குமைந்தது. எண்ணாததெல்லாம் எண்ணியது. அவனைப் பார்த்த சுவர்ணமுகி ஏன் பேசாமல் போய் விட்டாள்?

அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா?

அல்லது அவளுக்குப் பேச விருப்பமில்லையா?

அல்லது அவனையே மறந்து விட்டாளா?

ஹூம் நினைக்கும்படி அவன் என்ன செய்து விட்டான்?

திருப்பதியில் ஓடி ஓடிவந்து ஒரு துர்ச் செய்தியை அவளிடம் கூறினான்,

அடுத்து அவளைக் காட்டில் தேடிக் கண்டு பிடித்துச் சொல்ப நேரம் அவளிடம் பேசினான்,

மூன்றாம் முறை வேலூர் அகழிக் கரையில் நின்று ஸ்ரீரங்கனோடு அவள் போவதை ஒரு பார்வை மட்டும் பார்த்தான்.

இந்த மூன்று சந்திப்புக்கள் மட்டும் போதுமா ஒரு அன்பான ஈடுபாட்டை அவளிடமிருந்து எதிர்பார்க்க?

ஏன் போதாது?

காதல் என்பது ஒரே பார்வையில் ஜனிக்கும் முளை.

ஒரே சந்திப்பில் மலரும் பூ.

ஒரே வினாடியில் வளரும் கற்பக விருட்சம்.

ஒரே ஒரு முறை மட்டும் கண்கள் இணைந்து விட்டால் அதை ஆயிரம் ஜன்மங்கள் கூட மறக்க முடியாது.

அவ்வளவு நீண்ட காலம் கழித்துப் பார்த்தால் கூட முதல் பரிச்சயத்தை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளலாம்.

முதலில் விட்ட இடத்தை மீண்டும் தொடர்ந்து கொள்ளலாம்.

அத்தகைய வினோத இயல்புகளைப் படைத்தது காதல்.

அப்படி இருக்கும்போது மூன்று இடைவிட்ட சந்திப்புக்களில் மனத்தில் அதை வளர்த்து விட்டோம்.

அந்த வளர்ச்சி ஒருதலையாய் அவன் மனத்தில் மட்டும் வளர்ந்ததாக இருக்க முடியுமா?

அவள் மனத்தில் வளர்ந்திருக்காதா?



இரண்டாம் முறையாக அந்தக் காட்டில் இரவின் நட்சத்திரப் பந்தல் கீழ் ஒரு சொப்பனக் காட்சி போலச் சந்தித்தார்களே!

அப்போது அவள் கண்களில் அந்த இழைகளை அவனால் பார்க்க முடியவில்லை?

கனிந்த, இளகிய, நெகிழ்ந்த, தழுதழுத்த சிநேக பூர்வமான இனிய இழைகளை அவன் காணவில்லை?

அவள் கண்ணைப் பார்த்தது அவளது இதயத்தைப் பார்த்தாற் போல இருந்ததே!

இரு தூல வடிவான தேகங்கள் சந்தித்தது மாதிரி இல்லையே!

இரு ஆவி வடிவான உணர்வுகள் கலந்த மாதிரி அல்லவா தோன்றின!

மனத்தின் எல்லா நினைவுகளிலும் அமிர்தங்கள் வந்து கலந்தனவே!

தேகமே ஒரு புது காந்தியில் சோபித்ததே!

நினைத்தால் அங்கேயே உட்கார்ந்து ஆயிரம் கவிதைகள் எழுதி விடலாம்.

அப்படி இதயம் அமுதசுரபிகளாக இனிய உணர்வுகளைச் சுரந்ததே!

இந்த உணர்வுகளும், அனுபவங்களும் அவன் ஒருத்தனுக்கு மட்டும் நேர்வது தானா?

அப்படி நேர்ந்தால் நேர்ந்து விட்டுப் போகட்டும்.

இந்த நினைவுகளை வைத்தே மீதி வாழ்நாளுக்கு அவன் ஒரு சுவர்க்கத்தை மனதுள் சிருஷ்டி செய்து கொள்ள முடியும்.

அந்த சிருஷ்டியிலேயே வாழ்நாளின் இதர துன்பங்களை யெல்லாம் அவனால் மறந்து விட முடியும்.

அது போதும்!

இரண்டாம் நாள் இரவு கிருஷ்ண சந்திரனும் ட்ரேக் ராஜரும் அவனைக் காண வந்தார்கள்.

வேலூர் வெற்றி கிடைத்ததிலிருந்து கிருஷ்ண சந்திரன் அர்ச்சுனனோடு தங்கி விட்டான்.

ட்ரேக் ராஜர் ஒருமுறை ஆரம்கான் போய்விட்டு மீண்டு வந்து சேர்ந்திருந்தான்.

''நண்பர்களே! இன்னும் பூசல் முடிந்தபாடில்லை. தொடரும் போல் இருக்கிறது'' என்று கூறிய அர்ச்சுனன், நாட்டில் மீண்டும் தோன்றியுள்ள அபாயங்களைக் கூறினான்.

மூச்சை மறந்து கேட்டார்கள் நண்பர்கள்.

''நாளை புறப்படுகிறேன்'' என்று முடித்தான் அர்ச்சுனன். ''எனக்கு உதவி புரியுங்கள்! பொக்கிஷத்தை எடுத்து வர வேண்டும் என்று மகாராஜா கூறினாரே தவிர எங்கிருக்கிறது, எப்படி எடுத்து வர வேண்டும் என்பதெல்லாம் கூறவில்லை. நானும் கேட்பது முறையாகாது என்று இருந்து விட்டேன். என்னோடு சிறு படை ஒன்று வருகிறது என்று மட்டும் மன்னர் கூறியிருக்கிறார். அது வலுவான படையா என்பது தெரியாது. போகிற விஷயமோ பயங்கரமான விஷயம். பொக்கிஷம் எங்கிருக்கிறது என்பது தெரிந்தால் வடக்கேயிருந்து சுல்தான்கள் கூட ஒட்டமாக ஒடி வருவார்கள். இப்படி இருக்கும்போது எனக்கு நம்பிக்கையான ஒரு சிநேக பலம் முக்கியம் என்று கருதுகிறேன். நீங்கள் இருவரும் எனக்குப் பின்னால் சிறிது



தூரம் இடைவெளி விட்டு என்னோடேயே வந்து கொண்டிருங்கள். அது எனக்கு உபயோகமாக இருக்கும்.''

''நிச்சயம் வருகிறோம். ஒரு நாழி தூரம் வருகிறோம்'' என்றார்கள் நண்பர்கள்.

மறுநாள் வேங்கட மகாராஜா வழி அனுப்ப, அர்ச்சுனன் புறப்பட்டான். அவன் பின்னால் வால் போல ஒரு சிறு படை நீண்டிருந்தது. ஏராளமான வேலையாட்கள் கூடாரங்கள் இத்யாதிகளைச் சுமந்து வந்தார்கள்.

படை நடுவில் அந்தப்புரப் பல்லக்குகளும் அதன் முன்னும் பின்னும் பெண் சேவகர்களும் மல்லர்களும் வந்தார்கள்.

சீக்கிரம் அவர்கள் சந்திரகிரிக் கோட்டையைவிட்டு மெல்லப் பள்ளத்தில் இறங்கிச் சமவெளிகளை நோக்கி நடந்தார்கள்.

கோட்டையின் மலைப்பாங்கிலிருந்து கீழே இறங்க, வழி நெளிந்து நெளிந்து சென்றது.

இந்த நெளிவுகளில் படை ஒரு பாம்பு போல மடிந்தவாறு ஊர்ந்தது.

காலையின் இளம் வெய்யிலும், பசுமையான காற்றும் மனத்தை வருடிவிட, அர்ச்சுனன் ஒருவித மிதக்கும் மனத்துடன் இறங்கிக் கொண்டிருந்தான்.

கடைசி நெளிவில் இறங்கும்போது பார்வையைத் திருப்பி மேலே பார்க்க,

அங்கே இரண்டு நெளிவுகளுக்கு மேலே அந்தப்புர பல்லக்குகள் வருவது தெரிந்தது. அதில் ஒரு பல்லக்கின் மீது பார்வை விழ, அதன் மூடு திரைகள் ஏற்கனவே திறக்கப்பட்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

அடுத்த விநாடியில் அந்தப் பல்லக்கின் முகப்பில் ஒரு சந்திர உதயம் போல் முகம் தெரியத் திடுக்கிட்டு நின்றான்.

''யார் அது?'' என்று அவன் கவனிப்பதற்குள் பெண் காவலாளிகளின் உருவங்கள் அந்த முகத்தை மறைத்தன.

அடுத்த நெளிவுவரை காத்திருக்க வேண்டி வந்தது.

இரண்டாவது முறையும் அதே போன்று நிலா வதனம் பல்லக்கில் தெரிய, உடலில் ஒரு சிலிர்ப்பு ஒடியது.

யார் அது?

அவள் தானா?

அர்ச்சுனன் பிரமிக்க, வெகு பின்னால் உச்சத்து முதல் நெளிவிலிருந்து தாங்கள் பின்பற்றுகிறோம் என்பதைக் காண்பிக்க ராஜுரும், கிருஷ்ண சந்திரனும் குதிரையில் இருந்தவாறே கை தூக்கிக் காண்பித்தார்கள்.

அப்போது அவனது தோளைத் தொட்டு ஒரு அதிகாரி, ''ஐயா! தாங்கள் நின்றாள் எல்லோரும் நின்று விடுவார்கள். முன்னால் போகலாம்!'' என்று சொல்ல,

அவரது விருத்தியாப்பியத் தோற்றம் அவனது கோபத்தை வளர விடாமல் தடுத்தது.

மேலே சிலிர்த்துப் போக அவன் மனத்தில் ஒரு புரியாத தாபம் எழுந்து கொண்டிருந்தது.

எதையோ இழந்தோம் என்றோ, இழக்கிறோம் என்றோ ஒரு நினைவு அலைபோல் மீண்டும் மீண்டும் புரள,

ஈரம் பாய்ந்த கண்களுடன் அவன் குதிரையை நடத்திக் கொண்டிருந்தான்.

* * * * *



**''மனம் தெரியாத ஆணை நினைத்து ஏங்கி வெட்கமுறுகிறேன். எத்தனை நாள் மதன் என்னைக் கொடுமையாகத் துன்புறுத்தப் போகிறான்?''**

**– காளிதாசனின் மாளவிகா**

## 37

சுவர்ணமுகியின் மின்னல் கண் அவனை ஒரு முறை உலுக்கியது.

அதன் பரவசத்திலிருந்து மீளுவதற்குள் தோளில் ஒரு கை விழுந்தது.

திரும்பினான். ஒரு அதிகாரி இரும்புத்தனமான புன்னகையோடு நின்றார்.

கண்களில் தீட்சண்யம் இருந்தாலும் கடுமை இருந்தது. பாதியும் நரைத்த தாடி. தலையில் அதிகாரிக்குரிய பாகை. தமது குதிரையை இடது கையால் இங்கிதமாக இழுத்து அவனைப் பாதி தீவிரமுடன் பார்த்தார்.

திடுக்கிட்ட அர்ச்சுனன், ''என்ன சுவாமி!'' என்றான்.

''பின்னால் பாருங்கள்'' என்றார் அதிகாரி.

பார்த்தான்.

எறும்புச் சாரை போல் நீண்டிருந்த அவனது கோஷ்டி ஸ்தம்பித்து நின்றிருந்தது.

காரணம் அவனேதான்! அவன் நிற்க, பின்னால் எல்லோரும் வரிசையாக நின்று விட்டார்கள்.

அதேநேரம் முன்னால் போன கோஷ்டி, வால் துண்டிக்கப்பட்ட முண்டம் போல் தனியாய்ப் போய்க் கொண்டிருந்தது.

தன் தவற்றை உணர்ந்த அர்ச்சுனன் திடுக்கிட்டுக் குதிரையைச் சீண்ட, மீண்டும் மந்திரம் போல் கோஷ்டி நகர ஆரம்பித்தது.

கூடவே சவாரியில் வந்த அதிகாரி, அவனுடன் சம இணையாகச் சேர்ந்து கொண்டு புன்னகையை அதிகமாக்கிச் சிதற விடாமல்,

"தம்பி" என்றார்.

ஏற்கெனவே குற்ற உணர்வில் மனம் தளர்ந்து கொண்டிருந்த அர்ச்சுனன் அவரை அரைக் கண்ணால் பார்த்தான்.

"மேலே பார்த்துக் கொண்டிருந்தாயா?" என்றார் அதிகாரி அவனைப் பார்க்காமலேயே. அவர் குரலில் இருந்த நளினமான நைச்சியம் அவனைத் துன்புறுத்தியது.

"என் நண்பர்கள் எனக்கு விடை கொடுக்க வந்தார்கள். அவர்களைப் பார்த்தேன்" என்றார் அதிகாரி.

"ஓகோ! மேலே நண்பர்கள் வந்தார்களா? அவர்களை நான் பார்க்கவில்லையே!" என்றார் அதிகாரி.

"சுவாமி, தாங்கள் யார்?" என்றான் அர்ச்சுனன் சிறிதும் தயங்காது.

"நான் அரண்மனைக் காரியம்! பெயர் ரத்னாகரன். சந்திரகிரியிலேயே இருப்பவன்" என்றார் அவர்.

அர்ச்சுனன் பேசவில்லை. இவரை விட்டு சீக்கிரம் தனியாக வேண்டுமே என்று மனம் பிரலாபித்தது.

அப்போதுதான் சுவர்ணமுகியைப் பற்றி நினைக்கலாம்.

ஒரு ராக ஆலாபனம் போல் அவள் நினைவு ஒரு சுக இழையோடு அவனுடன் கூட வரும். மனத்தின்



எண்ணங்கள் எல்லாம் கவிதைப் பூக்களாக மலர, ஒரு சுகந்த வாடையோடு இந்தப் பயணம் முழுவதிலும் மிதக்கலாம். அதை அனுபவிக்க விடாமல். . .

"நாம் எங்கே போகிறோம் தெரியுமா?" என்று ரத்னாகரன் கேட்டார்.

"எனக்குத் தெரியாது" என்றான் அர்ச்சுனன்.

"அதுவே ஆச்சரியமாக இருக்கிறதே!"

"எனக்கும் ஆச்சரியம்தான்!" என்றான் அவன்.

"ஏன் தம்பி! நீதானே தலைவன்?" என்றார் அவர்.

"வெறும் பாதுகாப்புக்குத்தான். மற்ற விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியாது."

"ஓகோ!" என்று சிந்தனையில் லயித்துக் கூறினார் ரத்னாகரன். "முன்னால் கோஷ்டி போகிறதே, அவர்கள்தான் எல்லாம் போல இருக்கிறது!" என்று புரிந்து கொண்டவராய்த் தலை அசைத்தார்.

பிறகு குதிரையோடு ஒரு நொடியைத் தாவிக் கடந்து, "ஏன் தம்பி! நான் சந்திரகிரியில் இருபது வருடங்களாக இருந்து வருகிறேன். உன்னைப் பார்த்ததில்லையே!" என்றார் அவர்.

"நான் ரங்கப்பாவிடம் சேவகம் செய்தேன்."

"தளவாய் ரங்கப்பாவா?"

"ஆமாம்!"

"ஓகோ, அதனால்தான் மகா மன்னர் நாராயணவனச் சீமைக்கு உன்னை அதிபனாக ஆக்கினாரா? நல்லது. உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதோ?"

"இல்லை சுவாமி!"

''ஓ, அதனால்தான் பாதி சொப்பனத்தில் இருக்கிறாயா?'' என்றார் ரத்னாகரன்.

அர்ச்சுனனுக்கு எரிச்சலாக வந்தது. இவர் என்ன திரிகால ஜோஸ்யரா? என் மனத்தின் அவஸ்தையை அப்படியே விண்டு உரைக்கிறாரே! இவரது பேச்சு ரோதனை எப்போது நிற்கப் போகிறது? மனத்தில் நிச்சலனமாய் சுவர்ணமுகியின் நினைவை புஷ்பிக்க விடாமல் கழுத்தை அறுக்கிறாரே!

''சொப்பனம் இல்லை சுவாமி. நினைப்பில் ஆழ்ந்திருக்கிறேன்'' என்றான் அர்ச்சுனன் முறித்துக் கொண்டு.

''ராஜ்ய நினைவோ, குடும்ப நினைவோ இருந்தால் நெற்றியில் சுருக்கமல்லவா விழும். இங்கே உனக்கு நெற்றியில் பிரகாசம் அல்லவா விழுந்திருக்கிறது! சந்திர உதயம்போல் பிரகாசம்! இந்தப் பிரகாசம் நுட்பமான நினைவுகள் ஏற்பட்டால் அல்லவா முகத்தில் உற்பத்தியாகும்!'' என்றார் அவர்.

அர்ச்சுனனுக்குக் கோபம் வந்தது.

''என்ன நுட்பமான நினைவு; சுவாமி?'' என்று வெடுக்கென்று கேட்டான் அவன்.

''சிருங்காரமான நினைவுகள்! அவைதான் முகத்தில் மெருகேற்றித் தங்கத்தை போல் சுடர்க்க வைக்கும். வயசுப் பிள்ளைதானே! யாரை நினைக்கிறாயோ, யாரை வரிக்கிறாயோ? பாவம்! நீ என்ன செய்வாய்? நாட்டில் வரிசையாகச் சண்டைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இதனால் உன்னைப் போல இளைஞர்கள் தொடர்ந்து ஒரு குடும்ப வாழ்க்கை வாழ விடாமல் ஆகி விட்டது. நீங்கள் என்ன செய்வீர்கள்? கிடைத்த இடை



நேரத்தில் சொப்பனம் காணுகிறீர்கள். நல்லது. நன்றாகக் கண்டு வாருங்கள். நான் அப்புறம் உங்களைப் பார்க்கிறேன்!'' என்று சொல்லி, குதிரைக்கு ஒரு சின்ன ஜாடை காட்ட, அது விரைந்து அப்பால் சென்றது. அர்ச்சுனனுக்குப் பீடை விட்டது போல் இருந்தது.

அவன் மனத்துள் வரத் துடிக்கும் எண்ணங்கள் விரைந்து ஓடிவர, சில விநாடிகளுக்குள் கண்களில் ஒரு ஒளித் திரவம் கூடி ஒரு கனவு லோகத்தைப் பீச்சி அடித்தது. கிழக்கே அற்புதமான சூரியக் கதிர்கள் வானை அளாவி நின்றன. பசுமைக் காற்று ஒரு மெல்லிய தெம்மாங்கு போல் செவிகளை வருடிச் சென்றது. குளிர்ந்த நீருடன் சுவர்ணமுகி ஆற்று வெளிச்சச் செதில்களோடு கண்களைப் பறித்தன.

மனம் ஒரு திக்குமுக்காடும் நிரம்பலுடன் பூரித்து இருக்க, ஆகாயம் முழுதும் ஒரு ஓவியத் துணியாக மாறி அதில் இளவரசி சுவர்ணமுகியின் உருவம் மெல்ல மெல்லச் சம்பவித்தது.

'நீல அலைக் கண்கள்! மண்ணும் விண்ணும் நிறைந்த வில்லாகப் புருவம். முறுவல் சதா பிறந்து சிவப்பு ஊறிய உதடுகள். நிலவு வழிந்த முகம். இருட்டின் திரளாகக் கூந்தல்! ''சுவர்ணமுகி, நீ ஏன் எங்களுடன் வருகிறாய்?''

அந்தப்புரப் பரிஜனங்களோடு நீயும் ஏன் பல்லக்கில் வருகிறாய்?

பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்க நீ உதவுகிறாயா?

உன் ரகசியத்தை மன்னரிடம் வெளியிட்டு விட்டாயா? மன்னர் ஒருவர்தான் உன்னைப் பாதுகாக்கும் திறமை பெற்றவர். மற்றவர் யாவரும் உபயோகமற்றவர்கள் என்று கருதி, எங்களை அப்படியே வேண்டாம் என்று ஒதுக்கி விட்டாயா?

நீ பல்லக்கிலிருந்து இப்போது பார்த்தாயே!

அது ஒரு பரிச்சயப் பார்வையா?

அல்லது வெறுமைப் பார்வையா?

அல்லது இறுமாப்புப் பார்வையா?

உன்னைப் புரியாமல் மனம் தவிக்கிறேன், சுவர்ணமுகி, உன் மனத்தை வாய் திறந்து ஒரு வார்த்தையாவது சொல்லு!

பிரார்த்தனைகளாக விடுத்துக் கொண்டு குதிரையில் நிதானமாகப் பிரயாணம் செய்தான்.

இடையில் ஒரு இரண்டு இடங்களில் சிரம பரிகாரத்துக்காகச் சற்றுத் தங்கிவிட்டு மாலையில் அந்தி நேரம் கூடும் போது அவர்கள் மானாறு என்ற சிற்றாரே அடைந்திருந்தார்கள்.

பாறையும் மணலும் விரவிய அதன் குறுகலான கரை வெளியில் தண்டு இறங்கிய அவர்கள் இரவுப் பொழுதைக் கழிப்பதற்காகக் கூடாரங்கள் அமைக்க ஆரம்பித்தார்கள்.

கருகருவென்று இருட்டியதும் பற்பல மூலைகளில் சமையலுக்கான அடுப்புத் தீக்கள் மூண்டு கொண்டிருந்தன.

அந்த நதிப் படுகை ஒரு குழிவான பல்லா போல இருந்ததால் நிசப்தம் ஒரு மடங்கு அதிகமாக இறுகியிருந்தது.

பாறை இடுக்குகளில் நதியின் நீர் கிளுக் கிளுக் என்று கள்ளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருக்க,

எங்கேயாவது திசைமாறிப் போன பறவையின் ஒற்றைக் குரல் நீனமாக இழைய,

அந்தப் பல்லா பிரதேசம் முழுவதிலும் ஒரு அதன சோகம் கெட்டியாக இறங்கியது.



எல்லாரும் உணவு அருந்தி அயரும்போது பாதி நிலா மேலே கனிவாக விகசிக்கத் தொடங்கியது.

பால்வெளியெல்லாம் நட்சத்திரப் பரல்கள் மௌனச் சுடர்களாகப் பரவி நிற்க,

ஒரு மிருதுவான கனவு வெளிச்சம் அந்த மான் ஆறுப் படுகையில் ஒரு மெல்லிய மா போன்று உதிர்ந்திருந்தது.

அர்ச்சுனன் கனமான இதயமுடன் மெல்ல நதி விளிம்பில் உலாவினான்.

அவன் கால் கணுக்களில் தெள்ளிய ஆற்று நீர் வெள்ளிக் கறைகளுடன் நெளி நெளியாக வந்து சிலும்பியது.

கிழக்கே அந்த நீர் ஜரிகைத் திவலைகளாக மினு மினுக்கிச் செல்ல,

இரு புறமும் கரும் இருட்டுக்களாகக் காட்டுச் செழிப்புக்கள் பரவிக் கிடக்க,

மனத்தின் பருவம் அப்போது அவனுக்கு வசந்தம்! முதல் வசந்தம்! இத்தனை காலமும் அகத்தின் விழி திறக்காது இருந்திருக்க,

இன்று திறந்த பின் அவன் முழுதாக விழித்துப் பார்க்கும் முதன் முதலான மன வசந்தம்!

அது இப்போது குத்தலான ஒரு வேதனையைக் கொடுத்து அவனை அலைகழித்துக் கொண்டிருந்தது.

இதுநாள்வரை இதன் சக்தியை அவன் அறிந்தவனல்ல! நாடு, நட்பு, அரசாங்கம் என்றெல்லாம் மனம் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தது. எந்தவிதப் பிரச்னையும் இல்லாமல் மனத்தில் சுயேச்சையாக வாழ்ந்தான். அவன்.

ஆனால் இன்று,

மனசில் அந்த சுகந்தமான எண்ணங்களும் புதுமையான கிளர்வுகளும் தோன்றிய பின்,

தலை ரீங்கரித்துச் சுற்றியது.

ஊமையான துயரங்கள் மனத்தின் கண்களைச் செல்லாக அரித்தன.

கண்களில் அழுகை, நினைத்தால் பீறிட்டது. நினைக்காவிட்டாலும் கனமாக உறுத்தியது.

எதையும் இழக்காமல் இருந்தும், அவனைச் சோகம் ஒரு மூட்டமாக மூடியிருப்பதை அதிசயமாக உணர்ந்தான் அவன்.

நதியோடு அதன் இறக்கங்களில் இறங்கிச் சற்று அப்பால் சென்று ஒரு மௌனமான இடத்தின் விளிம்புப் பாறையில் ஏறி அமர்ந்து கொண்டான். பாறைகள் சூழ்ந்து ஒரு கணவாய் போல் தோன்றிய தனியான இடம் அது!

கீழே நீரில் சில்லுச் சில்லாக நிலா.

நிசப்தமாக நிற்கும் காற்று.

இந்தப் புறக்காட்சியில் அவன் மனம் ஐக்கியமாகிப் பிரமித்துக் கிடக்க,

''வீரரே!'' என்று குரல் எங்கோ புரளும் ஆலய மணியின் நாதம் போல் சன்னமாகக் கேட்டது.

பிரமையா?

காதுகளைக் கூர்மையாக்க, மீண்டும் ''வீரரே!'' என்று இனிய குழைவாகச் சப்தம் மெல்லியதாக வந்து மோதியது.

திடுக்கிட்டு அவன் நிமிர்ந்து பார்த்தான்.



அங்கே உயரப் பாறையின் உச்சி விளிம்பில் தெரிவது என்ன?

முழு நிலவா?

உடலெங்கும் ஒரு பரவசம் ஓட, கண்களைப் பலமுறை கசக்கி மேலே பார்த்தான்.

நம்ப முடியவில்லை.

அங்கே அவள்தானா?

அவனது இளவரசிதானா?

சுவர்ணமுகிதானா?

பாறையில் ஒரு கையை வைத்து ஊன்றி அண்ணாந்து பார்த்தான்.

''வீரரே!''

அவள் குரல் தெளிவாக வந்தது.

அவன் இருதயம் ஒருமுறை வலிதாகக் குலுங்கி நின்றது. கண்கள் ஆறாகப் பிழிந்தன.

மேலே தாபத்துடன் பார்த்துச் சில விநாடிகள் தத்தளித்தான்.

பிறகு

''சுவர்ணமுகி!'' என்றான்.

அது ஒரு அன்றில் பறவையின் சோகமிழற்றல் போல ஒலித்து மேலே பறந்தது.

இது வாய் திறந்து அவன் அவளது பெயரை அழைத்த முதல் தடவை! அந்த அவனது அழைப்பே அவனைப் பரவசத்தில் ஆழ்த்த,

''நீங்கள்தானா? நீங்கள்தானா?'' என்று உச்சி நோக்கிப் புலம்பினான்.

''வீரரே! நான்தான் ! வீரரே நான்தான்!'' என்று அவள் வார்த்தைகள் சிதறின.

அவற்றில் தொனித்த தாபம் கீழே தீப்பிழம்பாகவும் இறங்கின. பனிக் கட்டிகளாகவும் இறங்கின.

இரண்டு மூழ்கடித்த வெவ்வேறு உணர்ச்சிகளில் அமிழ்ந்து திக்குமுக்காடி மேல் நோக்கி ஏற எத்தனித்தான் அவன்.

''ஏறாதீர்கள்! ஏறாதீர்கள்!'' என்று இரைந்தாள் அவள்.

* * * * *

'பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்'

– திருநாவுக்கரசர்

## 38

''மேலே ஏறாதீர்கள்!'' என்று சுவர்ணமுகி சொன்னதும் அர்ச்சுனன் கீழே காலை ஊன்றினான். முகத்தில் தாப ஜுரம் வீச மேல் நோக்கித் திரும்பினான். நா அசையவில்லை. கண்கள் இரு வீழ்ச்சிகளாக வழிந்தன.

''இளவரசி!'' என்றான்.

காற்றிலே வார்த்தை கரைந்து மிருதுவாகியது.

நெஞ்சத்தில் வார்த்தைகள் முட்டி நிற்க, பேச முடியாமல் தத்தளித்து நின்றான்.

அவள் கண்கள் அவன் மீது லயித்தன.

ஒரு காந்தமான நீலம் மெல்ல அவள் பார்வைக் கதிரில் இறங்கி வருவதை அவன் பதட்டத்தோடு உணர்ந்தான்.

''வீரரே!'' என்றாள் அவள்.

ஒரு சங்கீதத் துளிர் போல் குரல் பேசியது.

''நீங்கள்தானா இளவரசி!'' என்றான் அவன்.

''ஏன், என் ஆவி வந்திருக்கிறது என்று பார்த்தீர்களா? நான் இன்னும் இறக்கவில்லை'' என்றாள் அவள்.

''அது இந்த ராஜ்யத்தின் பாக்கியம்'' என்றான் அவன்.

''இந்த ராஜ்யத்தின் பாக்கியம் மட்டும்தானா?'' என்று கேட்டாள் அவள்.

அவன் நெஞ்சு விம்மி எழுந்தது.

அவன் தவிப்பதை அவள் கூர்ந்து பார்த்தாள்.

மிளிர்வான ஒரு புன்னகை முகமெங்கும் பரவ, கண்கள் மேலும் குளிர்ந்து அவனை நோக்கியது.

''முற்றுகை தகர்ந்தபோது உங்களைத் தேடினேன். உங்களைக் காணவில்லை!'' என்றான் அவன்.

''அப்போதுதான் தேடினீர்களா? காட்டில் ஏனாதி குடியில் தேடவில்லையா?''

''அங்கேயா?'' வார்த்தையில் தத்தளித்தான் அவன். ''இளவரசி! உங்களுக்கு உதவி கொண்டு வருகிறேன் என்று போனேன். மகாராஜா என்னை வேறு திசை அனுப்பி விட்டார். திரும்பி வருவதற்குள். . .''

''என் விதியே மாறி விட்டது இல்லையா?'' என்றாள் அவள். அப்போதுள்ள பலவீன வெளிச்சத்தில் கூட அவளுடைய கூர்மையான பார்வை அவன் மீது தைப்பதை உணர முடிந்தது.

''விதி. . .? விதி மாறி விட்டதா இளவரசி?''

''இல்லையா வீரரே! நாட்டின் விதி மட்டுமல்ல, நம் விதிகள் எல்லாமே!''

அவன் தன் பார்வையைக் கீழே இறக்கினான். கண்கள் எல்லாம் தெப்பமாக மிதக்க அந்தப் பிரதேசம் முழுவதும் அதில் நலுங்கி ஆடியது.

கீழே குனிந்து தன் துக்கத்தை அடக்கப் பார்க்க, ''ஏன் வீரரே? உங்களுக்கு என்ன? ஏன் இந்தக் கண்ணீர்?'' என்றாள் சுவர்ணமுகி.

''இல்லை இளவரசி!'' என்று தழதழத்தான் அவன். ''தங்களுக்கு எப்போதும் பாதுகாப்பாக இருக்க நினைத்தேன். ஆனால் அதில் தவறி விட்டேனே என்று வருந்துகிறேன்.''



''ஓ!'' என்றாள் அவள். ''எனக்குப் பாதுகாப்பாகவா? எனக்கு மட்டும் என்று சொல்வதில் ஏதாவது விசேஷம் உண்டா?''

''ஏன் இல்லை, இளவரசி? ரங்கப்பா ஒரு புண்ணிய கடமையை என்னிடம் ஒப்படைத்தார் இல்லையா?''

''உங்களிடம் மட்டுந்தானா? தோதாவிடமும் இல்லையா?''

''அவனிடமும் சேர்த்துத்தான் ஒப்பித்தார். அவன்தான் துரோகியாகி விட்டானே. அதனாலேயே என் பொறுப்பு அதிகமாகி விட்டது.''

''அதை சரிவரச் செய்தீர் என்று உங்கள் மனச்சாட்சி ஒத்துக் கொள்கிறதா?''

அவளைப் பார்த்து அவன் திரும்பினான். அவன் நெஞ்சில் ஒரு பாரம் அடைத்தது.

''என்னால் முடிந்த அளவு செய்தேன் இளவரசி! அன்று சண்டை முடிந்த பிறகு திருப்பதியில் குதிரையில் ஓடிவந்து தங்களிடம் யுத்த களச் செய்தியைக் கூறினேனே! அன்றே நான் இறந்திருக்க வேண்டும். இறந்திருப்பேன். . உங்களைக் கடைசியாகத் தரிசித்தேன் என்று இறந்திருப்பேன். . . ஆனால் தோதாவின் வஞ்சம் சிறிது நேரத்திலேயே தெரிந்துவிட எனக்கு ஒரு ஆக்ரோஷம் எழுந்தது. எப்படியும் உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தேன். அந்தக் கணமே கடவுளிடம் நான் வேண்டிக் கொள்ள ஆரம்பித்து விட்டேன். 'கடவுளே! என் உயிரை எனக்குத் திருப்பிக் கொடு! நான் எங்கள் இளவரசியைக் காப்பாற்ற வேண்டும்?' என்று நெக்குருகப் பிரார்த்தித்தேன். என் பிரார்த்தனை வீண்போகவில்லை. மரணத்தின் வாயிலிருந்து நான் தப்பிவிட்டேன்.''

''ஓ!'' என்று பரவச மிளிர்ச்சியுடன் கூறினாள் அவள். ''நான்தான் அன்று என்னை ஒரு சேடி என்று சொல்லி உங்களை ஏமாற்றி விட்டேன்.''

''நான் ஏமாறவில்லை இளவரசி! நான் அதற்கு முன்பே நாகலாபுரம் திருவிழாவில் பார்த்திருக்கிறேன். .''

''பார்த்தீர்களா?'' என்று பரபரப்பில் ஒரு ஆச்சரியத்துடன் கேட்டாள் சுவர்ணமுகி.

''ஆமாம் இளவரசி! பார்த்து மனத்தில் பரவசமாகியிருக்கிறேன். வாழ்க்கையில் யாரையாவது துயர் எதுவும் வராமல் காக்க வேண்டுமென்றால் அது தங்களைத்தான் என்று அப்போதே நினைத்து விட்டேன்.''

''ஓகோ! வேடிக்கையாக இருக்கிறதே!'' என்றாள் அவள்.

''ஆமாம்! அப்படி ஒரு நினைப்பைத் தங்களது அனுமதி இல்லாது கொண்டது கூடத் தப்பிதந்தான். ஆனால் அப்போது தாங்கள் என்னைப் போல ஒரு கௌரவமான குடும்பப் பிரஜை என்று மட்டும் கணித்திருந்தேன். அதனால் என்ன நினைப்பு எனக்குப் பொருத்தமாகத் தோன்றியது. ஆனால் தாங்கள் யார் என்று யுத்த களத்தில் ரங்கப்பா எனக்கு அறிவித்த பிறகு. . .''

''என்னதான் நினைத்தீர்கள்?''

''என்னைத் தாண்டி உப்பரிகை மேல் ஏறும் ஒரு ராஜாளி என்று நினைத்து விட்டேன். நான் மண்ணிலேயே இருப்பவன். தாங்கள் மண்ணுக்கு மேலேயே இருப்பவர்கள். உப்பரிகையில் வாழ்பவர்கள். உங்களைப் பற்றி நான் எந்த நினைப்பும் வைத்துக் கொள்வது பொருந்தாது என நினைத்தேன். ஆனால் என்னை அறியாமல் அந்த நினைப்பு என்னிடம் தங்கிவிட்டது இளவரசி! அதற்காக என்னைப் பொறுத்தருளுங்கள்!''



அவன் நெஞ்சு தழதழத்தது. கீழே குனிய பாறையில் அவன் வைத்திருந்த கையில் சூடாக ஒரு திவலை விழுவதைக் கண்டு திடுக்கிட்டு அவன் மேலே பார்த்தான்.

''இளவரசி இதென்ன?''

அதுவரை நிமிர்ந்திருந்த சுவர்ணமுகி இப்போது அப்படி இல்லை. பாறையின் முகட்டில் முகத்தைக் கவிழ்த்தி அதோடு இணைந்திருந்தாள்.

அவளிடமிருந்து எழுந்த சிறிய விசிப்புகள் கீழே வரை கேட்டன.

''இளவரசி! இளவரசி!'' என்றான். சிறிது நேர விசிப்புக்குப் பிறகு அவள் மெல்லத் தலை நிமிர்ந்தாள். கண்களைக் கையால் துடைத்தாள்.

''இளவரசி! தங்கள் மனதை ஏதாவது துன்புறுத்தி விட்டேனா?'' என்று கவலையுடன் கேட்டான் அவன்.

''இல்லை, வீரரே! இவ்வளவையும் முன்பே சொல்லாததனால்தான் துன்புறுத்தி விட்டீர்கள்!'' என்றாள் அவள்.

திடுக்கிட்டான் அவன். ''அப்படியா இளவரசி!''

''ஆமாம் வீரரே! இவை மட்டும் அப்போதே தெரிந்திருந்தால் நான் என் ராஜாங்கச் சுமையை அன்றே தூக்கிக் களைந்திருப்பேன். உங்களையும் அந்த அரசாங்க பாரத்துக்கு முழுக்குப் போடச் சொல்லி இருப்பேன். எந்தவிதப் பொறுப்புமற்ற ஒரு பறவை உள்ளமாக உங்களோடு சேர்ந்து இந்தப் பூ வெளியில் பறந்திருப்பேன்.''

கண்களைத் திரும்பவும் மூடி அவள் விசிக்க,

அவன் இதயம் ஒரு பொங்குமாக் கடல்போல் பொங்கிப் பெரிதாக ஆர்ப்பரித்தது.

''இளவரசி! இளவரசி! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மையா? நான் கனவு காணவில்லையே?'' என்றான் பாதி புலம்பலாக.

சுவர்ணமுகி அவனை விகசிதமாக விழித்தாள். அவள் கண்கள் இப்போது நிலவொளியில் பளபளப்பாக ஒளி அடித்தது. அவனை மிகத்தாபமும் ஆதரவும் கலந்து நோக்கி,

''வீரரே! எனக்குக்கூட அந்தச் சந்தேகம்தான்! நீங்கள் நிற்பது ஒரு கனவு இல்லையே!''

''இல்லை இளவரசி! இது கனவல்ல நனவுதான்'' என்றான் அவன்.

''வீரரே! நினைத்துப் பார்த்தால் கனவுக்கும் நனவுக்கும் அதிக வித்தியாசம் கூட இல்லை. இரண்டிலும் ஒரே மனம்தான் தொடர்ந்து ஓடுகிறது. இப்போது இந்தப் பரிவாரங்களோடு நாம் எங்கேயோ போகிறோமே, இது கூட இந்தக் கணமே ஒரு கனவாக மாறக் கூடாதா என்று தோன்றுகிறது.''

''ஏன் மாற வேண்டும் இளவரசி! இதுதானே நாம் இங்கே சந்திக்க உதவியிருக்கிறது?''

''உண்மைதான் வீரரே, ஆனால் இந்தச் சந்திப்பு இப்படி ஒரு கொடுமையான முறையில் நடக்க வேண்டுமா என்றுதான் வருத்தப்படுகிறேன்'' என்றாள் அவல்.

''இதில் என்ன கொடுமை இருக்கிறது? ஒரு ராஜ காரியத்துக்காக நாம் இப்போது பயணம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். இது ஒரு புண்ணியமான காரியமில்லையா?'' என்றான் அவன்.

''இல்லை வீரரே இல்லை. உங்களுக்குத் தெரியாது. இப்போது நடக்கும் அத்தனையும் கொடுமையால்தான் நடந்திருக்கிறது. எனக்கு இது பிடிக்கவில்லை. வீரரே! சொல்லுங்கள்! இந்தக் கணமே நான் சித்தமாக இருக்கிறேன். இப்போது இந்த நொடியில் எல்லாவற்றையும் துறந்து விடச் சித்தமாக இருக்கிறேன். சொல்லுங்கள்! சொல்லுங்கள்!'' என்று சற்று ஆத்திரமோடு கூறினாள் அவள்.



''இளவரசி!'' என்றான் அவன் நிதானமாக.

அவள் விசித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சொல்கிறீர்கள் இளவரசி!''

அவள் பெரிதாக விசிக்க அது விம்மலாக மாறியிருந்தது.

''தாங்கள் படும் கொடுமை என்ன? அதை இழைத்தது யார்? சொல்லுங்கள்!''

அவள் விசிப்பை மெல்ல அடக்கி நிமிர்ந்தாள்.

''ஏன்? இந்தக் கொடுமையை எனக்குச் செய்தவர்கள் என் உண்மைத் தந்தை, என் வளர்ப்புத் தந்தை இருவரும்தான்.''

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

''ஆமாம் வீரரே! என் தந்தை இம்மாடி ஸ்ரீரங்க மகாராஜா தமது வம்சத்தின் மீது ஆணைவைத்து எனக்கு ஏன் வேண்டுகோள் விடுக்க வேண்டும்? அந்த வேண்டுகோளை என் வளர்ப்புத் தந்தை ரங்கப்பா ஏன் பாதுகாப்பாக வைத்திருந்த என்னிடம் சொல்ல வேண்டும்?''

''என்ன சொல்லிவிட்டார்கள் இளவரசி?''

''பட்டயத்தில் எழுதியிருப்பது தங்களுக்குத் தெரியாதா?''

"என்னவென்று சொல்லுங்கள் இளவரசி?"

அவள் உடனே சொல்லவில்லை.

அவன் திரும்பவும் வினவுவதற்குள் திடீரென்று 'ஓ' என்ற பேரிரைச்சல் கேட்டது.

திடுக்கிட்டு அர்ச்சுனன் காதைக் கூர்மையாக்க, ஆரவாரம் ஒன்று மெல்ல மெல்ல பெரிதாகிக் கொண்டிருந்தது.

சுவர்ணமுகி திரும்பிப் பார்த்தாள்.

அவள் பின்புறத்தில் சற்றுத் தொலைவிலிருக்கும் பரிவாரங்களிடையே பெரிய குழப்பம் ஏற்பட்டிருந்தது.

ஜொலிக்கும் தீவர்த்திகளுடன் ஒரு குதிரைக் கூட்டம் எங்கிருந்தோ வந்திருநதது.

"வீரரே! இங்கே குழப்பம்!" என்று அவள் சொல்ல, அர்ச்சுனன் பரபரத்தான்.

"இளவரசி! இளவரசி! என்ன விஷயம் சொல்லுங்கள்!" என்று மேலே பார்த்துக் கத்தினான்.

"இளவரசி ஏன் பேசவில்லை?"

* * * * *

நரபலி தேவையாக இருந்தால் அதற்குத் தகுதியான கைதிகள் நரபலி கொடுக்கப் பட்டார்கள்.

– நுனிஸ்

## 39

தண்டு இறங்கிய அந்த ஆற்றுப் படுக்கையில் திடீரென்று தீவர்த்தி ஆட்கள் புகுந்து தாக்கினார்கள்.

முதலில் எல்லோரும் அவர்களைக் கொள்ளைக் காரர்கள் என்று எண்ணினார்கள். ஆனால் யுத்த வீரர்களைப போல் சண்டை செய்யும் சாமர்த்தியத்தைக் காட்டியதும், எல்லோருக்கும் சம்சயம் மூண்டது.

தளபதிகளில் சிலர் உடனை, "எல்லோரும் வாருங்கள் போர் போர்" என்று கத்த,

எக்காளங்களும் கொம்புகளும் எல்லோரையும் உசுப்பும் வண்ணம் பயங்கரமாக முறையிட்டன.

அர்ச்சுனன் இருக்கும் தொலைவு வரை அது கேட்டது.

"ஐயா! தீவர்த்திக் கூட்டம் ஒன்று நம் கோஷ்டியில் புகுந்திருக்கிறது" என்று மேலே இருந்து சுவர்ணமுகி இரைந்தாள்.

"எத்தனை பேர்?" என்று பதைப்புடன் கேட்டான் அர்ச்சுனன்.

"நூறுபேர் இருக்கும். கொள்ளைக்காரர்களாக இருக்கும்."

"இளவரசி! உடனே நான் போகிறேன். நீங்கள் இந்த இடத்தை விட்டு நகராதீர்கள்!" என்று இரைந்தான் அவன்.

பிறகு, ''நான் சீக்கிரம் வருகிறேன்'' என்று சொல்லி பாறைகளுக்கிடையே துள்ளிக் கொண்டு ஓடினான்.

நதியின் குறுகலான படுகை வழியாகக் கற்களிலும் பாறைகளிலும் துள்ளித் துவைத்தும் சமவெளியை அவன் எட்டியபோது நேரமாகி விட்டது.

புல்தரிசை ஏறியதும் அவன் பார்த்த காட்சி அவன் மனத்தைப் பெரிதாகத் தாக்கியது. தண்டு இறங்கிய பகுதியில் தழைக் கூடாரங்கள் எல்லாம் எரிந்து கொண்டிருந்தன.

திரைச் சீலைகள், கொடிகள், இதர துணி உபகரணங்கள் எல்லாம் சுடர் விட்டு எரிந்து கொண் டிருந்தன.

ஒரு கொழுத்த கருஞ் சாம்பல் புகை சுருட்டி எழுந்து ஆகாய உயரத்தில் ஏறிக் கொண்டிருந்தது.

தீ வெளிச்சத்தில் அங்கே ஒரு சண்டை நடந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'ஆகா, இந்த நேரத்தில் அப்பால் போயிருந்தோமே!' என்று பதறிய அர்ச்சுனன் தலை தெறிக்க ஓடித் தண்டின் பக்கம் நெருங்கினான். ஏன் ஏது என்று கண்டு பிடிப்பதற்குள் நேரம் ஓடிவிட்டது.

அதற்குள் தீவர்த்தி வெளிச்சங்கள் ஒன்று கூடித் திரும்பிப் போய்க் கொண்டிருந்தன.

அடிபட்டவர்கள் பலர் கீழே விழுந்து கிடக்க, பலர் நடந்த திடீர்த் தாக்குதலின் பிரமிப்பிலிருந்து இன்னும் கழலாமல் இருந்தார்கள்.

அர்ச்சுனனைப் பார்த்த தளபதி ஒருவர் ஓடிவந்து, ''ஐயா! கொள்ளைக்காரர்கள் அவர்கள்! நமது



பெண்களையே அள்ளிக் கொண்டு ஓடுகிறார்கள்!'' என்றான்.

அர்ச்சுனன் ''எங்கே ராம நாயக்கர்?'' என்று கேட்க, ''அவர் பின்னால் துரத்திப் போயிருக்கிறார்'' என்று பதில் சொன்னான் ஒருவன்.

ஆங்காங்கே வீரர்கள் எழுந்து ஒன்று சேர ஆரம்பித்திருந்தார்கள்.

பலர் குதிரைகளை ஆசுவாசப்படுத்தித் திரும்ப இழுத்து வந்து கொண்டிருந்தார்கள். தீயைக் கண்டு அவை வெருண்டு நின்றன.

அந்தத் தண்டு நிலம் முழுவதும் களேபரமாகக் காட்சி கொடுத்தது. ஊழியர் பரிவாரங்கள் அதிகம் பயந்துபோய் நானா திசைகளிலும் சிதறி இருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த பொருட்களும் அங்கும் இங்கும் சிதறியிருந்தன.

எல்லாம் அடங்கி ஒரு நிதான நிலை வர ஒரு நாழிகை நேரம் ஆகியது.

தளபதிகள் யாவரும் ஒன்று கூடினார்கள். அந்தத் தாடி அதிகாரி ''தம்பீ!'' என்று அழைத்து அவன் அருகே வந்து நின்றார்.

எல்லோரும் நடந்த விஷயங்களை அங்கங்கே விடுபட் ட தொடர்புகளோடு கூறினார்கள். எல்லோரும் பேசியதில் வந்தவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல, போர் வீரர்கள் என்பது புலனாகியது. என்ன காரணத்துக்காக வந்தார்கள், என்ன காரணத்துக்காகத் தாக்கினார்கள் என்பது தெரியவில்லை. பெண் தளபதி மல்லிகார்ஜுனம்மா என்பவள், பத்து அந்தப்புரப் பெண்களை அந்தத் தாக்குதல்காரர்கள் பிடித்துப் போய்விட்டதாகவும்,

அவர்களைப் பின் தொடர்ந்து பெண் படை முழுதும் போயிருப்பதாகவும் தெரிவித்தாள்.

ராமநாயக்கர் கடைசியில் இளைப்போடு வந்தார். அவரோடு அவரது வீரர்களும், பெண்டிர் படை ஆட்களும் சேர்ந்து வந்தார்கள்.

எல்லோரும் அவரவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைக் கூறியதும்,

அர்ச்சுனன் எல்லாவற்றையும் திரட்டி யோசனை செய்ய ஆரம்பித்தான். குறிப்பிட்ட ராமநாயக்கர் கூறிய செய்தி அவனைச் சிறிது கலங்க வைத்தது. வந்த படைத் தலைவன் தோதா உருவத்தில் இருந்தான் என்று தெரிவித்திருந்தான். அது தெரிந்ததுமே மற்ற எல்லா விஷயங்களுக்கும் தொடர்பு கிடைத்து விட்டது.

வந்தவர்கள் சுவர்ணமுகியைக் குறியாக வைத்து இருந்தார்கள்.

அவர்கள் வந்த சமயம் அங்கே இல்லை என்று அவர்களுக்குத் தெரியாது.

கூடாரப் பெண்கள் அனைவரையும் கவர்ந்து செல்ல வேண்டும் என்று வீரர்களுக்கு உத்தரவு இருந்திருக்கும்.

ஆகவே கிடைத்தவர்களை அள்ளிக் கொண்டு போயிருக்கிறார்கள்.

விஷயங்களைப் புரிந்து கொண்ட அர்ச்சுனன் தோதாவின் துரோகத்தைப் புரிந்து கொண்டான்.

இன்னும் அவனுடைய துரோகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நிச்சயம் இந்தக் கோஷ்டி எங்கே போகிறதென்பது தோதாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.



விஜயநகர பொக்கிஷம் இருக்கும் ரகசியம் சுவர்ணமுகி ஒருத்திக்குத்தான் தெரியும். இப்போது அந்தப் பொக்கிஷத்தை எடுக்கத்தான் ஒரு கோஷ்டி போகிறது என்பதைத் தோதா அறிந்திருப்பான்.

யார் கண்டார்கள்?

இப்போது ஸ்ரீரங்கனுக்குத் தோதா உடந்தையாக மாறியிருப்பான். இல்லாவிட்டால் இந்த வீரர் படை தோதாவுக்கு ஏது?

யோசிக்க யோசிக்க விஜயநகர சாம்ராஜ்யம் திரும்பவும் ஒரு குழப்பத்தையும், அமைதியின்மையையும் நோக்கிப் போவதாகத் தெரிந்தது. திம்மராஜா இறந்ததோடு எல்லா விஷயங்களும் அமைதியாகி விட்டன என்று நினைக்கும்போது. . .

"தளபதிகளே! நல்லது எனக்கு விஷயம் ஒருவாறு புரிகிறது. இப்போது தொல்லை கொடுத்தவன் தோதாதான்! வந்த படைகள் ஸ்ரீரங்கன் படைகள். நாம் போகும் காரணம் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. நிச்சயம் நமக்கு மேலும் சோதனைகள் வரும்!" என்றான் அவன்.

"பிரபு! அந்தப்புரப் பெண்மணிகள் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டார்களே அவர்களை மீட்க வேண்டாமா?" என்றார் ஒரு தளபதி.

"நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான் அர்ச்சுனன்.

எல்லோரும் பிரிந்தார்கள்.

அர்ச்சுனன் எழுந்தான். நீளமாக நடந்து இருட்டில் நடந்த சேதங்களைப் பார்த்துக் கொண்டே போனான்.

கூடாரத் தீ இனங்கள் தணிந்து கொண்டிருந்தன. புகை கலந்த காற்று இன்னும் அடிக்கடி சுழலாக வீசிக் கொண்டிருந்தது.

வழியில் ஓர் இடத்தில் அந்தப்புரப் பெண் வீரர்கள் சூழ யாரோ ஒரு பெண் ஒரு மான் தோல் மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அவள் மேலே மாலை போட்டிருந்தது. நெற்றியில் பெரிய குங்குமம் வைக்கப்பட்டிருந்தது. மேலே பல இடங்களில் குங்குமமும் சந்தனமும் பூசப்பட்டிருந்தன. அவளது சேலையும் ரத்த வர்ணத்தில் ஒரு ஜொலிப்பாகத் தெரிந்தது.

அவளைப் பார்த்தவாறு அவன் மேலே நடந்து சுவர்ணமுகி இருக்கும் திசை நோக்கித் திரும்பினான்.

சில அடிகள் போயிருக்க மாட்டான். "தம்பீ!" என்று குரல் கேட்டுத் திரும்பினான். யாரோ பின்னால் வந்தார்கள். அருகில் வர வர அது அந்த தாடிக்காரர் என்று தெரிந்தது.

"என்ன சுவாமி?" என்றான் அர்ச்சுனன். அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

"இப்போது பார்த்தாயே பெண்! அவளை ஏன் அப்படி விறைத்துப் பார்த்தாய்?" என்றார் அவர்.

"அதுவா! அவளைப் பார்த்தால் விசித்திரமாகத் தோன்றியது. அதான் பார்த்தேன்" என்றான் அர்ச்சுனன்.

"அவள் ஏன் நம்மோடு வருகிறாள் தெரியுமா?" என்றான் அர்ச்சுனன்.

"தெரியாது."

"பொக்கிஷம் எடுப்பதற்கு முன்னால் நரபலி கொடுக்க வேண்டாமா? அதற்காக இந்தக் கன்னியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்."



"நரபலியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

"ஏன் உனக்கு அவ்வளவு ஆச்சரியம்?" என்றார் அவர்.

"பலி கொடுப்பது பழக்கம்தான்! ஆச்சரியமில்லை. ஆனால் பொதுவாகக் கள்வர்களையும் உளவாளிகளையும் கொடுப்போம் இல்லையா?"

"கன்னிகளையும் கொடுக்கிறார்கள் தெரியாதா?"

"நிச்சயம் தெரியும்."

"பொக்கிஷம் இருக்கும் இடங்களை துஷ்ட தேவதைகள் காத்துக் கொண்டிருக்கும். உனக்குத் தெரியாதா?"

"அதுவும் தெரியும் சுவாமி!"

"அந்தத் தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தக் கன்னியை அழைத்துச் செல்கிறார்கள்!"

"அந்தப் பெண் சம்மதித்தாளா?"

"அவள் மட்டுமென்ன? அவளது பெற்றோர்களும் சம்மதித்தார்கள். அவர்கள் குடும்பத்துக்கு ஒரு கிராமமே மான்யமாகப் போய்விட்டது."

"ஓகோ! தியாகத்துக்கு விலையா?"

"அப்படிச் சொல்லலாமா? இது இந்த நாட்டுக்கு அவர்கள் செய்யும் புனிதமான சேவை இல்லையா? நிச்சயம் இவர்களுக்குச் சொர்க்கம் கிடைக்கும். கிராமத்தை மான்யமாகக் கொடுப்பது ஒரு அல்ப பிரதி உபகாரம்தான்! அந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எந்தவிதத் துயரமும் இல்லாமல் தீவிரத்தோடு உட்கார்ந்திருக்கிறாள்!"

அர்ச்சுனன் அவளது தோற்றத்தைத் திரும்பவும் மனத்தில் பார்த்தான்.

பிறகு தன் காரியத்தை நினைத்து, ''நான் வருகிறேன், சுவாமி!'' என்று விடை கொள்ள, ''நல்லவேளையப்பா! சுவர்ணமுகி தப்பினாள்!'' என்றார் அவர்.

அவன் கீழே பூமி அதிர்ந்தது. இவருக்குத் தெரியுமா? தெரியுமானால் எவ்வளவு தூரம் தெரியும்? மனம் திகைக்க அதை வெளிக் காட்ட விரும்பாமல், ''என்ன சொல்கிறீர்கள் சுவாமி?'' என்றான்.

''சுவர்ணமுகி நல்லவேளை ஆற்றுப்பக்கம் போய் விட்டாள். இங்கே யிருந்தால்? அவளைத்தான் அவர்கள் பிடித்துப் போயிருப்பார்கள்.!'' என்றார் அவர்.

''எப்படி ஊகிக்கிறீர்கள் சுவாமி?''

''அவளிடம்தானே பொக்கிஷம் இருக்கும் இடத்தின் ரகசியம் இருக்கிறது! அதை நாடித்தானே தோதாவே வந்திருக்கிறான்?''

அர்ச்சுனன் திடுக்கிட்டான். அவனுக்கு அந்தத் தீவர்த்திக்காரர்கள் வந்த விஷயம் தெரிந்து விட்டிருந்தாலும் – அதை அவன் இன்னும் யாரிடமும் வெளியில் சொல்லவில்லை. இவருக்கு எப்படித் தெரிந்தது? பெரிய ஆளாக இருக்கிறாரே?

''ஏன், இவன் வெறும் கணக்கு நாயகம்தானே, கணக்குப் பார்ப்பதோடு சரி! இவனுக்கு என்ன தெரியப் போகிறது என்று நினைக்கிறாயா? இது ஒரு பெரிய அதிசயமல்ல! இரண்டும் இரண்டும் கூட்டினால் நாலு என்று யாரும் சொல்லி விடலாம் அல்லவா?''

அர்ச்சுனன் நின்றான். இன்னும் அவன் அதிசயம் அகலவில்லை.

''போ, தம்பீ, போ! சுவர்ணமுகியைச் சீக்கிரம் போய்ப் பார்! அவளைச் சீக்கிரம் அழைத்து வா! உனக்கு



எப்படித் தெரியும் என்று கேட்காதே! அவள் கூடாரத் தண்டிலிருந்து அந்தி வேளையில் தனியாக நழுவிப் போவதை நான் பார்த்து விட்டேன். அவள் போனதே நல்லதாகப் போயிற்று! இது தெய்வச் செயல்! போய்ப்பார் அவளை! பத்திரமாக அழைத்து வா! ஒவ்வொரு அடியிலும் ஜாக்கிரதையாகப் போ! ஒவ்வொரு அடியிலும் ஜாக்கிரதையாக வா!''

அர்ச்சுனன் தயங்கினான்.

''வந்தவர்கள்தான் போய்விட்டார்களே? இனியும் ஆபத்து இருக்கிறதா?'' என்றான்.

''வெளி ஆபத்துப் போய் விட்டது! உள் ஆபத்து இன்னும் இருக்கிறது!'' என்றான்.

''உள் ஆபத்தா?'' என்று சிறிது திகைப்புடன் கேட்டான் அவன்.

''ஆமாம். ஏன்? இருக்கக் கூடாதா?''

''இருக்கலாம்! இருக்கிறதா என்பதுதான் கேள்வி!''

''நிச்சயம் இருக்கிறது.''

''யார் சுவாமி அது?''

''ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே என்பார்கள். என்னிடம் அதைக் கேட்காதே!''

''சரிதான்! நீங்கள் சொல்லச் சித்தமாக இல்லா விட்டால் நான் அதைக் கேட்கவும் தயாராக இல்லை'' என்று சொல்லி இருட்டுக்குள் விரைந்தான் அவன்.

அவனுக்கு ஆத்திரம் வந்திருந்தது.

விருட் விருட்டென்று நடந்து போக அவன் மனத்தில் ஒரு குறுகுறுப்பு ஏற்பட்டது.

திரும்பிப் பார்த்தான்.

* * * * *

காதல் வசப்பட்ட நான் ஒரு கோழை.
ஏனெனில் கேவலம் வெறும் பூக்கணைகள்
என்னை வீழ்த்தி விட்டனவே.

– ஹர்ஷனின் நாகாநந்தா

## 40

இருட்டில் நுழைந்த பிறகு அந்தச் சத்தம் கேடடது. குழப்பமாக ஒரு சத்தம். அதில் சுவர்ணமுகியின் பெயர் பலமுறை அடிபட்டது.

அர்ச்சுனன் உடனே எச்சரிக்கை ஆனான். சடக்கென்று இரண்டு நாக விருட்சங்களின் இடுக்கில் மறைந்து கொண்டு நடப்பவைகளைக் கவனித்தான்.

எல்லாம் அவனுக்கு மர்மமாகத் தோன்றியது. புறப்பட்டதிலிருந்து கவனித்து வருகிறான். காற்றிலேயே ஏதோ மாயம் கலந்திருந்தது.

தடதடப்பாகச் சில வீரர்கள் ஓடினார்கள். வெட்ட வெளிகளில் அவர்கள் தென்படும்போது அவனால் அவர்களைக் கண்டுகொள்ள முடிந்தது. அவர்கள் ஸ்ரீரங்கனின் வீரர்கள்.

புரிந்து விட்டது.

அவர்கள் கவர்ந்து சென்ற பெண்களில் சுவர்ணமுகி இல்லை என்று தெரிந்திருக்கிறது. அவளை எப்படியும் கவர வேண்டும் என்று இருட்டில் அவர்கள் ஓசைப்படாமல் வந்திருக்கிறார்கள்.

விஷயம் தெரிந்ததும் அர்ச்சுனனுக்குப் பதற்றமும் ஏற்பட்டது.

சுவர்ணமுகி அகப்பட்டு விடுவாளோ என்ற பயம்!



சீக்கிரம் அவளது உதவிக்குப் போக வேண்டும் என்று தெரிந்தவுடன் மரத்துக்கு மரம் சாடி நிழல் வழியாக விரைந்தான்.

பாறையை அடையும்போது அதன் மறுபுறம் சஞ்சலங்கள் காதில் கேட்டன.

விரைவாக மேலே ஏறினான். விளிம்பில் போன பிறகு மறுபக்கம் பார்க்க, அங்கே இருவர் துவந்த யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரே நொடியில் அவர்கள் யார் யார் என்று தெரிந்து விட்டது.

சுவர்ணமுகியும் தோதாவும்.

தோதா சுவர்ணமுகியை இழுத்துப் போக முயல, சுவர்ணமுகி அவனுடன் தைரியமாகப் போராடிக் கொண்டிருந்தாள். ''டேய்!'' ''டேய்!'' என்றான் அர்ச்சுனன். மறுகணம் பாறை விளிம்புகளில் பயங்கரமாகக் கால்களை ஊன்றி, கடைசித் தாவில் கீழே குதித்தான்.

குதித்தவன் நிமிரும்போது, அவன் கை தானாக வாளை உறுவியது.

''டேய், துரோகி! தூரப் போ!'' என்று இரைந்து ஊடே பாய்ந்தான்.

தோதா திரும்பினான். அவன் முகத்தில் எவ்வளவு கொடூரம் வந்திருந்தது! விருட்டென்று அவன் வாளை உருவ, இருவர் வாட்களும் முதல் மோதல் மோதின.

சுவர்ணமுகி இளைப்புடன் ஒதுங்கிப் போனாள். பாறை ஓரம் நின்று கொண்டு பதைப்புடன் அர்ச்சுனனைப் பார்த்தாள்.

இரு மின்னல் வாள்கள் அங்குமிங்கும் அலைய, இரண்டு நிழல் உருவங்கள் ஒன்றுக் கொன்று நெருக்கியும், சாடியும் பின்னால் எகிறியும் சண்டையிட்டுக் கொண் டிருந்தன.

அர்ச்சுனனுக்கு வாழ்க்கையின் பொறுப்பு அத்தனையும் அந்த வாளில் இறங்கியிருந்தது.

தோதா அன்று திருப்பதி யுத்த தினத்தில் துரோகம் செய்ததிலிருந்து இன்றுவரை நேருக்கு நேர் சந்திக்கவே இல்லை. ஆனால் மனம் மட்டும் அவனை நினைத்து நினைத்து ஓர் ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டே வந்திருந்தது.

இன்று அதன் உச்சநிலைச் சிதறலாக அவன் தோதாவைச் சந்திக்க,

அவன் ஆத்திர உக்கிரங்கள் ஒரு தீப்பிழம்பாக ஜொலித்து வாள் என்னும் வடிகால் மூலம் வடிந்து கொண்டிருந்தது.

ஓர் உஷ்ணம் ஏற்பட முதல் சில விநாடிகள் பிடித்தாலும், பிறகு அவன் ஒரு ஆக்கிரமிப்பு அலையாக மாறித் தோதா மீது சீறிச் சீறி விழுந்து கொண்டிருந்தான்.

வாள் வீச்சுக்கள் காற்றைப் பின்னபடுத்தித் தோதா மீது வகையாக விழ முயற்சி செய்து கொண்டிருந்தன.

தோதா ஆரம்பத்தில் சம பலத்துடன் எதிர்த்தாலும், போகப் போக அவனது ஊக்கம் மெல்ல வளையத் தொடங்கியது.

ஒரு நிலையில் அர்ச்சுனனிடமிருந்து தப்பினால் போதும் என்று தோன்றியது.

ஆனால் அவனது மான உணர்ச்சி அவனைத் தளர விடாமல் நிறுத்த, சிறிது நேரம் போரிட்டான்.

அர்ச்சுனனிடமிருந்து வந்த ஒரு வீச்சு அவன் தோளில் சிதைந்து, அவன் எலும்புகளை வெட்டி மார்பில் இறங்க, தோதா சத்தம் கூட எழுப்பாமல் கீழே உதிர்ந்தான்.



வலி தாங்காமல் இரண்டு முறை புரண்டு விட்டு, பிறகு தனக்கே அடக்க மாட்டாமல் ''அம்மா'' என்று கூவினான்.

பிறகு நெஞ்சைப் பிடித்து, அர்ச்சுனனைப் பார்த்து, ''அர்ச்சுனா! என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!'' என்றான்.

அர்ச்சுனன் பெரிய சுவாசங்களோடு அவனை அணுகினான். "திருப்பதியில் நான் அன்று குற்றுயிராக இருந்தபோது உதவி செய்தாய்! ஞாபகமிருக்கிறதா?'' என்றான் ஏளனமாக.

''அர்ச்சுனா! அதை மறந்துவிடு! இப்போது என்னைக் காப்பாற்று!'' என்றான் பலவீனமாக.

''என்னைத் தவிர்த்துவிடு, பரவாயில்லை. ஆனால் ரங்கப்பாவின் சத்தியத்தைத் தவிர்க்க விட்டாயே, பாவி! உன்னை எந்த நரகத்தில் தள்ளினால் என்ன?'' என்றான் அர்ச்சுனன் கர்ஜனையாக.

''அதையெல்லாம் மறந்துவிடு, அர்ச்சுனா! உன்னை உயிரோடு பார்க்கிறேனே அதுவே எனக்குத் சந்தோஷம். என்னை வாழ விடு, அர்ச்சுனா! என்னைக் கவனி'' என்றான் தோதா இரக்கமாக.

"தூ'' என்றான் அர்ச்சுனன். "இனி உன் பெயர் மிஞ்சினாலும் இந்த நாட்டுக்கு அவமரியாதை. நீ விதைத்ததை நீயே அறுவடை செய்! இங்கே இரவுகளில் நரிகள் வரும். அவைகளுக்கு நீ பலியாகு!'' என்றான்.

பிறகு சுவர்ணமுகியை அழைத்து அந்தப் பாறை மேல் ஏற ஆரம்பித்தான்.

முதலில் அவன் ஏறி, பிறகு அவளுக்குக் கைகொடுத்துத் தூக்கி விட்டான்.

இருவரும் இளைந்தாறு பாறையின் உச்சத்தில் அமர்ந்து கீழே கரும் மினுக்கலில் ஓடும் நதியைப் பார்த்தார்கள்.

சுவர்ணமுகி, ஆசுவாசம் ஆனதும் மெல்ல நகர்ந்து வந்தாள். ''வீரரே! உமக்கு மிக்க நன்றி! என்னை ஆபத்தினின்று காப்பாற்றினீர்கள். உங்களை மறக்க மாட்டேன்!'' என்று தழுதழுத்துக் கூறினாள்.

அர்ச்சுனனது இதயத்தை அவள் விழிகள் துளைத்தன. வாழ்க்கையின் நுண்ணிய உணர்ச்சிக் கீதங்கள் மெல்ல அவன் நரம்புகள் மீது தவழ்ந்தன.

''சுவர்ணமுகி!'' என்றான் கண்களில் ஈரம் பனிக்க, ''உங்களைப் பார்ப்போமா, பேசுவோமா என்று ஆகிவிட்டது எனக்கு!''

''என் மீது அவ்வளவு அக்கறையா?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம். என்று நாகலாபுரம் கோவிலில் உங்களை முதன் முதலில் பார்த்தேனே அன்றிலிருந்து என்னை அறியாமல் தங்கள் மீது அக்கறை வந்து விட்டது. பிறகு திருப்பதி அருகில் உங்களைப் பார்த்தபோது. . .''

''நான் ஒரு சேடி என்று சொன்னேனே!''

''அது ஒரு பொய் என்று எனக்குத் தெரியும். யுத்த களத்தில் உங்கள் வளர்ப்புத் தந்தை ரங்கப்பா என்னிடம் ரகசியத்தைக் கூறியிராவிட்டால் நானும் நீங்கள் சொல்வதை நம்பியிருப்பேன். அவர் சொல்லி விட்டார். அதனால் அன்று நான் சாகும் நிலையில் இருந்தபோது ராஜ தரிசனத்தோடு சாகிறேன் என்று நினைத்தேன்.

பின்னர் என் வாழ்க்கை மீளவும் புனர் ஜன்மம் எடுத்தபோது தங்கள் மீது கொண்ட அக்கறை பெரிய



பாசமாகவும், என் இதயத்தில் எப்போதும் இடைவிடாது ரீங்கரிக்கும் பிரேமை சுருதியாகவும் மாறிவிட்டது. இதை நான் வெளிப்படையாகக் கூறுவது கூட இல்லை. இருந்தும் என் மனம் பொறுக்காமல் தங்களிடம் கூறுகிறேன். ஏனெனில் இந்த நாட்டில் அடுக்கடுக்காக வரும் ஆபத்துக்களைப் பார்க்கும்போது, ஏதாவது எனக்கு நேர்வதற்கு முன் தங்களிடம் இதைக் கூறி விட வேண்டும் என்று நினைக்கிறேன். இல்லாவிடில் என் நெஞ்சு நிச்சயமாய் வேகாது. . .''

''ஐயா, இப்படித் துர் விஷயம் எதுவும் நினையாதீர்கள்! சொல்லாதீர்கள்!'' என்றாள் அவள்.

''இல்லை இளவரசி! என் மனத்தில் இருந்த ஆதங்கத்தினால் கூறினேன். அதுவும் சந்தர்ப்பம் அதற்கு இசைவாக வாய்த்ததால் கூறினேன். இதுபோல இனி வாய்க்குமோ என்று சந்தேகம் கூட எனக்குத் தோன்றுகிறது. அதனால் சொன்னேன். இளவரசி அன்பை மட்டும் என்றும் அடைத்து வைக்க முடியாது. நாலு பேர் கண் படும்படி அது தளும்பிவிடும். என் மனத்தில் சமீப காலத்தில் எழும் தாபத்தைப் பார்த்தால் எனக்கு எல்லாவற்றிலும் விரக்தி ஏற்படுகிறது. எங்கேயாவது ஒரு குடியானவனாக மாறி. . . . இளவரசி, ஏன் அழுகிறீர்கள்? என்றான் அவன், அவள் கன்னங்களில் அந்த முத்துக்களைப் பார்த்த பிறகு

அவள் உடனே பதில் சொல்லவில்லை. துக்கம் அவளை மூடியிருந்தது. ''இல்லை . . .'' என்று துவங்கினாள். ''தாங்கள் கூறும் சில வார்த்தைகள் என் மனத்தின் குறுத்துக்களை தொடுகின்றன. நான் இளகிவிடுகிறேன். நான்கூட நினைக்கிறேன். இந்தக் குலம் பதவி முதலியவைகள் யாவற்றையும் விடுத்து

எங்கேயாவது கிராமத்தில் ஒரு பூத்தொடுக்கும் பெண்ணாக மாற வேண்டும் என்று நினைப்பேன். இந்த ராஜ்யம் எதற்கு சண்டை எதற்கு?''

''இல்லை இளவரசி. இவைகளைத் தாங்கள் துறக்க முடியாது. தங்களால்தான் இந்த ராஜ்யம் மகோன்னத தசை அடைய வேண்டும். அதில் சந்தேகமில்லை. தாங்கள் ராஜ பாரம்பரியத்தில் பிறந்தவர். அதை விட்டு போகத் தங்களுக்கு வழியில்லை. . .''

என்று அவன் சொல்லும்போது, ''அப்படிச் சொல்லாதீர்கள்! எனக்கு வழி காட்டுங்கள்' போய் விடுகிறேன். இந்தக் கணமே போய் விடுகிறேன். எனக்கு இந்தப் பந்தங்கள் தேவையில்லை. என் அப்பா ஏதோ ஒரு காலத்தில் நிபந்தனை எழுதி வைத்தார். அது இப்போது செல்லாது! சம்பந்தப்பட்டவரின் முழு மனசு இன்றிச் செய்யப்படும் எதுவும் செல்லுபடியாகாது. நிச்சயம் ஆகாது!'' என்று இரைந்தாள் அவள்.

''இளவரசி!'' என்று அவளை அமரிக்கையாக்க முயன்றான் அவன். ''ஏன்? ஏன் இப்படிப் பதற்றப்படுகிறீர்கள்? தந்தையார் சொன்னது தங்களுக்கு மட்டுமல்ல. இந்த ராஜ்யத்துக்கே நல்லது அல்லவா? அதிலே ஏன் தங்களுக்கு வெறுப்பு?'' என்றான் அவன்.

''இல்லை வீரரே! எனக்கு எதுவும் வேண்டாம், நான் எங்கேயாவது ஓடிவிட விரும்புகிறேன் நிச்சயமாக! என் ராஜ குலம் தெரிந்ததால் நான் நிறையப் பந்தப்பட்டு விட்டேன்!''

''ஏன் இளவரசி! தங்களுக்கு என்ன நடந்தது?''

''இந்தக் கதிக்கு ஆளானதே அதனால்தான்!'' என்றாள் அவள் கண்ணீருடன்.



ஏன், என்ன கதி?'' என்றான் அவன்.

''நாடு, கடமை, ராஜ பரம்பரை, வாக்குறுதி என்று சொல்லி, என்னை எனக்கு விருப்பமில்லாத விஷயத்தில் இறக்கி விட்டார்கள், வீரரே!''

அர்ச்சுனன் திகைத்தான். ''ஏன் இளவரசி! என்ன செய்தார்கள்?''

''என் இரகசியம் அவர்களுக்குத் தெரிந்து விட்டதல்லவா?''

''யாருக்கு? நமது வேங்கட மகாராஜாவுக்குத்தானே?''

''அவர் மட்டுமல்ல! அந்த வேலூர் நாயகர், தாமர்ல சகோதரர்கள், எல்லோரும் புரிந்து கொண்டார்கள். அல்லவா?''

''அவர்களுக்கு யார் சொன்னது? ஸ்ரீரங்கன்தானே?''

''ஆமாம், என்னை யார் என்று சொன்னது மட்டுமல்லாமல் என்னிடம்தான் விஜயநகரப் பொக்கிஷத்தின் ரகசியம் இருக்கிறது என்றும் தெரிய வந்து விட்டது. இப்போது அந்த இடத்தைக் காட்டும்படியும், அதை எடுத்து வரும்படியும் என்னைக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.''

''அது நமது நாட்டின் நன்மைக்காகத்தானே? இப்போது நமது மகாராஜாவுக்கு வேண்டுவது பொருள், அது இல்லாவிட்டால் ஸ்ரீரங்கனை அவரால் வெல்ல முடியாது. மற்ற எதிரிகளையும் முறியடிக்க முடியாது.''

''அதைக் காரணம் காட்டி என்னைப் பொக்கிஷத்தை எடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் தேவலை!''

''வேறு எதற்குச் சொல்கிறார்கள்?''

''நான் ஒரு அரச குமாரி என்று நிரூபணம் செய்யவே அதைத் தேடி எடுக்கச் சொல்கிறார்கள்!''

''அப்படியா? அதைச் செய்தால் மட்டும் நிரூபணம் ஆகிவிடுமா?''

''செய்தால் நிரூபணம் ஆகும்! செய்யாவிட்டால் நான் ஒரு மோசக்காரி என்று கொன்று விடுவார்கள். விஜயநகர சிங்காதனத்துக்கு இன்னும் ஒரு பெண்ணும் உரிமை தேடி வந்திருக்கிறாள் என்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முக்கியமாக வேலூார் நாயக்கர் இதை எதிர்க்கிறார். நாட்டில் இன்னும் குழப்பம் ஏற்படும் என்று கூறுகிறார். இது காரணமாகத்தான் கடைசி முற்றுகை நாளின் இரவு, எனக்கு வேலூார் நாயக்கர் இரண்டில் ஒன்று செய், என்று நிபந்தனை இட்டார்.''

அர்ச்சுனன் அவளைப் பயத்துடன் பார்த்தான். ''என்ன நிபந்தனை?''

''ஒன்று அவர் சொல்லப் போகிறவைகளுக்கு உடன்பட்டு நான் இந்த விஜயநகரப் பொக்கிஷத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டும்.''

''அல்லது?''

''அல்லது அவர்கள் சிரச்சேதம் செய்வதற்கு நான் உடன்பட வேண்டும்!''

அர்ச்சுனனின் இரத்தம் கொதித்தது. ''இளவரசி, இப்டிப் பயமுறுத்தினார்களா தங்களை?''

''ஆமாம் சுவாமி! மத்திய ராத்திரியின் மேல் இப்படிப் பயமுறுத்தினார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. கோட்டை பரிதவிக்கிறது. உள்ளே ஜனங்கள் அல்லாடுகிறார்கள். வெளியே திம்மராஜா படைகள் கொந்தளிக்கின்றன. அந்த நிலையில் வேலூர் நாயக்கர் பதற்றமடைந்து விட்டார். எனவே அவர் எனக்கு அளித்த



நிபந்தனையில் எந்தவித அதிசயமும் இல்லை! ஆனால் அது என் தலை எழுத்து!''

''நீங்கள் என்ன சொன்னீர்கள் இளவரசி?''

''பயங்கரம்.''

''ஆனால், மனம் ஏனோ அதற்கு இசையவில்லை. அது ஒரு இனிதான சம்பவத்தை எண்ணி, அதிலேயே மொய்ப்பாகச் சஞ்சாரம் செய்தது. அந்த இனிமையின் கவர்ச்சியில் நான் மரணத்துக்குச் சம்மதிப்பது என் கையில் மட்டுமில்லை என்று தோன்றியது.''

''அது என்ன இனிமைச் சம்பவம் இளவரசி?'' என்றான் அவன்.

அந்த மேல் நட்சத்திர ஒளியில் அவள் கண்கள் இரண்டும் இரு சொப்பனங்களாக மாறின.

''அது தெரிய வேண்டுமா, வீரரே! திருப்பதியில் நடந்த சம்பவம்தான்! மேலே வேங்கடப் பெருமாளை தரிசித்துவிட்டு வந்தேன். கீழே இறங்கும்போது எங்கும் பஞ்சம் என்பது தெரிந்தது. மக்கள் பரிதவித்தார்கள். நான் இவைகளை நினைத்துத் துயரம் அடைந்தபோது, யுத்த களத்தில் என் வளர்ப்புத் தந்தை இறந்த செய்தியும் வந்தது. நான் இடிந்து விட்டேன். என் உயிர் தாழ்ச்சியாக விழ, எனக்கு அப்போது புதிய தெம்பு கொடுத்தது எது தெரியுமா?''

''எது இளவரசி?''

''கடமை தவறாத அந்த வீரரின் தோற்றம்தான். அவரை என்னால் மறக்க முடியவில்லை. அவர் இறக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்தேன். எங்கே போனாலும் மீண்டும் மீண்டும் அந்தச் சம்பவத்தையே நினைத்துக் கொண்டிருந்தேன். அந்தச் சம்பவம்தான்

வீரரே, என் மனத்தில் ஓர் ஆல விருட்சம் போல் விழுதுகள் விட்டு நின்று விட்டது.''

அர்ச்சுனனுக்கு உணர்ச்சிக்ள் பிரவாகமாக வெளிவந்தன. ''இளவரசி!'' என்றான் உணர்ச்சிப் பெருக்கில் அவள் கைகளைப் பற்றப் போக,

அவள், ''ஐயோ, என்னைத் தொடாதீர்கள்! என்னைத் தொடாதீர்கள்!'' என்று சொல்லித் தள்ளிப் போனாள்.

அர்ச்சுனன் திடுக்கிட்டான்.

*****

"The British came when the Indians failed"

- an unknown British Captain

# 41

"என்னைத் தொடாதீர்கள்!'' என்று சுவர்ணமுகி சொன்னதும் அர்ச்சுனனுக்கு அதிர்ச்சி உண்டாகியது. மெய்மறந்து ஒழுக்கமில்லா காரியத்தைச் செய்து விட்டானோ?

சுவர்ணமுகியைக் கலக்கத்தோடு பார்த்து "இளவரசி! என்னைப் பொறுத்தருளுங்கள்! நினைவில்லாமல் உங்களைத் தொட முயன்றேன்'' என்றான்.

கிளுக்கென்று சுவர்ணமுகி கண்களிலிருந்து இரு துளிகள் துளும்பின. நெஞ்சங்கள் துயரப் பொறுமலில் சிறிது சஞ்சரித்தன. ''சுவாமி! தொடாதீர்கள் என்ற என் நாவு தீய்ந்து விட வேண்டும். நாதான் அப்படிச் சொன்னதே தவிர, இதயம் சொல்லவில்லை. எனக்கு நேர்ந்தது தெரியுமா, சுவாமி?'' என்றாள்.

தளர்ந்து வரும் வார்த்தைகள் அவன் மனத்தில் என்னமோ பண்ண, ஏதோ கேட்கத் தகாதது அவள் வாயிலிருந்து வரப் போகிறது என்று உணர்ந்து ''என்ன நேர்ந்தது, தங்களுக்கு?'' என்று கேட்டான், நடுக்கத்துடன்.

அவள் வார்த்தை சொரியுமுன் கண்கள் சொரிந்தன. வார்த்தைகள் அதனால் தடைப்பட, தன் வலக் கையில் இருந்த கொத்து வளையல்களை மேலே இழுத்துக் காட்டினாள். அவளது மணிக்கட்டைக்கு அருகில் ஒரு மங்கல நாண் கட்டப்பட்டிருந்தது.

திடுக்கிட்ட அவன், "என்ன கங்கணமா?" என்றான்.

"ஆமாம்!"

"பரிசக் கங்கணமா?"

"ஆமாம்."

அவன் இதயத்தில் ஒர் உலை உதயமாகியது.

"தங்களுக்குப் பரிசம் நடந்து விட்டதா?"

"ஆம் சுவாமி!"

"எங்கே, எப்போது, யார் அவர்?"

சுவர்ணமுகி திகைத்தாள். நெஞ்சில் வார்த்தைகள் நிரம்பியிருந்தன. இதயத்தில் உணர்ச்சிகள் நிரம்பியிருந்தன. இரண்டும் வெளிவர முயன்றதில் இரண்டும் தடைப்பட்டுத் திக்குமுக்காடின. எனினும் நேரம் அதிகமில்லை என்று உணர்ந்து அவள் தனது துயரத்தை மெல்ல ஒத்தி எடுத்து, அன்று கோட்டை முற்றுகையில் கடைசி நாளில் வேலூர் நாயகர் அவளைப் பலவந்தமாக அழைத்துப் போனதையும், அவளுக்கும் வேங்கட மகாராஜாவுக்கும் பரிசம் போட்டதையும் கூறினாள்.

"சுவாமி! சுவாமி! விஜயநகர சாம்ராஜ்யத்தின் பேரில் என்னைக் கேட்டார்கள். கட்டளையிட்டார்கள். பரிசம் போடாவிட்டால் விபரீதம்; இருக்கும் சின்ன ராஜ்யமும் சின்னா பின்னமாகும் என்றார்கள். என் தந்தை எனக்கு விட்டுச் சென்ற ஒலை உபதேசத்தை நினைவு கூர்ந்தேன். 'ராஜ்யத்திற்காக என்ன தியாகமும் செய்ய வேண்டும். என் சந்ததியிடமே ராஜ்யம் வந்து விட வேண்டும்' என்று அவர் அந்த ஒலையில் உருகி வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது துயர



வாழ்க்கையின் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றி என் நன்றிக் கடனைச் செலுத்துவது என் தலையாய கடமை என்று நினைத்தேன். நானும் சம்மதித்தேன், சுவாமி, தயக்கத்தோடு, விரக்தியோடு, உள்ளத்தில் துறவோடு சம்மதித்தேன்" என்றாள் அவள்.

முகம் குமுறியது. கண்கள் மங்கலமாக விழித்தன. அவள் தோற்றத்தில் ஒரு சோகக்களை ஊடுருவியது.

அர்ச்சுனன் அந்தப் பாறையோடு இணைந்திருந்தான். முதலில் பாதங்கள் பாறையோடு கலந்து பாறையாகின. பிறகு கால்கள் பிறகு உடல்! கடைசியில் இதயம்!

அவன் ஒரு கற்சிலையாக மாறிக் கனத்துக் கிடந்தான்.

கீழே சலசலப்புக்கள் கூடின. தீவர்த்திக்காரர்கள் நெருங்கி இருந்தார்கள்.

பலர் மேலே ஏறி வந்தார்கள். பாறை மீது அர்ச்சுனனையும் சுவர்ணமுகியையும் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். அர்ச்சுனனை அவர்கள் எழுப்பியதும், பிரமை பிடித்தவன் போல எழுந்தான். "ஐயா! நல்லவேளை தப்பித்தீர்கள். தோதாவின் ஆட்கள் மறுபடியும் இருட்டில் வந்து தொல்லை கொடுத்தார்கள். எல்லோரையும் கொன்று விட்டோம்!" என்றார் ஒரு அதிகாரி.

எல்லோரும் இறங்கிக் கூடாரங்களை நோக்கி நடந்தார்கள்.

அர்ச்சுனன் யாரிடமும் பேசவில்லை.

கூடாரத்தின் சவுரி மெத்தையில் புதைந்தான். ஏதோ ஒரு சாம்ராஜ்யத்தை இழந்த உணர்ச்சி அவனுக்கு! ஆமாம், மனத்தில் அவன் சிறுகச் சிறுக ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை உண்டு பண்ணியிருந்தான். அது இன்று சுவர்ணமுகியின் ஒரே வார்த்தையில் தூள் தூளாகி விட்டது. விஜயநகர ராஜ்யத்தை விட இப்போது அவனது மனோராஜ்யத்தின் இழப்பு பெரிதாகத் தோன்றியது.

அன்று மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து மூன்று நாள் பிரயாணத்திலும அவன் பேசவில்லை.

நான்காம் நாள் அவர்கள் தியாக துர்க்கத்தை அடைந்தார்கள்.

அங்கே மலைச்சாரல் ஓரமாய்த் தண்டு இறங்கிய பின்னர் மேலே நடக்க வேண்டிய காரியங்கள் சுறுசுறு வென்று நடந்தன.

விஜய நகரப் பொக்கிஷம் இருக்கும் இடத்தை சுவர்ணமுகி காண்பித்துக் கொடுத்தால், அவற்றை எடுத்து வெளியேற்றும் பணியை மேற்கொள்ள எல்லோரும் சித்தமாக இருந்தார்கள்.

அதிகாரிகளின் தலைவராக சோமப்பர் வெகு துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தார்.

சுவர்ணமுகிக்குச் சங்கடமான நிலை வந்திருந்தது. அவள் செய்யப் போகும் காரியம் சரிதானா, அது தனது இறந்த தந்தைக்கு உகந்ததாக இருக்குமா என்று யோசித்தாள்.

பொக்கிஷம் இருந்த இடம் ஒரு ஓலையில் குறிக்கப்பட்டு ஒரு தாயத்துக்குள் அடைக்கப்பட்டு இருந்தது. அந்தத் தாயத்து அவளது அரைநாணில் நிரந்தரமாகச் சேர்க்கப்பட்டிருந்தது.



ஒரு மாபெரும் ரகசியத்தை வெளியிடும் சந்தர்ப்பம் அவள் கையில் இருந்தது. அதைச் செய்யலாமா, கூடாதா என்ற பல பிரச்னைகள் அவளுக்குத் தோன்ற வெகு நேரம் குழம்பி யிருந்தாள்.

கூடாரத் தண்டில் அதிகாரிகள் பொறுமை இழந்து காணப்பட்டார்கள்.

நேரம் ஏற ஏற எல்லோரும் ஒரு முணு முணுப்பில் ஆழும் சமயம்,

சோமப்பர், தனது இதர அதிகாரிகளான சின்னத்தம்பி நாயகர், மன்னாரு தாசர், சேவப்ப ரெட்டி ஆகியோருடன் சுவர்ணமுகியின் கூடாரத்துள் நுழைந்தார்.

"மகாராணி!" என்று சுவர்ணமுகியை அழைத்து, "சீக்கிரம் தங்களது ஆலோசனையை வெளியிட்டால் நல்லது. தாங்கள் ராஜப் பிரதிக்ஞையும் விசுவாசப் பிரதிக்ஞையும் எடுத்திருக்கிறீர்கள். இந்த மா சாம்ராஜ்யம் தங்கள் செய்கைக்கே காத்திருக்கிறது. எனவே இனியும் தயக்கம் காட்ட வேண்டும். சீக்கிரம் மேலே போகும் வழியைச் சொல்லுங்கள்!" என்றார்.

சுவர்ணமுகியின் கண்கள் கலங்கின. ஏன் இந்த இக்கட்டில் மாட்டினோம் என்று எண்ணினாள்.

பழைய சம்பவங்களை நினைத்தாள்.

வேங்கட மகாராஜாவிடம் ஸ்ரீரங்கன் அவளை அழைத்துப் போன சம்பவம் முன்னால் நின்றது.

மகாராஜாவிடம் ஏன் போனோம்? உடனே மகுடம் கொடுத்து விடுவார் என்று எண்ணினேனா? இல்லை! என்னை ஒரு ராஜகுமாரியாக மதித்து என் கஷ்டங்களை நிவர்த்திப்பார் என்று நினைத்தேன். எனக்கு விருப்பமான

வரை நான் திருமணம் செய்து கொள்ள அனுமதித்து, என்னைத் தம் வாரிசாகப் பிரகடனப்படுத்துவார் என்று நினைத்தேன். மகாராஜாவுக்குச் சந்ததி கிடையாது. எனவே நான் நினைத்ததில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் நடந்தது என்ன?

பரிச்சயம் பண்ணிக் கொள்ளப் போன இடத்தில் பரிசம் நடந்து விட்டது.

வேங்கட மகாராஜாவே அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானம் செய்து விட்டார். இது அடுக்குமா? நியாயமா?

அரசாங்க விஷயத்தில் எல்லாம் நியாயம்தான்!

அதை எந்தவிதமாக அழகாக நியாயப்படுத்திப் பேசினார் வேலூர் நாயகர்! அவர்தான் மகாராஜாவின் திருமணத் தீர்மானத்துக்கே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அவள் ஒன்று நினைக்க, வேறு ஒன்று நடந்து விட்டதுவே!

இப்போது மனம் அர்ச்சுனன் மீது வியாபித்து, அவள் செய்தது எல்லாம் தப்பு என்கிறதே!

ஒரு அரச கடமை என்று நினைத்து, ஒரு ஆத்மக் கடமையைப் புறக்கணிக்க வேண்டி வந்து விட்டதே!

அவள் இன்னும் தயக்கமாக இருப்பதைப் பார்த்து "அல்லது மகாராணி!" என்று ஆரம்பித்தார். "தாங்கள் தயங்குகிறீர்கள்! ஒருவேளை தாங்கள் பொக்கிஷத்தைப் பற்றிக் கூறியதெல்லாம் பொய், தாங்கள் உண்மையில் ராஜ பரம்பரையே அல்ல என்று தெரிந்தால், தங்களைச் சிரச்சேதம் செய்யும்படி எங்களுக்கு உத்தரவு."



"எனவே, இப்போது ராஜ்யம் அடைந்திருக்கும் மோசமான நிலையை மனத்துள் எண்ணிப் பார்த்து, நமது மகாராஜாவுக்கு இந்நிலையில் எப்படி ஒரு பொக்கிஷம் அவசியம் தேவை என்பதையும் யோசித்துப் பார்த்து, தாங்கள் சிறிதும் தயங்காமல் மேலே காரியத்தில் ஈடுபடுவீர்கள் என்று நம்புகிறோம்" என்றார் சோமப்பர்.

சுவர்ணமுகி கோபமுடன் அவர் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சில வார்த்தைகள் அவள் மீது சாட்டைகளாக விழுந்தன. சிலவற்றைக் கேட்கும்போது ஆத்திரம் கொதித்து எழுந்தது. சமயத்தில் அவரை 'வாயை மூடு' என்று சொல்லக்கூட நினைத்தாள்.

ஆனால் நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டு சும்மா இருந்தாள். சற்று நேரம் யோசித்தாள்.

பிறகு பார்வையைத் தாழ்த்தியவாறு எழுந்தாள்.

"நல்லது சோமப்பரே! என்னோடு இருவர் மட்டும் மேலே வாருங்கள்! எனக்கு அவர்கள் நம்பகமாக இருக்க வேண்டும. நான் என் ஓலைச் சுவடியில் உள்ளது போல் வழிகாட்டுகிறேன்" என்றாள்.

அப்போது வாசலில் சலசலப்பு ஏற்பட்டது. என்னவென்று பார்க்க, ட்ரேக் ராஜுரும், கிருஷ்ண சந்திரன் என்ற இளைஞரும் தோதாவின் ஆட்கள் இருவரைப் பிடித்துக் கொணர்ந்திருந்தார்கள். இந்தப் பரிவாரத்தின் பின்புறப் பாதுகாவலராக அவர்கள் வந்ததாகவும், அர்ச்சுனன் கேட்டுக் கொண்டதன்பேரில் அப்படிச் செய்ததாகவும், பின்புறத்தில் தப்பியோடிய தோதாவின் ஆட்களுடன் சண்டை போட்டுப் பலரைக் கொன்று விட்டு இருவரை மட்டும் விலங்கிட்டுக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

"ஐயா, இங்கே உள்ள பரிவாரங்களில் இன்னும் இருவர் நமது ஆட்கள் போல வேடம் தரித்து நம்முடன் இருக்கிறார்களாம். அவர்களை அடையாளம் காட்டுவதாகக் கூறியதன் பேரில் இவர்களை இங்கே இழுத்து வந்திருக்கிறோம்" என்று கூறினான் கிருஷ்ண சந்திரன்.

"அவர்கள் அபகரித்த அந்தப்புரப் பெண்களை எல்லாம் மீட்டு விட்டோம். அவர்கள் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தான் ட்ரேக் ராஜர்.

நன்றி தெரிவித்த சோமப்பர், அந்த எதிரிகளைத் தமது தளபதி வசம் கொடுத்து மேலே நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறிவிட்டு, கூடாரத்துக்குள் போய், சுவர்ணமுகியிடம், விஷயத்தைத் தெரிவித்தார். பளிச்சென்று சுவர்ணமுகியின் கண்களில் வெளிச்சம் அடிக்க, "நம் கூட்டத்தில் ட்ரேக் ராஜரையும், அர்ச்சுனனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

சோமப்பர் யோசித்து, "அர்ச்சுனன் இங்கே இருக்க வேண்டி இருக்கிறது. ட்ரேக் ராஜர் ஒரு வெள்ளைக்காரன். அவன் வேண்டாம்!" என்றார்.

"ராஜரின் நியாயமான தர்மங்கள் எனக்குப் பிடிக்கின்றன. அவரை அழைத்துக் கொள்ளுங்கள். அர்ச்சுனர் என்ன?" என்றாள் கவலையுடன்.

"இங்கே வேறு வேலை கொடுத்திருக்கிறோம்."

"என்ன வேலை?"

"நாம் மேலே போனால் கீழே பாதுகாப்புக்கு வேண்டாமா?"

ராஜர் மலை ஏறும் கூட்டத்தோடு சேர்க்கப்பட்டான்.



கிருஷ்ணசந்திரன் அர்ச்சுனனைத் தேடிக் கூடாரங்களை நோக்கிப் போனான்.

மறு நாள் காலை ஒரு சின்னக் குழு மலையில் ஏறத் தொடங்கியது.

கூடார வாசல்களில் பரிவாரங்கள் நின்று அவர்களைக் கவனித்தார்கள்.

சுவர்ணமுகியின் முகத்தில் சஞ்சலம் ஆடியது. கண்கள் பூஜ்யமாய் வெறித்தன.

கூடாரங்கள் முடிந்த பிறகு இரண்டு மஞ்சள் குடிசைகள் தென்பட்டன. வாசலில் வேப்பிலை செருகியிருந்தது. அவற்றில் பொக்கிஷப் பலிக்காகப் பெண்ணும், ஆணும் இருப்பதாகக் கூறினார்கள்.

மலை மேலே ஏறத் தொடங்கினார்கள்.

சுவர்ணமுகி தன்னோடு வரும் ஐவர் குழுவை சற்று பின்னால் வரச் சொல்லிவிட்டு அவள் முன்னால் போனாள்.

சுவர்ணமுகிக்குப் பாதுகாவலாக ஒரு பக்கம் ஒரு பெண் வீரரும் மறு பக்கத்திலே ட்ரேக் ராஜரும் சென்றார்கள்.

. . . மூன்றடுக்குப் பாறை சரிரண்டு போன பின்னே. . .

என்று ஓலையில் எழுதியிருந்ததை சுவர்ணமுகி பயபக்தியுடன் வாசித்தாள். பேசும் தமிழில் அதை ராஜருக்கு விவரணம் செய்தாள். ராஜர் தனது தொலை தர்சினிக் குழாயைக் கொண்டு வந்திருந்தான். தூரப் பகுதிகளை இலக்குக் காட்டிக் கொண்டே அவர்கள் மேலே நகர்ந்து போனார்கள்.

புதரும் செடிகளும் கப்பிக் கிடக்க, கீழே சரளும் கற்களும் அவர்கள் பாதரட்சைகளை உருட்டின. முட் கொடிகள் அவர்கள் உடம்பைக் கீறிவிட்டன.

சுவர்ணமுகி தனது விருத்தாந்தங்களைச் சொல்லிக் கொண்டே அவனுடன் நடந்து போனாள். ராஜர் அவள் கூறுவதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டே வந்தான்.

. . . செவ்விளநீர் சிற்றோடை கரையோடே தடம்பிடித்து பல்லிச் சுனை வரையில் பாங்காகப் போன பின்பு. . .

சிற்றோடையைக் காணவில்லை. என்றைக்கோ தூர்ந்து போயிருக்கும்! மழை ஏது?

எனினும் ராஜரிடம் விளக்கியதும், ராஜர் தீவிரமாக யோசனை செய்து, பல திசைகளில் சென்று தழைகொடி புதர்களை விலக்கித் தரையைச் சோதனை செய்து பார்த்தான்.

பிறகு கற்கள் வரிசையாக இருக்கும் தடம் கண்டு அதுதான் முன்னாள் ஓடிய சிற்றோடையின் தடம் என்று உணர்ந்து அதோடு நடந்து போனான். சுவர்ணமுகி அதன் பின்னே வர, "ராஜர் உங்கள் நாடுகளில் இதுபோல் நடக்குமோ? மனம் ஒரு பக்கம் இருக்க, பரிசம் இன்னொரு பக்கம் போடுவார்களா?" என்று கேட்டாள். இளைப்பாறுவதற்காக ஒரு கல்லின் மேல் அவள் அமர்ந்து கொண்டாள்.

"பொதுவாக நடக்காது. துர்லபமாக நடப்பது உண்டு" என்றான் ராஜர் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டே.

"ராஜகுமாரிகள் இப்படிச் செய்வார்களா?" என்றாள் அவள் ஆச்சரியமுடன்.



"அப்படிச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வராது" என்றான் அவன்.

"ஏன் வராது?"

"எங்கள் நாடுகளில் இத்தனை குழப்பங்கள் இருப்பது இல்லை. இங்கே எத்தனை ராஜாக்கள், எத்தனை தளபதிகள், எத்தனை வகை ஜனங்கள்! ஒருவருக்கொருவர் சுயநலத்தோடு அடிக்கடி சண்டை போட்டுக் கொள்கிறார்கள்!"

"உங்கள் நாட்டில் எப்படி அரசாள்கிறார்கள்?"

"எங்கள் நாட்டில் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பு உண்டு. அரசர்கள் எங்கள் எண்ணங்களைப் போற்றி மதிப்பார்கள்."

"கொள்ளை, களவு, பூசல் இத்தனை உண்டா?"

"நிச்சயம் இல்லை. அவற்றை அடக்க எம்மிடம் போதுமான படை உண்டு."

"உங்களைப் போன்ற அரசாங்க முறையை இங்கே அமைக்க முடியுமா?"

"ஏன் முடியாது? நாங்கள் எங்கள் கோட்டைக்குள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறீர்கள்? வந்து பாருங்கள். எங்கள் அரசாங்க முறைதான் நடத்தப்படுகிறது. அதில் தப்புப் பண்ணி னவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். பெரிய பதவியில் இருந்தால்கூட ஆட்கள் தான்தோன்றித்தனமாக இருந்துவிட முடியாது" என்று கூறிய ராஜர் இங்கிலாந்தில் சமூக வாழ்க்கை அமைதியாக நிலவுவதை விவரித்தான்.

சுவர்ணமுகியின் கண்கள் அதிசயமாக விரிந்தன. "ராஜர்! அந்த அரசாங்க முறையை இங்கே கொண்டுவர முடியுமா?"

"ஏன் முடியாமல்? அரசாங்கத்தை மட்டுமல்ல. அரசு பரம்பரைகளைக் கூட ஒரு நியதியில் இயங்க வைத்து விடலாம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்" என்றான் ராஜர்.

"உங்களிடம் ராஜ்யத்தைக் கொடுத்தால் அப்படிச் செய்வீர்களா?"

"எங்கள் கோட்டைக்குள் அப்படித்தான் செய்கிறோம். வந்து பார்த்தால் தெரியும்."

"எங்கள் நாட்டிலும் அந்தப் புதுமையை நிகழ்த்துங்களேன்."

"நிகழ்த்தலாம். ஆனால் அது இப்போது எங்கள் குறிக்கோள் அல்லவே! வியாபாரம் செய்வதுதான் எங்கள் குறிக்கோள்."

"தங்கள் குறிக்கோளை மாற்ற முடியாதா?"

"மாற்றலாம். இன்னும் அதற்கான சந்தர்ப்பம் வரவில்லை."

"ஏன் இங்கே உள்ள விஜயநகர சாம்ராஜ்யம் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் முறைப்படி நடத்துங்கள்."

ராஜர் முறுவலித்தான். "மக்கள் எங்களை விரும்ப வேண்டுமே!"



"எங்கள் மக்கள் இங்கே நடக்கும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் கண்டு நொந்து விட்டார்கள். வெறும் பஞ்சைகளாக அவர்கள் நாட்டில் உலாவுகிறார்கள். ஒரு சின்ன அளவு நியாயத்தைக் கொடுத்தால்கூட அவர்கள் நன்றியறிதலோடு உங்களைப் பார்ப்பார்கள். இப்போது இங்கே ஏற்பட்டுள்ள அராஜகமும் அதர்மமும் இருபது வருடங்களாக நடப்பவை. இன்னமும் நடக்கும். இதற்கு ஒரு விடிவு காணும் வகையில் நீங்கள் எங்களுக்கு உதவி செய்யக்கூடாதா?" என்றாள் அவள்.

ராஜர் சிரித்தான். "அதெல்லாம் நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு எளிதல்ல!" என்றான்.

"இளவரசி!" என்றான் அவன் யோசித்த பிறகு. "நீங்கள் இந்தப் பொக்கிஷத்தைக் காட்டிக் கொடுப்பதே தவறு!" என்றான்.

சுவர்ணமுகி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

* * * * *

**Whereas Mr. Francis Day, captain of the English at Armagon, upon great hopes by reason of our promises often made unto him hath repaired to our port of Medras patam, we out of our spetiall love and favour to the English doe grant unto the said captain by vertue of this firman power to direct and order the building of a Fort and castle in or about Medras patam.**

– தாமர்ல வெங்கடபதி நாயகர்

## 42

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் சுவர்ணமுகி.

"என் கணிப்புப்படி சாம்ராஜ்யம் இனி நிலை நிற்காது. அதன் மரணப்படுக்கை இப்போது. . ."

"என்னாலும் அதை உணர முடிகிறது. ஆனால் நான் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது அல்லவா?"

"ராஜ்யத்துக்குச் செய்ய வேண்டிய கடமையை இனிக் கடமையாக நினைக்காதீர்கள். மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நினையுங்கள்!"

"என் தந்தை எனக்கு விடுத்த வேண்டுகோள். . ."

"அவர்கூட இப்போது இருந்தால் இந்த உளுத்துப் போகும் ராஜ்யத்துக்கு இனி பாடுபட மாட்டார். . ."

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். நான் தங்கள் வளர்ப்புத் தந்தை ரங்கப்பாவுக்கு மிகவும் பரிச்சயமானவன். நீங்கள் யார்



என்பதை அவர் எனக்கு வெகு காலத்துக்கு முன்னமேயே தெரிவித்திருக்கிறார். அர்ச்சுனனுக்கு எல்லாம் முன்னமேயே எனக்குக் கூறியிருக்கிறார். அவ்வளவு அந்தரங்கமானவன் நான். அவர்கூட என் விருப்பத்தைத் தான் ஏற்றுக் கொண்டார். இப்போது இருக்கும் நிலையிலே இந்த விஜயநகர சாம்ராஜ்யம் இன்னும் சில வருடங்களுக்கு மேல் தேறாது. அவரும் இதை உணர்ந்த தன் காரணமாகத்தான் தங்களை வெளியே யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை. தங்களைத் தங்கள் உண்மை தந்தையின் வேண்டுகோளிலிருந்து விலக்கி ஒரு சாதாரணப் பிரஜையாக மாற்றி யாருக்காவது திருமணம் செய்துவிட வேண்டும என்று அவர் அப்போதே நினைத்திருந்தார். ஆனால் சந்தர்ப்பங்கள் வஞ்சித்து விட்டன. சுவர்ணமுகியின் நெஞ்சம் விம்மியது. "அவர் அப்படியா நினைத்தார்?" என்றாள் சந்தேகம் தொனிக்க.

"ஆமாம் இளவரசி! அப்படித்தான் நினைத்தார். அவர் இறந்த பின் நடந்த சம்பவங்கள் அதை மெய்ப்பித்து விட்டன.

"ஐயா! அப்படியானால் இனி இந்த ராஜ்யத்துக்குப் பாடுபட்டு பிரயோஜனம் இல்லையா?"

"இனிமேல் இல்லை. காலம் மாறிவிட்டது. எப்போதும் மேற்கத்திய வெள்ளையர்கள் வரத் தொடங்கி விட்டார்களோ, அப்போதிருந்தே இங்கே தங்கியிருந்த பழங்காலம் இனி மாறத் தொடங்க வேண்டியதுதான். ரொம்ப காலம் நீங்கள் உலகத் தொடர்பு இல்லாமல் இருந்து விட்டீர்கள்."

சுவர்ணமுகிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவள் மனத்தில் தேங்கி நின்ற ஒரு கனம் திடீரென்று கரைவது போல் இருந்தது. ராஜ்யம், நாடு, தேசம் என்று நினைப்பது கூடச் சில சந்தர்ப்பங்களில் அர்த்தமில்லாமல் போய்விடக் கூடும் என்பதை முதன் முதலில் உணர்ந்தாள்.

நாடே நிலைத்திருக்க முடியாத நிலையில் நாட்டுக்கு வேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் யாருக்கு என்ன லாபம்?

''ராஜர்! தாங்கள் கூறியது எனக்குப் புதுக் கண்களைத் திறந்தாற்போல் இருக்கிறதே! இப்போது சொல்லுங்கள்! நான் இந்தப் பந்தங்களிலிருந்து விடுதலை பெற்று எங்கேயாவது போய்விடட்டுமா?''

''உங்களுக்குத் துணிவிருந்தால் நான் அதற்கு ஆதரவு தருவேன்'' என்றான் அவன்.

சுவர்ணமுகி பின்னர் மலைமேல் போகவே இல்லை.

அவள் மனத்திலிருந்து பாரம் இறங்கியது போலத் தோன்றியதால் ஐவர் குழுவையும் மீறிக் கீழே இறங்கினாள்.

ஓர் இடத்தில் நின்று, ''பொக்கிஷம் இருக்கும் ஓலை இதோ!'' என்று சொல்லி ஓலையை எடுத்து தூள் தூளாக்கிக் காற்றில் பறக்க விட்டாள்.

பிறகு அவள் விரைவாகக் கீழே இறங்கத் தொடங்க மற்ற யாவரும் பின்தொடர்ந்தார்கள்.

பாதி தூரம் இறங்கி இருக்க மாட்டாள். கீழே இருந்து ஒரு பெரிய கோஷ்டி சோமப்பர் தலைமையில் பூஜை திரவியங்களோடு மேலே வந்து கொண்டிருந்தது.



எதிரே வரும் சுவர்ணமுகியைக் கண்டு சோமப்பர், ''ராணி! பொக்கிஷத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''பொக்கிஷம்! ஆமாம் கண்டு கொண்டேன். என் இதயத்தின் மீதுள்ள பாறை விலகியவுடன் என் உள்ளே இருக்கும் அமுதமான பொக்கிஷத்தைக் கண்டு கொண்டேன். என் நினைவு, எண்ணம், விருப்பம், ஆசை, இவை எல்லாமே என் பொக்கிஷங்கள். இவற்றைச் சுதந்திரமாக நான் எங்கே பறக்க விட முடிகிறதோ அந்த இடந்தான் எனக்கு சுவர்க்க பூமி'' என்று சொல்லி மேலே போகப் பார்க்க,

சோமப்பரின் ஆட்கள் அவளை வழி மறைத்தார்கள்.

''ராஜ கட்டளையைத் தாங்கள் மீறுகிறீர்கள்'' என்றார் சோமப்பர் கோபமாக.

''ராஜா யார்? ராஜ்யம் எங்கே இருக்கிறது? வெறும் கானலாக எதையோ இந்த இருபது வருடங்களாகத் தேடித் திரிகிறோமே! அது வீண் முயற்சிதானே?'' என்றாள் அவள். பிறகு, ''வழி விடு'' என்க, மற்றவர்கள் விடாமல் தடுத்தார்கள். ஒரு கலவரம் மூளும் நிலை அங்கே ஏற்பட்டது.

அப்போது அவளைக் கூர்ந்து நோக்கிக்கொண்டு தாடிக்காரர் மெல்ல நடையிட்டு வந்தார்.

அவளை ஆழ்ந்து பார்த்தார்.

பக்கத்தில் ராஜரையும் பார்த்தார்.

''ராஜர்! உங்கள் மேல் நாட்டு எண்ணங்களை இவள் மனத்தில் பதித்து விட்டீர்களா?'' என்று மென்மையாகக் கேட்டார்.

சுவர்ணமுகி அருகில் வந்தார். ''அம்மா சுவர்ணமுகி! உன் இதயம் எனக்குத் தெரியும். ஆனால் அது நஷ்டமாகி விட்டது!'' என்றார்.

அவர் கண்களில் நீர் பதிந்திருந்தது.

''என்ன சொல்கிறீர்கள் பெரியவரே?''

''உனக்குச் சுதந்திர உணர்வு வந்தது எல்லாம் அந்த அர்ச்சுனனுடன் சேர்ந்து எங்கேயாவது போய்விட வேண்டும் என்று நினைப்பதுதானே?'' என்றார் அவர்.

''ஆமாம்!'' என்றாள் அவள். ''எங்கே அவர்! அர்ச்சுனன் எங்கே?'' என்றாள் ஆவலோடு.

பெரியவர் இரக்கமுடன் விழித்தார். ''அது தானம்மா சொன்னேன்! எல்லாம் நஷ்டமாகி விட்டது!'' என்று.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் பெரியவரே!'' என்றாள் அவள்.

அவர் இரு சேவகர்களைக் கைகாட்டினார்.

அவர்கள் வந்தார்கள். அவர்கள் கைகளில் பெரிய மூடிய தட்டுகள் இருந்தன.

''திறந்து காட்டு'' என்றார் பெரியவர்.

திறந்தார்கள்.

சுவர்ணமுகியின் கண்கள் அவை மீது பட்டு ஒரு நொடியில் கோரமாக மாறின.

முகம் கோணலாகக் கிழிந்தது. திறந்த வாயில் கைகளை வைத்துத் திணறினாள் அவள்.



'ஆ!' என்று மலைப் பிரதேசம் முழுதும் கிடுகிடுக்கும் சத்தம் அவள் வாயினின்றும் கிளம்பிக் கொடூர இறக்கைகளுடன் பறந்தது.

தட்டுக்களில் வெட்டப்பட்ட இரு தலைகள் இருந்தன. ஒரு தலை பெண்ணுடையது! இன்னொன்று ஆணுடையது.

பெண் ஏற்கனவே நர பலிக்கு விதிக்கப்பட்டிருந்த பெண்தான்.

ஆனால் ஆண்?

கண்ணை மூடிய அந்தக் கம்பீர முகம் யாருடையது?

சாந்தியான களையுடன் யோக நிலை எய்திய தோற்றமாக விளங்கிய அந்த இள முகம் யாருடையது?

அர்ச்சுனன் முகம்தான் அது!

வேங்கட மகாராஜாவின் கட்டளையும், வேண்டுகோளும் அது என்று சொல்லி அவனால்தான் பொக்கிஷம் கிடைத்து நாடு சுபிட்சமாக வேண்டும் என்று எத்தனையோ காரண காரியங்களைக் கூறி ஒரு பூமிக்கு அரசராக விளங்கிய (நாராயணவனம்) அவனது ரத்தம்தான் நரபலிக்கு வேண்டும் என்று வேலூர் நாயகர் முந்திய நாள் இரவே வந்து அவனது நெஞ்சைக் கரைத்திருந்தார்.

அர்ச்சுனனும் தனது ஒருவனது தியாகத்தால் நாடு பழைய நல்ல தசைக்கு வருவதானால் வரட்டும் என்று தீர்மானித்து அந்த உன்னத உத்தமமான காரியத்துக்கு இணங்கி விட்டான்.

அதன் மூலம் சுவர்ணமுகியும், தன் பரிசம் நடந்த பிரகாரம் வேங்கட மகாராஜாவோடு வாழ்ந்து நல்ல எதிர்காலத்தைப் பார்ப்பதுடன், அவளது தந்தை அவளிடம் ஓலை மூலம் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றுவாள் என்று தீர்மானித்தான்.

அவன் கடைசியாக எழுதிய ஒரே நறுக்கு ஓலை 'சுவர்ணமுகி விடை கொடு!' என்பதுதான்.

ஆனால் அந்த ஓலையைச் சுவர்ணமுகி வாசிக்கப் போவதேயில்லை.

ஏனெனில் அர்ச்சுனனது சிரசைப் பார்த்த அதே கணத்திலிருந்து அவள் சித்தப் பிரமை கொண்டு விட்டாள்.

ட்ரேக் ராஜர் மூலம் அவள் மனத்தில் பற்றிய சுதந்திர உணர்ச்சி சிறிது நேரத்துக்குள்ளேயே நிரந்தரமாக அழிந்து விட்டது.

மலை மத்தியில் இவ்வளவு பெரிய கோர சம்பவம் நடந்ததைப் பார்த்துச் சோமப்பரும் இதரரும் திகைத்து நிற்க,

''போங்கள், போங்கள்'' சுவர்ணமுகி பொக்கிஷ ஓலையையும் கிழித்துத் தூரப் போட்டுவிட்டாள். அவள் அறிவும் பேதவித்து விட்டது. இனி எல்லோரும் திரும்புங்கள்!'' என்றார் அந்தப் பெரியவர்.

எல்லோரும் கூடிச் சிறிது நேரம் ஆலோசித்து விட்டுக் கீழே இறங்கத் தொடங்கினார்கள்.

கீழே வந்ததும் எங்கும் சோகம் கவ்வி நிற்க,

பெரியவர் ட்ரேக் ராஜரை அழைத்தார்.

ராஜர் அவர் அருகில் வந்து, ''பெரியவரே! சுவர்ணமுகியை நான் என்காதலி எஸ்மரல்டாவுக்கு



ஒப்பாக நினைத்தவன். என் இதயத்தில் அவளும் என்றும் வீற்றிருப்பாள். நான் அவளுக்கு அன்னியன்தான். அன்னியமாக இருந்தே அவளைப் பூஜிப்பேன். அவளுக்கு உண்டான பணிவிடைகளைச் செய்வேன்; என்னுடன் அவளை அழைத்துச் செல்ல அனுமதி தாருங்கள்!'' என்றான்.

''நானும் அதைத்தான் நினைத்தேன்'' என்றார் பெரியவர்.

பிறகு அவர் தமது வேஷத்தைக் கலைத்துத் தாம் தாமர்ல வேங்கடப்பா என்பதைக் காண்பித்து, ''எல்லாம் இந்த வேலூர் நாயகரின் சூழ்ச்சியால்தான் இவ்வளவு சோகங்களும் நிகழ்ந்து விட்டன. இன்னும் அவர் என்னென்ன செய்ய இருக்கின்றாரோ! நல்லவேளை! பொக்கிஷம் அவர் கையில் போகாததற்கு மிக்க மகிழ்ச்சியாகிறேன்!'' என்றார் அவர்.

ட்ரேக் ராஜர் சுவர்ணமுகியைச் சிறிது காலம் மசூலிப்பட்டினத்தில் வைத்திருந்தான்.

பிறகு ஆரம்கானுக்குக் கொணர்ந்தான்.

பின்னர் பிரான்ஸிஸ் டேயும், ராஜரும் திருவல்லிக்கேணி அருகில் உள்ள சிறிய பிரதேசத்தைத் தங்கள் குடியிருப்புக்காகக் கிரயத்துக்குச் சாசனம் பண்ணித் தரச் சொல்ல,

தாமர்ல வேங்கடப்பா தமது ஆணைக்குட்பட்டிருந்த அந்தப் பிரதேசத்தை மனமுவந்து சாசனம் பண்ணிக் கொடுத்தார்.

அப்படிச் செய்யும்போது அவர் மனத்தில் சுவர்ணமுகியின் சுகமே முதன்மையாக நின்றாலும்,

பிற்காலத்தில் ஒரு குழப்ப நிலையிலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றக் கூடிய சக்தி இந்த வெள்ளை இனத்தவருக்கு இருக்கலாம் என்ற நம்பிக்கையும் சேர்ந்து கொண்டது.

அந்த சாசனப் பிரதேசமான சென்னைப் பட்டணத்தில் ட்ரேக் ராஜர் சுவர்ணமுகியைக் கண்ணும் கருத்துமாகக் கடைசி வரை பாதுகாத்து வந்தான் என்பதில் ஐயமில்லை.

சுவர்ணமுகி வாழ்ந்த அந்தப் பிரதேசம் வழியாகத்தான் மனித மனங்களின் சுதந்திரம், விடுதலை போன்ற தற்கால மேனாட்டு எண்ணங்கள் நமது நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டது என்பது மிகையாகாது.

சென்னை தோன்றியதன் மூலம் ஒரு பிரிட்டிஷ் ஆட்சிக்கு அது வழி வகுத்துக் கொடுத்தாலும் பின்னர் எண்ணச் சுதந்திரம், செயல் சுதந்திரம் இரண்டும் பெற அது பெரிதும் உதவியது என்பது நிச்சயமாகப் போய் விட்டது.

சொல்லப்போனால் தியாகதுர்க்க மலையில் சுவர்ணமுகி கண்ட ஒருவித சுதந்திரக் கனவே பின்னர் நனவாக நிறைவேறி விட்டது.

— முற்றும் —